
வெ. சாமிநாத சர்மா

பெ. சு. மணி



இந்திய
இலக்கியச்
சிற்பிகள்

வெ. சாமிநாத சர்மா

உள் அட்டையில் காணும் சிற்பக் காட்சியில், பகவான் புத்தரின் அன்னை மாயாதேவி கண்ட கனவின் பலனை, மன்னர் சுத்தோதனருக்கு நிமித்திகர் மூவர் விளக்குகின்றனர். அவர்களுக்குக் கீழே அமர்ந்து அந்த விளக்கத்தை எழுதுகிறார் ஓர் எழுத்தர். எழுதும் கலையைச் சித்திரிக்கும் முதல் இந்தியச் சிற்பம் இதுவாகவே இருக்கலாம்.

(நாகார்ஜுன் மலைச்சிற்பம், கி.பி. இரண்டாம் நூற்றாண்டு.
பட உதவி: நேஷனல், மியூசியம், புதுதில்லி)

இந்திய இலக்கியச் சிற்பிகள்

வெ. சாமிநாத சர்மா

பெ. சு. மணி

சாகித்திய அக்காதெமி

Ve. Swaminatha Sharma - A monograph in Tamil by Pe.Su. Mani. Sahitya Akademi, New Delhi, 1998. Rs. 25

முதல் வெளியீடு : 1998

ISBN - 81-260-580-7

சாகித்திய அக்காதெமி

தலைமை அலுவலகம்
ரவீந்திர பவன், 35 பெரோஸ்ஷா சாலை,
புது தில்லி 110 001.

விற்பனை
'ஸ்வாதி மந்திர் சாலை, புது தில்லி 110 001

109, ஜே.ஸி. சாலை, பெங்களூர் 560 002.

'குணா பில்டிங்' 304-305, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை, சென்னை - 600 018.

ஜீவன் தாரா பில்டிங், 4வது மாடி,
டைமண்ட் ஹார்பர் சாலை, கல்கத்தா 700 053.

172, பம்பாய் மராத்தி கிரந்த சங்கிரகாலய சாலை,
தாதர், பம்பாய் 400 014

விலை ரூ. 25

அச்சிட்டோர் . வெல்டன் பிரஸ், சென்னை.

பொருளடக்கம்

1. வாழ்க்கைக் குறிப்புகள்

''சிறிது குள்ளமாக இருப்பார்; இராஜகோபாலாச்சாரியாரைப் போல் மொட்டைத் தலை; சிவந்த மேனி. கதர் வேஷ்டியும், கதர் ஜிப்பாவும் இவருடைய உடை. சில சமயங்களில் நேருஜியைப் போல் அரைக் கோட் (Waist Coat) போட்டுக் கொண்டிருப்பார்; தூரத்தில் நின்று பார்த்தால் திரு.வி.க.வின் ஜாடையில் இருப்பார். இவரது எளிய வாழ்க்கைக்கு மகாத்மாஜியின் எளிய வாழ்க்கையைத்தான் உபமானமாகக் கூற முடியும். அன்பென்ற மலர் இதழ் விரித்துப் பூத்தது போன்ற தெய்வீகச் சிரிப்பு. சாந்தி பொலியும் முகம். அன்பு சுரக்கும் இனிய சொற்கள். இதுதான் அறிஞர் சர்மாவின் சித்திரம்.''

இவ்வாறு புகழ் பூத்தத் தமிழ் எழுத்தாளர் அமரர் கு.அழகிரிசாமி வெ.சாமிநாத சர்மாவைப் பற்றி எழுதியக் கட்டுரையில் வருணித்துள்ளார்.

வாழ்க்கை வரலாற்றை அறிய உதவும் சில மூலங்கள்:

வெங்களத்தூர் சாமிநாத சர்மா (1895 - 1978) இருபதுக்கும் மேற்பட்ட வாழ்க்கை வரலாற்று நூல்களை எழுதியுள்ளார். ஆனால் தன் வரலாற்றை எழுதவில்லை

அவள் பிரிவு (1957), நான் கண்ட நால்வர் (1959), பர்மா வழிநடைப் பயணம் (1980) முதலான அவருடைய நூல்களில் தன் வரலாற்றின் சில பகுதிகளைக் கண்டறிய முடிகின்றது.

1971-இல் ஒரு நண்பரின் வேண்டுகோளை ஏற்று தன் வரலாற்றை எழுத முற்பட்டாலும், அது முற்றுப் பெறவில்லை. கையெழுத்துப் படிவாகவே உள்ளது. அதில் அவருடைய முன்னோர் வரலாறும், அவருடைய இளமைப் பருவம் வரையிலான வரலாறும் கூறப்பட்டுள்ளன.

சாமிநாத சர்மாவின் குடும்ப வாழ்க்கையிலும், இலக்கிய வாழ்க்கையிலும் உறுதுணையாக நாற்பத்திரண்டு ஆண்டுகள் வாழ்ந்த அவருடைய வாழ்க்கைத் துணைநலமாக விளங்கிய மங்களம்

அம்மையார் மறைவு குறித்து சாமிநாத சர்மாவால் எழுதப் பெற்ற நூல் ''அவள் பிரிவு''. தமது சொந்த நினைவுகள் பற்றி சாமிநாத சர்மா எழுதி, நூல் வடிவில் வெளிவந்த முதல் நூல் இது. இதில் அவருடைய வாழ்க்கைக் குறிப்புகள் பல கிடைக்கின்றன.

''தமிழ் முனிவர் திரு.வி கலியாண சுந்தர முதலியார், அந்தண்மையின் அணிகலன் வ வே.சு. ஐயர், தியாக சீலர் சுப்பிரமணியம் சிவம், கவிக்குலக் கோன் சுப்பிரமணிய பாரதியார் எனும் தலைப்புகளில் சாமிநாத சர்மாவால் எழுதப் பெற்ற ''நான் கண்ட நால்வர்'' எனும் நூலிலும் அவருடைய வாழ்க்கைக் குறிப்புகள் உள்ளன.

சாமிநாத சர்மா தமது மனைவியுடன் 21.2.1942-இல் பர்மா - ரங்கூனில் இருந்து புறப்பட்டு, 24.2.1942-இல் கல்கத்தா வந்தடைந்த நடைப் பயணத்தை விரிவாகக் கூறும் அவருடைய ''பர்மா வழி நடைப்பயணம்'' என்னும் நூலும் அவருடைய வாழ்க்கைக் குறிப்புகள் பலவற்றை விளக்குகின்றன.

பிறப்பும், குடும்பச் சூழலும் :

சாமிநாத சர்மா, 17.9.1895-இல் (மன்மத ஆண்டு புரட்டாசி மாதம் நான்காம் தேதி) வெங்களத்தூர் என்னும் ஊரில் பிறந்தார். அந்த ஊர் இன்றைய திருவண்ணாமலை - சம்புவராயர் மாவட்டம் - அன்றைய வடஆற்காடு மாவட்டம் - செய்யாறு வட்டத்தில் பாலாற்றங்கரையில் உள்ளது. இவருடைய தந்தை பெயர் முத்து சுவாமி ஐயர்; தாயார் பெயர் பார்வதி. நாகேசுவர சர்மா, சாமிநாத சர்மா, துரைசாமி சர்மா என்று மூன்று வித பெயர்கள், இவருக்கு சூட்டப்பட்டாலும், சாமிநாத சர்மா என்னும் பெயரையே இவர் வைத்துக் கொண்டார். 'வெ. சாமிநாதன்' என்றே கையெழுத்திட்டு வந்தார். 'சாமிநாத சர்மா' என்று பெயரிட்டுக் கொண்டதற்கான ஒரு காரணத்தையும் தமது நாட்குறிப்பில் (கையெழுத்துப் படியில் உள்ளது) குறிப்பிட்டுள்ளார்.

1912-இல் உயர் நிலைப் பள்ளியில் 'தமிழ்' என்னும் பொருளில் இவர் பேசவிருந்ததை அக்காலத் தமிழ் நாளேடு ஒன்றில் ''சாமிநாதய்யர், தமிழ்' என்னும் பொருளில் பேசுவார்'' என்று விளம்பரப்படுத்தப்பட்டது. சாமிநாதய்யர் என்றால், அது மகாமகோ பாத்தியாய உ.வே. சாமிநாதய்யர் என்று எண்ணி சொற்பொழிவைக் கேட்க கிறித்துவக் கல்லூரி தமிழ்ப் பண்டிதர் காரப்பங்காடு கோபாலாச்சாரியார், பச்சையப்பன் கல்லூரி தமிழ்ப் பண்டிதர் கா.ரா. கோவிந்தராஜ முதலியார், முதலான தமிழறிஞர்கள் சிலர் சொற்

பொழிவு நிகழ்ச்சிக்கு வந்தனர். ஆனால், எதிர்பார்த்தச் சொற்பொழிவாளர்க்குப் பதிலாக வேறொருவர் பேசியதைக் கேட்டு தமிழறிஞர்கள், பெயர்க் குழப்பத்தை மறந்து பாராட்டினர். இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு சாமிநாத சர்மா என்றே தம் பெயரை அமைத்துக் கொண்டார், வெங்களத்தூர் சாமிநாத சர்மா.

தமது உடன் பிறப்பான தங்கையைப் பற்றி சாமிநாத சர்மா எழுதியுள்ளதாவது :

''எனது சகோதரி ஒருத்தி இருந்தாள். எனக்கு நான்கு வயது இளையவள். லட்சுமி என்று பெயர். எனது தாயைக் காட்டிலும் என்னை நன்றாக அறிந்தவள் ஏதாவதொரு காரணத்தினால் எனது முகம் சிறிது வாட்டமடைந்து போனால்கூட அதைச் சகித்துக் கொண்டிருக்க மாட்டாள். உடனே அதற்குப் பரிகாரந் தேடிக் கொடுத்து விடுவாள். சகோதர வாஞ்சைக்கு இலக்கணமாயிருந்த இவள், தனது பதினேழாவது வயதில் (1915 ஏப்ரல்) பொன்னும் பூவுமாக இப்பூவுலகை நீத்துப் போய் விட்டாள், என்னைத் தனியொருவனாக ஆக்கிவிட்டு.''

இவருடைய மற்றொரு உடன் பிறப்பான தம்பி, பிறந்தவுடனேயே 1905-இல் இறந்து போய்விட்டார். சாமிநாத சர்மா ஒருவரே குடும்பத்தின் ஒரேயொருத் தோன்றலாக எஞ்சி நின்றார்.

இவருடைய கல்வித் தகுதி உயர் பள்ளிக் கல்வியோடு முடிவுற்றது. செங்கற்பட்டு நேடிவ் உயர் நிலைப்பள்ளியில் இறுதியாகக் கல்வி பயின்றார். ''உண்மையில் பள்ளிக் கூடத்தை விட்ட பிறகுதான் என் படிப்பு ஆரம்பமாயிற்று'' என்று சாமிநாத சர்மா தமது கல்வி வளர்ச்சியைப் பற்றிக் கூறியதுண்டு.

இவருக்கு பன்மொழிப் புலமை, குடும்பப் பாரம்பர்யச் சொத்தாகவும் வாய்ந்தது. இவருடைய பாட்டனார் நாகேஸ்வர சர்மாவும், தந்தையார் முத்துசுவாமி ஐயரும் தமிழ், தெலுங்கு, சமஸ்கிருத மொழிகளில் புலமைப் பெற்றவர்கள். சாமிநாத சர்மா, ஆங்கிலம், தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம், கன்னடம், இந்தி ஆகிய மொழிகளில் தேர்ச்சி பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது

தந்தை முத்துசுவாமி ஐயர் கலையுணர்வு மிக்கவர்; இசை கூத்துக் கலைகளில் தோய்ந்தவர். தமிழ், தெலுங்கு, சமஸ்கிருத மொழிகளில் இசைப்பாடல்களை இயற்றியுள்ளார் இந்தச் சூழல் சாமிநாத சர்மாவிற்கு இளமையிலேயே எழுத்தார்வத்திற்கு வித்திட்டது.

இரு பெரும் வரலாற்று நிகழ்வுகள் :

இந்திய தேசிய எழுச்சிக்கு ஒரு பாய்ச்சல் வேகத்தை அளித்த இரு வரலாற்று நிகழ்ச்சிகள் சாமிநாத சர்மாவின் இளமைப் பருவத்தில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தின.

1905-இல் அன்றைய ருஷ்ய ஜார் மாமன்னனின் பேரரசை ஆசிய நாடான ஜப்பான் தோற்கடித்தது. மேற்கு நாடுகளின் சாம்ராஜ்ய விஸ்தரிப்புக்கு எதிரான ஆசியாவின் புதிய விழிப்பு வேண்டப்பட்டது. இந்தச் சூழலில் ஜப்பானின் வெற்றி, ஆசியாவின் புதிய விழிப்பாக இந்திய தேசிய விடுதலைப் போராட்ட வீரர்களால் கொண்டாடப்பட்டது.

கல்கத்தாவில் இருந்து வெளிவந்த ''யுகாந்தர்'' என்னும் வங்க மொழிப் பத்திரிகையில், அக்டோபர் 1906-ஆம் இதழில், ''போராட் டத்தின் தெய்வத் திருத்தலமாக ஜப்பான் விளங்குகின்றது'' என ஜப்பானின் வெற்றி ஏற்றிப் போற்றப்பட்டுள்ளது. இந்த இதழ், இந்திய தேசியப் புரட்சி வீரரான பூபேந்திரநாத் தத்தாவை ஆசிரியராகக் கொண்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

சென்னையில் இருந்து வார இதழாக வெளி வந்த 'இந்தியா' எனும் தீவிரவாத தேசிய அணியின் - திலகர் அணியின் - பிரசார இதழில் அதன் ஆசிரியர் பாரதியார், ''ஏஷியாவின் விழிப்பும் இந்தியா வின் கடமையும்'' என்னும் தலைப்பில் செப்டம்பர் 8, 1906-ம் இதழில், ''ஜப்பான் முதலிலே கண்விழித்து எழுந்து நின்று கொண்டு 'ஹ...ஹ...ஹா' என்று வீரச்சிரிப்பு சிரிக்கத் தொடங்கிற்று'' என்று ஜப்பான் வெற்றியை வருணித்துள்ளார்.

சாமிநாத சர்மாவும் மாணவப் பருவத்தில் ஜப்பானின் வெற்றி யைப் பாராட்டி மாணவர் விவாதச் சங்கமொன்றில் ஆங்கிலத்தில் பேசினார். ஜப்பானைப் பின்பற்றி நாட்டுப்பற்றை வளர்க்க இந்தியர் கள் முன் வர வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

இவ்வாறே, 1905-இல் சீறியெழுந்த வங்கப் பிரிவினை எதிர்ப் பியக்கத்தில் தோன்றிய 'வந்தே மாதரம்' இயக்கத்தைப் பற்றியும் மாணவரான சாமிநாத சர்மா பேசியுள்ளார்

வரலாறு, ஆங்கிலம், தமிழ் ஆகிய பாடங்களில் நூற்றுக்கு தொண்ணூறு மதிப்பெண்களைப் பெற்றுச் சிறப்பெய்தியவர், சாமிநாத சர்மா.

1914-இல் சென்னை ஜார்ஜ் டவுனில் இராமசாமி தெருவில், தான் குடியிருந்த வீட்டில் ''சென்னை செந்தமிழ்ச் சங்கம்'' என்னும் பெயரில் ஓர் அமைப்பை நிறுவினார். இந்த அமைப்பிற்குத்

தலைமைப் பொறுப்பேற்க மகா மகோபாத்தியாய உ.வே. சாமிநாதய்யரைச் சந்தித்து வேண்டுகோள் விடுத்தார், சாமிநாத சர்மா. ஆனால், 'உ.வே.சா.' தமது இயலாமையை விளக்கி, சாமிநாத சர்மாவிற்கு வாழ்த்துக் கூறி ஊக்கமளித்தார்.

தட்டச்சு, சுருக்கெழுத்துப் பயின்ற சாமிநாத சர்மா வேலை தேடும் படலத்தில் பலவகைப்பட்ட வேலைகளில் அமர்ந்தார். சென்னை பவழக்காரத் தெருவில் செட்டி நாட்டு சமூகத்தைச் சார்ந்த நகரத்தார் ஒருவர் நடத்திய வட்டிக் கடையில் பெட்டிப் பையனாக ஊழியம் செய்தார். இதற்காக அவர் பெற்ற மாதஊதியம் ஒன்றரை ரூபாய். இந்த ஊதியம் ஆறுமாத காலம் நீடித்தது. இதையடுத்து, சுருக்கெழுத்துப் பயின்ற பள்ளியில் மாதம் பத்து ரூபாய் ஊதியத்தில் ஆசிரியராக வேலை பார்த்தார். இதை விடுத்தப் பிறகு தொடர்ந்து ஆயுள் காப்பீட்டுக் கழக அலுவலகம், கூட்டுறவுத் துறை அலுவலகம் முதலானவற்றில் ஊழியம் புரிந்தார்

எழுத்தார்வம் அரும்பியது :

இவ்வாறு பணியாற்றிய காலத்திலேயே, அவருடைய எழுத்தார்வம் அரும்பெடுத்தது. தமது பதினேழாவது வயதில் முதன் முதலில் தமிழில் ஒரு கட்டுரை எழுதினார். இந்தக் கட்டுரை, அக்காலத்தில் புகழ்பெற்றிருந்த உயர்தர இலக்கிய இதழான 'இந்து நேசன்' என்னும் இதழில் வெளியிடப்பட்டது. இது, ஒரு ''விஷய தான''க் கட்டுரையாகும். இதையடுத்து அவர் எழுதிய கட்டுரையொன்று ''பிழைக்கும் வழி'' என்னும் இதழில் வெளிவந்தது மைசூர் ராஜ்யம் தோன்றிய வரலாற்றைக் கூறிய அக்கட்டுரை, பாராட்டுரையுடன் ஐந்து ரூபாய் சன்மானத்தையும் பெற்றுத் தந்தது. 'பிழைக்கும் வழி' என்னும் பத்திரிகை சாமிநாத சர்மாவிற்கு பிழைக்கும் வழியொன்றையும் காட்டிவிட்டது.

கட்டுரை எழுதும் முயற்சியில் முன்னேறிய சாமிநாத சர்மாவிற்கு நூல் எழுதும் முயற்சியிலும் துணிவு பிறந்தது. ஆனால், தமது இந்த புதிய முயற்சியை ஆங்கிலத்தில் எழுதத் தொடங்கினார். அதிலும், நாடகம் எழுதும் முயற்சியாக அது அமைந்தது. 1912 அக்டோபரில் 'ஹேமாங்கி' என்னும் பெயரில் ஆங்கில மொழி நாடகத்தை எழுதி, அவரே தட்டச்சும் செய்தார். தட்டச்சுப் படியைப் பெற்றுக் கொண்ட பதிப்பாளர் ஒருவர், அச்சாகும் 'டபிள் கிரவுன்' பதினாறு பக்கங்கள் கொண்ட ''பாரம்'' ஒன்றிற்கு நான்கு ரூபாய் வீதம் கொடுப்பதாகவும் வாக்களித்தார். ஆனால், இந்த முயற்சி நிறைவேற்றப்படவில்லை. பதிப்பாளர், இந்தத் தட்டச்சுப் படியைத் தொலைத்துவிட்டதே, முயற்சியின் வீழ்ச்சிக்குக் காரணமாகும்.

மிகுந்த ஏமாற்றமடைந்த சாமிநாத சர்மா தமது முதல் முயற்சி நிறைவேறாமல் போனதைப் பற்றி பின்வருமாறு எழுதியுள்ளார்.

''என்னுடைய ஆங்கில முதல் முயற்சி ஒரு நாடகம். சிறு வயதிலிருந்தே நாடகத்தின் மீது எனக்குத் தனியார்வம் உண்டு. என் அறியாமையை அடக்கம் செய்துவிட்ட பிரசுரகர்த்தருக்கு என் நன்றியைச் செலுத்துகின்றேன். முதன் முதலாக ஆங்கிலத்தில் நூலெழுதத் துணிந்த என் பேதைமையை என்னென்று சொல்வது.''

அவருடைய நாடகம் எழுதும் ஆர்வம், ஓய்ந்துவிடவில்லை. பிற்காலத்தில் அவர் எழுதிய, ''பானபுரத்து வீரன்'' என்னும் நாடக நூல் 1923-இல் வெளிவந்தது. இந்திய தேசிய விடுதலை இயக்கப் பிரசாரத்திற்கு இந்த நாடகம் மிகச் சிறந்த நாடகக் கலைஞர்களான ''டி.கே.எஸ். பிரதர்ஸ்'' என்னும் குழுவினரால் வெற்றிகரமாகப் பயன்படுத்தப்பட்டது. இதன் விவரத்தை புகழார்ந்த நாடகக் கலைஞர் திலகம் டி.கே. சண்முகம் எழுதிய ''எனது நாடகவாழ்க்கை'' என்னும் அரிய நாடக வரலாற்று நூலில் அறியலாம். வேறு சில நாடக நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

முதல் நூல் :

சாமிநாத சர்மாவின் முதல் தமிழ் நூல், ''ஓர் இனிய தமிழ்க்கதை''யாகும். ''கௌரி மணி'' என்னும் இந்நூல் 1914-இல் அவருடைய சொந்தச் செலவிலேயே வெளியிடப்பட்டது. நாற்பத்தெட்டு பக்கங்கள் கொண்ட இந்நூல் அவர் நிறுவிய 'செந்தமிழ்ச் சங்கம்' என்னும் அமைப்பின் சார்பில் வெளியிடப்பட்டது. திருவிளையாடல் புராணத்தில் கூறப்பட்டுள்ள ''கௌரி மணி''யின் கதைதான், இந்நூல்.

இந்த நூல் வெளிவந்த ஆண்டிலேயே, சாமிநாத சர்மா, பதினான்கு வயதான மங்களம் என்னும் பெண்மணியைத் திருமணம் செய்து கொண்டார்.

1914 ஜூலை 13-இல் சாமிநாத சர்மாவின் கைத்தலம் பற்றிய நாள் முதற்கொண்டு 1956 பிப்ரவரி 13-இல் பூதவுடலை உகுத்த வரையில் மங்களம் அம்மையார், சாமிநாத சர்மாவின் குடும்ப வாழ்க்கையும், இலக்கிய வாழ்க்கையும் மேன்மையுற ஓயாது பாடுபட்டார். சாமிநாத சர்மா-மங்களம் பெற்றெடுத்த குழந்தைகள், நூல்கள்தாம். மகப்பேறு இல்லாத குறையை அவருடைய நூல்கள் பிற்காலத்தில் அவர்களுடைய பெயர்களைச் சொல்லிக் கொண்டிருக்கும் என்று மங்களம் அம்மையாரே ஒரு சமயம் குறிப்பிட்டுள்ளார் அம்மையாருக்கு, ஆங்கிலம், தமிழ், தெலுங்கு, கன்னடம், சமஸ்கிருதம், இந்தி ஆகிய மொழிகளில் பயிற்சியுண்டு.

இதழியல் முறையில் :

சாமிநாத சர்மாவின் எழுத்துலக வாழ்க்கையில் ஒரு திருப்பம் 1919-இல் ஏற்பட்டது 7.12.1917-இல் ''தேசபக்தன்'' என்னும் அக்கால தலைசிறந்த தமிழ்நாளிதழில் அவர் துணை ஆசிரியராகப் பணியாற்றச் சேர்ந்தது, அவருடைய இலக்கிய வாழ்க்கையில் முன்னேற்றத்தை ஏற்படுத்தியது. தேசபக்தனின் ஆசிரியர் 'தமிழ்த் தென்றல்' திரு.வி.க. என்று புகழ் பூத்த திரு வி கல்யாணசுந்தர முதலியார் தமிழ் இதழியல் வரலாற்றில், எழுத்தில், எண்ணத்தில் புதிய மலர்ச்சியைத் துவக்கியவர். இவருடன் இணைந்து பணி யாற்றிய சாமிநாத சர்மாவின் தமிழ் நடையில், தேசிய நோக்கில் புதிய பரிமாணங்கள் வளர்ச்சியுற்றன.

திரு.வி.க வின் தேசபக்தனின் மட்டும் அல்லாமல், அவர் அவ்விதழ் ஆசிரியப் பொறுப்பில் இருந்து விலகி 'நவசக்தி' என்னும் தமிழ் தேசிய வார இதழை 22.10 1920-இல் தொடங்கியதும், அதிலும் சாமிநாத சர்மா துணையாசிரியரானார்.

தமிழ் இதழியல் துறையில் அரசியல் நடப்புகளை, அரசியல் கருத்துக்களைத் திட்ப-நுட்பம் செறிந்த இனிய-தெளிந்த தமிழ் நடையில் வெளியிட முடியும் என்பதை திரு. வி.க. நிறுவினார்.

'நவசக்தி' தொடங்கப்பட்டதற்கு முன்னர் சில மாதங்கள் வ.வே.சு ஐயர் 'தேச பக்த'னின் ஆசிரியராக இருந்த பொழுது, அவருடனும் இணைந்து துணை ஆசிரியராக இருந்தார், சாமிநாத சர்மா.

தேசபக்தன், நவசக்திக்குப் பிறகு 'ஆந்திர கேசரி' டி பிரகாசம் நடத்திய 'ஸ்வராஜ்யா' என்னும் தமிழ் நாளிதழில் 1924 முதல் 1926 வரையில் சாமிநாத சர்மா துணை ஆசிரியராக இருந்தார்.

இதழியல் துறையில் இருந்து விலகி 1926-27-ஆம் ஆண்டு களில் மைசூரில் வேலைபார்த்தார். அங்கிருந்து திரும்பி வந்து சிறிது காலத்திற்குப் பிறகு 1930-31-இல் அடையாறு பிரம்ம ஞான சபை நூல் வெளியீட்டுத் துறையில் பணியாற்றினார். இந்தக் கால கட்டத்தில் ''விவேக போதினி'' என்னும் இதழில் தமது பெயரை போட்டுக் கொள்ளாமல் ஆறுமாதகாலம் ஆசிரியப் பணியாற்றினார்.

பர்மாவில்

இக்காலத்தில் மியான்மார் என்றழைக்கப்படும் அக்கால பர்மாவில் 1932, மே மாதம் முதல் பத்தாண்டு காலம் சாமிநாத சர்மா மனைவியுடன் வாழ்ந்தார். பர்மாவின் தலைநகரமான இரங்கூனில் ''பாரத் பந்தர்'' என்னும் பெயரில் ஒரு கடையை நடத்தினார். சுதேசிப்

பொருட்கள், கதர், தரமான தமிழ் நூல்கள் முதலானவை பாரத் பந்தரில் விற்பனையாயின. இங்கும் அவருடைய இதழியல் பணி யார்வத்திற்கு வாய்ப்பேற்பட்டது. இரங்கூனில் செல்வாக்குடன் வாழ்ந்து வந்த 'செட்டி நாட்டு சமூகத்தார் நடத்தி வந்த ''தன வணிகன்'' என்னும் இதழில் அவர் பணியாற்றினார்.

1936-இல் அரு சொக்கலிங்கம் செட்டியார், சாமிநாத சர்மாவின் நூல்களை மட்டுமே வெளியிடுவதற்காக ''பிரபஞ்ச ஜோதி பிரசுராலயம்'' என்னும் பெயரில் ஒரு நூல் வெளியீட்டகத்தை நிறுவினார். இத்துடன் கன. முத்தையா என்னும் மற்றொரு செட்டி நாட்டன்பர் நடத்தி வந்த 'புதுமலர்ச்சி நூற்பதிப்புக் கழக'மும் சாமிநாத சர்மாவின் சில நூல்களை வெளியிட்டது. மற்றும் மின் னொளி பிரசுரங்கள், அறிவுச் சுடர் என்னும் பதிப்பகங்கள் சார்பிலும் சாமிநாத சர்மாவின் சில நூல்கள் இரங்கூனில் வெளியிடப்பட்டன.

இரங்கூனில்தான் சாமிநாத சர்மாவிற்கு பெரும் புகழை அளித்து, ஆசிரியப் பீடத்தில் அமர்த்திய 'ஜோதி' என்னும் தமிழ் மாத இதழ் வெளிவந்தது. 1927, ஆகஸ்ட் முதல் 1942 பிப்ரவரி வரையில் 'ஜோதி' இரங்கூனில் இருந்து வெளிவந்தது. பிறகு 'ஜோதி' இதழ் வெளிவரவில்லை. பதினான்கு ஆண்டுகள், ஏழு மாத கால 'ஜோதி' ஆசிரியப் பணியில் அவருடைய இதழியல் அருமையின் பன்முகச் சிறப்புகளை அறிய முடிகின்றது.

மீண்டும் இந்தியாவில்

சாமிநாத சர்மாவின் பர்மா வாழ்க்கையில் 1942-ஆம் ஆண்டில் மகத்தான சோதனை ஏற்பட்டது. இரண்டாம் உலகப் போரின் விளைவுகளில் ஒன்றாக பர்மாவை பிரிட்டிஷ் ஆட்சியில் இருந்து ஜப்பானியப் பேரரசு கைப்பற்றப் போர் தொடுத்தது. இதனால் பர்மா வாழ் இந்தியர்களில் பலர் இந்தியா திரும்ப வேண்டியதாயிற்று. இவர்களுடன் சாமிநாத சர்மாவும் அவருடைய மனைவியும் சேர்ந்து கொண்டனர்.

சாமிநாத சர்மா, தமது மனைவியுடன் 21.2.1942-இல் இரங் கூனில் இருந்து நடைப் பயணத்தை மேற்கொண்டு 24.4.1942-இல் கல்கத்தா வந்தடைந்தார். ''பர்மா வழி நடைப்பயணம்'' (1980) என்னும் அவருடைய பயண இலக்கிய நூலில் புலம் பெயர்வுச் சோதனைகளையும், துன்பங்களையும் அறிய முடிகின்றது.

கல்கத்தாவில் இருந்து சென்னை திரும்பியதும் 'சக்தி' வை. கோவிந்தன் அரும்பாடுபட்டு அரிய தமிழ் மாத இதழாக நடத்தி வந்த 'சக்தி'யில் சாமிநாத சர்மாவின் எழுத்துப் பணி தொடர்ந்தது.

இதையடுத்து, கட்டுரைப் புதையல்களைத் திரட்டித் தருவதில் தன்னிகரற்று விளங்கிய தலை சிறந்த தேசியவாதியான ஏ.கே. செட்டியாரின் 'குமரி மலர்' என்னும் மாத இதழில் ஆசிரியராக 1945 முதல் 1946 வரையில் ஆசிரியராகப் பணியாற்றினார், சாமிநாத சர்மா.

1953-இல் சென்னை தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் இதழான ''பாரதி''யிலும் ஓராண்டு காலம் ஆசிரியராக இருந்தார்.

இதற்கிடையில் 1947 முதல் ''பிரபஞ்ச ஜோதி பிரசுராலயம்'' மீண்டும் இயங்கத் தொடங்கியது; சாமிநாத சர்மாவின் பல துறை நூல்கள் வெளிவரத் தொடங்கின.

1954 பிப்ரவரி 6-இல் சென்னை தமிழ் எழுத்தாளர் சங்கம் ராஜாஜி தலைமையில் சாமிநாத சர்மாவின் எழுத்துப் பணியைப் பாராட்டி கேடயம் வழங்கி பெருமை சேர்த்தது.

1956-இல் சென்னை தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவரானார், சாமிநாத சர்மா.

இறுதிக் காலம் :

அவருடைய தனிமை வாழ்க்கையின் இறுதிக்காலம், சென்னை கலாக்ஷேத்திரக் குடில் ஒன்றில் 1971-இல் தொடங்கியது.

7.1.1978-இல் பிற்பகல் மூன்று மணி அளவில் அந்த வரலாறு கண்ட மாபெரும் தமிழ் எழுத்தாளரின் இறுதி மூச்சு நின்றது.

தமது இறுதிக் காலத்தில், தம்முடைய நூல்களை மறுபதிப்புகளாகவும், புதிய நூல்களாகவும் வெளியிடத்தக்க உரிமையை பெ.சு. மணியிடம் வழங்கினார். இவ்வகையில் தொடக்கமாக வெளியிடப்பட்டதே ''பர்மா வழி நடைப் பயணம்''. அமரர் வெ. சாமிநாத சர்மாவின் இரண்டாவது நினைவு நாளில் 7.1.1980-இல் இந்நூல் வெளியிடப்பட்டது. இதுவே, அவர் எழுதிய இறுதி நூலாகும்.

83 ஆண்டு கால வாழ்க்கையில், சாமிநாத சர்மாவின் இலக்கிய வாழ்க்கை 64 ஆண்டுகளாகும். அவருடைய 78 நூல்கள் அவர் புகழைப் பரப்பிக் கொண்டு வருகின்றன.

தம்முடைய பணியை எதிர்காலம் மறக்காது என்னும் நம்பிக்கையில் அவர் தமது நாட்குறிப்பில், 17.9.1960-இல் பின் வருமாறு குறிப்பிட்டது வீண் போகவில்லை.

''ஆங்கிலக் கணக்குப்படி இன்று என்னுடைய 66-வது பிறந்த நாள், வாழ்க்கைப் பாதையில் அறுபத்தைந்தாவது மைல்களைக் கடந்துவிட்டேன். என்ன சாதித்து விட்டேன்? அதைச் சொல்ல எனக்கு சந்ததிகள் இல்லை. ஆனால், வருங்காலத் தமிழுலகம் ஏதாவது சொல்லுமென்று நினைக்கிறேன்.''

''நான் எழுதுவதற்காக வாழ்கின்றேன், வாழ்வதற்காக் எழுத வில்லை'' என்று அவ்வப்பொழுது கூறிவந்தார் சாமிநாத சர்மா. ஆம்; அவருடைய நூல்கள் வாயிலாக அவர் என்றும் வாழ்ந்து கொண்டிருப்பார்.

2. அரசியல் நூல்கள் - ஓர் ஆய்வு

இந்தியாவின் அரசியல் வரலாற்றில் பத்தொன்பது, இருபதாம் நூற்றாண்டுகளில் அந்நியர் ஆட்சிக்கு எதிராகத் தோன்றி வளர்ந்த தேசிய அரசியல், கையாண்ட பிரசார முறைகளில் அரசியல் தொடர்பான நூல்களின் படைப்புகளும் ஒன்றாகும்.

அரசியல் எழுத்துத்துறை புதிதாக உருவாகி மக்களுக்கு அரசியல் விழிப்புணர்வு ஏற்பட வழி வகுத்தது. பல சமூக அடுக்குகளைக் கொண்ட இந்திய சமூக அமைப்பில் பல வரலாற்றுக் காரணங்களினால் அரசியல் விழிப்புணர்வு சமூக அமைப்பின் மேல் மட்டத்தில் முதலில் தோன்றியது. இந்த விழிப்புணர்வு பெற்ற முதல் அணியும் ஆங்கிலம் படித்தவர் அணியாக பெரும்பாலும் விளங்கியது

பாரதியார் மதிப்பீடு :

தமிழ் அரசியல் எழுத்துத் துறையில் புத்தெழுச்சியையும், தீவிரப் பாய்ச்சலையும் அளித்த மகாகவி சுப்பிரமணிய பாரதியார் ஆங்கில மொழியும், ஆங்கிலம் கற்றோரும் வழிகாட்டக் கூடியத் திறமை பெற்றிருந்ததை மதிப்பீடு செய்துள்ளார்.

பல மாநில தேசிய அரசியல் அமைப்புகளை ஒருங்கிணைத்து, அனைத்திந்திய அளவில் இந்திய தேசிய காங்கிரஸ் என்னும் அமைப்பை உருவாக்கியதில் பெரும்பங்கேற்றவர் ஆலம் ஆக்டேவியன் ஹ்யூம் (1829 - 1912) என்னும் ஆங்கிலேயர்.

11.8.1893-இல் 'சுதேசமித்திரன்' ''மிஸ்டர் ஹ்யூம் வருதல்'' என்னும் தலைப்பில் எழுதிய பாராட்டுரையின் பின் வரும் பகுதி குறிப்பிடத்தக்கது

''மிஸ்டர் ஹ்யூம் என்ற மகா புருஷரின் நாமதேயம் எவர்களும் இத்தேசத்தில் கேட்டிருக்க வேண்டும். அம்மகான் இத்தேசத்தாருக்காகப் பல வருஷம் படாத பாட்டைப் பட்டுக் கடைசியில் இங்கு

காங்கிரஸ் சபை என்ற ஓர் பெரிய வித்தை நாட்டி, அச்சபையைக் கொண்டு இத்தேசத்தார் பல சீர்த்திருத்தங்களைச் செய்து முடித்துக் கொள்ளும்படி ஏற்பாடு செய்தது அவரேயாம்.''

எழுபத்திரண்டு ஆங்கிலப் பட்டதாரிகளைக் கொண்டு 1885-இல் பம்பாயில் தோன்றிய காங்கிரசைப் பற்றி, ராஜாஜி ''இந்திய தேசியம் காங்கிரஸாக மலர்ந்தது'' என்று கூறினார். ஆனால், இந்தத் தேசியத்தின் பிரசார மொழி ஆங்கிலத்தில் அமைந்ததையும் சுட்டிக்காட்டி பின்வருமாறு பாரதியார் மதிப்பீடு செய்துள்ளார்.

''டிசம்பர் 28-ந் தேதியன்று முதற் கூட்டம் கூடிற்று; வெற்றி! பாரத ஜாதி பேசத் தொடங்கிற்று; அப்பேச்சின் உச்சாரணங்கள் அன்னிய பாஷையில் செய்யப்பட்டன. விதியின் ரஹஸ்யங்களை உணர்தல் மிகவும் அரியதன்றோ ''

ஆங்கிலத்தில் பேசினாலும், அது ''பாரத ஜாதி'' முழுவதின் பேச்சாகவும் வருணிக்கப்பட்டது. ஆங்கிலம் அறிந்தவர்கள் வழி காட்டுதலை ''பாரத ஜாதி'' முழுவதும் ஏற்றுக் கொள்ள வேண்டி யிருந்தது. இது குறித்தும் பாரதியார் பின்வருமாறு மதிப்பிட்டுள்ளார்.

''விதி வசத்தால் நமது ஜனங்களுக்கு இந்த க்ஷணத்திலே பல விஷயங்களிலும் வழிகாட்டக்கூடிய திறமை இங்கிலீஷ் படித்த சிலரிடத்திலேதான் காணப்படுகிறது. அதற்குக் காரணம் பூமண்டலத் தின் சாஸ்திரங்களும் நவீன யோசனைகளும் நமது பாஷையில் மொழி பெயர்க்கப்படாமல் இருப்பதொன்று; நம்மவர் அன்னிய தேசங்களில் யாத்திரை செய்து தற்கால அனுபவங்களைத் திரட்டிக் கொண்டு வராமலிருப்பது இரண்டு; நமக்குள் வந்து புகுந்திருக்கும் கோரமான வறுமை மூன்றாவது.''

காங்கிரசில் ஒலித்த முதல் தமிழ்க்குரல் :

காங்கிரசின் மூன்றாவது மாநாடு சென்னையில் 1887-இல் நடைபெற்ற பொழுது, கும்பகோணம் கைவினைஞர்கள் சங்கத்தின் சார்பில் காங்கிரஸ் பிரதிநிதியாகக் கலந்து கொண்ட டி.எம். மூக்கன் ஆசாரி விவாதத்தில் பங்கேற்று தமிழில் பேசினார். சென்னை காங்கிரசின் ஏழாவது தீர்மானமான தொழிற்கல்வியின் மீதான விவாதத்தில் அவர் பேசினார் ஹ்யூம் தயாரித்த காங்கிரஸ் ஆண்டறிக்கையில் மூக்கன் ஆசாரி பேசியது பாராட்டப்பட்டுள்ளது.

அரசியல் விழிப்புணர்வை தமிழின் மூலமும் ஏற்படுத்த முயற்சிகள் அரும்பெடுத்தன.

தமிழில் வெளிவந்த முதல் அரசியல் வெளியீடு :

ஆங்கிலமறிந்தவர்களில் சிலர் தமிழ் நூல்களை வெளியிட்டு ஊக்குவிக்க சில அமைப்புகளை பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோற்று வித்தனர். 1883-இல் திருவல்லிக்கேணியில் ''உபயோகமான அறிவைப் பரவச் செய்யும் சபை'', 1890-இல் ''தென் நாட்டுத் தமிழ்ச் சங்கம்''. ''திராவிட பாஷா சங்கம்'' என்னும் அமைப்புகள் தோன்றின. இவை யாவும் தேசியப் பற்றுடையவர்களால் உருவாக்கப் பட்டவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

''உபயோகமான அறிவைப் பரப்பச் செய்யும் சபை''யின் சார்பில் தமிழின் முதல் அரசியல் வெளியீடு வந்தது. 1883-இல் வெளிவந்த இந்த வெளியீட்டின் பெயர் ''சுய அரசாட்சி வினா-விடை''. 48 பக்கங்கள் கொண்ட இந்த முதல் தமிழ் அரசியல் அரிச் சுவடியை எழுதியவர் பாரதியாரால் ''புதிய விழிப்பின் ஆதிகர்த் தாக்களுள் ஒருவர்'' என வருணிக்கப் பெற்ற தேசியச் செம்மல் ஜி. சுப்பிரமணிய ஐயர். (1855 - 1916)

இந்த வெளியீடு, 1882-இல் இந்திய ராஜப்பிரதிநிதி ரிப்பன் பிரபு அறிமுகப்படுத்திய ''ஸ்தல சுயாட்சி ஸ்தாபனங்கள் திட்டம்'' என்பதை தமிழில் விளக்க வந்தது.

ஜி. சுப்பிரமணிய ஐயர் :

அரசியல் தமிழ் எழுத்துத்துறையை உருவாக்கி வளர்த் தெடுத்ததில் ஜி. சுப்பிரமணிய ஐயரின் பங்களிப்பு முதன்மையானது. இவர் ''சுதேசமித்திரன்'' மூலம் பழகு தமிழில் எளிய தமிழ் மக்கள் அரசியல் அறிவு பெற வாய்ப்பளித்தவர்.

ஜப்பான் சரித்திரம் (1903); இந்தியா, அதன் அரசியலும் வருங்கால நிலையும் (1905); பாரிசால் கொடுமைகள் (1906); இந்தியர் ஆட்சி பற்றி இருவர் அபிப்பிராயம் (1907); காங்கிரஸ் பிரசங்கங்கள் (1907); சென்னை சுதேசி நிதி-தொழில் சங்கம் (1908); இந்திய கவர்ன்மெண்டில் திருத்தங்கள் முதலியன (1908); சுதேசியம், ஸ்வராஜ் பற்றி புகழ்மிக்க இந்தியர்களின் பேச்சுக்களும் கட்டுரைகளும் (1909), ஜன நிர்மாணம் (1914); ஆசார சீர்திருத்த வியாசங்கள் (1914); அலகாபாத் சொற்பொழிவு முதலான பதி னொன்று வெளியீடுகளை எழுதி வெளியிட்டவர் ஜி. சுப்பிரமணிய ஐயர்.

முதன்முதலில் அரசியல் சுற்றுப் பயணம் செய்து, தமிழில் பேசியும், பொதுக் கூட்டங்களில் தமிழ் அரசியல் வெளியீடுகளை வழங்கும் பிரசார முறைகளையும் அறிமுகம் செய்தவர்

ஜி. சுப்பிரமணிய ஐயர். 'இந்து' பத்திரிகையின் புகழார்ந்த ஆசிரியரான இவர், தமிழில் அரசியல் அறிவைப் பரப்பிய முன்னோடியும் ஆவார்.

காங்கிரசின் முதல் தமிழ் அரசியல் வெளியீடு :

1887-இல் சென்னையில் கூடிய காங்கிரஸ் மாநாட்டிற்கு நிதி திரட்டித் தருவதற்கும், காங்கிரசின் அரசியல் பொது மக்கள் அறிந்து கொள்வதற்கும் உதவும் வகையில் சென்னை காங்கிரஸ் தலைவர் களுள் ஒருவரான முடும்பை வீரராகவாச்சாரியார் எழுதிய ''காங்கிரஸ் வினா-விடை'' என்னும் அரசியல் தமிழ் வெளியீடு, காங்கிரசின் அதிகார பூர்வமான அமைதி பெற்று 1887-இல் வெளிவந்தது.

காங்கிரசின் உத்தியோக பூர்வமான அறிக்கையில் இந்த வெளியீட்டின் சாதனை பின்வருமாறு பாராட்டப்பட்டுள்ளது.

''காங்கிரசின் செயலாளர்களுள் ஒருவரான மு. வீரராகவாச் சாரியார் எழுதிய 'காங்கிரஸ் வினா-விடை''யின் முப்பதினாயிரம் பிரதிகள் வழங்கப்பட்டன. இந்தப் பிரதிகளைப் பெற்றுக் கொண்ட கையொப்பக்காரர்களின் பெரும் எண்ணிக்கையைக் கொண்டு மதிப்பிடும் பொழுது இந்தச் சிறு வெளியீடு வியக்கத்தக்க சாதனை புரிந்துள்ளது தெரிகிறது.''

''சுய அரசாட்சி வினா-விடை''யும் ''காங்கிரஸ் வினா-விடை'' தொடக்க கால அரசியல் தமிழ் எழுத்துத் துறையின் இரட்டை நூல்களாகப் புகழ் பெற்றன. இவையல்லாமல் வேறு சில நூல்களும் வெளிவந்துள்ளன.

திலகர் சகாப்த அரசியல் வெளியீடுகள் :

இந்திய தேசிய விடுதலை இயக்கத்தில் 1905-இல் வீறு கொண்டு எழுந்த வங்கப் பிரிவினை எதிர்ப்பு இயக்கம், வந்தே மாதரம் இயக்கமாக, சுதேசி இயக்கமாக, தீவிரவாத தேசிய இயக்க மாக பல பரிணாமங்களைக் கொண்டது. இந்தக் காலகட்டத்தில் லோக மான்ய பாலகங்காதர திலகர் புதிய திருப்பத்தை ஏற்படுத்தியதால், இந்தக் கால கட்டம், திலகர் சகாப்தம் என்று வரலாற்று ஆசிரியர் களால் குறிப்பிடப்படுகின்றது. இவர் தலைமையை ஏற்றுக் கொண்ட வர்கள் ''நேஷனலிஸ்ட் பார்ட்டி''யைச் சார்ந்தவர்கள் ஆவார் பாரதியார் இந்தக் கட்சியை ''புதிய கட்சி'' என்று குறிப்பிட்டு எழுதி வந்தார். தமிழகத்தில் பாரதியார், வ உ.சி., சுப்பிரமணிய சிவா மூவரும் ''புதிய கட்சி''யின் போர் முரசுகளாக ஒலித்தனர்.

''சென்னையில் புதிய கட்சிக்கு ஒரே பிரதி நிதியாய் இருக்கும் நமது தமிழ்ப் பத்திரிகை'' என்று பாரதியார் குறிப்பிட்ட 'இந்தியா' என்னும் தமிழ் வார இதழ், பாரதியார் ஆசிரியராக இருந்த காரணத்தால், அரசியல் தமிழ் எழுத்துத் துறையை மேலும் செழிப்பாக்கியது; வலிமையும் - கூர்மையும் பெறச் செய்தது. 'இந்தியா'வின் முதல் இதழ் சென்னையில் இருந்து மே 9, 1906-இல் வெளிவந்தது.

'இந்தியா' அலுவலக வெளியீடுகள் :

சுதேசமித்திரன் பத்திரிகை அலுவலகம் பல அரசியல் தமிழ் வெளியீடுகளை வெளியிட்டதுபோல 'இந்தியா' பத்திரிகை அலுவலகமும் சில அரசியல் தமிழ் வெளியீடுகளை வெளியிட்டது. (1907-இல் பூனாவில் சிவாஜி திருவிழா பற்றி திலகர் ஆற்றியச் சொற்பொழிவில் ஆங்கில மூலத்தோடு அதன் தமிழாக்கத்தையும் - 'இந்தியா' அலுவலகம் 57 பக்கங்களில் 1907-லேயே வெளியிட்டது. மொழி பெயர்த்தவர் பெயர் குறிப்பிடப்படவில்லை.

சென்னை கடற்கரையில் 1907 மே மாதம் 3, 4, 5, 6, 7, 8 தேதிகளில் நாள்தோறும் விபின் சந்திரபால் ஆற்றிய அரசியல் சொற்பொழிவுகள் தனி நூலாக 1907-இல் சென்னை ''கணேஷ் அண்ட் சன்ஸ்'' என்னும் பிரபல பதிப்பகத்தாரால் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டது. இந்நூலின் தமிழாக்கத்தை 232 பக்கங்களில் 'இந்தியா' அலுவலகம் 1908-இல் வெளியிட்டது. இதிலும் மொழி பெயர்த்தவர் பெயர் அறிவிக்கப்படவில்லை. ''இந்தியா ஆபீசில்'' மொழி பெயர்க்கப்பட்டது என்னும் குறிப்பு மட்டுமே காணப்படுகிறது.

1908, சனவரி மாதம் 19-இல் மகாஜனவாடி என்னும் ஊரில் அரவிந்தர் ''இந்திய அரசியல்'' என்னும் தலைப்பில் பேசியதை 'இந்தியா' அலுவலகம் 32 பக்கங்களில் 1908-லேயே வெளியிட்டது.

பாரதியாரின் அரசியல் வெளியீடுகள்

''இந்தியா''வின் ஆசிரியராக இருந்த காலத்தில் பாரதியாரின் இரு முக்கிய அரசியல் வெளியீடுகள் வெளிவந்துள்ளன. ஒன்று மொழி பெயர்ப்பு, மற்றொன்று அவர் எழுதியது.

1907 சனவரி 4-இல் கல்கத்தாவில் காலேஜ் சதுக்கத்தில் விபின் சந்திரபால் தலைமையில் திலகர் 'புதிய கட்சி'யின் கொள்கைகளை விளக்கி ஆற்றிய பேருரையை பாரதியார் மொழிபெயர்த்து தமிழில் ''புதிய கட்சியின் கொள்கைகள்'' என்னும் சிறு வெளியீடாக ஓரணா விலையில் 1908-இல் வெளியிடப்பட்டது.

பாரதியார் இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபைக்கு மூன்று முறை சென்றிருக்கின்றார். 1905-இல் காசியில் நடைபெற்ற காங்கிரசிற்கு ‘சுதேசமித்திரன்’ ஆசிரியர் ஜி. சுப்பிரமணிய ஐயருடன் பத்திரிகை நிருபர் என்ற முறையிலும்; 1906-இல் கல்கத்தா காங்கிரஸ், 1907-இல் சூரத் காங்கிரசில் காங்கிரஸ் பிரதிநிதி என்ற முறையிலும் பாரதியார் சென்றிருக்கின்றார். ‘சூரத் காங்கிரஸ்’, காங்கிரஸ் வரலாற்றில் மாபெரும் திருப்பத்தை ஏற்படுத்தியது. மிதவாதிகளுக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையே ஏற்பட்ட பிளவின் காரணங்களை விவரமாக அறியத் தூண்டும் ‘‘எங்கள் காங்கிரஸ் யாத்திரை’’ சிறு வெளியீட்டை பாரதியார் எழுதினார். 36 பக்கங்கள் கொண்ட இந்த வெளியீட்டை ‘இந்தியா’ அலுவலகம் வெளியிட்டது.

பாரதியார் புதுச்சேரியில் வாழ்ந்த காலத்தில் 1917-இல் கல்கத்தா ‘‘மாடர்ன் ரெவ்யூ’’ என்னும் ஆங்கில மாத இதழில் வெளி வந்த கவிஞர் இரவீந்திரநாத் தாகூரின் ஐந்து கட்டுரைகளை பாரதியார் தமிழில் மொழிபெயர்த்ததை சுதேசமித்திரன் பத்திரிகை வெளி யிட்டது. ‘சிறிதும் பெரிதும்’ ‘அடங்கி நட’, ‘ஜப்பானுடைய ஆவி’, ‘ஜாதி’, ‘கல்வி கற்பிக்கும் பாஷை’ என்னும் ஐந்து கட்டுரைகளை 1918-இல் 298 பக்கங்களில் சுதேசமித்திரன் அலுவலகம் தனி நூலாக வெளியிட்டது. அரசியலும், சமூக சீர்த்திருத்தமும் இந்நூலில் பேசப்பட்டுள்ளன

சுதேசமித்திரன் ஆசிரியர் கேட்டுக் கொண்டதற்கிணங்க காங்கிரஸ் வரலாற்றைக் கூறும் ‘‘பாரத ஜன சபை’’ என்னும் தழுவல் நூலை பாரதியார் எழுதினார். இந்நூலின் முதல் பாகம் 1918-இல் 188 பக்கங்களுடன் சுதேசமித்திரன் அலுவலகத்தாரால் வெளியிடப் பட்டது இரண்டாம் பாகம் 1920-இல் 190 பக்கங்களில் வெளிவந்தது.

காஞ்சிபுரம் கிருஷ்ணசாமி சர்மா

திலகர் சகாப்தம், காந்தி சகாப்தம் இரண்டிலும் வளர்ச்சி பெற்ற அரசியல் தமிழ் எழுத்துத்துறையில் காஞ்சிபுரம் கிருஷ்ணசாமி சர்மாவின் (1887-1925) பங்களிப்பு தனித்தன்மை வாய்ந்தது; சற்று வித்தியாசமானதும் ஆகும். இரு சகாப்தங்களிலும் தீவிரமாகத் தேசிய அரசியலில், சிறந்த பேச்சாளராக, எழுத்தாளராக, சிறை சென்ற தியாகியாகப் புகழ் பெற்றவா இவர் ‘‘எழுத்திடைச் சேவை செழித்த செம்மல்’’ என இவருடைய நூல்களைப் பட்டியலிட்டு, தமிழ்த் தென்றல் திரு வி.க. ‘நவசக்தி’ இதழில் (2.12.1926) செந்தமிழ்க் கவிதையில் பாராட்டியுள்ளார்

கிருஷ்ணசாமி சர்மாவின் நூல்களில் புலப்படும் தனித்தன்மை என்னவென்றால், அவருடைய நூல்கள் இந்திய தேசியத் தலைவர்

களின் வாழ்க்கை வரலாறுகளைக் கூறுவதுடன், நெப்போலியன், மாஜினி முதலானோர் வாழ்க்கை வரலாறுகளையும் தேசிய வீரம் துலங்கக் கூறுகின்றன. அரசியல், பொருளாதார நோக்குகளில் எழுதப்பட்ட பல சாத்திர நூல்களையும் இவர் எழுதியுள்ளார். தமது நூல்களை வெளியிடுவதற்கென்றே ''அரசியல் ஞான போதினி'', ''காங்கிரஸ் விளம்பர சபை'' என்னும் இரு பதிப்பகங்களையும் சென்னையில் தொடங்கினார்.

''ஸ்வதர்மா'' என்னும் இவருடைய சிறு துண்டறிக்கை முதன் முதலில் 20.3.1916-இல் வெளி வந்தது. இந்தியச் செல்வம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தால் எவ்வாறு சுரண்டப் பெற்று பிரிட்டனுக்கு கொண்டு போகப்படுகிறது, என்பதை 'ஸ்வதர்மா' புள்ளி விவரங் களுடன் விளக்கியுள்ளது.

முப்பத்தெட்டு ஆண்டுகள் வாழ்ந்த இவர், விடுதலைப் போராட்டக் களத்திலும், சிறையிலுமாக வாழ்நாட்களைக் கழித்த இவர், இருபத்தொன்று நூல்களை எழுதினார் என்பது குறிப்பிடத் தக்கது.

சிறைச்சாலையில் இருந்தபொழுது இவர் எழுதிய ஏழு நூல் களின் பெயர்கள் வருமாறு: நெப்போலியன், ஜோஸப் மாஜினி, இந்தியா இழந்த. தனம், அசோக சக்கரவர்த்தி, கும்ப மகாராஜா, இராஜரீக சாஸ்திரம், (அரசியல் நூல்), லோக மான்ய பால கங்காதர திலகர் ஜீவிய சரிதை.

சிறைச்சாலைக்கு வெளியே எழுதப்பட்ட இவருடைய பதினான்கு நூல்கள் பின்வருமாறு:

மகாத்மா காந்தி, முகமது அலி ஷவுகத் அலி, சித்தரஞ்சன தாசர், லாலா லஜ்பத்ராய், சிவாஜி மகாராஜா, ஸ்வராஜ்யம், உலக சிரேஷ்டர் யார்?, மகாத்மா காந்தி, டால்ஸ்டாய் (ருஷ்ய ஞானி) மகாத்மா காந்தியின் குரு, மகாத்மா காந்தியின் ஆன்ம சக்தியும் சாந்தி நிலையும், பண்டித மோதிலால் நேரு, இந்திய மாதர்களின் நிலைமை, இந்தியாவில் கல்வி, சரோஜினி தேவி, புத்தர் ஜாதகக் கதைகள்.

இவற்றுள் 1923-இல் வெளி வந்த ''இராஜரீக சாஸ்திரம்'' (அரசியல் நூல்) என்னும் நூல் அரசியல் தமிழ் எழுத்துத்துறையில் புதிய பாதையை திறந்து வைத்தது. உலகத்தில் தோன்றி வளர்ந்த பல அரசியல் சித்தாந்தங்களைப் பற்றியும், பல்வேறு அரசியல் அமைப்பு களைப் பற்றியும் தமிழில் விளக்க வந்த முதல் நூல், இந்த நூல். இவ் வுண்மையை நூலில் முன்னுரையில் ஆசிரியரால் கூறப்பட்டுள்ள பின்வரும் பகுதி உணர்த்துகின்றது.

''பல மாகாணத்தவர்கள் அவரவர்களுடைய மாகாணத்தில் வழங்கும் தாய் பாஷையில் அரசியல் நூல்களை இயற்றியுள்ளார்கள். தமிழ் நாடு, ஏனைய மகாராஷ்டிரம், வங்காளம், கூர்ச்சரம், ஆந்திரம், கர்நாடகம் முதலிய நாடுகளில் அரசியல் விஷயமாக பல நூல்கள் இயற்றப்பட்டுள்ளன. அக்குறையைத் தீர்க்கவே யான் முதல் முதலாக அரசியல் நூலொன்று நம் தமிழ் மக்களுக்கும் பிரயோசனப்படும் பொருட்டு என் சிற்றறிவைக் கொண்டு எழுதப் புகுந்தேன்.''

இவரையடுத்து அர்சியல் நூல்களுக்கு ஓர் இலக்கியப் பெருமையை ஈட்டித்தந்தவர் வெ. சாமிநாத சர்மா.

வெ. சாமிநாத சர்மாவின் அணுகுமுறை

அரசியல் தலைவர்கள் வாழ்க்கை வரலாறு, உலக நாடுகள் சிலவற்றின் வரலாறு, பலவகையான அரசியல் தத்துவங்கள், அவற்றை உருவாக்கிய சிந்தனையாளர்கள் முதலான உள்ளடக்கங் களைக் கொண்ட நூல்கள் சாமிநாத சர்மாவின் அரசியல் தமிழ் எழுத்துத் துறையைச் சார்ந்தவையாகும். அவருடைய நூல்களில் அரசியல் துறையைச் சார்ந்தவை சற்று கூடுதலாகும். இத்துறையில் அவர் கவனம் செலுத்தியதற்கான காரணத்தை 1971-இல் 'நூலகம்' என்னும் மாத இதழிற்கு (அக்டோபர், 1971) அளித்த பேட்டியில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

''இந்தத் துறைகள் பற்றிய நூல்கள் தமிழில் அதிகமாக இல்லை. இந்தக் குறையை நம்மால் இயன்ற வகையில் தீர்ப்போம் என்று என்னுள் எழுந்த எண்ணம் இந்தத் துறைகளில் என்னை அதிகமாக ஈடுபடுத்தியது.''

அரசியல் தலைவர்கள், அரசியல் சிந்தனையாளர்கள், அரசியல் தத்துவங்கள் முதலானவற்றை எழுதும் பொழுது தாம் கடைப்பிடித்த அணுகுமுறையைப் பற்றி சாமிநாத சர்மா ''சீனாவின் வரலாறு'' (1962) என்னும் நூலில் ''வாசகர்களுக்கு'' என்னும் முன்னுரையில் கூறியுள்ளதாவது:

''நான் எந்த நூலை எழுதப் புகுந்தாலும் அப்பொழுது எந்தவித மான அரசியல் கண்ணாடியையும் அணிந்து கொள்வதில்லை என்ற என் வழக்கத்தை இதுவரை என் எழுத்துக்களைப் படித்து வந்திருக்கிற அன்பர்கள் ஒருவாறு தெரிந்து கொண்டிருப்பார்களென்று நம்புகிறேன்.''

''எந்த ஒன்றைப் பற்றியோ நான் எழுதப் புகுந்தாலும் அந்த ஒன்றையோ ஒருவரையோ எனது நோக்கு நிலைக்கு இழுத்துக் கொண்டு வந்து நிறுத்திக் காண்பதிலோ, காட்டுவதிலோ நான்

பெருமையடைவதில்லை. அந்த ஒன்றை, அந்த ஒருவரை அந்த ஒன்றின் அந்த ஒருவரின் நோக்கு நிலையில் இருத்தி வைத்துக் காண்பதிலும், காட்டுவதிலுமே நான் திருப்தியடைகிறேன். அப்படிக் காண்கிறபோது, அந்த ஒன்றிடம், ஒருவரிடம் ஈடுபாடு உண்டாகிறது. ஈடுபட்டால்தானே அந்த ஒன்றை, அந்த ஒருவரை நிஜ வடிவத்தில் காண முடியும்? காட்டவும் முடியும்? காண்கிற போதும் காட்டுகிற போதும் உணர்ச்சி ஓரளவாவது உண்டாகத்தான் செய்கிறது.

''உணர்ச்சி என்பது என்ன? ஈடுபாட்டின் மேல்படி. அப்படியே ஈடுபாடு என்பது உணர்ச்சியின் முதல்படி. ஒன்றின்றி மற்றொன் றில்லை. ஆகவே ஒரு நூலாசிரியனுக்கு உணர்ச்சி ஓரளவு இன்றி யமையாததாகவே இருக்கிறது. ஆனால், அவன் அந்த உணர்ச்சியில் அதைப்பற்றி அல்லது யாரைப் பற்றி எழுதுகிறானோ அந்த அல்லது அவரை மறந்துவிடக் கூடாது. சிதைப்படுத்தவும் கூடாது. இது விஷயத்தில் ஒரு நூலாசிரியன் மிகவும் எச்சரிக்கை யுடனிருக்க வேண்டும்.''

காய்தல், உவத்தல் இன்றி எழுதுவதே ஒரு வரலாற்றாசிரி யனின் எழுத்தறமாக அமைய வேண்டும் என்பதில் சாமிநாத சர்மா உறுதிபட நின்றார். இந்த அரிய பண்புதான் அவருக்கு கட்சி, கருத்து வேறுபாடின்றி போற்றுதலுக்குரிய அங்கீகாரத்தை-ஏற்புடைமையை-தேடித்தந்தது.

உள்ளதை உள்ளபடி உரைத்தல்; அதில் தீர்ப்பளிக்க வேண்டியது வரலாற்றாசிரியனின் வேலையன்று என்னும் தமது கருத்தை சாமிநாத சர்மா ஒரு பேட்டியில் பின்வருமாறு வெளியிட்டுள்ளார்.

''சமயம், அரசியல் இப்படி ஏதோ ஒன்றை அடிப்படையாகக் கொண்டு எழுந்துள்ள எந்த ஒரு கட்சியிலும் அல்லது அமைப்பிலும் நான் சேர்ந்தவனில்லை. எங்கே நல்லது இருக்கிறதோ அதைத் தேடிச் செல்கிறவன் நான். பொதுவாக ஒரு விஷயத்தை எடுத்துக் கொண் டால் அதனைக் கூடிய மட்டில் தெளிவுபடுத்திக் காட்டிவிட வேண்டு மென்பதில் என் ஆவல் செல்கிறதே தவிர அதனைப் பற்றித் தீர்ப்புக் கூறுவதில் செல்வதில்லை.''

பிரிட்டிஷ் ஏகாதிபத்திய நலன்களுக்காக எழுதப்பெறும் அரசியல் வரலாற்றை, மறுசீரமைப்பு செய்து தேசிய நலன்களுக்காக புதிய பார்வையில் எழுதப்பட வேண்டும் என்பதும் சாமிநாத சர்மாவின் அணுகுமுறைகளில் ஒன்றாகும்.

1945, சனவரி மாத 'சக்தி' இதழில் சாமிநாத சர்மா ''புதிய பார்வை வேண்டும்'' என்னும் கட்டுரையில் எழுதியதாவது:

''1752-ஆம் வருஷம் நடைபெற்ற ஆர்க்காடு முற்றுகையின் போது இந்திய சிப்பாய்கள் வடித்த கஞ்சியைத் தாங்கள் குடித்து விட்டு, சோற்றை ஐரோப்பிய சோல்ஜர்களுக்கு அளித்ததாகச் சரித்திரத்தில் படிக்கிறோம். இதில் இந்திய சிப்பாய்களின் செயலைத் தியாகம் என்ற பெயரால் அழைக்கலாமா? அப்படித் தியாகம் என்று சொல்லப்பட்டால் அந்தத் தியாகம் தேசம் அடிமையாவதற்குத் துணை செய்ய வில்லையா? அடிமைப்படுவது அல்லது அடிமைப் படுத்துவது தியாகத்தின் லட்சியமாகுமா?

இங்கு, வரலாற்றாசிரியர் சாமிநாத சர்மா எழுப்பிய கேள்வி, புதிய தேசிய-பார்வையில் எழுப்பப்பெற்றக் கேள்வியாகும்.

இந்தக் கேள்வியைப் புரிந்து கொள்ள, ஒரு வரலாற்று நிகழ்வை, பிரிட்டிஷ் வரலாற்றாசிரியர் மெக்காலே பிரபு பார்வை யில், அறிய வேண்டும். "Macaulay Essay on Clive" (1920) என்னும் நூலில் 'ஆர்க்காடு முற்றுகை'யைப்பற்றிக் கூறப் பட்டுள்ளது. ஆர்க்காடு கோட்டையை ராபர்ட் கிளைவின் எதிரி சந்தா சாகேப் முற்றுகையிட்ட பொழுது, கோட்டைக்குள் 120 ஐரோப்பி யர்களும், 200 இந்தியச் சிப்பாய்களும் ஐம்பது நாட்கள் அடையப் பட்டிருந்தனர் இதனால் கோட்டைக்குள் இராணுவ வீரர்களிடையே உணவுப் பஞ்சம் ஏற்பட்டது. இந்தியச் சிப்பாய்கள் தங்கள் அரிசி யுணவை ஐரோப்பியர்களுக்கு கொடுத்துவிட்டு, வடித்த கஞ்சியை அருந்தினர் இந்தச் செயலை மெக்காலே பிரபு பின் வருமாறு பாராட்டி எழுதியுள்ளார்

"History contains no more touching instance of military fidelity or of the influence of a commanding mind."

இந்தப் பார்வையைத்தான் சாமிநாத சர்மா தமது 'புதிய பார்வை' கட்டுரையில் விமர்சனம் செய்து, கேள்வியை எழுப்பினார்.

''தேசபக்த மெய்ஞானி'' என்று கொண்டாடப்படும் சுவாமி விவேகானந்தர், சிவாஜி வரலாற்றை தேசியப் பார்வையில் எழுத வேண்டும் என்று 1893-இல் சென்னையில் உரையாற்றிய பொழுது குறிப்பிட்டுள்ளார்.

''தேசாபிமானிகள் சரித்திரத்தைப் புதிதாக ஆய்ந்து எழுத வேண்டும், நம்மிடத்தில் அனுதாபம் வைக்கமுடியாத அல்லது நடையுடை பாவனைகள், பழக்க வழக்கங்கள் இவற்றை அறிந்து கொள்ள முடியாத, மதிக்க முடியாத அந்நியர்களால் எழுதப்பட்ட சரித்திரத்தின் தீமையை சுவாமி விவேகானந்தர் சுட்டிக் காட்டினார்.'' இவ்வாறு சுவாமி விவேகானந்தரின் சிவாஜி பற்றிய ஆய்வுரையைக்

கேட்டு மகிழ்ந்த டாக்டர் எம்.சி. நஞ்சுண்ட ராவ் 1914-இல் ''வேதாந்த கேசரி'' என்னும் ஆங்கில மொழி மாத இதழில் நினைவுகூர்ந்து எழுதியுள்ளார்.

1898-இல் அமெரிக்காவில் ஒரு நண்பர் வீட்டில் ''வரலாறு கண்ட வஞ்சம்'' என்னும் தலைப்பில் சுவாமி விவேகானந்தர் பேசிய பொழுது 1857-ஆம் ஆண்டு இந்திய சிப்பாய்கள் எழுச்சியை தேசியப் பார்வையில் பாராட்டியுள்ளார்.

வேறு பல இந்திய வரலாற்றாசிரியர்களும் புதிய பார்வையில் இந்திய அரசியல் சமூக வரலாற்றை எழுத இந்திய தேசிய விடுதலை இயக்கம் பெருந்தூண்டுதலாய்த் திகழ்ந்தது. சாமிநாத சர்மாவும் இந்தப் பெருந்தூண்டுதலால் ஆட்கொள்ளப்பட்டார்

சாமிநாத சர்மாவின் முதல் இரு அரசியல் நூல்கள்

'தேசபக்தன்' இதழில் சாமிநாத சர்மா பணியாற்றிய காலத்தில் 'தேசபக்தன் லிமிடெட்', அவருடைய இரு நூல்களை வெளியிட்டது முதல் நூல் 1918-இல் வெளிவந்தது; இந்நூலின் பெயர் ''லோக மான்ய திலகர்''. இந்நூல், 32 பக்கங்களில் திலகர் வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கமாக கூறுகின்றது. திலகர் பற்றிய வாழ்க்கை வரலாற்று நூல்கள் இதற்கு முன் வெளிவந்துள்ளன. திலகரும், அன்னி பெசண்டும் இணைந்து 'ஹோம் ரூல்' இயக்கங்களைத் தீவிரமாக நடத்திக் கொண்டிருந்த காலத்தில் இந்நூல் வெளிவந்தது. ஆகவே, 'ஹோம் ரூல்' இயக்கச் செய்திகள் விரிவாக எழுதப்பெற்றுள்ளன. திலகர், சென்னை வந்தபொழுது அவரை வரவேற்று, 'தேசபக்தன்' ஆசிரியர் திரு.வி.க. பாராட்டியளித்த வாழ்த்துப்பா இந்நூலில் சேர்க்கப் பட்டுள்ளது. அன்னிபெசண்ட்டின் 'ஹோம் ரூல்' இயக்கப் பிரசார ஏடாகவும் 'தேசபக்தன்' விளங்கியது.

சாமிநாத சர்மாவின் இரண்டாவது அரசியல் நூலான ''ஏப்ரல் 1919 அல்லது பஞ்சாப் படுகொலை'' என்னும் நூல் 1920-இல் வெளிவந்தது. ''என் சொந்தத்தில் வெளியான இந்நூல்'' என்று சாமிநாத சர்மா குறிப்பிட்டுள்ளார்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம், இந்திய தேசிய விடுதலை இயக்கத்தை அடக்கி ஒடுக்கக் கொண்டு வந்த கொடிய அடக்குமுறைச் சட்டங்களுள் ஒன்று 'ரௌலட் சட்டம்'. 1919 மார்ச் மாதம் முதல் தேதியன்று இச்சட்டம் நடைமுறைக்கு வந்தது.

காந்தியடிகள் தலைமை அக்காலகட்டத்தில் உருவாகிக் கொண்டிருந்தது. ரௌலட் சட்டத்தை எதிர்த்து இயக்கம் நடத்த

காந்தியடிகள் ''சத்யாக்ரக சபை''களை அமைத்தார். நாடெங்கும் 'ஹர்த்தால்' என்னும் பொது வேலை நிறுத்தப் போராட்ட முறையுடன், உண்ணா நோன்பும், பிரார்த்தனைகளையும் இணைய புதிய ''மெய் ஞானத் துணிவாகிய'' சத்யாக்ரகத்தை அறப்போரின் புனிதப் படைக்கலனாகப் பயன்படுத்தினார்.

இந்த சத்யாக்ரக இயக்கத்தை வெறித்தனமாக அடக்கி ஒடுக்க பிரிட்டிஷ் அரசும் முற்பட்டது. இதனுடைய உச்சக்கட்டப் பயங்கரம் பஞ்சாப் மாநிலத்தில் அமிர்தசரசில் ஜாலியன் வாலாபாக் என்னும் இடத்தில் ஏப்ரல் 13, 1919-இல் கட்டவிழ்த்து விடப்பட்டது. புனித பைகாசி நாளான அன்று பெருந்திரளாக மக்கள் முற்றிலும் நிராயுத பாணிகளாக, பிரார்த்தனை புரியும் உள்ளங்களுடன் ''ஹர்த்தால்'' கடைப்பிடிக்கக் கூடிய இடத்தில் பிரிகேடியர் ஜெனரல் ஆர்.இ. எச். டையர் என்னும் ஆங்கிலேய ராணுவத் தளபதி, கூடியிருந்தோர் மீது எவ்வித முன்னறிவிப்பும் இல்லாமல் திடீரென்று துப்பாக்கிக் குண்டு வீச்சுத் தாக்குதலைத் தொடுக்க ஆணையிட்டார். 1650 தோட்டாக்கள் சுடப்பட்டன 379 பேர்கள் கொல்லப்பட்டார்கள்: 1208 பேர்கள் காயப்படுத்தப்பட்டனர். அன்றைய பஞ்சாப் ஆளுநர் மைகேல் ஓ டையர் என்பவன் இந்தப் படுகொலையை நியாயப்படுத்தினான். இந்தப் படுகொலைதான் 'பஞ்சாப் படுகொலை' என்று பெயரிடப் பட்டு நாடெங்கும் கண்டிக்கப்பட்டது.

பஞ்சாப் படுகொலையைப் பற்றி 1700 சான்றுகளைத் திரட்டி 950 பக்கங்களில் மிக விரிவான ஓர் அறிக்கையை ''காங்கிரஸ் பஞ்சாப் சப் கமிட்டி'' 1919-இல் வெளியிட்டது. இதைத் தொடர்ந்து பல நூல்களும், அறிக்கைகளும் வெளிவந்தன. ''ப்ஞ்சாப் குழப்பம்-காங்கிரஸ் கமிட்டியார் அறிக்கை'' என்னும் தமிழாக்க வெளியீட்டை 'தேசபக்தன்' அலுவலகம் வெளியிட்டது. மொழி பெயர்ப்பாசிரியர், தேசபக்தனின் துணையாசிரியர்களுள் ஒருவரான திரு. சம்பத்.

சாமிநாத சர்மாவின் நூல், மொழி பெயர்ப்பாக அல்லாமல் வரலாறாக எழுதப்பட்டது 208 பக்கங்கள் கொண்ட இந்நூல், பாஞ்சால நாடு, பஞ்சாபின் ஆட்சிமுறை, ரௌலட் சட்டமும் சத்யாக்ரகமும், பஞ்சாப் மாகாணமும் இராணுவச் சட்டமும், சில கோரமான சாட்சியங்கள் என்னும் ஐந்து தலைப்புகளில் எழுதப் பட்டது. இந்நூலை எழுதியதெப்படி என்பதைக் குறிப்பிட்டு நூலா சிரியர் சாமிநாத சர்மா ''ஒரு மொழி'' என்னும் முன்னுரையில் எழுதி யுள்ளதாவது:

இந்நூல் ஒரு தலைச் சார்பானதன்று; ஒருவருடைய கூற்றின் மொழிபெயர்ப்பன்று. பஞ்சாப் சம்பவங்களைப் பற்றிப் பலர் பல அறிக்கைகளை வெளியிட்டிருக்கின்றனர். ஒவ்வொருவருடைய கூற்றையும் இதில் எடுத்துக் காட்டி என்னாலியன்ற வரை நடுநிலை வழுவாது எழுதியிருக்கின்றேன். கூடியவரை இந்நூலில் என் அபிப்பிராயத்தை அதிகமாகக் கூறாமல் விடுத்திருக்கிறேன். . ஒரு சரித்திரக்காரனுடைய கடமை, நடந்த விஷயங்களை விளக்கிக் கொண்டு செல்வதேயன்றி, படிப்பவருடைய அபிப்பிராயத்தைத் தன் நோக்கிற்கு இணங்கியவாறு கட்டுப்படுத்தலன்று.''

இந்நூல் எழுதப்பட்ட, அச்சடிக்கப்பட்ட சூழலை சற்று நகைச்சுவையுணர்வுடன் சாமிநாத சர்மா பின்வருமாறு வருணித் துள்ளார்.

''ரௌலட் மசோதா இரவிலேயே சட்டமாக்கப்பட்டது போல் இந்நூல் இரவிலேயே எழுதப்பட்டு, இரவிலே அச்சாகி, இரவிலே பிழை திருத்தப்பட்டு, இரவிலேயே இல்லை, பகலிலேயே வெளி வந்தது.''

'தேசபக்தன்' வெளியிட்ட இரு நூல்களுக்கும் திரு.வி.க. முன்னுரைகள் வழங்கியுள்ளார். சாமிநாத சர்மாவின் நூல் ''பிற் காலத்தில் சரித பாடமாகவும் ஏற்றுக் கொள்ளப் படலாம்'' என்பதைச் சுட்டிக் காட்டி திரு வி க. எழுதிய முன்னுரையில் ஒரு பகுதி வருமாறு:

''1919-ஆம் வருஷம் ஏப்ரல் மாதம் நிகழ்ந்தவற்றைத் திரட்டி இந்நூல் வடிவாகத் தமிழ் நாட்டிற்கு வழங்க வந்த ஸ்ரீமான் வெ. சாமிநாத சர்மா அவர்களுக்குத் தமிழுலகங் கடமைப்படுதல் வேண்டும். இந்நூல் எளிய இனிய தமிழ் நடையில் எழுதப் பட்டிருக்கிறது. இந்நூலை வாசிக்குங் காலத்துப் பஞ்சாபும், அதன்கண் நிகழ்ந்தனவும் எதிரில் வந்து உலவுகின்றன. ஆசிரியர் இந்நூலை எழுதுங்காலத்து விடயத் தோடு ஒன்றுபட்டு எழுதியுள்ளார் என்பது இந்நூல் வாசிப்போர்க்குப் புலனாகும் இந்நூல் சரித முறையாக எழுதப்பட்டுள்ளமையால் பிற்காலத்தில் சரித்திர பாடமாகவும் ஏற்றுக் கொள்ளப்படலாம்.''

1920-க்குப் பிறகு சாமிநாத சர்மாவின் நூல்கள் சில வெளிவந்திருந்த போதிலும், அரசியல் தமிழ் எழுத்துத் துறைக்கான நூல்கள் 1936 முதல் மீண்டும் வெளிவரத் தொடங்கின.

'பிரபஞ்ச ஜோதி' பிரசுராலயத்தின் முதல் நான்கு அரசியல் நூல்கள்

'தேசபக்தன்' அலுவலக வெளியீடுகளுக்குப் பிறகு, சாமிநாத சர்மாவின் அரசியல் தமிழ் வெளியீடுகள் அவருடைய பர்மா வாழ்க்

கையில் 'பிரபஞ்ச ஜோதி' பிரசுராலயத்தின் சார்பில் வெளி வரத் தொடங்கின. 1936 முதல் அடுத்தடுத்து நான்கு நூல்கள் வெளி வந்தன.

முதல் நூலாக 'முஸோலினியும்', இரண்டாவதாக, 'அபிசீனிய சக்கரவர்த்தியும்', மூன்றாவதாக, 'ஹிட்லரும்', நான்காவதாக 'ஸ்பெயின் குழப்ப''மும் வெளியிடப்பட்டன

இந்நூல்கள் எவ்வாறு திட்டமிடப் பெற்று எந்த நோக்கில் வெளியிடப்பட்டன என்பதைப் பற்றிப் பதிப்பக உரிமையாளர், அரு. சொக்கலிங்கம் செட்டியார் பிற்காலத்தில் (1960-இல்) நினைவு கூர்ந்து பின்வருமாறு கூறியுள்ளார்

''1935 இறுதியில் திட்டம் போட ஆரம்பித்தோம். அந்தச் சமயம் பல தேசங்களில் சர்வாதிகார ஆட்சி நிலவிக் கொண்டிருந்தது. அந்தந்த தேசங்களில் வாழும் ஜனங்கள் சுபிட்சமாக இருப்பதாகவும் பறைசாற்றப்பட்டு வந்தது. ஜனநாயக நாடுகள் தன்னம்பிக்கை இழந்திருந்தன. அவை காலனி ஆட்சியைக் காப்பாற்றத் திணறிக் கொண்டும் இருந்தன. அந்நிய ஆட்சியால் அல்லலுற்றிருக்கும் நமக்கு, ஆட்சி செலுத்தும் நாடு எந்த ஜனநாயகத்தை அனுஷ்டித்து வந்த போதிலும் அந்த ஜனநாயகத்தின் பேரால்தான் நாம் அழுத்தப் பட்டிருக்கிறோம் என்ற ஒரு எரிச்சலும் ஏற்பட்டிருந்தது. ஆனால், இந்த அந்நிய ஆட்சி சீக்கிரம் நம்மைவிட்டு நீங்கித்தான் போகும் என்பதில் நம்பிக்கையும் கொண்டிருந்தோம்.

''அந்நிய ஆட்சியிலிருந்து விடுபட்டவுடன், மக்கள் தான்தோன்றித் தனமாக மாறிவிடக் கூடாதே என்ற கவலையும் எங்களுக்கு ஏற்பட்டது. சுயராஜ்யம் கிடைத்ததும் அராஜகமும், தலைக்கனமும் ஏற்பட்டு எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள் என்ற பாணியில் ஜனங்கள் வளர்ந்துவிடாமல் இருக்க ஒரு சில ஆண்டு களாவது நம் நாடு ஒரு சிறந்த தேசபக்த சர்வாதிகார ஆட்சியிலிருந்து விடுவது நலமென்றும் சிந்திக்க ஆரம்பித்தோம். அதன் முடிவுதான், முதன் முதலாக முஸோலினியின் வாழ்க்கையை எழுதி வெளியிட எங்களைத் தூண்டியது. அவன் ஆட்சியில் உள்ள நல்ல அம்சங்களை மட்டும் சித்தரித்து வெளியிட்டோம்.

''அதையடுத்து ஹிட்லா வாழ்க்கையை வெளியிட்டோம். அந்த நிலையில் சர்வாதிகாரமானது, பக்கத்திலுள்ள அப்பாவி நாடு களைக் கபளீகரம் செய்ய ஆரம்பித்தது. அது, எங்களை அந்த அப்பாவி நாடுகளின்பால் அனுதாபம் கொள்ளச் செய்தது. அபிசீனிய சக்ரவர்த்தியின் வாழ்க்கையை அப்பொழுது வெளியிட்டோம். அதை யடுத்து 'ஸ்பெயின் குழப்பம்' என்னும் நூலை வெளியிட்டோம்.''

இந்த நூல்களின் தோற்றக் காரணங்களை விளக்கும் மேலே யுள்ள மேற்கோள் பகுதியில் 'அந்நிய ஆட்சியில் அறிமுகப்படுத்தப் பட்ட 'ஜனநாயகத்'தைக் காட்டிலும் 'சிறந்த தேச பக்த சர்வாதிகார ஆட்சி' மேலானது என்னும் கருத்தோட்டம் பெற்றிருந்தச் செல் வாக்கை அறிகின்றோம் ஆயினும் சர்வாதிகார ஆட்சியின் ''நல்ல அம்சங்கள் மட்டும்'' எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

'முஸோலினி'

மகாகவி கதேவைத் தந்த இத்தாலி, பாஸிஸ்டான சர்வாதிகாரி பெலிடோ முஸோலினியையும் (1883-1945) தந்தது. தாய் நாட்டுப் பற்றில் முஸோலினியை ஒரு 'சரித்திர நாயகனாக' பார்த்துள்ளார், சாமிநாத சர்மா. இரண்டாம் உலகப் போரில் ஹிட்லருடன் இணைந்து முஸோலினி நிகழ்த்திய 'யுத்த வெறி' யை வரலாறு கண்டது. இதற்கு முன் இருந்த முஸோலினியை அறிமுகப்படுத்த, உலகப் போருக்கு முன் 1936-இல் வெளிவந்த நூல் இந்நூல்.

இந்த நூல், வெளிவந்த காலத்தில் சுதேசமித்திரன், கலைமகள், தினகரன் (இலங்கை), தனவணிகன் (இரங்கூன்), தினமணி, தமிழ்நேசன் (கோலாலம்பூர்), குமரன் முதலான பிரபல இதழ்கள் 'முஸோலினி' நூலைப் பாராட்டியுள்ளன என்பதும் நினைவிற்குரிய தாகும். இவற்றுள் 'சுதேசமித்திரன்' எழுதியுள்ள விமர்சனத்தின் ஒரு பகுதி, பின் வருமாறு:

''பெனிடோ முஸோலினி சமீபத்தில் இறங்கியுள்ள அபிசீனிய யுத்தம் அதர்மமானதென்பதில் அபிப்பிராய பேதத்திற்கு இடமில்லை; ஆனால் அது வேறு விஷயம். அவருடைய ஜீவிய சரிதை ஒரு லட்சியமாகக் கொள்ளக் கூடியது. தாய் நாட்டுப் பற்றால் ஊக்கப் பட்டவராய் இத்தாலியை முன்னுக்குக் கொண்டுவர வேண்டு மென்னும் உயரிய லட்சியம் கொண்டவராய், மிகவும் ஏழ்மையான ஸ்திதியிலிருந்தும் தம்து உழைப்பினாலும் உறுதியினாலும் சர்வாதி காரியாகி தனது தேசத்தை உலக வல்லரசுகளுள் ஒன்றாக்கிய பெருமை முஸோலினியையே சாரும். ஆச்சரியமான அவரது ஜீவிய சரித்திரம் தமிழ் மக்களனைவரும் படித்தறிந்து கொள்ள வேண்டியதே.''

சாமிநாத சர்மா தமது முன்னுரையில் முஸோலினியை ஒரு சரித்திர நாயகனாகக் குறிப்பிட்டு எழுதிய வரிகள், பின்வருவன :

''முஸோலினி ஒரு சரித்திர புருஷர். வேற்றுமைகளினால் அரிக்கப் பெற்றும், சோர்வினால் உறங்கியும் கிடந்த ஒரு சமூகத்திற் குத் தன்மதிப்பு, கடமை, ஒழுங்கு, ஒழுக்கம் ஆகிய மருந்துகளை உட்புகுத்தி, அதனைத் தலைநிமிர்ந்து நிற்கச் செய்வதோடு மற்றச்

சமூகங்களுக்கு எதிரே தோள் தட்டவும் செய்வித்தவன் ஒரு சரித்திர புருஷனாக அல்லாது வேறு எவ்விதமாக இருக்க முடியும்?''

''முஸோலினி இத்தாலியில் மியான் நகரத்தில் 1919 மார்ச் 23-இல் "Fascio di combattiments" என்னும் ஓர் அமைப்பை நிறுவினான். இதன் வழியாக பாஸிஸம் ஓர் அரசியல் இயக்கமாக 1921-இல் உருவெடுத்தது. இந்த இயக்கத்தின் பெயர்க்காரணத்தை முஸோலினி பின்வருமாறு விளக்கினான்.

''ரோம் ஏகாதிபத்தியம் செல்வாக்குடனிருந்த காலை மாஜிஸ் ரேட்டுகள் செல்லும்போது, அவர்களது அதிகாரத்தைத் தெரிவிப்பதற் காக அவர்களுக்கு முன்னால் 'விக்டர்கள்' என்ற உத்யோகஸ்தர்கள் தடியேந்திச் செல்வார்கள். இவற்றிற்கு 'பாசஸ்' (Faces) என்று இத்தாலிய பாஷையில் பெயர். இந்தக் கழிகள் தனித்தனியாக இருந்தால் எளிதில் முறித்துவிடலாம். ஆனால், இவற்றை ஒன்று சேர்த்துக் கட்டிவிட்டால் முறிக்க எவராலும் ஆகாது. அதுபோல் இன்று நாம் தொடங்கும் இச்சங்கத்தில் சேர்ந்து அனைவரும் பிரிக்க முடியாத ஓர் ஒற்றுமைக்குட்பட்டிருப்போமேயானால் நம்மை அழிக்க எவராலும் இயலாது. இந்த உறுதியைத் தெரிவிக்கும் அடையாளமாக இந்தச் சங்கத்திற்கு, இந்தக் கட்டுப்பாட்டுக்கு 'பாசியோ' என்று பெயரிடுவோமாக.''

அபிசீனிய சக்ரவர்த்தி :

முஸோலினியின் ஆக்ரமிப்பிற்கு உள்ளான எத்தியோப்பியர் எனப்படும் அபிசீனிய நாட்டின் சக்ரவர்த்தி ஹெய்லி சிலாஸின் வாழ்க்கை வரலாற்றையும், இத்தாலி-அபிசீனியா யுத்தத்தின் காரணங் களையும் விளக்கிக் கூறுகின்றது, இந்நூல். உள்நாட்டு அரசியலுடன் உலக அரசியல் அறிவையும் தமிழர்கள் தமிழ் மூலம் பெற்று, கூர்த்த அரசியல்பார்வை பெற இந்நூலை எழுதி உதவினார், சாமிநாத சர்மா. இத்தாலிய ஆக்ரமிப்பு காரணமாக 1936 முதல் 1941 வரையில் அரச பதவியை பறிகொடுத்து, இங்கிலாந்தில் இருந்தார் அபிசீனியா சக்ரவர்த்தி 1941-இல் பிரிட்டிஷ் பேரரசின் உதவியால் மீண்டும் அரசரானார்.

எந்த நூலிலும் தேவைப்படும் இடங்களில் தமிழ் வாசகர்கள் புதிய செய்திகளைப் படிக்குமிடத்தில் அடிக்குறிப்புகளையும், விளக் கங்களையும் தருவதில் கண்ணுங்கருத்துமாக இருந்தார் சாமிநாத சர்மா இந்த நூலிலும் 'எதியோப்பியா' என்ற சொல்லிற்கு 'வெயிலினால் கறுத்துப்போன முகமுடையவர்கள் வசிக்கும் நாடு' என்றும், 'ஹாபேஷ்' என்றும் அராபியச் சொல்லினடியாகப் பிறந்த

'அபிசீனியா' என்பதற்குக் கலப்பு ஜாதியார் வசிக்கும் இடம் என்றும் விளக்கமளித்துள்ளார்.

அபிசீனியா சக்ரவர்த்தி, சிறந்த ராஜதந்திரி, இதழாசிரியன், நாட்டின் முன்னேற்றத்திற்காக அல்லும் பகலும் அயராது பாடு பட்டவன், தெய்வ பக்தியுடையவன், சிறந்த தானைத் தலைவன் முதலான செய்திகளையறிந்து தமிழர்களும் ஊக்கம் பெற வேண்டும் என்னும் நோக்கத்துடன் இந்நூலை எழுதினார், சாமிநாத சர்மா.

தமிழ் தாத்தா உ.வே.சா. வின் பாராட்டுரை :

முஸோலினி, அபிசீனியா சக்ரவர்த்தி என்னும் இரு நூல்கள் தமிழ் தாத்தா உ.வே. சாமிநாதய்யரின் பாராட்டுதல்களைப் பெற்றது, குறிப்பிடத்தக்கதாகும். அரசியல் நூல்கள் பக்கம் பார்வையைச் செலுத்த நேரமில்லாத இலக்கிய வாழ்க்கையை மேற்கொண்ட தமிழ் தாத்தா படித்து மகிழத்தக்க அளவிற்கு சாமிநாத சர்மாவின் அரசியல் தமிழ் அமைந்திருந்தது. டாக்டர் உ.வே.சா. பாராட்டுரையின் ஒரு பகுதி, பின் வருமாறு :

''இப்போது பிரபஞ்ச ஜோதியின் பிரசுரமாக அவர்கள் எழுதியுள்ள 'முஸோலினி', 'அபிஸினிய சக்ரவர்த்தி' என்னும் இரண்டு சுடர்களையும் படித்துப் பார்த்தேன். இவை இக்காலத்தில் நமது நாட்டிற்கு நல்விருந்தாக இருக்கும் என்பது எனது கருத்து. அங்கங்கே யுத்தம் நிகழ்ந்ததும்,. நிகழ்வதும் ஜனங்களிற் பெரும்பா லோர்க்குப் பொதுவாகத் தெரியுமேயல்லாது, தேசத்தின் அமைப்பு களும் இயல்புகளும் தெளிவாகவும், உண்மையாகவும் தெரிய மாட்டா. ஆதலின் அவற்றை உள்ளது உள்ளவாறு அறிந்து கொள்ளு வதற்கு இந்நூல்கள் தக்க கருவிகளாகும்.

''ரோமாபுரியின் பெருமை, பழைய நாகரிகத்தின் உன்னத நிலை, அரசியல், போப்பரசர்களின் மாட்சி, புகழ்பெற்ற தேசத் தியாகி களின் சரித்திரம், எத்தியோப்பாவின் அமைப்பு, அந்நாட்டு மக்களின் ஒழுக்க முறைகள் ஆகிய இவையும் இளமைப் பழக்கம் ஆயுள் முழு வதும் உதவும். 'விடா முயற்சி வெற்றி தரும்'. 'வேலை செய்து கொண்டே இருப்பவர்களுக்கு எந்த விஷயத்திற்கும் அவகாச முண்டு' என்பனவற்றைப் போன்ற உண்மைகளும் இப்புஸ்தகங்களால் அறிந்து கொள்ளலாம். எல்லாரும் நன்றாக அறிந்து கொள்ளும்படி இவற்றின் வசன நடை அமைந்திருப்பதும் மனதைக் கவரும் அழகான படங்கள் உரிய இடங்களில் சேர்க்கப்பட்டிருப்பதும் மிகவும் பாராட்டுற்குரியன.''

ஹிட்லர் :

முஸோலினியின் பாஸிஸம் போல நாஜிஸத்தைக் கொண்டு யுத்த வெறியினால் உலக அமைதியைக் கெடுத்து இரண்டாம் உலகப் போரினால் பேரழிவை உண்டாக்கியவன் ஹிட்லர். (1889 - 1944). இவன் வரலாற்றை வித்தியாசமான பார்வையில் சாமிநாத சர்மா எழுதியுள்ளார் என்பதற்கு இந்நூலிற்கு அக்காலத்தில் கிடைத்த பாராட்டுரைகளே சான்றாகும்

இந்நூல் 1936-இல் வெளிவந்தது; ஹிட்லரைப்பற்றித் தமிழில் வெளி வந்த முதல் நூலாகும், இந்நூல். 422 பக்கங்களும் 25 அத்தியா யங்களும் கொண்டுள்ள இந்த நூலில் ஹிட்லரின் பிறப்பு முதல் சர்வாதிகாரியாக வந்த வரையில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

வழக்கம் போல, தமது வரலாற்று அணுகு முறையைக் குறித்து முகவுரையில் சாமிநாத சர்மா கூறியுள்ள ஒரு கருத்து, பின்வருவது :

''தீர்ப்புக் கூறுவது இந்த நூலின் நோக்கமல்ல. ஜர்மனியின் கட்சியை ஹிட்லருடைய நோக்கத்தை எடுத்துரைப்பதுதான். இதனால் ஹிட்லரின் கொள்கைகளை அங்கீகரிப்பதாக ஆகாது. அவனைக் குறை கூறுவதாகவும் ஆகாது.

ஹிட்லரின் அரசியல் கொள்கைகளில் இனவாதம் பேரழிவை ஏற்படுத்தியது. இதை 'ஆரியரும் யூதரும்' என்ற பிரிவில் சாமிநாத சர்மா விளக்கியுள்ளது, பாராட்டத்தக்கது. இனவாதத்தில் பொருளா தார ஏற்றத்தாழ்வு காரணமாக எழும் எதிர்ப்புணர்வும் ஊடுருவி நின்றதை வரலாறு காட்டியுள்ளது. இந்த அணுகு முறையில் 'ஆரியரும் யூதரும்' என்னும் அத்தியாயத்தில் சாமிநாத சர்மா விளக்கியுள்ள பின்வரும் பகுதி, கவனிக்கத் தக்கது.

''பொருளாதாரச் சோர்வினிடையில், அரசியல் குழப்பத்தின் மத்தியில் ஏற்பட்ட இந்த யூத துவேஷமானது, செழுமையான பொருளாதார நிலையும் ஸ்திரமான அரசியல் அந்தஸ்தும் ஏற்பட்ட பிறகு, குறைந்து மறைந்தும் போகுமல்லவா?''

இரண்டாம் உலகப் போருக்கு முந்திய ஹிட்லரின் ஆளுமை கவர்ச்சிக்குரியதாகவும் இருந்துள்ளது.

திரு. வி.க. வின் பாராட்டுரை :

சாமிநாத சர்மாவின் 'ஹிட்லர், திரு.வி.க. தமது 'நவசக்தி' வார இதழில் விமர்சனம் செய்துள்ளார். அதன் ஒரு பகுதி வருமாறு :

''ஹிட்லர் கொள்கையில் கருத்து வேற்றுமையிருக்கலாம். ஆனாலும், ஹிட்லர் வாழ்வில் எப்படி முன்னேற்றமடைந்தார்

என்பதை அரசியல் உலகம் தெரிந்து கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறது. தொழிலாளியாயிருந்த ஒருவர் ஒரு பெரும் ஏகாதிபத்தியத்தில் சர்வாதிகாரியாக நின்று உலகத்தையே கலக்கும் நிலையை எய்தியது வியப்பன்றோ? அத்தகைய ஒருவரது வரலாற்றை ஆராய வேண்டு வது அறிஞர் கடமை. ஹிட்லர் வரலாறு தமிழில் திரு. வெ. சாமிநாத சர்மா அவர்களால் எழுதப் பெற்றிருக்கிறது. ஹிட்லர் வரலாற்றுடன் ஜெர்மனியைப் பற்றிய வேறு பல சரித்திரக் குறிப்புகளும் நூலில் மிளிர்கின்றன. திரு. சர்மா அவர்களின் உரைநடையில் வீரமும் எழுச்சியும் நிலவுகின்றன.''

ராஜாஜி பாராட்டு :

வரலாற்று நூலை எழுதும் பொழுது, சாதாரண வாசகனுக்கு பயன்படும் முறையில் பல விதமான குறிப்புகளைத் திரட்டித் தருவதிலும் சாமிநாத சர்மா தனிக்கவனம் செலுத்தியுள்ளார். இதைச் சுட்டிக் காட்டிப் பாராட்டியுள்ளார் ராஜாஜி. சாமிநாத சர்மாவிற்கு எழுதிய கடிதத்தில் தமது பாராட்டுரையை பின்வருமாறு தெரிவித் துள்ளார்.

''ஹிட்லர் புத்தகம் வந்து சேர்ந்தது பார்த்தேன். இவ்வளவு விஷயங்கள் எப்படிக் கிடைத்தன? இத்தனை படங்களும் விபரங் களும் எவ்வாறு சேகரித்தீர்கள்? நம்முடைய நாட்டில் பலர் மிக அக்கரை கொண்ட காரியங்களும் சரிவரச் செய்யமுடியாமலிருக்க இந்தப் புத்தகம் எவ்வாறு இவ்வளவு கச்சிதமாக முடியப்பெற்றது.''

'ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்' பாராட்டியது

சென்னை ராமகிருஷ்ண மடத்தின் மாத இதழான ''ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்'', ஹிட்லரைப் பாராட்டி, அவனிடமிருந்து தமிழர்கள் கற்றுக் கொள்ளத்தக்கன உள்ளன என்று 'ஹிட்லர்' நூலின் விமர்சன உரையில் பின்வருமாறு கூறியுள்ளது.

அஞ்சா நெஞ்சு, நன்னடத்தை, தூய்மை, தியாக புத்தி முதலிய ஒப்புயர்வற்ற குணங்களால் திகழ்பவர், பெருஞ் செல்வாக்குடன் விளங்குபவர் என்பதற்கு நேர் எடுத்துக்காட்டாக நிற்பவர் ஹிட்லர். தமிழரிடத்து அஞ்சாமை, வீரம், அன்பு, அறிவு முதலியன பொலிய வேண்டுமானால் ஹிட்லர் போன்ற சிறந்த வீரர்களின் வரலாறுகளை கற்றல் வேண்டும். இந்நூலைப் போன்று தமிழில் உயர்ந்த முறை நூல்கள் பல வெளிவருதல் இன்றியமையாதது.''

முற்றிலும் ஆன்மீக மாத இதழான ஓர் இதழ் பாராட்டத்தக்க அளவிற்கு சாமிநாத சர்மாவின் எழுத்தாற்றல் வெற்றி பெற்றுள்ளது.

''ஸ்பெயின் குழப்பம்'':

1937-இல் வெளிவந்த இந்த நூல் முந்தைய மூன்று நூல்களுடன் பொருட் தொடர்புடையது. அக்காலத்தில் உலக அரசியலில் தோன்றிய பாசிஸம், நாஜிஸம், சர்வாதிகாரம், மக்களாட்சி முதலான அரசியல் தத்துவங்களை தனி நபர்கள் வாழ்க்கை வரலாறுகளிலும், நாடுகளின் வரலாறுகளிலும் தமிழில் தமிழர் கண்டறிந்து புரிந்து கொள்ளும் வண்ணம் சாமிநாத சர்மா எழுதிய நூல்களுள் ''ஸ்பெயின் குழப்பம்'' ஒன்றாகும்

1936-இல் ஸ்பெயினில் சர்வாதிகார சக்திக்கும், மக்களாட்சி சக்திக்கும் இடையே நிகழ்ந்த போராட்டத்தை விளக்குவது 'ஸ்பெயின் குழப்பம்'.

இந்திய தேசிய விடுதலைப் போராட்டம் நிகழ்ந்து கொண்டிருக்கும் கால கட்டத்தில், உலகின் பிறவிடங்களில் நடந்த அரசியல் போராட்டங்களையும் தமிழறிந்தோர் அறிய வேண்டும்; இவ்வாறு அறிந்தால் நமது நாட்டில் விடுதலைப் போராட்டத்தின் அவசியத்தையும் தமிழர்கள் உணர்ந்து கொள்வர் என்பதும் சாமிநாத சர்மாவின் கணிப்பு.

ஸ்பெயின் நாட்டு மன்னன் அல்பான்ஸோ, 1931-இல் முடி துறந்த பிறகு உள்நாட்டுக் குழப்பம் ஏற்பட்டது ஏகாதிபத்திய சக்திகளெல்லாம், ஸ்பெயின் நாட்டு இராணுவத் தளபதி பிராங்கோவிற்கு ஆதரவளித்தன. மக்கள் ஆட்சி சக்திகளெல்லாம், கபல்லெரோவின் குடியரசு ஆட்சிக்கு ஆதரவளித்தன. இந்தப் போராட்டத்தை 'ஸ்பெயின் குழப்பம்' விளக்குகின்றது.

ஸ்பெயின் போராட்டம் - நேருஜி கருத்து :

ஸ்பெயினில் இந்தப் போராட்டம் நிகழ்ந்து கொண்டிருந்த காலத்தில், அதைப் பற்றி இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபையிலும் பேசப்பட்டது 1937-இல் பெஸ்பூரில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் ஜவஹர்லால் நேரு தமது தலைமையுரையில் ஸ்பெயின் போராட்டத்தின் தேசிய முக்கியத்துவம் குறித்து பின்வருமாறு பேசினார்.

''இன்று நமது போராட்டங்கள் ஸ்பெயினிலே நடைபெறுகின்றன. இந்தப் போராட்டத்தை வெளியார் என்ற முறையில் அநுதாபத்துடன் மட்டும் நாம் கவனிக்கிறோமில்லை. இதில் கலந்துள்ளவர்களுக்கு இருக்கிற கவலையுடனும் இதனை நாம் கவனிக்கிறோம். ஸ்பானிஷ் குடியரசு வாழ வேண்டும், சுதந்திரம் நிலைக்க வேண்டும்

என்பதற்காக அனேக ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் இறக்கிறார்கள். மற்ற இடங்களில் நாம் காண்பது போலவே ஸ்பெயினிலும் இப்பொழுது சுதந்திரக் கோட்டையில் அவர்கள் தகர்க்கப்படுவதைக் காண்கிறோம்.''

நேருஜியின் தலையுரையில் ஸ்பெயினில் நிகழ்ந்த போராட்டம் தேசிய பார்வையில் பேசப்பட்டதைக் கருத்தில் கொள்ளும் பொழுது சாமிநாத சர்மாவின் இந்நூலின் படைப்பு தேசிய முக்கியத்துவம் பெறுகின்றதல்லவா?

இந்த நூலில் ஹிட்லர், முஸோலினியின் அரசியல் சர்வாதி காரப் போக்குகளின் நிச்சயமற்ற தன்மையைப் பற்றிய தமது சந்தேகத்தை சாமிநாத சர்மா பின்வருமாறு வெளிப்படுத்தியிருப்பது உளங் கொளத் தக்கது.

''ஜெர்மனியில் சர்வாதிகாரியான ஹிட்லருக்கும், இத்தாலியின் சர்வாதிகாரியான முஸோலினிக்கும் நாடு பெருக்கும் ஆசை இருக்கிறதென்பது, வெளிப்படை, ஆனால் இந்த ஆசை இதனோடு நிற்கும் என்பதற்கு என்ன நிச்சயம்?''

இதுவரையில் கூறப்பெற்ற நான்கு நூல்களில் ''தேசபக்த சர்வாதிகார'' தத்துவத்தை ஓரளவு ஏற்றுக் கொள்ளும் பாங்கில் சாமிநாத சர்மா அணுகியிருந்தாலும், பிற நாடுகளை அடிமைப் படுத்தும் ஆக்ரமிப்பு போக்கை ஏற்க மறுத்தவர், சாமிநாத சர்மா என்பதும் நினைவில் நிறுத்த வேண்டிய செய்தியாகும். இதற்குரிய ஒரு சான்றை 1949-'சக்தி' மாத இதழின் பொங்கல் மலரில் எழுதப்பட்ட அவருடைய ''வல்லான் வகுத்ததே வாய்க்கால்'' என்னும் கட்டுரையில் பின் வருமாறு அறிகின்றோம்.

''முஸோலினி, அபிஸீனியாவை ஆக்ரமித்துக் கொண்டான். ஹிட்லர் செக்கோஸ்லோவகியாவைக் கைப்பற்றிக் கொண்டான். சீனா வை முழங்கால் முறிய அடிக்க வேண்டுமென்று முனைந்து நின்றது ஜப்பான். என்ன அநியாயம் என்று அப்பொழுது திகைத்து நின்றவர் பலர். ஏனெனில் நம்முடைய நாகரீகத்திற்கு, நம்முடைய பரம் பரைக்கு, இந்த ஆக்கிரமிப்புச் செயல்கள் முரண்பட்டவை. இந்தியா எப்பொழுதுமே அறிவுக்காக அன்பைத் துறந்துவிடவில்லை. அதிகார பலத்தைக் கொண்டு தன்னலத்தைப் பெருக்கிக் கொள்ளவில்லை. தனது உரிமையை எப்படிப் புனிதமாகப் போற்றியதோ அப்படியே பிறருடைய உரிமைக்கும் மதிப்புக் கொடுத்தது.''

''செக்கோஸ்லோவகியா'' :

ஐரோப்பிய அரசியலில் அக்காலத்தில் செக்கோஸ் லோவகியா, ஹிட்லரின் ஆக்ரமிப்பிற்கு இரையானது. ஆக்கிரமிப்பு

அரசியலைப் புரிந்து கொள்ள, 1936-இல் வெளிவந்த சாமிநாத சர்மாவின் நூலாகும், ''செக்கோஸ்லோவகியா''. இந்நூலில் உள்ள ''தமிழ்த் தாய்க்கு'' என்னும் முன்னுரையில் சாமிநாத சர்மாவின் பின்வரும் விழுமிய விருப்பம் வெளிப்பட்டுள்ளது.

''அகிலத்தையெல்லாம் கட்டியாள வேண்டுமென்ற ஆசை எனக்கில்லை. ஆனால், அகிலத்தையெல்லாம் என் இனிய தமிழில் கொண்டு வந்து காட்ட வேண்டுமென்ற ஆசை நிரம்ப இருக்கிறது. என் வாழ்நாளில் நான் மூச்சுவிடும் ஒவ்வொரு கணத்திற்கும், ஒவ்வொரு நூல் வெளியிட்டுவிடுவேனாயின் அப்பொழுதுதான் என் தாய்க்கு நான் செய்த தொண்டில் திருப்தி கொள்வேன்.''

''கமால் அத்தாதுர்க்''

நவீன துருக்கியின் தந்தை என்று போற்றப்படும் கமால் அத்தாதுர்க் (1881 - 1938) பற்றிய வாழ்க்கை வரலாற்று நூல் எழுதப் பெற்றதின் நோக்கமும், இந்திய தேசியத்திற்கு வலியூட்டவே ஆகும்.

துருக்கிப் புரட்சிவீரர் கமால் அத்தாதுர்க் இந்திய தேசியப் புரட்சிவீரர்களால் பாராட்டப்பட்டவர். இலண்டனில் 1907-இல் தோன்றிய ''இந்தியா ஹவுஸ்'' என்னும் இந்திய தேசியப் புரட்சி வீரர்களின் விடுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 1908 அக்டோபர் 16-ல், துருக்கி குடியரசு நாடாகப் பிரகடனப்படுத்தப்பட்டதை வரவேற்று பாராட்டுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஷியாம்ஜி கிருஷ்ணவர்மா, வீரசாவர்க்கார், வ.வே.சு. ஐயர் முதலான இந்திய தேசியப் புரட்சி வீரர்களை இந்தியா ஹவுசில் கமால் அத்தாதுர்க் சந்தித்துள்ளார்.

''ஐரோப்பாவின் நோயாளி'' என்று வல்லரசுகளால் இகழப் பெற்ற துருக்கியில் பல முற்போக்கான சீர்திருத்தங்களை வெற்றிகர மாக நடைமுறைப்படுத்தியவர் கமால் அத்தாதுர்க். இந்திய அரசியல் வாழ்வுக்கு அவர் வரலாறு ஊக்கமளிக்கத்தக்கது என்பதை பின்வரு மாறு 'வாசகர்களுக்கு' என்னும் பகுதியில் குறிப்பிட்டுள்ளார், சாமிநாத சர்மா.

''கமாலின் ஜீவிய சரிதத்தை எழுதி வெளியிட வேண்டு மென்ற எனது நீண்டகாலத்து ஆசை, இப்பொழுது அவன் இறந்த பிறகே ஓரளவிற்குப் பூர்த்தியாயிற்று. கமாலின் நிர்வாகத்தின் கீழ் துருக்கியில் ஏற்பட்ட பல்வித மாற்றங்களைப் பற்றித் தமிழில் தனி நூல்கள் பல வெளிவர வேண்டுமென்பது எனது அவா. அதனைத் தக்க அறிஞர்கள் செய்வார்களானால் இந்திய அரசியல் வாழ்வுக்குப் பெரிதும் உதவியாயிருக்கும்.''

சமய சார்பற்ற, மொழிவழிப்பட்ட தேசிய உணர்வின் மேன்மைகளை உணர்த்தப் பயன் தரும் இந்நூல் 1939 சனவரியில் வெளி வந்தது. இந்நூலில் ''சீர்திருத்தங்கள்'' என்னும் தலைப்பில் கூறப் பெற்றுள்ள யாவும் இந்தியாவின் தேசிய அரசியல் சிந்தனை களுக்கு ஆக்கம் அளிப்பனவாக அமைந்துள்ளன.

''பாலஸ்தீனம்''

மிக நீண்ட கால இஸ்ரேல் - பாலஸ்தீனப் புரட்சியாளர் மோதலுக்குப் பிறகு, இன்று பாலஸ்தீனம் சுயாட்சிப் பிரதேசமாக விளங்க யூதர்-பாலஸ்தீன அரசுகளிடையே உடன்பாடு ஏற்பட்டு உள்ளது, வரலாற்று சாதனைகளும் ஒன்றாகும்.

சாமிநாத சர்மாவின் 'பாலஸ்தீனம்' 1939-இல் வெளிவந்தது. ''வெளி நாட்டு விவகாரங்களில் தமிழர்களாகிய நாம் இன்னும் அதிக மான சிரத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமென்பதே என் கோரிக்கை'' என்று இந்நூலின் முன்னுரையில் சாமிநாத சர்மா எழுதி யுள்ளார். இந்நூலில் அராபியர்களின் தேசிய இயக்க வரலாற்றின் ஒரு கால கட்டத்தை எடுத்துரைக்கின்றது. பாலஸ்தீன நாட்டின் அமைப்பு, பால்பர் அறிக்கை, அராபியர்களின் தேசிய இயக்கம், யூதர்களின் குடியேற்றத்தால் உண்டான விளைவு, யூதர்களின் வரலாறு, யூத அராபிக்கலகம் ஏற்பட்ட முறை முதலான பல செய்திகளை இந்நூல் விளக்கியுள்ளது

சிறு-சிறு அரசியல் வெளியீடுகள்

சாமிநாத சர்மாவின் பர்மா வாழ்க்கையில் 1936 முதல் 1939 வரையிலான கால கட்டத்தில் சிறு-சிறு வெளியீடுகள் வெளிவந் துள்ளன. இவை பொருட் செறிவுள்ள 'மின்னொளி பிரசுரங்கள்' என்று விளம்பரத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளன

''இந்தச் சுறுசுறுப்பான காலத்தில் உலகத்தின் பல பாகங் களிலும் எத்தனையோ விஷயங்கள் மின்னொளி போல் தோன்று கின்றன. அவை மறைந்து போகாவண்ணம், தமிழர்கள் உள்ளத்திலே பதிய வைப்பதே இந்த மின்னொளி பிரசுரங்களின் நோக்கம். குறைந்தது மாதத்திற்கொரு முறை, பல முக்கிய விஷயங்களைச் சுருங்கிய வடிவில் தாங்கி இந்தப் பிரசுரங்கள் வெளியாகும்.''

இவ்வாறு திட்டமிடப்பட்ட வகையில் இரண்டணா விலையில் பதினெட்டு சிறு வெளியீடுகள் வந்தன. இவற்றுள் அரசியல் துறைக்கு உரியன பின்வருவன

பிரிக்கப்பட்ட பர்மா, பெடரல் இந்தியா, சமஸ்தான இந்தியா, இந்தியாவின் தேவை, காந்தியும் ஜவஹரும், நமது ஆர்யாவர்த்தம், புராதன காலம்-வேத காலம், இதிகாச காலம், பௌத்தகாலம், மௌரியர் ஆட்சி, குப்த மன்னர்.

இந்த பதினொன்று நூல்களுள் பின்ருவரும் ஆறு வெளியீடு களைப் பற்றிய சுருக்கமான அறிமுகத்தைப் பார்ப்போம்.

'பிரிக்கப்பட்ட பர்மா'

நாற்பது பக்கங்கள் கொண்ட இந்த வெளியீடு, பிரிட்டிஷ் இந்திய ஆட்சி அமைப்பில் இருந்து பர்மா பிரிக்கப்பட்டதை விளக்கு கின்றது. 1937 மார்ச் மாதம் வரையில் பர்மா, இந்தியாவின் ஒரு பகுதியாக இருந்தது. பர்மாவின் வரலாறு பிரிட்டிஷ் ஆதிக்கத்திற்கு அடிமையானது, பிரிக்கப்பட்ட பர்மாவின் அரசியல் அமைப்பு, பர்மா வாழ் இந்தியர்களின் நிலைமை முதலான பல விவரங்கள் இந்த வெளியீட்டில் உள்ளன

'பெடரல் இந்தியா'

1935-ஆம் ஆண்டு பிரிட்டிஷ் ஆட்சி இந்திய அரசியல் சட்டம் சமஷ்டி ஆட்சி முறையை இந்தியாவில் அறிமுகப்படுத்தியது. இதை விளக்குவது, இந்த வெளியீடு இந்த வெளியீட்டிற்கு 'சமஷ்டி இந்தியா' என்று பெயரிடாமல், 'பெடரல் இந்தியா' என்று பெயரிடப் பட்டுள்ளது, சற்று வியப்பாகத்தான் உள்ளது.

'சமஸ்தான இந்தியா'

பிரிட்டிஷ் இந்தியா, சமஸ்தான இந்தியா என இந்தியா இருவேறு அரசு அமைப்புகளாக இருந்த காலத்தில் இந்திய சமஸ்தானங்களைப் பற்றிய வரலாற்றைக் கூறவந்த வெளியீடு இது.

'இந்தியாவின் தேவை'

சுரேந்திர நாத் பானர்ஜி, பிரோஸ்ஷா மேத்தா, கோபால கிருஷ்ண கோகலே, பண்டித மாளவியா, தாதாபாய் நவ்ரோஜி, மகாத்மா காந்தி, கவிஞர் இரவீந்திரநாத் தாகூர், ராஷ்பிகாரி கோஷ், டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன், சார்லஸ் பிராட்லா (பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்), சுவாமி விவேகானந்தர், ஆனந்தகுமார சுவாமி, ஆலன் ஆக்டேவியன் ஹ்யூம், பண்டிட் ஜவஹர்லால் நேரு ஆகியோர் இந்திய தேசிய இலட்சியங்களைப் பற்றிக் கூறிய கருத்துக்களின் தொகுப்பு, இந்த வெளியீடு.

'காந்தியும் ஜவஹரும்'

''காந்தி ஒரு வித்து; அதிலிருந்து தோன்றிய முளை ஜவஹர்'' என்னும் குறிப்புரையை விளக்குவது, இந்த வெளியீடு.

நேருஜி, காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதைக் கவித்வ மயச் சொற்களால் பின்வருமாறு வருவித்துள்ளார், சாமிநாத சர்மா.

''ஜவஹர் ராஷ்ட்ரபதியாகிவிட்டார். மன்னு புகழ் ஸ்வரூப ராணியின் மணி வயிறு வாய்த்த மதலை, கொடி தூக்கிவிட்டார் பாரத மாதா கண் திறந்து பார்க்கிறாள். ''ஆடுவோமே பள்ளு பாடுவோமே, ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோமென்று'' நாமும் பாரதி யாருடன் சேர்ந்து கொள்ளலாமா?''

'ரூஸ்ஸோ'

'மின்னொளி' பிரசுரங்களை அடுத்து 1941-இல் வெளிவந்த 'ரூஸ்ஸோ' 'சமுதாய ஒப்பந்தம்' இரண்டும் அரசியல் இரட்டை இலக்கிய நூல்களாகக் கருதத்தக்கவை.

ரூஸ்ஸோவின் வாழ்க்கை வரலாறு 1941-இல் பர்மாவில் வெளிவந்தது. பிரெஞ்சு மொழியில் ரூஸ்ஸோவின் முழுப் பெயர் "Jean Jacpues Rousseau" (1712 - 1778) தமிழில் 'ழான் ழாக்ருஸ்ஸோ' என்று கூறப்படுவதுண்டு.

''மனிதன் சுதந்திரமாய் பிறந்தான் ஆனால் எங்கும் அடிமைத்தளையுடனே காண்கின்றான்'' என்னும் மக்கள் அரசியல் உரிமைச் சாசன முழக்கத்தை முதன் முதலில் பதினெட்டாம் நூற்றாண்டில் புரட்சிகரமான முழக்கத்தை முழங்கியவன் ரூஸ்ஸோ. உலக அரசியல் வரலாற்றுப் போக்கை முற்போக்கு திசையில் திருப்பிவிட்ட மாபெரும் அரசியல் சிந்தனையாளர், ரூஸ்ஸோ

''ரூஸ்ஸோ இரண்டு புரட்சிகளுக்கு விதை போட்டவர்'' என்னும் கருத்தை சாமிநாத சர்மா இந்நூலில் தக்க சான்றுகளுடன் நிறுவியுள்ளார். 1776-ஆம் ஆண்டு அமெரிக்கப் புரட்சியும், 1789-ஆம் ஆண்டு பிரெஞ்சுப் புரட்சியும் வெளியிட்ட சுதந்திரப் பிரகடனங்களில் ரூஸ்ஸோவின் 'சமுதாய ஒப்பந்தம்' என்னும் நூலில் கூறப்பட்ட கருத்துகள் எடுத்தாளப்பட்டுள்ளதையும் சாமிநாத சர்மா சுட்டிக் காட்டியுள்ளார். இந்திய தேசிய அரசியலில் உரிமை வேட்கையும், போராட்ட உணர்வும் வளர்ந்தோங்க வழிவகுக்கும் பாங்கில் இந்நூலைத் தமிழர்களுக்கு காலத்தின் தேவையை நிறைவு செய்து, வழங்கியுள்ளார், சாமிநாத சர்மா

நூலின் முன்னுரையில் மிகச் சுருக்கமாக ஆனால் தெளிவுடன் ரூஸ்ஸோவின் அரிய ஆளுமையை, வரலாற்று பாத்திரத்தை பின்வருமாறு விளக்கியுள்ளார், சாமிநாத சர்மா.

''ஐரோப்பாவில், பதினெட்டாவது நூற்றாண்டில், பழமைக்கும், புதுமைக்கும் பெரிய போராட்டம் நடைபெற்றது. தெய்வீக சக்தியில் நம்பிக்கை, அந்தச் சக்திக்கு அடங்கி நடக்க வேண்டுமென்ற கொள்கை, அப்படி நடந்தால் மறுவுலகத்தில் நித்திய வாழ்வு கிடைக்க வேண்டுமென்ற ஆசை ஆகிய இவையெல்லாம் பழமைக்கும், சகோதர மக்களிடம் அன்பு காட்டல், மனிதனுடைய உயர்ந்த தன்மைகளில் நம்பிக்கை கொள்ளுதல் எல்லோருக்கும் நீதி கிடைக்கக் கூடிய வழியைக் கோலுதல், எதிர்காலச் சந்ததியினரின் நல்வாழ்வுக்கு நிகழ்காலத்தில் ஓயாமல் உழைத்துக் கொண்டிருப்பதிலே திருப்தியடைதல் ஆகிய இவையெல்லாம் புதுமைக்கும், முறையே கட்டியங் கூறிக் கொண்டு நின்றன.

புதுமையின் பிரதிநிதியாகத் தோன்றியவன் ரூஸ்ஸோ. ஜனங்களுக்கு ஆளும் உரிமையுண்டு என்று முதன் முதலாக, பகிரங்கமாகச் சொன்னவன் இவன். ஓர் அறிஞன் கூறியுள்ள மாதிரி ''ஏழை மக்களைத் தலை நிமிரச் செய்தவன் இவன்''. சொத்துடையவர்கள், உயர்குலத்தில் பிறந்தவர்கள் ஆகிய இவர்கள் மட்டுமே அரசியல் நிருவாகத்தில் பங்கெடுத்துக் கொள்ள உரிமையுடையவர்கள் என்ற பழைய கொள்கையைத் தகர்த்தெறிந்து, உழைத்துப் பிழைக்கிறவர்களுக்கும் அந்த அரசியல் நிருவாகத்தில் பங்குண்டு என்று கோஷமிட்டவன் இவன் இவன் எழுதிய சமுதாய ஒப்பந்தம், பிரெஞ்சுப் புரட்சியின் வேத புத்தகம் ''

அதிகார வருகத்தினராலும், நண்பர்களாலும் ரூஸ்ஸோ எதிர் கொண்ட துன்பங்களையும், வறுமைச் சூழலிலும் தன்னுடைய வாழ்வுரிமையையும், பிறருடைய உரிமையுணர்வையும் மதித்து நடத்திய ரூஸ்ஸோவின் வாழ்க்கைப் போராட்டத்தை உணர்ச்சியும், நெகிழ்ச்சியும் உடைய இனிய தமிழ் நடையில் விளக்கியுள்ளார், சாமிநாத சர்மா இந்நூலில்.

''சமுதாய ஒப்பந்தம்''

'ரூஸ்ஸோ' வெளிவந்த 1941 அக்டோபர் மாதத்திலேயே ''சமுதாய ஒப்பந்த''மும், இரட்டைப் பிறவிகளாக வெளிவந்தன. இவையிரண்டையும் முதன் முதலில் பர்மாவில் புது மலர்ச்சி நூற் பதிப்புக் கழகத்தின் சார்பில் வெளியிட்டவர் .சாமிநாத சர்மாவின் இலக்கியத் தோழர் கன. முத்தையா. பின்பு இவை சற்று விரிவாக்கம் பெற்று பிரபஞ்ச ஜோதி பிரசுராலயம் வெளியீடுகளாகவும் வந்தன.

வ.வே.சு. ஐயரின் முதன் முயற்சி

சாமிநாத சர்மா ஆசிரியராகவிருந்த 'ஜோதி' இதழில் 1940 ஆகஸ்ட் முதல் 1941 பிப்ரவரி வரையில் தொடர்ச்சியாக, 'சமுதாய

ஒப்பந்தம்' வெளிவந்தது. ''நாமறிந்த வரையில் இந்த நூல் இப்பொழுதே முதன்முதலாகத் தமிழில் வெளிவருகிறது'', எனத் தொடர்க் கட்டுரையின் தொடக்கத்தில் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார், சாமிநாத சர்மா. ஆனால், ரூஸ்ஸோவின் சமுதாய ஒப்பந்தத்தைத் தமிழில் முதன் முதலாக மொழி பெயர்க்க முயற்சியெடுத்தவர் வ வே சு ஐயர் (1881 - 1925). 'வீர விளக்கு' வ வே.சு. ஐயர் இலண்டனில் 'இந்தியா ஹவுஸ்' என்னும் புரட்சி வீரர்கள் விடுதியில் இருந்த காலத்தில் ''ழான் ழாக் ரூஸோ எழுதிய 'ஜன சமூக ஒப்பந்தம்'' என்னும் தலைப்பில் மொழி பெயர்க்கத் தொடங்கினார் புதுச்சேரியில் பாரதியார் ஆசிரியராக இருந்த 'இந்தியா' வார இதழில் 5 6.1909 முதல் இந்த மொழி பெயர்ப்பு வெளிவரத் தொடங்கியது 'இந்தியா' இதழில் இந்த மொழி பெயர்ப்பு எவ்வளவு காலம் வெளிவந்தது என்பதைப் பற்றி முடிவு செய்ய இயலவில்லை. 'இந்தியா' இதழ்கள் முழுவதும் கிடைக்காதது இதற்கு ஒரு காரணம். கொந்தளிப்பு மிக்க அயல் நாட்டு புரட்சி இயக்க அரசியல் முடிவில் வ.வே சு. ஐயர் தொடர்ந்து மொழி பெயர்ப்புப் பணியில் ஈடுபட்டிருப்பாரா என்னும் ஐயம், மற்றொரு காரணம். ஆயினும், தொடக்கத்தில் ''மொழி பெயர்த்தோன் குறிப்பு'' என்னும் தலைப்பில் வ.வே.சு. ஐயர் எழுதியுள்ள பின்வரும் பகுதி அவருடைய முதன் முயற்சியைக் கண்டறிய உதவுகின்றது.

''சகம் 1692 (கி.பி. 1762)-ம் வருஷத்தில் பிரான்ஸு தேசத்தின் வித்துவானும் தத்துவ சாஸ்திரியுமான ழான் ழாக் ரூஸ்ஸோ என்பவன் ஜன சமூக ஒப்பந்தம் என்ற அரிய கிரந்தத்தைப் பிரசுரப்படுத்தினான். அது வெளிவந்த தினம் முதற் கொண்டு பிரான்ஸு தேசத்திலும் அதன் கீர்த்தி பரவி, அது இதர பாஷைகள் அநேகங்களில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றது. இந்த பிரக்யாதியுள்ள கிரந்தம் தமிழ் நாட்டார் எளிதில் படிக்கும்படி தமிழில் மொழி பெயர்க்கப்பட வேண்டியது அவசியம். தமிழ் ஞானமும் எழுதும் சக்தியும் என்னைக் காட்டிலும் அதிகமாக உள்ளவர்கள் இந்தக் காரியத்தைக் கையிலெடுத்துக் கொண்டிருக்கும் பக்ஷத்தில் விசேஷமாக இருந்திருக்கும். ஆனால், இதுவரையில் இதை ஒருவரும் எடுத்துக் கொள்ளாமலிருக்கிறபடியாலும், முதன் நூலின் அருமையையும் அதைப் பாஷாந்தரம் படுத்த வேண்டியதின் அவசியத்தையும் கருதி என்னுடைய மொழி பெயர்ப்பிலுள்ள குற்றங்களை கற்றோர் மன்னிப்பார்கள் என்கிற தைரியத்தையும் கொண்டும் இந்த எளிய மொழி பெயர்ப்பை வெளியிடுகிறேன்.

வ வே.சு. ஐயர் மொழி பெயர்க்கத் தொடங்கியிருந்தாலும், வாசகர்களுக்கு முற்றிலுமாக மொழி பெயர்க்கப் பெற்ற நிலையில் கிடைத்துள்ள ரூஸ்ஸோவின் முதல் நூல் சாமிநாத சர்மாவின்

நூலாகும். ''தமிழ் ஞானமும் எழுதும் சக்தியும் என்னைக்காட்டிலும் அதிகமாக உள்ளவர்கள் இந்தக் காரியத்தைக் கையிலெடுக்க வேண்டும்'' என வ.வே.சு ஐயர் எதிர் பார்த்ததை சாமிநாத சர்மா நிறைவேற்றிவிட்டார்

ஆங்கில மொழி பெயர்ப்புகள் பலவற்றை வைத்துக் கொண்டு ''நான் இந்த நூலைத் தமிழ்ப்படுத்தியிருக்கிறேன்'' என்று சாமிநாத சர்மா குறிப்பிட்டுள்ளார். ''சமுதாய ஒப்பந்தம், சிந்தனைக்கு ஒரு தூண்டுகோல் அறிவுக்கு ஒரு சாணைக்கல் இந்த இரண்டு வகையிலும் இந்த நூல் தமிழ் நாட்டுக்குப் பயன்பட வேண்டும் என்பது என் பிரார்த்தனை'' என்று குறிப்பிட்டுள்ளார்

'சமுதாய ஒப்பந்தம்' நூலை நான்கு பகுதிகளாகப் பிரித்துள்ளார். கடைசி இரு பகுதிகளில் அரசாங்கம், பலவித அரசாங்க அமைப்புகள் ஏற்படக்காரணம், அரசாங்க அமைப்புகள், மக்களாட்சி, பிரபுத்துவ ஆட்சி, மன்னராட்சி, கலப்பு அரசாங்கங்கள், ஒவ்வொரு நாட்டுக்கும் உரிய ஆட்சிமுறை, நல்ல அரசாங்கத்தின் இலட்சணங்கள், அரசாங்கங்கள் ஏன் சீரழிகின்றன, தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் முறை, சமுதாயத்தின் சீரழிவு, அரசாங்க நிறுவனம் அரசாங்க ஆக்ரமிப்புக்குட்படாமலிருக்க வழி, வாக்குரிமை, ரோம் நாட்டு மக்கள் சபை, சர்வாதிகாரிகள், மதம் முதலானவற்றை மிகத் தெளிவாக விளக்கியுள்ளார்.

இந்நூல் காரணமாக தமிழ் மட்டுமே அறிந்த மேடைப் பேச்சாளர்கள் எழுத்தாளர்கள் ரூஸ்ஸோவையும், சமுதாய ஒப்பந்தத்தையும் மிகப்பரவலாக மேற்கோள்கள் காட்ட வாய்ப்புகள் அமைந்தன.

மாஜினி தொடர்பான நூல்கள் :

இந்திய தேசிய விடுதலை இயக்கத்தின் மீது மிகுந்த செல்வாக்கு செலுத்திய அரசியல் சிந்தனையாளர், போராட்ட வீரர் ஜோசப் மாஜினி (1805-1872) அவருடைய ''மனிதாபிமான தேசியவாதம்'' (Humanitarian Nationalism) ''இளைய இத்தாலி'' இயக்கம் இரண்டும் உலகின் பல தேசிய இயக்கங்களுக்கு ஊக்கமளித்தன. விக்டர் இமானுவேல் (1820-1878) கரிபால்டி (1840-1903) ஆகியோருடன் இணைந்து, ஆஸ்த்ரியப் பேரரசின் கொடுங்கோன்மையில் அடிமைப்பட்ட இத்தாலியை ஒன்று படுத்தி ஐக்கிய இத்தாலிக்காகப் போராடியவர். இறுதி வரையில் குடியரசு வழியாகவே வாழ்ந்தார். இந்தியாவில் 1872-லேயே மாஜினியின் தேசியச் சிந்தனையை இந்திய தேசியச் சிந்தனைக்காகப் பயன்படுத்தப் பிரசாரம் செய்தவர் சுரேந்திரநாத் பானர்ஜி (1848-1927). இவர்

பிரிட்டிஷ் அரசியல் சாசன வழிப்பட்ட தேசிய இயக்கப் பிரசாரத்திற்கு மாஜினியைப் பயன்படுத்தியிருக்க, வீரசவர்க்கார் (1883-1966) ரகசியப் புரட்சி இயக்கப் பிரசாரத்திற்காக மாஜினியின் கருத்துக் களைப் பயன்படுத்தியுள்ளார். மாஜினியின் 'இளைய இத்தாலி இயக்கம்' ரகசியப் புரட்சி இயக்கம் என்பதும் நினைவிற்குரியது.

தமிழில், மகாகவி சுப்பிரமணிய பாரதியார் தீவிரவாத தேசிய அரசியல் பிரசாரத்திற்கு பயன்படுத்தினார். ''மாஜினி என்ற இத்தாலிய தேசத்து தேசாபிமானி தம்மால் ஸ்தாபிக்கப்பட்ட ''யௌவன இத்தாலி'' என்ற சங்கத்திலே செய்யப்பட்ட பிரதிக்கினை'' என்னும் குறிப்புடன் 'மாஜினியின் சபத'த்தை 1908-இல் மொழி பெயர்த்து வெளியிட்டுள்ளார். பாரதியாரின் நண்பர் காஞ்சிபுரம் கிருஷ்ணசாமி சர்மாவின் ''ஜோசப் மாஜினி'' பிரிட்டிஷ் அரசாங்கத்தினரால், பறிமுதல் செய்யப்பட்டது. இவை சில சான்றுகள்.

இந்தப் பின்னணியில் சாமிநாத சர்மாவின் ''மாஜினி வாழ்க் கை வரலாறு'' (1941) ''மாஜினியின் மனிதன் கடமை'' (1941), ''மாஜினியின் மணி மொழிகள்'' (1950) ஆகியன வெளி வந்துள்ளன. இந்த மூன்று நூல்களும் ''ஒரே மகா புருஷனை மூன்று கோணங்களில் தரிசிக்கலாம்'' என்றும் சாமிநாத சர்மாவின் பார்வை யில் எழுதப்பட்டன. இவற்றுள் ''மாஜினியின் மனிதன் கடமை''யைப் பற்றி ''வாசகர்களுக்காக'' எழுதப் பெற்றுள்ள சாமிநாத சர்மாவின் கருத்துக்கள், பின்வருமாறு:

''நமது நாட்டு மூதறிஞர்களின் விழுமிய கருத்துக்களை பிற நாட்டவர்களுக்குக் கொடுக்க வேண்டியது எப்படி அவசியமா கின்றதோ அப்படியே பிறநாட்டு நல்லறிஞர்களின் செவ்விய கருத்துக் களை நாம் கொள்ள வேண்டியது அவசியமாகின்றது...மாஜினி, இந்நூலின் மூலமாக இத்தாலியத் தொழிலாளர்களுக்குத்தான் உபதேசித்தான். ஆனால் இந்த உபதேசங்கள், இத்தாலியரல்லாதவர் களுக்கும், தொழிலாளரல்லாதவர்களுக்கும் பிரயோஜனமுடையவை யாயிருக்கின்றன. மற்றும், மாஜினி இந்நூலின் மூலம் மனிதத் தன்மையை உயர்த்திக் காட்டுகிறான், கடமையை முழக்கஞ் செய்கிறான். இந்தக் காரணங்களில்தான் இந்நூலுக்கு மனிதன் கடமை என்று மகுடமிடப்பட்டிருக்கிறது.''

ஸன்யாட் ஸென் தொடர்பான நூல்கள்

ஐரோப்பிய நாடுகள் சிலவற்றில் தோன்றிய தேசியவுணர்வு களை தமிழ் வாசகர்களுக்கு தமிழிலேயே புரிய வைக்க எழுதிய சாமிநாத சர்மா, இந்தியாவிற்கு கலாசார வழியிலும், பூகோளப்

பரப்பு வழியிலும் அண்மையில் உள்ள சீனாவைப்பற்றியும், ''சீனக் குடியரசின் தந்தை'' என்று போற்றப்பட்ட ஸன்யாட் ஸென் பற்றி அறியவும் தமிழர்களுக்கு நூல்கள் படைத்துள்ளார்.

ஸன்யாட்ஸென் (1866 - 1925), அரசியல்-சமூக-பிரதேச முரண்பாடுகள் மலிந்த பெரும் நிலப்பரப்பைக் கொண்ட சீனாவில் தேசியம், ஜனநாயகம், மக்கள் வாழ்க்கை முறை என்னும் முப்பெரும் கோட்பாடுகளுக்காக தொடர்ந்த எதிர்ப்புகள் பலவற்றிடையேப் போராடியவர். மஞ்சுக்களின் ஆதிக்கத்திற்கு எதிராகப் புரட்சித் திட்டம் தீட்டி 1911-இல் 'கோமின்டாங்' என்னும் பெயரில் ஓர் அரசியல் கட்சியைத் தொடங்கினார்.

1924-இல் சீனாவின் கான்ட்டன் நகரத்தின் பல்கலைக் கழகத்தில் ஸன்யாட் ஸென் நிகழ்த்திய பதினெட்டுச் சொற்பொழிவு களின் ஆங்கில மொழியாக்கத்தில் இருந்து தமிழாக்கம் செய்து 'ஜோதி' பத்திரிகையில் வெளியிட்டுவந்தார். இவை தொகுக்கப் பெற்று 1940 ஆகஸ்ட்டில் ''சுதந்திரத்தின் தேவைகள் யாவை'' என்னும் பெயரில் நூலாக வெளியிடப்பட்டது. நூலின் தலைப்பு சாமிநாத சர்மாவினால் தரப்பட்டது.

''ஸன்யாட் ஸென்னின் சொற்பொழிவுகளை முதன் முதலாக வெளிக் கொணர்ந்த பெருமை, இந்திய மொழிகளில் தமிழ் மொழிக்கே உண்டு'' என வெளியீட்டாளர் அரு. சொக்கலிங்கம் செட்டியார் பதிப்புரையில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மொழி பெயர்ப்பு நூலில் சீனப் பெயர்களின் தமிழாக் கத்தில், சீனர்களின் உச்சரிப்பு முறையைப் பின்பற்றாமல் தமிழில் கூடியமட்டில் கடினமில்லாதபடி பெயர்களின் உச்சரிப்பு முறையை சற்று மாற்றியமைத்துள்ளார், சாமிநாத சர்மா.

இந்த நூலில் சீனக் குடும்பங்களில் ஒருவருக்கு பலமுறை பெயர் வைக்கும் மரபை விளக்குமிடத்தில் சாமிநாத சர்மா பின்வரு மாறு விளக்கமளித்துள்ளது தமிழ் வாசகர்களுக்கு ஒரு புதிய அனுபவத்தைத் தந்தது.

''சீனாவில் குடும்பத்திற்கு அதிக மரியாதை கொடுப்பது வழக்கம். குடும்பப் பெயரைத்தான் முதலில் வைத்துக் கொள்வார்கள். அதைத் தொடர்ந்து வரும் மற்றப் பெயர்கள் அவ்வப்பொழுது மாறும். அதாவது பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்படுகிறபோது ஒரு பெயர், விவாக காலத்தில் ஒரு பெயர்; இப்படி வாழ்க்கையின் முக்கிய மான திருப்பங்களின்போது பெயர்களை மாற்றிக் கொள்வார்கள். உதாரணமாக ஸன் என்பது குடும்பப் பெயர். குழந்தைப்பருவத்தில்,

ஸன்டை சியோங் (Suntai Cheong) என்று அழைக்கப் பட்டார். டை சியோங் என்றால் 'கடவுளின் தொண்டன்' என்று அர்த்தம். ஸன்டை சியோங் பெரியவனான பிறகு ஸன்யாட்ஸென் ஆனான். கடைசியில் ஸன்வென் (Sunwen) என்ற பெயரை ஏற்றுக் கொண்டான்.''

'சுதந்திரத்தின் தேவைகள் யாவை?' என்னும் நூலுடன் தொடர்புடைய ''ஸன்யாட்ஸென் வாழ்க்கை வரலாறு'', 1961-இல் வெளிவந்தது. இந்த நூலின் சிறப்புகளில் ஒன்று, பதினெட்டு பக்கங்களில் எழுதப் பெற்றுள்ள ''வாசகர்களுக்கு'' என்னும் முன்னுரைப் பகுதியாகும். சோவியத் ரஷ்யப் புரட்சியின் நாயகன் தோழர் லெனின், சீனக் குடியரசின் தந்தை ஸன்யாட் ஸென், அடிமைப்பட்ட பாரதத்தை 'வாழ்விக்க வந்த காந்தி மகாத்மா' ஆகியோரை இணைத்து சாமிநாத சர்மா செய்துள்ள விமர்சனம் முன்னுரையில் சிறப்பம்சங்களில் . ஒன்றாகும். விமர்சனத்தில் ஒரு பகுதி வருமாறு.

''தலைவர்களுக்குத் தலையாயவர்களெனக் கருதப்படக்கூடிய தகுதி படைத்தவர் மூவரென்று சொல்லலாம். இந்த மூவர் கடைப்பிடித்த கொள்கைகளையும் கையாண்ட முறைகளையும் ஏற்றுக் கொள்ள மறுப்பவர்கள் கூட இவர்களுக்குரிய மதிப்பைக் கொடுக்கத் தயங்குவதில்லை. இதனால் இந்த மூவருடைய புகழ், இடத்தின் எல்லையையும் கடந்து நிற்கிறது. இந்த மூவர் யார்? 1. சீனாவின் ஸன்யாட் ஸென் (1866-1925), 2. ருஷ்யாவின் நிக்கோலாய் லெனின் (1870-1925), 3. இந்தியாவின் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி (1869-1948) மூவரும் புரட்சி நடத்தி வெற்றி கண்டது, சில வருஷங்கள் முன்னும் பின்னுமாயிருந்த போதிலும், மூவரையும் ஏறக் குறைய சமகாலத்தவரென்று சொல்லலாம். இவர்கள் நடத்திய புரட்சி கள் இடத்தாலும், காலத்தாலும், நடைமுறையாலும் வேறுபட்டிருந்த போதிலும், ஒன்றினால் ஏற்பட்ட அதிர்ச்சி மற்றொன்றில் பிரதிபலிக் காமற் போகவில்லை.''

மேற்கூறப் பெற்ற இரு நூல்களையும் நன்கு புரிந்து கொள்ள துணைபுரியும் அளவிற்கு 1944-இல் 'புதிய சீனா' என்னும் நூலையும் 1962-இல் ''சீனாவின் வரலாறு'' என்னும் நூலையும் சாமிநாத சர்மா படைத்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. இன்றைய மக்கள் சீனத்தின் வரலாற்றை பண்டைய சீனத்தின் வரலாற்றுப் பின்னணியில் ஒப்பிட்டுப் பார்க்கவும் இந்நூல்கள் உதவுகின்றன.

பண்டைய கிரேக்கம் தொடர்பான அரசியல் நூல்கள் :

பாரதப் பண்பாடு, வரலாற்றைப் போன்று கிரேக்கப் பண் பாடும், வரலாறும், தொல் பெரும் மேன்மைச் சிறப்புடையன; நீண்ட

காலமாக தங்களுக்குள் நெருங்கிய தொடர்புகளையும் பேணி வளர்த்தன.

சாமிநாத சர்மாவின் கிரேக்கம் தொடர்பான நூல்கள் தமிழ் வாசகர்களின் வரலாற்றுப் பார்வையை கூர்மைப்படுத்துகின்றன. கிரீஸ் வாழ்ந்த வரலாறு, பிளேட்டோவின் அரசிய்ல், பிளேட்டோ வின் கடிதங்கள், ராஜதந்திர யுத்தங்கள பிரசங்கங்கள் ஆகியன பண்டைய கிரேக்கம் தொடர்பான நூல்கள்.

''கிரீஸ் வாழ்ந்த வரலாறு''

பண்டைய கிரேக்கத்தின் வரலாறு தமிழில் வெளிவராத குறையை நிறைவு செய்ய 'கிரீஸ் வாழ்ந்த வரலாறு' என்னும் நூலை சாமிநாத சர்மா அளித்துள்ளார். இந்த நூலை எழுதுவதற்கு அவர் மற்ற நூல்களைக் காட்டிலும் அதிக காலம் எடுத்துக் கொண்டார். கிரேக்க மொழிச் சொற்களைத் தமிழில் தருவதற்கு, கிரேக்க மொழி-பண்பாட்டின் மரபை நன்கு கற்றறிய வேண்டும். இதற்காக அவர் மிகுந்த காலத்தை எடுத்துக் கொள்ள வேண்டியதாயிற்று. வழக்கம் போல், விளக்கங்கள் அடிக்குறிப்புகள் தந்து தமிழ் வாசகர்கள் படிப்பறிவு வளர வகை செய்துள்ளார்

பண்டைய கிரேக்க அரசியலின் போக்கை, அரசியல் அமைப்பை, சமூக நிலையை, பல்வேறு அரசுகளின் போர்களை, கலை-இலக்கியப் பண்புகளை இந்நூல் விரிவாக ஆய்வு செய்துள்ளது. ஐரோப்பாவின் மறுமலர்ச்சி யுகத்திற்கும், நவீனகால அரசியல் சிந்தனை வளர்ச்சிக்கும் பண்டைய கிரேக்கம் வழங்கிய நன்கொடை அளப்பரியது. பண்டைய இந்திய அரசியல், சமய, சமூக, கலை, பண்பாட்டு விழுமியங்களுடன் பண்டைய கிரேக்கத்தை ஒப் பிட்டுப் பார்த்துத் தெளிவுகாண இந்நூல் முப்பத்திரண்டு அத்தியாயங் களில் வழிவகை செய்துள்ளது.

''பிளேட்டோவின் அரசியல்''

கி.மு ஐந்தாம் நூற்றாண்டில் கிரேக்கத்தின் புகழ் பூத்த தத்துவ ஞானியாக விளங்கியவர் பிளேட்டோ. இவருடைய இயற்பெயர் அரிஸ்டோகிளஸ்; பரந்த தோளுடையவராக இருந்ததால், அதைக் குறிக்கும் 'பிளேட்டோ' என்ற சொல், இவருக்கு துணைப் பெயராகி அதுவே நிலைத்துவிட்டது. இவர் சாக்ரடீஸின் மாணவர்; அரிஸ்டாட்டிலின் ஆசிரியர் இவர் ஏதன்சில் நிறுவிய 'அகாதமி' என்பது வரலாறு கண்ட முதல் பல்கலைக்கழகமாகக் கருதப்படுகிறது. இவருடைய பல நூல்களில் 'ரிபப்ளிக்' உலகப் புகழ் பெற்றது. தமது நாற்பதாவது வயதில் ஏறக்குறைய கி.மு. 386-இல் பிளேட்டோ இந்நூலைப் படைத்தார் என்று கூறப்படுகின்றது. பிளேட்டோவின்

இந்த நூலிற்கு ''பிளேட்டோவின் அரசியல்'' என்று பெயரிட்டு சாமிநாத சர்மா தமிழாக்கம் செய்தார். பிளேட்டோவின் நூல்களுள் இந்த நூலே தம்மை மிகவும் கவர்ந்தது என்று பின்வருமாறு கூறி யுள்ளார், சாமிநாத சர்மா.

''பிளேட்டோவின் நூல்களில் என்னை அதிகமாக வசீகரித்தது 'ரிபப்ளிக்' என்ற நூல்தான். இதன் நேரான தமிழாக்கம் 'குடியரசு' என்பது. இதனை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருக்கிற அறிஞர்கள், ரிபப்ளிக் என்ற தலைப்பையே கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இந்தப் பெயர், அரசியல் சாஸ்திரத்தில் கூறப்பட்டிருக்கும் பலவித ஆட்சிமுறைகளுள், குறிப்பிட்ட ஓர் ஆட்சி முறையைப் பற்றி மட்டும் சுட்டிக் காட்டுவது போல் எனக்குத் தோன்றியது. பிளேட்டோ, இந்த ஓர் ஆட்சி முறையைப் பற்றி மட்டும் இந்த நூலில் கூறவில்லை. பலவித ஆட்சி முறைகளை, கோட்பாடுகளை, வாழ்க்கை நியமங் களை இதில் எடுத்துச் சொல்லி ஆராய்ந்திருக்கிறான் ''

சாக்ரடீசுடன் நடந்த உரையாடற் கலைப்பாங்கில் பிளேட்டோ இந்த நூலை எழுதினார். பர்மாவில் ரங்கூன் நகரத்தின் மீது ஜப்பானிய போர் விமானங்கள் குண்டு வீச்சுகளை நிகழ்த்திக் கொண்டிருந்த காலத்தில் ''பிளேட்டோ மட்டும் என் கூடவே இருந்தான்'' என்று கூறும் அளவிற்கு பிளேட்டோவின் நூல்களில் ஆழ்ந்து தோய்ந்து உறைந்து போயிருந்தார் சாமிநாத சர்மா. இதை விளக்கவே 'பிளேட்டோவும் நானும்' எனும் தனிக்கட்டுரையை நூலில் இணைத்துள்ளார்.

பிளேட்டோவின் இந்த நூல் எட்டு புத்தகங்களாகப் (பிரிவுகளாக) பகுக்கப்பட்டுள்ளன. முதல் புத்தகத்தில் சாக்ரடீஸ் நீதியைப் பற்றிச் சரியாகத் தெரிந்து கொள்ளாத வரையில் எதையும் திட்டவட்டமாகப் பேச இயலாதென்கிறார்.

நீதி, அநீதியைப் பற்றி அறிய வேண்டிய அவசியம் என்ன? ஒரு தனிமனிதனிடத்திலும், நாட்டினிடத்திலும் அவை எப்படி விளங்குகின்றன? இளைஞர்களுக்கு அளிக்கப்படும் கல்வியின் தரம், ஒரு நாட்டிற்கு இருக்க வேண்டிய இயல்புகள், நீதிமானுடைய லட்சணம் முதலிய பல செய்திகள் இரண்டு, மூன்று, நான்காவது புத்தகங்களில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது

உண்மையான ஞானிகள் இயல்புகள் பற்றி ஐந்தாவது, ஆறாவது, ஏழாவது புத்தகங்களில் விளக்கப்பட்டுள்ளது

எட்டாவது புத்தகம், அரசியல் செய்திகளை, பல வகையான நாடுகளைப் பற்றி விவாதித்துள்ளது

'பிளேட்டோவின் அரசியல்', முதல் பாகம் பர்மாவில் 1942 பிப்ரவரியில் இரங்கூன் புது மலர்ச்சி நூற்பதிப்புக் கழகத்தால் வெளியிடப்பெற்றது. ஜப்பானிய படையெடுப்புக் காரணமாக சாமிநாத சர்மா இந்தியா திரும்பியதும் 1945-இல் இரண்டாம் பாகம் எழுதிச் சேர்க்கப்பெற்று ஒரே நூலாக வெளிவந்தது. இதை, வெளியிட்டவர் 'சக்தி' வை. கோவிந்தன். பதிப்புரையில் குறிப்பிடப் பெற்றுள்ள பின் வரும் கருத்து, இந்நூல் பெற்ற நல் வரவேற்பை எடுத்துக்காட்டுகின்றது.

''இந்த உயரிய நூலை அறிஞர் சர்மாஜி, ஐந்து வருஷங்களாக அரும்பாடுபட்டு பல நூல்களை ஆராய்ந்து நமக்கு இப்புத்தகத்தின் மூலம் அளித்திருக்கிறார்கள். பத்து வருஷங்களில் விற்கும் என நாங்கள் திட்டம் போட்டு வெளியிட்ட ஓர் அரசியல் நூலைத் தமிழ் மக்கள் ஒன்பது மாதத்திலேயே தீர்ந்து போகச் செய்து விட்டார்கள். அதைப் பார்க்கும்போது தமிழ் மக்களுக்கு அரசியல் அறிவு பெற வேண்டுமென்பதில் எவ்வளவு ஆர்வமிருக்கிறது என்பது நன்கு தெரிகிறது. அரசியல் சுதந்திரத்தை இழந்து சோற்றுக்கும், துணிக்கும், தவிக்கும் மக்கள் எதை விரும்புவார்கள்.''

'பிளேட்டோவின் அரசியல்', தமிழ் மக்களுக்கு அரசியல் அறிவு புகட்டியதோடு, அவர்களைத் தங்கள் சுதந்திரத்திற்குத் தகுதிப் படுத்திக் கொள்ளவும் தூண்டியது. 'பிளேட்டோவின் நூல்கள் பலவும் தமிழில் வெளிவரவேண்டும். அப்படி வெளிவந்து அவை களைத் தமிழர்கள் விரும்பிப் படிப்பார்களானால் அவர்கள் தங்களைச் சுதந்திரத்திற்குத் தகுதிப்படுத்திக் கொண்டவர்களா வார்கள்'' என்று சாமிநாத சர்மா குறிப்பிட்டிருக்கிறார்.

''பிளேட்டோவின் கடிதங்கள்'' :

உரையாடல் பாங்கில் அமைந்த 'பிளேட்டோவின் அரசியல்' போன்று கடிதங்கள் பாங்கில் அமைந்த ''பிளேட்டோவின் கடிதங் கள்'' சமூக வாழ்க்கை அறங்களை, ஒழுக்கங்களை பெரும் பாலும் வலியுறுத்தி, பிளேட்டோவின் பிற கருத்தோட்டங்களையும் விளக்கு கின்றன.

பதின்மூன்று கடிதங்களைக் கொண்ட இந்த நூல் 1976-இல் வெளிவந்தது. பதின்மூன்று கடிதங்களில் ஏழு கடிதங்கள் ஸைரக்யூஸ் நாட்டுத் தொடர்புடையவை. இந்த ஏழு கடிதங்களில் ஸைரக்யூஸின் சமுதாய வாழ்க்கை அதனைச் சர்வாதிகாரியாக ஆண்ட இரண்டு டையோனிஸியஸ்களின் மனப்போக்கு, இவர்களுடைய உறவின ரான டியோனின் நண்பர்களுக்குப் பிளேட்டோ கூறிய அறிவுரைகள் ஆகிய பலவற்றையும் அறிய முடிகின்றது. பிற ஆறு கடிதங்கள் மூலம்

பிளேட்டோவின் நண்பர் குழாம் பற்றியும், அவர்களிடம் பிளேட்டோ கொண்டிருந்த நட்புறவும், ஆர்வமும் புலனாகின்றன.

இந்தக் கடிதங்களுள் ஏழாவது கடிதம், பிளேட்டோவின் தன் வரலாற்றுக் கூறுகள் பலவற்றைக் கொண்டுள்ளதாகவும் கருதப்படு கின்றது. கி.மு. ஐந்து-நான்காம் நூற்றாண்டு கிரேக்க வரலாற்றையும் மேலோட்டமாக அறிந்து கொள்ளவும் ஏழாவது கடிதம் உதவுகின்றது.

சாமிநாத சர்மாவின் இயல்பான தமிழ் உணர்வு, பிளேட்டோ வின் கடிதங்களில் கூறப்பெற்றுள்ள பல கருத்துக்களை திருக் குறளோடு ஒப்பிட்டு நூல் இன்பத்தை நுகரத் தூண்டுகின்றது. 'வாசகர் களுக்கு' எழுதியதில் சாமிநாத சர்மா கூறியுள்ளதாவது.

''இந்தக் கடிதங்களைச் சிறிது பொறுமையோடு படித்துவிட்டு, பிறகு வாசகர்கள் திருக்குறளில் உள்ள மெய்யுணர்தல், குற்றங்கடிதல், பெரியோரைத் துணை கோடல், நட்பு, மன்னரைச் சேர்ந்தொழுகல், இன்னா செய்யாமை, சான்றாண்மை இப்படிச் சில அதிகாரங்களைப் படித்து ஒப்பு நோக்க வேண்டுகிறேன்.''

''ராஜதந்திர யுத்தகளப் பிரசங்கங்கள்'' :

கிரேக்க வரலாற்றுப் பேராசிரியரான துஸிடிடீஸ், 'வரலாற்றுத் தந்தை' எனப் புகழப்படும் ஹெரோடோட்டசுக்குப் பிறகு மிகவும் புகழ் பெற்றவர். கி.மு. 424-இல் கிரேக்கத்தில் நிகழ்ந்த பெலோப் பொனேசிய யுத்தத்தில் படைநடத்திய துஸிடிடீஸ், தோல்வியுற்று, கி.மு. 423-403-களில் தன்னைத்தானே நாடுகடத்திக் கொண்ட நிலையில் ''பெலோப்பெனேசியன் யுத்தம்'' என்னும் வரலாற்று நூலை எழுதினார்.

தமிழ் நாட்டில் தமிழ் மட்டுமே அறிந்த மேடைப் பேச்சாளர்கள், தங்கள் பேச்சுத் திறமையை வளர்த்துக் கொள்ள இந்த நூல் பயன்படுத்தத் தக்க வகையில் தமிழாக்கம் செய்துள்ளார், சாமிநாத சர்மா. இது குறித்து அவர் எழுதியதாவது :

''தமிழ் நாட்டில் இனி எல்லா அரசியல் விவகாரங்களும் தமிழிலேயே நடைபெறுவதாயிருக்கும். எனவே, தமிழர்கள் குறிப்பாக இளைஞர்கள், பேச்சு கலையில் பயிற்சி பெறுதல் அவசியம். அதற்கு இந்த நூல் உதவியாயிருக்குமாக.''

ஆங்கிலத்தில் இருந்து மொழி பெயர்க்கப்பெற்று 1953-இல் இந்நூலின் முதல் பதிப்பு வெளிவந்தது. 'பெலோப்போனேசிய யுத்தம்' என்னும் நூலில் உள்ள சொற்பொழிவுகளை மட்டும்

தேர்ந்தெடுத்து ''ராஜதந்திர யுத்தங்களப் பிரசங்கங்கள்'' என்னும் தலைப்பில் நூலாக்கம் செய்துள்ளார், சாமிநாத சர்மா இந்நூலை எழுத முற்பட்டதற்கான காரணங்களைப் பற்றி அவர் பின்வருமாறு விளக்கமளித்துள்ளார்.

துஸிடிடீஸின் இந்த சரித்திர நூல் அரசியல்வாதிகள் ஒவ்வொரு வரிடத்திலும் இருக்கவேண்டிய கைப்புத்தகம். அரசியல்வாதிகளை எதிர் நோக்கும் பல பிரச்னைகள் ஆராயப்படுகின்றன. இதில் ஜன ஆட்சியின் லட்சணங்களென்ன? ஓர் ஏகாதிபத்தியம், தன்னுடைய ஆட்சியை நிலைத்திருக்கச் செய்ய வேண்டுமானால் எப்படிக் கடுமை யான முறைகளை அனுஷ்டிக்க வேண்டியிருக்கிறது. ஓர் ஏகாதி பத்தியம், என்னென்ன காரணங்களினால் தேய்ந்து மாய்கிறது. இப்படிப் பட்ட பல விஷயங்களும் பிரசங்கங்களின் வாயிலாக எடுத்துக் காட்டப்படுகின்றன. அரசாங்கம் கட்டாயப்படுத்தாமலேயே ஒரு ராஜ்யத்தின் பிரஜைகள் அந்த ராஜ்யத்திற்கு நன்மையைச் செய்து வருவார்கள் என்று எதிர்பார்க்கலாமா? அரசியலில் மதத்திற்கும் நீதிக்கும் இடமுண்டா? இவ்வோரன்ன பிரச்னைகள் பல பிரசங்கங் களினூடே தோன்றி அரசியல் வாதிகளின் சிந்தனையைத் தூண்டி விடக் கூடியனவாயிருக்கின்றன. இந்த ஒரு காரணத்திற்காகவே பிரசங்கங்களை மட்டும் பொறுக்கி எடுத்து இந்த நூலாகத் தந்திருக்கிறோம்.''

பண்டைய கிரேக்கத்தின் அரசியல் போக்குகள், எண்ணப் போக்குகள் முதலானவற்றை அறிந்து கொள்வதற்கு ராஜதந்திர யுத்தகங்களப் பிரசங்கங்கள் என்னும் இந்த நூலுடன் பிளேட்டோவின் அரசியல், கிரீஸ் வாழ்ந்த வரலாறு. அரிஸ்டாட்டில் எழுதிய அரச நீதி ஆகிய நான்கு நூல்களையும், சமுதாய சிற்பிகள் (சாமிநாத சர்மா எழுதியது) என்ற நூலின் முதல் மூன்று அத்தியாயங்களையும் தொடர்ந்தாற்போல் படித்தல் நல்லது என்னும் கருத்தையும் இந்நூ லின் ''வாசகர்கள்'' பகுதிக்கு எழுதியதில் குறிப்பிட்டுள்ளார், சாமிநாத சர்மா.

''கிரேக்கப் பொற்காலத்தைப் பற்றிப் பல நூல்களைத் தமிழில் எழுதித் தமிழ்ப் பழம் பொற்காலம் பற்றிய விரிவான ஆய்வுக்கு விளக்கமாக வழிகாட்டியுள்ளார் சர்மா'' என்று தமிழ்ப் பேராசிரியர் சாலை இளந்திரையன் குறிப்பிட்டுள்ள கருத்து, சாமிநாதந சர்மாவின் கிரேக்கம் பற்றிய நூல்களின் பயன்பாட்டை விளக்கவல்லது.

''கார்ல் மார்க்ஸ்''

உலக அரசியல் சிந்தனையில் புதியத் திருப்பத்தையும், உலகத் தொழிலாளர் இயக்க வரலாற்றில் புரட்சியையும், பொதுவுடைமைக்

கொள்கைகளைக் கொண்ட பல அரசுகள், அமையவும் 'மார்க்கியம்' என்றழைக்கப்படும் புரட்சிகர அரசியல் தத்துவத்தை உருவாக்கிய கார்ல் மார்க்ஸ் (1818-1883) எழுதிய 'தாஸ்காபிடல்' மூன்று தொகுதி களாக 1867, 1885, 1895-ஆம் ஆண்டுகளில் வெளிவந்துள்ளன.

கார்ல் மார்க்ஸ் பற்றிய சிறு குறிப்பு புதுச்சேரி 'இந்தியா' வில் ஏப்ரல் 10, 1909-இல் வெளிவந்தது. ''ஐரோப்பாவில் சோஷலிஸ்ட் மார்க்கத்தாருக்கு மூல குருவான கார்ல்மார்க்ஸ்'' என்பது அக்குறிப்பு.

கார்ல் மார்க்ஸ் பற்றிய ஓர் அறிமுகமும், விமர்சனமும் "KARLMARX, A MODERN RISHI" என்னும் தலைப்பில் கல்கத்தா 'மாடர்ன் ரெவ்யூ' என்னும் ஆங்கில மாத இதழில் 1912-மார்ச்சில் வெளி வந்தது. இதை எழுதியவர், இந்திய தேசியப் புரட்சி வீரர் லாலா ஹர் தயாள். இந்தக் கட்டுரை சென்னையில் 'தாகூர் அன்ட் கோ' என்னும் பதிப்பகத்தால் நாற்பத்தெட்டுப் பக்கங்களில் கையடக் கப் பதிப்பாக வெளியிடப்பட்டது. மலையாள மொழியில் ''ஸ்வதேசாபிமானி'' பத்திரிகை ஆசிரியர் இராம கிருஷ்ணபிள்ளை எழுதிய கார்ல் மார்க்ஸ் வரலாற்று நூல் 1921-இல் வெளிவந்தது.

தமிழ் நாட்டில் தோழர் சிங்காரவேலர் (1860-1946), இந்தியாவின் முதல் தொழிலாளர் இயக்க ஆங்கில வார இதழான 'ஸ்வதர்மா' வில் கார்ல் மார்க்சைப் பற்றி எழுதினார். 'ஸ்வதர்மா' வைத் தொடங்கியவர். இ.எல்.ஐயர் (1885-1941) என்னும் தொழிற் சங்கத் தலைவர். முதல் இதழ் 1921 ஏப்ரல் 17-இல் வெளிவந்தது.

சிங்கார வேலரைத் தொடர்ந்து, காஞ்சிபுரம் கிருஷ்ணசாமி சர்மா எழுதிய ''இராஜநீக சாஸ்திரம்'' (1923) என்னும் நூலில் கார்ல் மார்க்சைப் பற்றியும் அவருடைய அரசியல் கொள்கைகளைப் பற்றியும் கூறப்பட்டுள்ளது.

இந்த வரிசையில் வெளிவந்ததுதான் சாமிநாத சர்மாவின் 'கார்ல் மார்க்ஸ்' (1943) நடக்க முடியாமல் படுக்கையில் படுத்துக் கொண்டே யிருந்த காலத்தில் படுத்தபடியே எழுதப் பெற்ற நூல், இந்நூல்.

''மார்க்ஸியத்தைப் பற்றி விரிவாகவும், தெளிவாகவும் தெரிந்து கொள்ளுமாறு மார்க்சின் இந்த வாழ்க்கைச் சரிதம் நம்மைத் தூண்டுகிறது என்று இதனைப் படிப்பவர்கள் கருதுவார்களானால், அதுவே இந்த நூலைப் பொறுத்த என் உழைப்பை அவர்கள் பாராட்டிய தாகும்'' என்று சாமிநாத சர்மா எழுதியுள்ளார்.

''மார்க்ஸியத்தின் வரலாறு, சிறந்த அம்சங்கள், அடிப்படைத் தத்துவங்கள் இவற்றையெல்லாம் பற்றி ஆங்கில நூலைப் படிப்

பதிலும் தெளிவாக விளக்கும்படி திரு. சர்மா எழுதியிருக்கிறார்.'' இவ்வாறு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் இதழான 'ஜனசக்தி' பாராட்டியுள்ளது, சர்மாவின் உழைப்பிற்குக் கிடைத்த பாராட்டாகும்.

பன்னூலாசிரியர் அறிஞர் பொ.திரிகூட சுந்தரம் பிள்ளை, 'வெள்ளி மணி' என்னும் தமிழ் இதழில் 4.7.1947-இல் இந்நூலுக்கு எழுதியுள்ள பின்வரும் விமர்சனமும் சாமிநாத சர்மாவின் புலமைக்குக் கிடைத்த பாராட்டாகும்.

''அவர் மார்க்ஸைப் பற்றிக் கூறும்போது, 'அவருடைய பேச்சு சொல்லடுக்கல்ல, எண்ணத்தின் ஓசை'. அதில் அழகு இராது, ஆழ மிருக்கும்; அது உற்சாகத்தை உண்டுபண்ணாது. ஆனால் சிந்தனை யைத் தூண்டிவிடும். அவருடைய எழுத்து, வாக்கியக் கோவையல்ல. பொருள் செறிந்த சுரங்கம் என்று கூறுகிறார். இந்த இலக்கணம் முழுவதும் அறிஞர் சர்மாவுக்கும் பொருந்தும். ஆகவே, நாம் இவரு டைய சுரங்கத்தை துருவி பொன்னும், மணியும் எடுப்போமாக.''

''ருஷ்யாவின் வரலாறு''

1948-இல் வெளிவந்த சாமிநாத சர்மாவின் 'ருஷ்ய வரலாறு' ருஷ்யாவின் ஆதிகாலம் முதல் 1917-ஆம் ஆண்டில் தோழர் லெனின் தலைமையில் அமைந்த சோஷலிசக் குடியரசு நாடுகளின் சோவியத் ஒன்றியம் வரையிலான கால கட்ட வரலாற்றைக் கூறுவது. சோவியத் யூனியனின் செல்வாக்கு காலனியாதிக்க நாடுகளில் பரவி இருந்தது. இக்காலத்தில் சோவியத் யூனியன் மறைந்துவிட்ட போதிலும், ருஷ்யாவின் வரலாறு உலக அரசியல் சிந்தனையாளர் களின் அரசியல் ஆய்விற்கு இன்றியமையாததாகும்.

இந்த நூலில், ''சமதர்மம் என்றால் என்ன?'' என்னும் அத்தியா யத்தின் இறுதியில் கூறப்பெற்றுள்ள பின்வரும் கருத்து. சாமிநாத சர்மாவிற்கே உரிய தெளிவு, ஆழம், உணர்த்தும் திறன் முதலான வற்றை அடையாளங்காட்டுகிறது.

''சமதர்மம் என்பது ஏற்றத் தாழ்வுகளில்லாத பொருளாதாரத் திட்டம்'' எல்லோருக்கும் சம உரிமை வழங்குகிற அரசியல் அமைப்பு'' மனிதனுடைய வளர்ச்சியின் முடிந்த நிலை; எல்லா வற்றிற்கும் மேலாக ஒரு புதிய நாகரிகம், உலகத்திலே தோன்றின நாகரிகங்கள் பலவும் மதத்தை அடிப்படையாகக் கொண்டவை; சமதர்ம நாகரிகமோ பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டது. இப்படிப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தாலும் அது மானிட வாழ்க்கையின் எல்லா அம்சங்களுடனும் நெருங்கிய தொடர்பு உடையது.''

"புராதன இந்தியாவின் அரசியல்"

இந்நூல் 1954-இல் வெளிவந்தது. கிரேக்கம், சீனா பற்றிய நூல்கள் எழுதிய சாமிநாத சர்மா பண்டைய இந்தியாவின் அரசியலைப் பற்றியும் ஆய்வு செய்துள்ளார். இதனால் தமிழ் வாசகர் களுக்கு தொன்மை நலம் சிறந்த முப்பெரும் நாடுகளின் அரசியல் மரபுகளை அறிந்து வைத்துக் கொள்ள வாய்ப்பளித்தார். வேதபுராண, இதிகாசங்கள், காவியங்கள், அர்த்த சாஸ்திரம், சுக்கிரநீதி முதலான சம்ஸ்கிருத மொழி மூலாதாரங்களைக் கொண்டு எழுதியுள்ளார். பண்டையப் பெருமையை அறிந்து போற்றுதல் தேசியத்தின் ஒரு கூறு என்பதினால் முதல் அத்தியாயத்தில் பாரதத்தின் பழம்பெரும் சிறப்புகளை எடுத்துரைத்துள்ளார். "பாரத நாடு பழம்பெரும் நாடு; நீரதன் புதல்வர், இந்நினைவகற்றாதீர்" என்று போர்க்களப் பாணன் பாரதியின் வழி நின்றார், சாமிநாத சர்மா.

பண்டைய இந்தியாவின் முடியாட்சித் தத்துவங்களையும், குடியாட்சித் தத்துவங்களையும் விளக்கியுள்ளார். மேலைநாட்டு முடி யாட்சி முறையைவிட, பண்டைய இந்திய ஆட்சி முறை எவ்விதங் களில் சிறந்திருந்தது என்பதையும் ஒப்பாய்வு நோக்கில் கூறியுள்ளார்.

இந்நூலில் பழந்தமிழ் நூல்களில் உள்ள அரசியல் கருத்துக் களை கூறாமல் விடுத்தற்குரிய காரணத்தையும் பின்வருமாறு குறிப் பிட்டுள்ளார்.

"தமிழ் நாட்டு அரசியல், தனிக்கட்டமாக அமைய வேண்டு மென்பது என் நோக்கம். அதற்கான தளவாட சாமான்கள் ஏராள மாகக் கிடைக்கின்றன. சிலவற்றைச் சேகரித்தும் வைத்திருக்கின்றேன். இது நிறைவேற ஆண்டவர் கருணையும் அன்பர்களின் ஆசியையும் வேண்டுகின்றேன் "

"அரசியல் வரலாறு"

1947-இல் வெளிவந்த இந்த நூலில் பல்வேறு அரசியல் தத்துவங்கள் சுருக்கமாக ஆனால் மிகத் தெளிவாக அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன. அரசியல் என்பது யாது? அரசியலும் வாழ்க்கையும், சுதந்திரம் என்பது என்ன?, அடிமை வாழ்வு, கடமையும் உரிமையும், பலவித ஆட்சிமுறைகள், பாசிஸம், நாஜிஸம், சோஷலிசம், கம்யூனிசம், அனார்க்கிஸம், காந்தியம் என்பன போன்ற இருபது தலைப்புகளில் உலக அரசியல் வரலாறு விளக்கப்பட்டுள்ளது.

"அரசு என்று சொன்னால் அது சுய அரசைத்தான் குறிக்கும்" என்றும், "ஒரு நாட்டாரை மற்றொரு நாட்டார் ஆள்வதற்கு உரிமையே கிடையாது என்றும் உணர்த்தப்பட்டுள்ளது, எண்ணுதற்குரியது.

'ஹிட்லர்', 'முஸோலினி' வாழ்க்கை வரலாற்று நூல்களைக் கற்போர் சிந்தனைக்குரிய ஒரு முக்கிய கருத்தையும் இந்நூலில் பின்வருமாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

''இந்த நூலில் கூறப்பட்டுள்ள சித்தாந்தங்களில் பாசிஸமும், நாஜிஸமும் ஆழ்ந்த அஸ்திவாரமில்லாதவை; ஒரு யுத்தத்திலே தோன்றி மற்றொரு யுத்தத்திலே மறைந்துவிட்டன. இவை மறுபடியும் உலகத்தில் ஆக்கம் பெறுதல் அசாத்தியம்.''

மிக்க அரசியல் நுட்பத்துடனும், தெளிவுடனும் சாமிநாத சர்மா கருத்துக்களை வெளியிட வல்லவர் எனும் உண்மைக்கு, மேற்கூறிய கருத்து ஓர் எடுத்துக்காட்டு.

ஆளும் வர்க்கம், அரசியலில் பொருளாதார உறவுகளை ஒதுக்கி வைத்து மறைமுகமான சுரண்டல் போக்கிற்கு துணைநிற்பதை யும், நுட்பமாகச் சுட்டிக்காட்டத் தவறவில்லை, இந் நூலாசிரியர்.

அக்காலத்தில் சோவியத் ரஷ்யாவிலும் சீனமக்கட் குடியர சிலும் ஏற்பட்ட அரசியல் மாறுதல்கள் உருவாக்கிய வாழ்க்கைத் தரத்தின் உயர்வுகளையும் ''அரசியலும் வாழ்க்கையும்'' என்னும் தலைப்பில் ஆய்வு செய்துள்ளார்.

''தேசியத்தை அஸ்திவாரமாகக் கொண்ட சர்வ தேசியக் கட்டிடம்; உலகத்திலே ஆன்ம பலந்தான் பெரிது என்று கோஷமிடும் சங்கு'' என காந்தியத்தைப் போற்றியுள்ளார் சாமிநாத சர்மா.

1947-இல் விடுதலை பெற்ற இந்தியா எத்திசையில் அடி எடுத்துவைத்தால் முன்னேற முடியும் என்று சிந்திக்க விழைந் தோர்க்கு உதவும் கருத்துகளையும் இந்நூல் வெளியிட்டுள்ளது.

பிற அரசியல் நூல்கள்

இதுவரை கூறப்பெற்ற அரசியல் நூல்களைத் தவிர பின்வரும் நூல்களும் சாமிநாத சர்மாவின் அரசியல் தமிழ் எழுத்துத்துறையை மேலும் செழுமைப்படுத்தியுள்ளன.

சுதந்திர முழக்கம் (1943), காந்தி யார்? (1943), ஆசியாவும் உலக சமாதானமும் (1947), ஐக்கிய தேச ஸ்தாபனம் (1947), பிரஜை களின் உரிமைகளும் கடமைகளும், அரசியல் கட்சிகளும் (1949), பார்லிமெண்ட் (1950), நமது தேசியக் கொடி (1950), சுதந்திரமும்-சீர்திருத்தமும் (1956), நாடும்-மொழியும் (1956).

தொகுப்புரை

அரசியலைத் தெளிவாகப் புரிந்துகொண்டு பங்கேற்க தமிழ் மட்டுமே அறிந்த பொதுமக்களுக்கு பயன் தரும் வகையில்

அரசியல்தமிழ் நூல்களை எண்ணிக்கையில் மட்டுமன்று, கருத்துப் பரப்பளவிலும் மிகுதியாகப் படைத்துத் தமிழில் அரசியல் இலக்கிய விற்பன்னர் எனும் பெரும் புகழ் பெற்றார், சாமிநாத சர்மா.

தமது அரசியல் தமிழ் எழுத்துப்பணிக்காக அவர் கடுமையாக உழைத்ததை அவர் தந்துள்ள நூல் பட்டியல் விளக்கவல்லது. சீனாவின் வரலாற்றை எழுத அவர் 81 நூல்களைப் படித்துள்ளார் என்றும் குறிப்பு வரலாற்று நூல்கள் எழுதுவோர் கவனிக்க வேண்டிய குறிப்பாகும்.

அத்துடன் 'அரசியல் கண்ணாடி' அணிந்து கொண்டு அரசியல் பார்வையைக் கொள்ளாமல், அறிவு-உணர்ச்சி இவையிரண்டில், அறிவே தலைமைதாங்கி வழி நடத்தும் வகையில், நடுநிலைமையில் நின்று ஆய்வு செய்துள்ள வரலாற்று நெறியும், சிறந்ததொரு முன்னுதாரணமாகும்.

ஒவ்வொரு நூலிலும் இறுதியில் பின்னிணைப்புகளை 'அநுபந்தங்கள்' என்னும் பெயரில் அவர் அளித்துள்ள தனி ஆய்வு களும், பக்கம்தோறும் தேவைப்பட்ட அடிக்குறிப்புகளும் வரலாற்று நூல்களுக்குரிய வழிகாட்டும் நெறிகளைப் புலப்படுத்தியுள்ளன.

தனி நபர் வாழ்க்கை வரலாறுகள், நாடுகளின் வரலாறுகள், அரசியல் கருத்துகள் வரலாறுகள் முதலானவற்றை ஒருங்கிணைக்கும் நற்பாங்கில் அரசியல் தமிழ்த்துறையை வளர்த்தெடுத்துள்ளார்.

பிளேட்டோ கூறினார், ரூஸ்ஸோ சொன்னார், கார்ல் மார்க்ஸ் சாற்றினார், மாஜினி மொழிந்தார், எனப் பெருமிதமாக மேற்கோள் களை தமிழக மேடைப்பேச்சுகளில் தமிழ்ப் பேச்சாளர்கள் அள்ளி வீச வாய்ப்பளித்தவர் சாமிநாத சர்மா. தேசிய அரசியலையும், சர்வ தேசிய அரசியலையும், இணைத்து நோக்கும் தமிழ்ச் சிந்தனைக்கு ஊக்கமும், உள்வலியும் அளித்த முன்னோடிகளில் ஒருவராகத் திகழ்கின்றார்.

சாமிநாத சர்மாவின் அரசியல் நூல்களைக் கற்ற, கற்கும் பலர் முற்போக்கான, இடது சாரி இயக்கச் சிந்தனைகளில் ஊக்கம் பெறுபவர்கள் என்பதையும் கண்டு வருகின்றோம்.

3. இதழியல் பணி

ராஜா ராம்மோகன்ராய்

இந்தியாவில் பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் மேலைநாட்டுப் பாணியில் இதழியல் துறை தோன்றிவளர்ந்தது. ஆங்கிலேயர்கள் சிலர் சில இதழ்களைத் தொடங்கியிருந்தாலும், இந்தியர்களால் தொடங்கப் பெற்று வளர்த்தெடுக்கப் பெற்ற இதழியல் துறையின் முதல் முன்னோடி ராஜா ராம்மோகன்ராய் (1772 - 1833) ஆவார். இவர் 1821-இல் ''சம்பதகௌமுதி'' என்னும் வங்கமொழி இதழையும், 1882-இல், 'மிரட்-உல்-அக்பார்' என்னும் பாரசீக மொழி இதழையும், 'பிராமணிகல் மேகசைன்' என்னும் ஆங்கில மொழி இதழையும், 'வங்க தூத்' என்னும் இந்தி மொழி இதழையும் தொடங்கி சமய-சமூக-பொதுப் பிரச்னைகளில் பத்திரிகை படிப்பவர் களிடையே விழிப்புணர்வையும், விவாதப் போக்கையும் உருவாக்கி, இதழியலை சக்தி வாய்ந்த பிரசாரக் கருவியாகப் பயன்படுத்தினார். இவரைத் தொடர்ந்து வங்கத்தில் பலர் இதழியல் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டனர்

ராஜா ராம்மோகன் ராய் பத்திரிகை சுதந்திரத்திற்காகப் போராடிய முதல் இந்தியரும், ஆவார். 1823 மார்ச் மாதம் நான்காம் நாள் வங்கத்தில் பத்திரிகைகளுக்கு ''லைசன்ஸ்'' என்பதாக புதிய கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியின் இந்த நடவடிக்கையை எதிர்த்து அதே ஆண்டில் ''பத்திரிகைச் சுதந்திரம்'' என்னும் தலைப்பில் ஒரு சிறு வெளியீட்டை எழுதி வெளி யிட்டார் அத்துடன் நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்தார். பிரிட்டிஷ் பேரரசர் நான்காம் ஜார்ஜ் மன்னரிடத்தில் ஒரு விண்ணப்பம் தந்தார். பத்திரிகை கட்டுப்பாடு சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் 'மிரட்-உல்-அக்பார்' என்னும் இதழை ஏப்ரல், 1823-இல் நிறுத்தினார். இவ்வாறு பல முனைகளில் ராஜா ராம் மோகன் ராய் போராடியதை வரலாற்றாசிரியர்கள், ''முதல் அரசியல் சாசன வழிப் போராட்டம்'' எனக் குறிப்பிட்டு பாராட்டியுள்ளனர்.

வங்காளத்தில் மட்டுமல்லாது, பம்பாய், குஜராத், சென்னை முதலான பல மாகாணங்களிலும் ஆங்கிலம் படித்து நாட்டு நடப்புகளில் ஈடுபாடு கொண்ட சிலர் ஆங்கிலத்தில், இந்திய மொழிகளில் இதழ்கள் நடத்தத் தொடங்கினர்.

சென்னையில் முதல் மூன்று இதழ்கள் :

இந்து சமய-சமூகப் பிரச்சினைகளில் ஆர்வம் காட்டி ''நேடிவ் இண்டர் பிரட்டர்'' ''கிரசெண்ட்'' ''ரைஸிங்ஸன்'' என்னும் மூன்று ஆங்கில இதழ்கள் இந்தியர்களால் நடத்தப்பட்டு சென்னை நகரத்தில் இருந்து வெளிவந்தன.

நேடிவ் இண்டர் பிரட்டர் (Native Interpreter) 1840-இல் இந்து சமய ஆதரவு ஏடாக வெளிவந்தது. இதன் ஆசிரியர் சி. நாராயணசாமி நாயுடு.

இந்த இதழை காஜுலுலட்சுமி நரசு செட்டி, (1806- 1868) என்பவர் வாங்கி 'கிரஸெண்ட்' (The Crescent) என்று பெயர் மாற்றம் செய்து அக்டோபர் 2.1.1844-இல் முதல் இதழைக் கொண்டு வந்தார். காஜுலுலட்சுமி நரசு செட்டி சென்னையில் ''பொதுமக்கள் கருத்து'' என்னும் நவீனக் கோட்பாட்டை முதன் முதலில் உருவாக்கியவர். 1852-இல் சென்னையில் முதன் முதலாகத் தோன்றிய ''மெட்ராஸ் நேடிவ் அசோசியேஷன்'' என்னும் அரசியல் அமைப்பு உருவாகு வதற்கு மூலகர்த்தாவும் இவரேயாவார். இந்த அரசியல் அமைப்பின் பிரசார இதழாகவும் 'கிரசண்ட்' வெளிவந்தது. இந்தப் பத்திரிகைக்கு முன்னாள் நீதிபதி லெவின் என்னும் ஆங்கிலேயரும், ஹார்லி என்னும் ஆங்கிலேயரும் லட்சுமி நரசு செட்டிக்கு முக்கிய ஆலோசகர்களாக விளங்கினர்.

இந்த சமூகப் பிரச்னைகளை விவாதிப்பதற்காக 1853-இல் வெங்கடராயலு நாயுடு என்பவர், ''ரைசிங்சன் என்னும் இதழை நடத்தினார். இந்து சமயத்தில் சமூக சீர்திருத்தத்தை வேண்டி பிரசாரம் செய்தது.

தமிழ் இதழியலின் தோற்றம்

தமிழ் சஞ்சிகை

1818-இல் சென்னையில் ''மெட்ராஸ் ரிலீஜியஸ் டிராக்ட் சொஸைட்டி'' (Madras Religious Tract Society) என்னும் ஓர் அமைப்பு தொடங்கப்பெற்றது. இது புராட்டஸ்டன்ட் மிஷனரிகளால் நடத்தப்பெற்றது. இந்த அமைப்பின் சார்பில் 1831-இல் வெளிவந்த தமிழ் சஞ்சிகைதான் முதல் தமிழ் இதழாகக் கூறப்படுகிறது. இது ஒரு

மாத இதழாகும். இதன் உருவம், உள்ளடக்கம் பற்றி அறிய வாய்ப்பில்லை அரசாங்க ஆதரவு இந்த இதழிற்கு இருந்தும், இந்த இதழ் இரண்டு அல்லது மூன்றாண்டுகளுக்கு மேல் வெளிவராமல் நின்று விட்டது

உதய தாரகை :

இலங்கை யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்த ''உதய தாரகை'' என்னும் மாதமிருமுறை இதழ்தான் இன்றுவரை கிடைத்துள்ள தமிழ் இதழ்களில் மிகப் பழமை வாய்ந்தது. இந்த இதழ் 1841-முதல் வெளிவரத் தொடங்கியது. இந்த இதழ் யாழ்ப்பாணம் அமெரிக்கன் மிஷன் அச்சகத்தில் அச்சிடப்பெற்றது. ஹென்றி மார்ட்டின், செத்பேசன் ஆகியோர் ஆசிரியர்கள். மிக நீண்டகாலம் தொடர்ந்து வந்த பெருமையும் இந்த இதழிற்கு உரியது. 1930-இல் வாரஇதழாக வெளிவந்தது

இதன் உள்ளடக்கம், வெளியீடு பற்றிய விவரம் வருமாறு :

''வரலாறு: உதய தாரகைப் பத்திரத்தில் கற்கை, சாத்திரம், பொதுவான கல்வி, பயிர்ச் செய்கை, அரசாட்சி மார்க்கம் முதலானவை பற்றியும், பிரதான புதிய சங்கதிகளைப் பற்றியும் அச்சடிக்கப் படும்.''

''அது தமிழ் பாஷையிலும், இடைக்கிடையே தமிழும் இங்கிலீசும் கூடினதாயும், எட்டுப் புறமுள்ளதாக நான்காய் மடித்த தாள் அளவில் ஒவ்வொரு மாதத்து முதலாம், மூன்றாம் வியாழக் கிழமைகளில் பிரசித்தம் பண்ணப்படும்.''

'தமிழ் சஞ்சிகை'க்குப் பிறகு தமிழ் நாட்டில் இருந்து வெளிவந்த அடுத்த இரு தமிழ் இதழ்களாகப் பெயர் பெற்றவை, 'ராஜ்யவிருத்தி போதினி', 'தினவர்த்தமானி' என்னும் இதழ்களாகும்.

'ராஜ்ய விருத்தி போதினி' :

1855-இல் மாதம் மும்முறையாக வெளிவந்தது. பொது அறிவு வளர்ச்சித் தொடர்பான கட்டுரைகளை வெளியிட்டு, கல்வி புகட்டும் நோக்குடன் வெளிவந்தது இந்த இதழ். உள்நாட்டுச் செய்திகளுடன் வெளிநாட்டுச் செய்திகளும் இடம் பெற்றன இந்த இதழின் ஆசிரியர் பெர்சிவன் பாதிரியார்.

''தினவர்த்தமானி'' :

இதன் பெயரைக் கொண்டு, இதை ஒரு நாளிதழாகக் கருதக் கூடாது. இது ஒரு வார இதழ்; தெலுங்கு மொழியிலும் வெளிவந்தது. இந்த இதழிற்கு அரசாங்க ஆதரவு இருந்தது. மாதந்தோறும் 200 ரூபாய் நன்கொடையாகத் தரப்பட்டது. சென்னை மாநிலக் கல்லூரி

யில் சுதேசி இலக்கியப் பேராசிரியராகப் பணியாற்றிய பெர்சிவன் பாதிரியார், விஸ்வநாத பிள்ளை முதலான தமிழறிஞர்களின் ஒத்துழைப்பைக் கொண்டு ''தினவர்த்தமானி''யை திறமையாக நடத்தினார். அக்காலத்தில் கல்வித்துறை இயக்குநராக இருந்த ஏ.ஜே. அர்பத்நாட், மார்ச்-4, 1858-இல் சென்னை அரசாங்கத்திற்கு எழுதிய கடிதத்தில் ''தினவர்த்தமானி''யைப் பின்வருமாறு பாராட்டியுள்ளார்.

"The usefulness of a Journal of this character edited by an English gentleman who, from in long residence in the Country has acquaired a considerable insight into native habits of thought and feeling, whether it be looked in an educational or a political point of view, can hardly be over estimated."

தினவர்த்தமானியில் வெளிவந்த தமிழ்க்கட்டுரைகள் பல தொகுக்கப் பெற்று ''விநோத ரஸமஞ்சரி'' என்னும் நூலாக வெளிவந்து பெரும் புகழ்பெற்றது

1858-க்குப் பிறகு :

1857-இல் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சிக்கு எதிராக இந்திய சிப்பாய் புரட்சி கிளர்ந்தெழுந்தது. புரட்சி ஒடுக்கப் பெற்றாலும், 'கம்பெனி ஆட்சி' அகற்றப்பட்டது பிரிட்டிஷ் பேரரசின் நேரடி நிர்வாகத்தின் கீழ் இந்தியா கொண்டுவரப்பட்டது. இதற் காகவே 1858-இல் விக்டோரியா மகாராணியின் பிரகடனம் வெளி யிடப்பட்டது. புரட்சி நிகழ்ந்த காலத்தில் இந்திய இதழியல் துறை, புரட்சியை ஆதரிக்கவில்லை. பிரிட்டிஷ் ஆட்சியையே ஆதரித்தது. ஆனால், ஆட்சியோ பத்திரிகைச் சுதந்திரத்தை ஒடுக்க பத்திரிகைக் கட்டுப்பாட்டுச் சட்டங்களைப் பெருக்கியது.

1857-ஆம் ஆண்டு புரட்சிக்குப் பிறகு, ஆங்கிலேயர்கள் நடத்திய இதழ்களுக்கும், இந்தியர்கள் நடத்திய இதழ்களுக்கும் இடையே வேற்றுமையுணர்வு தோன்றத் தொடங்கியது.

இந்திய இதழியல் துறையில், இதற்கு முன் காணாத, அரசியல் கண்ணோட்டம் மெதுவாக பரவத் தொடங்கியது. பிரிட்டிஷ் ஏகாதி பத்தியம், சுதேச மொழிகளில் வெளிவரும் இதழ்கள் வாயிலாக விழிப்புணர்வு பரவலாகவும் விரைவாகவும் படர்ந்து செல்லும் என முன்னுணர்ந்தது. இதைத் தடுக்க கி.பி.1878-இல் இந்திய ராஜப் பிரதிநிதி லிட்டன் பிரபு இந்திய சுதேச மொழிப் பத்திரிகைச் சட்டத்தை (Vernacular Press Act) கொண்டுவந்தார். சென்னை மாகாணத்தில் அந்தக் காலத்தில் சுதேசமொழி இதழ்கள், ஆபத்தான

வைகளாகக் கருதப்படவில்லை. இதனால் இந்தச் சட்டம் சென்னை மாகாணத்தில் மட்டும் நடைமுறைக்குக் கொண்டுவரப்படவில்லை. கல்கத்தா, பம்பாய் முதலான மாநிலங்களில் நடைமுறைப்படுத்தப் பட்டது. இந்தச் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பித்துக் கொள்ள அதுவரை வங்க மொழியில் வெளிவந்த 'அமிர்த பஜார்' என்னும் பத்திரிகை ஒரே இரவில் ஆங்கில மொழி இதழாக மாறியது.

சென்னையில் வெளிவந்த ''சுதேசாபிமானி'' என்னும் தமிழ் வார இதழ், இந்திய சுதேச மொழிச்சட்டத்தைக் கண்டித்தது. 1.4.1878-ஆம் இதழில் ''இந்தச் சட்டம் இந்திய சுதேச மொழி இதழ்களுக்கு அடிக்கப்பட்ட சாவுமணி'' என கண்டனம் செய்தது.

இந்திய ராஜப்பிரதிநிதியாக ரிப்பன் பிரபு வந்ததும், இந்த அடக்குமுறைச் சட்டம் 1882-இல் விலக்கிக் கொள்ளப்பட்டது.

இதைத் தொடர்ந்து தமிழ் இதழியல் துறையில் வரவேற்கத்தக்க ஒரு திருப்பம் தோன்றியது. 'சுதேசமித்திரன்' என்னும் பெயரில் ஓர் அரசியல் இதழ் தோன்றியது.

''சுதேசமித்திரன்''

சுதேசமித்திரன் தமிழ் மக்களை உறக்கத்திலின்றும் எழுப்பியது என கப்பலோட்டிய தமிழர் வ.உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் பின்வரும் வெண்பாவால் சுட்டிக் காட்டியுள்ளார்.

தமிழ் மைந்தர் தூக்கத்தால் தாழ்வுற்றுச் சாவுள்
அமிழ்கின்ற தன்மைகண்டன்னார்க்-கமிழ் தென்னச்
செந்தமிழில் நம்முயர் சுதேசமித்திரன் தொடங்கி
நந்தமிழரை யெழுப்பி நன்கு''.

சுதேசமித்திரனைத் தொடங்குவதற்கு முன்பாக 'ஹிந்து' இதழின் ஆசிரியராக பெரும்புகழ் பெற்றவர் ஜி. சுப்ரமணிய ஐயர். இவர் 'சுதேசமித்திரன்' வாயிலாகத்தான் தமிழகத்தில் புதிய விழிப்பை ஏற்படுத்தினார். சுதேசமித்திரனைத் தொடங்கியதற்கு அவர் கூறி யுள்ள பின்வரும் காரணம் பாராட்டுதலுக்குரியது.

''ஹிந்து-பத்திரிகை ஆங்கிலப் பத்திரிகையாக இருப்பதால் இங்கிலீஷ் பாஷை அறியாத தமிழ் ஜனங்களும் தேச சமாசாரங்களை அறிந்து கொள்ள மார்க்கமில்லாதிருப்பதை யோசித்து, அதன்பின், 'சுதேசமித்திரன்' பத்திரிகையை 1882-ஆம் வருஷம் மார்ச் மாதத்தில் வாராந்திரப் பத்திரிகையாகத் துவக்கினேன்.''

சுதேசமித்திரன், கிராம மக்களுக்குப் புரிய வேண்டும் என்னும் நோக்கத்தில் எளிய நடையில், எளிய முறையில் செய்திகளை

வெளியிட்டது. சில சந்தர்ப்பங்களில் செய்திகளைப் பற்றியச் சிந்தனையைக் காட்டிலும் செய்திகளை வெளியிடச் சொற்களைப் படைக்கச் சிந்தனை செய்வதே பெரும்பாடாய் அமைந்தது, ஜி. சுப்பிரமணிய ஐயருக்கு.

சுதேசமித்திரன் 1882-இல் வாரப்பதிப்பாக வெளிவந்தாலும், 1888-இல் வாரம் இருமுறையாகவும், 1897-இல் வாரம் மும்முறை யாகவும், 1899-இல் நாளேடாகவும் மாறியது. அக்கால அரசியல் இதழ்கள் சுதேசமித்திரனைப் பின்பற்றின.

அரசியல் அறிவைப் பரப்பமட்டும் சுதேசமித்திரனைக் கருவியாகக் கொள்ளாமல் பொருளாதாரம் தொடர்பான கட்டுரைகள் பலவற்றை வெளியிட்டு தேசிய பொருளாதார அறிவு பரவ பாடுபட்ட முதல் இதழ் சுதேசமித்திரன் ஆகும்.

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் அரசியல் சமூகம், பொருளாதாரத் துறைகள் மூன்றையும் முதன் முதலில் ஒருங் கிணைத்து பத்திரிகைத் தமிழ் வளர அடித்தளம் கண்டது சுதேசமித்திரன்.

''ஆங்கிலப் பத்திரிகைகளைப் படிப்பவர்களை விடச் ''சுதேசமித்திரன்'' படிப்பவர்கள் தேச க்ஷேமத்தில் அதிகக் கூர்மை யான உணர்ச்சியுள்ளவர்கள். அநேகமாக ஸ்வராஜ்யமே தம் இலக்காகக் கருதும் அமித வசதிகள்'' என ஜி. சுப்ரமணிய ஐயர் தாம் உருவாக்கிய வாசகர்களைப் பற்றிப் பெருமிதத்துடன் கூறினார்

குருமலை சுந்தரம் பிள்ளை, சங்கரலிங்கம் பிள்ளை, வரகவி அ. சுப்பிரமணிய பாரதி, தேசிய கவி சி. சுப்பிரமணிய பாரதி ஆகியோர் சுதேசமித்திரனின் துணையாசிரியர்களாகப் பணிபுரிந் துள்ளனர்.

''இந்தியா''

பாரதியார், சுதேசமித்திரனில் 1904 நவம்பரில் ஆசிரியர் குழுவில் ஒருவராகச் சேர்ந்தாலும், அவர் ஓர் இதழாசிரியராக விளம் பரப்படுத்தப்பட்டு வெளிவந்த மாத இதழ் 'சக்ரவர்த்தினி'. இந்த இதழ் 1905 ஆகஸ்டில் வெளிவரத் தொடங்கியது. பாரதியாருடைய கட்டுரைகள், கவிதைகள் சில இதில் வெளிவந்துள்ளன. இதில் ஓராண்டு பணியாற்றிய பிறகு, சென்னையில் 1906, மே மாதம் 9-ல் தொடங்கப் பெற்ற 'இந்தியா'வில் ஆசிரியரானார் பாரதியார். நவம்பர் 1906-இல் 'பாலபாரத்' என்னும் ஆங்கில வார இதழிற்கும் நவம்பர் 1907-இல் 'பாலபாரதா' என்னும் ஆங்கில மாத இதழிற்கும் பாரதியார் ஆசிரியரானார்.

பாரதியாரின் தீவிரவாததேசிய பிரசாரம், 'நெருப்பு மழை' யென இந்தியாவில் பொழிந்தது. முதன் முதலாக ''கார்ட்டூன்கள்'' என்னும் அரசியல் கேலிச் சித்திரங்களை 'இந்தியா'வில் வெளியிட்டவரும் பாரதியாரே. சென்னையில் இருந்து 'இந்தியா' புதுச்சேரிக்கு மாற்றப்பட்டதும், அங்கும், பாரதியாரே 'இந்தியா'வின் ஆசிரியராக இருந்தார். தமிழ் இதழியல் வரலாற்றில் 'இந்தியா' மூலம் பாரதியார் தமது பத்திரிகைத் துறை ஆற்றலை மிகச் சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளார்

புதுச்சேரியில் இருந்து வெளிவந்த 'விஜயா', 'சூரியோதயம்', 'கர்மயோகி', 'தர்மம்', 'பாலபாரதா', (ஆங்கிலம்) ஆகிய இதழ் களிலும் பாரதியார் எழுதி வந்தார்.

இவையே அல்லாமல் அரசியல் சார்புடைய பல தமிழ் இதழ்கள் தமிழகத்தின் முக்கிய நகரங்களில் இருந்து வெளி வந்துள்ளன.

விஜயா

1902-தொடக்கத்தில் சென்னை திருவல்லிக்கேணியில் இருந்து வெளிவந்த தீவிரவாத தேசிய நாளேடு 'விஜயா' மண்டையம் எஸ்.என். திருமலாச்சாரியார் நிறுவியது. 'இந்தியா' வார இதழிற்கு உறுதுணையாகப் பிரசாரம் செய்தது. 'இந்தியா'வைப் போலவே 'விஜயா'வும் புதுச்சேரியில் இருந்து வெளிவர வேண்டியதாயிற்று. புதுச்சேரியில் இருந்து செப்டம்பர் 7, 1909 முதல் வெளிவந்தது. 1909 அக்டோபரில் பாரதியாா 'விஜயா'வின் ஆசிரியரானார். 1910 ஏப்ரல் இறுதியில் 'விஜயா' வெளிவராமல் நின்றது. தமிழ் நாளேடுகள் வரலாற்றில் 'விஜயா'வின் ப்ங்களிப்பு குறிப்பிடத்தக்கது. 'விஜயா'வின் இரு இதழ்களே தற்சமயம் கிடைத்துள்ளன.

''இன்றைய சமாசாரம்'' ''பாரதி'' :

'விஜயா'விற்குப் பிறகு, இதுவரை கிடைத்துள்ள சான்றுகள் வழியாக, ''இன்றைய சமாசாரம்'' என்னும் பெயரில் ஓர் நாளிதழ் 1916-க்கு சற்று முன்பு நான்கு ஆண்டுகள் வெளிவந்ததாகத் தெரி கிறது புகழ் பூத்த தமிழ் நாடக ஆசிரியரும், சிறந்த தேசியவாதியும், சதாவதானம் செய்யும் ஆற்றல் பெற்ற தமிழறிஞருமான தெ பொ கிருஷ்ணசாமிப்பாவலர் அந்த அரசியல் தமிழ் நாளிதழை அவர் வாழ்ந்த சென்னை சிந்தாதிரிப்பேட்டையில் இருந்து நடத்தினார்

1916-ஆம் ஆண்டு சென்னை அரசாங்க சுதேச இதழ்கள் பற்றிய அறிக்கையில் பாவலர் நடத்திவந்த 'பாரதி' பற்றிய ஒரு செய்தி உள்ளது இந்தச் செய்தியில் ''இன்றைய சமாசாரம்'' என்னும்

'பழைய நாள் இதழே', 'பாரதி' என்னும் நாளிதழாக மாறி உள்ளது என்று குறிப்பிடப் பெற்றுள்ளது. 'பாரதி' நாளிதழ் 1916 பிப்ரவரியில் தோன்றியது. 1600 படிகள் அச்சிடப்பெற்றன. 1916 ஏப்ரலில் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. மீண்டும் 1910 மே-ஜூனில் இருந்து வார இதழாக வெளிவந்தது. 'இன்றைய சமாசார'மோ அல்லது 'பாரதி' இதழோ ஒன்று கூட கிடைக்கவில்லை.

வ.உ.சி. யின் முயற்சி :

வ.உ.சி. 1900-ம் ஆண்டு பிற்காலத்தில் சுவாமி வள்ளி நாயகத்துடன் இணைந்து 'விவேக பானு' என்னும் இதழை நடத்தினார். ''இதில் வேதாந்தம், ஆசார சீர்திருத்தம், மதுவிலக்கம் போன்ற விஷயங்கள் சம்பந்தமாக பல வியாசங்கள் பிள்ளை வரைந்தார்.''

கொடிய சிறைவாசத்திற்குப் பிறகு சென்னை நகர வாழ்க்கையின் பொழுது, ஏதாவ்தொரு தொழில் செய்து வாழ்க்கை நடத்த வேண்டியிருந்த அவல நிலையில் தியாகச் செம்மல் வ.உ.சி. ''பரோபகாரி'' என்னும் பெயரில் ஓர் தமிழ் நாளிதழைத் தொடங்க முயற்சி செய்தார். அரசு ஆணைக் குறிப்பில் உள்ள பின்வரும் செய்தி வ.உ.சி. யின் பத்திரிகை முயற்சிக்கு சான்று புகர்கின்றது.

Name of Newspaper Place of proposed publication	Name, status of other particulars of the applicant
PAROPAKARI TAMIL DAILY CHINTADRIPET.	V.O. CHIDAMBARAM PILLAI Political agitator and ex-convict

'அரசியல் கிளர்ச்சியாளர், பழைய கைதி' என்ற தகுதியைத் தந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம், வ.உ.சி. க்கு தமிழ் நாளிதழை நடத்த அனுமதி தராததில் வியப்பில்லை.

ஈராண்டு கால சிறைத் தண்டனைக்குப் பிறகு புதுச்சேரி சென்ற வ.உ.சி அங்கு அரவிந்தரைச் சந்தித்து ''உலக முழுவதிலும் தமது சுதந்திரக் கிளர்ச்சியைப் பரப்ப இருபத்தேழு பாஷைகளில் பத்திரிகைகள் நடத்த வேண்டும்'' என்று பேராவலை வெளியிட்டார். ஆனால் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கடுமையான கண்காணிப்பு வ.உ.சி. யின் முயற்சிக்கு எதிராக நின்றது.

திராவிடன் :

சுதேசமித்திரனுக்குப் பிறகு செல்வாக்குடன் தொடர்ந்து பல ஆண்டுகள் வெளிவந்த அரசியல் நாளிதழ் 'திராவிடன்' ஆகும். இந்த இதழ் ஜூன் 1, 1919 முதல் சென்னை மவுண்ட் ரோட்டில் இருந்து வெளிவரத் தொடங்கியது. 'சவுத் இந்தியன் பீபில்ஸ் அஸோஸி

யேஷன் (லிமிடெட்) சார்பில் வெளிவந்தது. ராவ்பகதூர் பி. தியாகராய செட்டி, பி.ஏ., அச்சிடுபவர், வெளியிடுபவராகக் குறிப் பிடப்பட்டது. ஆசிரியர் பெயர் குறிப்பிடப் பெறவில்லை.

'ஜஸ்டிஸ்' என்னும் ஆங்கில நாள் இதழிற்கும், 'ஆந்திர பிரகாசிகா' என்னும் தெலுங்கு நாளிதழிற்கும் துணையாகத் தமிழில் நாளிதழாகத் திகழ்ந்தது, திராவிடன். இதன் ஆசிரியராக முதலில் பக்தவச்சலம் பிள்ளையும், அடுத்து ஜனக சங்கர கண்ணப்பரும் பணியாற்றினர்.

எட்டு பக்கங்களைக் கொண்டது திராவிடன் முதல் இதழில் பத்திரிகையின் நோக்கங்கள் பற்றி கூறப்பட்டுள்ளது. இதன் ஒரு பகுதி வருமாறு :

''தேசிய திராவிடர்களாகிய நம்மவோர் முன்னுக்கு வருவதற் குத் தடையாயுள்ள அபிப்பிராயங்களையும், விபரீதக் கொள்கை களையும் பேசித் தெளிந்து உண்மையைச் சாதித்து நிலை நிறுத்துவதே திராவிடனாகிய இப்பத்திரிகையின் திருத்தமுள்ளதொரு நோக்க மாகும்.''

''நமக்கு எவ்வளவோ நன்மை தந்துதவிய பிரிட்டிஷ் ராஜாங் கத்தின் மீது இடையறாத அன்பையும், தளர்வுறாத விஸ்வாஸத் தையும் என்றென்றும் காட்டிச் செல்வதே இணையில்லாத நமது நோக்கமாயிருக்கும்.''

''இந்தியாவில் ஜாதி மதப் பிரிவுகள் அனேகமிருக்கின்றன. ஜாதிபேதங்கள் முற்றிலும் ஒழிந்து தேசம் சீர்படுகிறவரைக்கும் சகல வகுப்பாருக்கும் நியாயம் கிடைப்பதற்கு ஒவ்வொரு பிரதிநிதிகள் மூலமாகவும் தேசத்தில் தங்கள் தங்களுக்குரிய மேன்மையையும், அந்தஸ்தையும், ஜனத் தொகையையும், அனுசரித்தும், விஷயங்கள் செம்மைப்படுத்த வேண்டும்.''

''பொதுவாக இந்தியர்களுடைய நன்மையை உத்தேசித்தும் முக்கியமாக பிராமணரல்லாத மூன்றரைகோடி ஜனத் தொகையுள்ள இந்துக்களின் நன்மையை உத்தேசித்தும் ஆரம்பிக்கப்படும் இப்பத்திரிகை.''

'திராவிடன்' இதழின் பொதுவான உள்ளடக்கம் பற்றிய ஒரு விளம்பரச் செய்தி வருமாறு

''இத் தமிழ் தினசரிப் பத்திரிகையில் ராஜாங்க விஷயங்கள், விவசாய சமாசாரங்கள், வியாபார சங்கதிகள், கைத்தொழில் விஷயங்கள், வித்யா சம்பந்தமான சங்கதிகள், யுத்த சம்பந்தமாகவும்,

இதர விஷயங்கள் சம்பந்தமாகவும் தந்தி சமாசாரங்கள், ஒவ்வொரு வரும் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டிய பொது சங்கதிகள், மனதைக் களிப்பாக்கும் மாண்புள்ள கதைகள், சம்பாஷணைகள் முதலிய பலபல விஷயங்களாம் தக்க வித்வான்களால் எழுதப்பட்டு வரும்.''

'திராவிடன்' இதழில் பிரச்சார வேகம் தமிழக தேசிய அரசியல் பிரசாரத்திற்கு ஓர் அறைகூவலாக அமைந்தது. மொழியுணர்வு, சமூக சீர்திருத்தவுணர்வுகளில் 'திராவிட'னோடு போட்டி போடத் தக்க அளவில் தேசிய அணியில் சக்திவாய்ந்த அரசியல் இதழ்கள் இல்லை. சுதேசமித்திரனின் நோக்கும் நடையும், காலமாறுதலுக்கேற்ப வேகத்தையும் பெற்றிருக்கவில்லை.

இந்தச் சூழலில் சென்னையில் 'ஜஸ்டிஸ்' இதழின் பிரசாரத் திற்கு எதிர்பிரசாரம் செய்வதில் முன்னின்றிருந்த அன்னிபெசண்ட் அம்மையாரின் 'நியு இந்தியா' என்னும் நாளேட்டைச் சார்ந்தவர்கள், 'திராவிட'னுக்கு எதிராக ஒரு தமிழ் நாளேட்டைக் கொணர்ந்திடத் திட்டமிட்டனர். 'நியு இந்தியா'வின் துணையாசிரியராக இருந்த சுப்பராய காமத் என்பவர் முயற்சியின் காரணமாக திரு.வி.க. அவர்களை ஆசிரியராகக் கொண்டு 'தேசபக்தன்' தோன்றியது.

'தேசபக்தன்'

'தேசபக்த'னில் 7.12.1917-இல் திரு.வி.க. ஆசிரியரானார். 'தேசபக்தன்' என்ற பெயர் வைத்ததற்குப் பின்வரும் காரணத்தைக் கூறியுள்ளார், திரு. வி.க.

''தேசபக்தி, கடவுள் பக்தியினின்றாதல், இராஜபக்தியினின் றாதல், வேறு பிரிந்து நிற்பதொன்றன்று. இக்காரணம் பற்றியே இப் பத்திரிகைக்குத் 'தேசபக்தன் என்னும் பெயரைச் சூட்டியிருக் கிறோம்.''

இந்திய தேசிய காங்கிரஸ், திலகர்-பெசண்ட் இவர்களின் ஹோம்ரூல் இயக்கக் கொள்கைகளை 'தேசபக்தன்' எதிரொலித்தது. 'தேசபக்த'னின் விளம்பரச் செய்தியும் இதை உறுதிப்படுத்தியது.

அரசியல் பிரசாரத்தில் வீரர் வழிபாட்டின் தேவையை 'தேசபக்தன்' வலியுறுத்தியது. 'தேசபக்தன்', லோகமான்ய பாலகங் காதர திலகர், காந்தியடிகள், பெசண்ட் அம்மையார் முதலியோர் புகழ் களை ஓதி வழிபாடு நிகழ்த்தி வந்தது எனத் திரு.வி.க. சாற்றி யுள்ளார்.

இந்தியாவில் பிற மாநிலங்களில் சந்திக்காத பெரும் பிரச்சினையொன்றை சென்னை மாநிலத்தில் இந்திய தேசிய இயக்கம்

சந்திக்க வேண்டியிருந்தது. இந்தப் பிரச்சினையில் திரு.வி.க. வின் 'தேசபக்தன்' நடுநிலையில் நின்றது. பிராமணர் அல்லாதாரின் சமூக நீதிக்கான காரணங்களைப் புறக்கணிக்காமலேயே பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடும் காங்கிரஸ் இயக்கத்தை ஆதரிக்க வேண்டும், ஆதரிக்க முடியும், என 'தேசபக்தன்' வலியுறுத்தியது. காங்கிரஸ் நோக்கத்திற்கு முரண்படாத வகையில் தென்னாட்டுப் பிராமணரல்லாதார் நலனை நாடுவது என்னும் உறுதியுடன் 1917-இல் அமைத்த 'சென்னை மாகாணச் சங்க'த்தின் கொள்கைகளையும் 'தேசபக்தன்' பிரசாரம் செய்தது. இவ்வகையில் தேசியத்திற்கும், வகுப்பு வாதத்திற்கும் நிகழ்ந்த போரில் 'தேசபக்தன்' பெற்ற வெற்றியை திரு.வி.க. பின்வருமாறு சுட்டிக் காட்டியுள்ளார்.

''தேசபக்தன்'' தோன்றியிராவிட்டால் வகுப்புவாதம் கிளைத்து ஓங்கியிருக்கும். வகுப்புவாதக் கட்சியின் நச்சுப்பல் 'தேசபக்த'னால் பிடுங்கப்பட்டது.''

''ஜஸ்டிஸ் கட்சி சமூக சீர்திருத்தத் துறையில் இறங்கி உழைத் திருந்தால் நாட்டுக்கு நலனே விளைந்திருக்கும்'' என்னும் நோக்குடைய வராகவும் இருந்தார் திரு.வி.க.''

தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தை எப்பொழுதும் பகை யுணர்வுடன் நோக்கியவர் அல்லர் திரு.வி.க. ஒரு சமயம் (1920-இல்) சென்னை மாகாணச் சங்கமும் தென்னிந்திய நலவுரிமைச் சங்கமும், ஒன்றுபட்டு நடந்த கூட்டத்தில் திரு.வி.க. பேசினார். திரு.வி.க. வின் பேச்சை அன்றைய 'சுதேசமித்திரன்' திரித்து வெளியிட்டது. இதன் காரணமாக சுதேசமித்திரனுக்கும் தேச பக்தனுக்குமிடையே கருத்துப் போர் சிலநாள் நடந்தது. இது 'தென்னாட்டையே கலக்கியது' என்று திரு.வி.க. குறிப்பிட்டுள்ளார்.''

இந்தச் சந்தர்ப்பத்தில் திரு.வி.க. அவர்கள் தேசபக்தனில் எழுதிய தலையங்கத்தின் சான்றாண்மை அதே சுதேசமித்திரனின் கண் களைத் திறந்து வைத்தது. இதழியல் துறையில் சகோதர பத்திரிகை களுடன் மோதல்களை வைத்துக் கொண்டே பத்திரிகையை நடத்த விரும்பியவரல்லர் திரு.வி.க. என்பதற்கு 'சுதேசமித்திரன்' பற்றிய தேச பக்தன் தலையங்கம் ஒரு சான்றாகும். இதைப் பற்றி திரு.வி.க. கூறியதாவது :

''தேசபக்தன் வாணிப நோக்குடன் நடத்தப்படும் பத்திரிகை அன்று என்றும், அப்பத்திரிகை கிளர்ச்சியின் பொருட்டுத் தோன்றியது என்றும், அஃது என்றைக்காவது அதிகார வர்க்கத்துக்கு இரையாகும் நிலை நேரலாம் என்றும் அப்பொழுது தன் செல்வாக்கை மித்திரனே அடைவான் என்றும் தலையங்கத்தில் விளக்கப்பட்டன.

அன்றிரவு 'சுதேசமித்திரன்' ஆசிரியர் அரங்கசாமி ஐயங்காரும் யானும் 'ஹிந்து' ஆசிரியர் கஸ்தூரிரங்க ஐயங்கார் வீட்டில் சந்திக் கலானோம். மித்திரன் ஆசிரியர் ''இன்றைய 'தேசபக்தன்' தலை யங்கம் என் நெஞ்சைக் குழைத்து விட்டது'' என்று சொன்னார். அச்சொல் போரை நிறுத்தியது.''

1918 பிப்ரவரி 25-இல் 'ஜஸ்டீஸ்' இதழின் முதலாண்டு விழா வைப் பற்றிய ஒரு தலையங்கம் தேசபக்தனில் எழுதப்பட்டது. திரு.வி.க. குறிப்பிட்ட அதிகார வர்க்கத்துக்கு இரையாகும் நிலை தேச பக்தனுக்கு விரைவிலேயே ஏற்பட்டது. தேசபக்தனின் ஈடுகாணம் பறிமுதலாயிற்று. இரண்டாவது ஈடுகாணமாக ஐயாயிரம் செலுத்த வேண்டியதாயிற்று.

''கிளர்ச்சிக்காகத்தோன்றிய பத்திரிகை'' என்று திரு.வி.க. முழங்கியதை அறிய வேண்டுமானால், 'கிலாபத் கிளர்ச்சி', 'சத்தியாக்கிரக இயக்கம்', 'பஞ்சாப் படுகொலை' முதலான அரசியல் கிளர்ச்சிகள் சீறிப்பாய்ந்த காலகட்டத்தில் 'தேசபக்தன்' இதழ்களைப் படிக்க வேண்டும்.

''தேசபக்தன் நிலையம் காளிகட்டமாயிற்று. அங்கே காளி வீரநடம் புரிந்த வண்ணமாயிருப்பாள். அந்நடனம் உமிழும் சுவாலை எரிமலை போன்றிருக்கும்.'' என திரு.வி.க. அவர்கள் அக்காலகட்ட தேசபக்தன் பிரசாரத்தை வருணித்துள்ளார்.

சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தில் தொழிலாளர்கள் எட்டு மணிநேர வேலைக் கோரிக்கையை முன்வைத்து வந்த செய்தியை (2-12-1910) வெளியிட்டார். இந்தியாவின் சிறுவர் வேலைக் கொடுமைப் பற்றியும் (2.12.1919) எழுதியுள்ளார். 'தேசபக்தன்' தொடங்கி இரண்டு ஆண்டுகள் கழித்து, புதன்கிழமை தோறும் (13.12.1919) தொழிலாளர் அநுபந்தம் என்ற சிறப்புப்பகுதியை வெளியிட்ட இவ்வகையில் 'தேசபக்த'னில் இவர் தொடங்கிய பணி, இவர் 'தேசபக்த'னைவிட்டு விலக நேர்ந்த பொழுது, தொழிலாளர்கள் அளித்த நன்கொடை அடிப்படையில், விலகிய மூன்று மாதங்களில் 'நவசக்தி' இதழைத் தொடங்க முடிந்தது.

'தேசபக்தன்' ஆசிரியர் பீடத்தில் அமர்ந்த வேளையில் ''ருஷ்யச் செய்திகள் என்னைக் கவரும்'' என திரு.வி.க. கூறினார். ஆனால் 1919-1920-களில் 'தேசபக்த'னில் போல்ஷ்விக் இயக்க எதிர்ப்புச் செய்திகள் இடம் பெற்றன. தலையங்கத்தின் பக்கத்தில் வெளிவந்த 'அரிமா நோக்கு' என்னும் பகுதியில். 'போல்ஷ்விக்கு களின் ஒழுக்கம்'' என்னும் தலைப்பில் பின்வரும் விமர்சனம் வெளிவந்துள்ளது.

''சமீபத்தில் வரும் செய்திகளை நோக்கினால் போல்ஷ்விக்கு களின் ஆர்ப்பாட்டம் விரைவில் வந்துவிடுமென்று தெரிகிறது. போல்ஷ்விக்குகளின் தலைவரான லெனின் என்பவரின் செல்வாக்கு முற்றிலும் ஒடுங்கி விட்டதென்று பெட்ராகிராடைப் பிடிப்பதற்கு நேசக் கட்சியாருக்கு எதிர்க்கட்சி ஒன்றும் இராதென்றும் ருஷ்யாவி லிருந்து செய்தி கிடைத்திருப்பதாகத் தெரிகிறது. இது வாஸ்தவ மாயின், நல்ல சமாசாரமும் போல்ஷ்விக்கரின் அதிகாரம் ஒய்ந்து விடும் பட்சத்தில் சென்ற.சிலகாலமாக ருஷ்யாவைச் சூழ்ந்த காரிருள் நீங்கி, யுத்தம் தொடங்கிய காலம் முதல் துன்ப வாழ்க்கையிலுள்ள கோடிக்கணக்கான ருஷ்ய ஜனங்களுக்கு விமோசனம் ஏற்படும் என்பதில் ஐயமில்லை.''

இதற்குப் பிறகு 15.12.1919, திலகரிடம் பேசிய பொழுது மார்க்சியத்தைப் பற்றி திரு.வி.க. ''தொட்ட'' பொழுது திலகர், ''மார்க்சீயத்தின் மீது இந்தியா நாட்டஞ் செலுத்துங்காலம் வரலாம்'' என்று பதிலிறுத்தார். திரு.வி.க. அவர்களுக்கு மார்க்சிய நாட்டமும் வளர்ந்தது என்பதை பிற்கால வரலாறு தெரிவிக்கின்றது.

சமூக சீர்திருத்தக் கட்டுரைகளையும், தலையங்கங்களையும், செய்திகளையும் வெளியிட்டு ஆதரவளித்தது 'தேசபக்தன்', இவற்றுள் சில வருமாறு :

விதவைகள் நிலை (1928 ஜுன் 13) தாழ்ந்த வகுப்பார் முன்னேற்றம் (1918 ஆகஸ்ட்டு 5) ஆசார சீர்திருத்த வேலையிலுள்ள கஷ்டங்கள் (1910 ஆகஸ்ட்டு 14) சென்னை மாகாண ஜனாசார மாநாடு (1910 ஆகஸ்ட்டு 23)

தமிழ் அரசியல் இதழியல் துறைக்கு 'தேசபக்தன்' அளித்த பங்களிப்பில் பத்திரிகைத் தமிழ் வளர்ச்சியில் நிகழ்த்திய புரட்சியும் ஒன்றாகும்.

திரு.வி.க. அவர்களே இதைப் பற்றி கூறியதாவது :

''தேசபக்தன் பத்திரிகையுலகில் புரட்சி செய்தான், தேசபக்தன் தமிழாக்கிய அரசியல் சொற்களும், சொற்றொடர்களும், குறியீடு களும், இப்பொழுது பத்திரிகைகளிலும் மேடைகளிலும் பிறஇடங் களிலும் ஏற்றமுற்று அரசுபுரிதல் வெள்ளிடைமலை.''

தேசபக்தன் 'அநுபந்தம்' என்னும் பெயரில் ஆண்டு தோறும் வெளிவந்த ஆண்டு மலர் ஓர் இலக்கியக் கருவூலமாக விளங்குவது.

வ.உ.சி., சிவா ஆகியோரின் எதிர்ப்பிற்கிடையே அன்னி பெசண்ட் அம்மையாரை அன்னை வசந்தா அம்மையார் என்று ஓதி வழிபட்ட திரு.வி.க. அந்த அம்மையார் திலகர், காந்தியடிகளுக்கு

எதிராக அறிக்கை விட்டதும், அவரைக் கண்டனம் செய்து தேச பக்தனில் எழுதினார். 'ஐயோ தெய்வமே' என்ற தலையங்கத்தில் ''இந்தியா பெசண்ட் அம்மையார், இங்கிலாந்து பெசண்ட் அம்மை யாராக மாறி விட்டனரோ என்று சந்தேகிக்கிறோம்'' என எழுதினார்.

தேசபக்தனில் அவர் உருவாக்கிய துணை ஆசிரியர்களை ''வேலாயுதர்களாகவும், கோதண்டபாணிகளாகவும், காண்டீபர் களாகவும்'' புகழ்ந்தார் திரு.வி.க. இவ்வாறு அவர் உருவாக்கிய இதழாசிரியர்களுள் ஒருவர் வெ. சாமிநாத சர்மா.

'தேசபக்த'னில் சாமிநாத சர்மா

'தேசபக்த'னில் இருவேறு காலகட்டங்களில் சாமிநாத சர்மா துணை ஆசிரியராக, முதன்மைத் துணையாசிரியராகப் பணி யாற்றினார். முதலில் திரு.வி.க. ஆசிரியராக இருந்த காலத்திலும், அடுத்து வ.வே.சு. ஐயர் ஆசிரியராக இருந்த காலத்திலும் துணை ஆசிரியராக இருந்துள்ளார்.

புகழ்பெற்ற ஆசிரியர்களின் கீழ் துணை ஆசிரியர்களாக எவ்வளவுதான் திறமையாகப் பணியாற்றினாலும், அவர்கள் பங்களிப்பு முழுமையாக வெளிப்படுத்த முடியாமல் புதையுண்டு போகின்றது. இதைப் பற்றி ''திராவிடபிமானி'' என்னும் இதழ் பின்வருமாறு எழுதியிருந்தது.

''பத்திரிகாயந்திரத்தைப் பெரும்பாலும் இயக்கிச் செலுத்தி வரும் உபபத்திராபதிபர்களுடைய பெயர்கள் வெளியில் வருவதில்லை. அவர்கள் பெரும்பான்மையும் பிரஸித்தியில்லாமலே ஆபீஸ் குமாஸ் தாக்களையொப்ப உழைத்து காலத்தை முடித்து விடுகிறார்கள்.''

இந்த நிலைமை சாமிநாத சர்மாவிற்கு ஏற்படவில்லை. 'தேச பக்த'னிலும், 'நவசக்தி' யிலும் பணியாற்றியதைப் பற்றி தன்னுடைய 'நான்கண்ட நால்வர்' என்னும் நூலில் பதிவு செய்துள்ளார்.

தேசபக்தனில் சேர்வதற்கு முன்பு, பத்திரிகைகள் சிலவற்றில் சர்மாவின் கட்டுரைகள் வெளிவந்துள்ளன. பத்திரிகையைப் படிக்கும் ஆர்வம் பதினைந்து வயதிலேயே அவருக்கு இருந்தது. அக்காலத்தில் 'சுதேசமித்திரன்', சென்னை அரண்மனைக்காரத் தெரு 120-வது எண்ணில் இருந்த கட்டிடத்தில் இருந்தது. மாலையில் இதழ் வெளி வந்ததும், தெருப்பக்கத்தில் உள்ள வெளிப்புறச் சுவரில் இதழின் பக்கங்களை ஆணியடித்து தொங்கவிட்டுவிடுவார்கள். சாமிநாத

சர்மா ஆற அமர்ந்து ஆரம்பம் முதல் கடைசிப் பக்கம் வரை படித்து முடித்துவிட்டுதான் அப்புறம் செல்வார்.

இருபதாவது வயதில் இருந்து 'சந்தா' செலுத்தி பத்திரிகையை வரவழைத்துப் படிக்கும் பழக்கம் ஏற்பட்டது. அன்னிபெசண்ட் அம்மையாரின் 'நியூ இந்தியா'விற்கு சந்தா கட்டியிருந்தார். 'ஆனந்த போதினி' என்னும் பத்திரிகையின் முதல் சந்தாதாரர் சாமிநாத சர்மாதான்.

''தேசபக்தனில் வந்து சேர்ந்த பொழுது புதியதோர் உலகத் திற்கு வந்திருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. ஏற்கனவே பழக்க மான ஒரு சூழ்நிலைக்கு வந்திருப்பதாகவே உணர்ந்தேன்'' என்று சர்மா குறிப்பிட்டுள்ளார்.

திரு.வி.க. வுடன் முதல் சந்திப்பிற்கு ஏற்பாடு செய்து தேச பக்தனில் சர்மா சேர வழிகண்டவர், காஞ்சிபுரம் வாசுதேவ ஐயர். இந்த முதல் சந்திப்பைப் பற்றி சாமிநாத சர்மா பின்வருமாறு எழுதி யுள்ளார்.

''முதலியாரை நான் முதன் முதலாகப் பார்த்தது 1917-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள். நாள், கிழமை எதுவும் நினைவில்லை. அவரைப் பார்த்தது எந்த நாளோ அந்த நாளே நான் எழுத்தாளனாகப் பிறந்த நாள். அதற்கு முந்தி நான் எழுதியிருக்கிறேன். ஓரிரண்டு நூல் களும் வெளியிட்டிருக்கிறேன். ஆனால், எழுதுவதையே என் வாழ் நாள் பணியாக மேற்கொண்டது அன்றைய தினத்திலிருந்துதான். எனவே, அந்த முதல் சந்திப்பு என் வாழ்க்கையிலே ஒரு திருப்பத் தைக் காட்டிக் கொடுத்தது.''

தமிழறிஞர் வாசுதேவ ஐயர் 'தமிழில் எல்லாம் இருக்கிறது' என்று சாற்றுவதில் உறுதியாய் நின்றவர். இவரிடம் சாமிநாத சர்மா சங்க இலக்கியம் முதல் நவீன இலக்கிய கர்த்தாவான பி.ஆர். ராஜம் ஐயரின் ''கமலாம்பாள் சரித்திரம்'' வரையில் பேசிப் பழகிய தெல்லாம் பிற்காலத்தில் இதழியல் துறைக்குப் பயன்பட்டன.

தேசபக்தன் தொடங்கிய நாளிலேயே அதில் துணை ஆசிரியர் களில் ஒருவராகச் சேர்ந்தார், சாமிநாத சர்மா. தேசபக்தன் தொடங்கு வதற்கு இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்பாகவே சுப்பராயகாமத், திரு.வி.க., ஆகியோருடன் தேசபக்தன் அலுவலகத்தில், பத்திரிகை யின் அளவு, அமைப்பு, பக்கங்களின் எண்ணிக்கை, பத்திரிகையின் முகப்பில் பொறிக்க வேண்டிய இலச்சினை முதலியனவற்றைப் பற்றி கலந்தாலோசிக்கும் வாய்ப்பும் சர்மாவிற்கு ஏற்பட்டது.

சாமிநாத சர்மாவின் முதல் புரட்சி

தேசபக்தன்' அமைப்பில் சர்மா செய்த ''ஒரு புரட்சி''யைப் பற்றி அவர் கூறக் கேட்போம் :

''தேசபக்தன்'' தோன்றி செல்வாக்கில் வளர்ந்து வரும் பொழுது அதில் நான் ஒரு புரட்சி செய்தேன்; புரட்டும் செய்தேன். அப்பொழுதெல்லாம் பத்திரிகையின் நடுப்பக்கங்களில் அதாவது 12 பக்கங்களாயிருந்தால் 6-வது 7-வது பக்கங்களில்; 10 பக்கங்களாக இருந்தால் 8-வது, 9-வது பக்கங்களில் தலையங்கம், ஆசிரியர் குறிப்புக்கள், முக்கியமான செய்திகள் ஆகிய இந்த வரிசையில் வெளி யாகும். முதல் பக்கம், இரண்டாம் பக்கம் முதலியவற்றில் வரி விளம் பரங்கள், மற்ற விளம்பரங்கள் முதலியன வெளியாகும். இந்த வரிசை யை மாற்றி பத்திரிகையைப் பிரித்தவுடன் முக்கியமான செய்தி களை வாசகர்கள் படிக்க வேண்டுமென்பதற்காக முதற் பக்கத்தில் முக்கிய மான செய்திகள் வெளிவர ஏற்பாடு செய்தேன். இந்த மாற்றம் புரட்சி கரமானதென்று மற்ற உதவி ஆசிரியர்களும், அச்சகத்தினரும் கருதினார்கள். சுப்பராயகாமத்துக்கும், திரு.வி.க.வுக்கும் இப்படி நான் செய்தது மிகவும் பிடித்திருந்தது. இதற்குப் பிறகு மற்ற பத்திரி கைகள் முதற் பக்கத்தில் முக்கியமான செய்திகளை வெளியிட ஆரம்பித்தது.''

சாமிநாத சர்மா மேலே 'புரட்சி' பற்றிய குறிப்போடு 'புரட்டு' பற்றிய குறிப்பையும் தந்துள்ளார். அந்தப் 'புரட்டு' பற்றியும் அவர் கூறியதாவது :

''தேசபக்தன் வெளி மாநிலங்களின் தலைநகர்களில் சன்மானம் கொடுத்து சொந்த நிருபர்களை அமர்த்தி அவர்கள் அனுப்பும் செய்தி களை வெளியிடக் கூடிய வசதியைப் பெற்றிருக்கவில்லை பத்திரி கையின் செல்வாக்கு உயர்ந்திருந்த அளவுக்கு அதன் செல்வநிலை உயர்ந்திருக்கவில்லை. ஆனாலும் வசதிக் குறைவுடையது என்று காட்டிக் கொள்ளக் கூடாதென்றும் பத்திரிகையின் கௌரவத்தை உயர்த்திக் காட்ட வேண்டும் என்றும் நான் உறுதி கொண்டேன்.''

''இதற்காக ஒரு 'புரட்டு' செய்தேன். முக்கியமாக, பமபாயி லிருந்தும் கல்கத்தாவிலிருந்தும் சொந்த நிருபர்கள் கடிதங்கள் எழுதுவதாகக் காட்டிக் கொள்ளத் துணிந்தேன். அப்பொழுதெல்லாம், தபால்களாகட்டும், பத்திரிகைகளாகட்டும் ரெயிலில்தான் வரும். ஒரே நேரத்தில்தான் கிடைக்கும். பம்பாயிலிருந்து, 'பம்பாய் கிரானிக்கல்', 'டைம்ஸ் ஆப் இந்தியா', 'இந்தியன் டெய்லி நியூஸ்' ஆகிய மூன்று பத்திரிகைகள் பகல் சுமார் 12 மணிக்கு வரும். இவை கிடைத்ததும்,

இவற்றிலுள்ள முக்கியமான செய்திகளைத் திரட்டி ஒன்றரை பத்திக்கு மேல் போகாமல் ஒரு கடிதம் எழுதி 'நமது சொந்த நிருபரிடமிருந்து' என்ற தலைப்புக் கொடுத்து, அன்றைய மாலைப் பத்திரிகையிலேயே வெளிவரச் செய்வேன். இங்ஙனமே கல்கத்தாவிலிருந்து, 'அமிர்த பஜார்', 'இங்கிலீஷ்மான்', ''ஸ்டேட்ஸ்மான்' ஆகிய மூன்று பத்திரிகைகளில் வரும் செய்திகளைத் திரட்டி 'நமது சொந்த நிருபர்' கடிதமாக வெளிவரும். ஆக, ஒருவாரம் 'பம்பாய் நிருபர்' எழுதுவார். ஒருவாரம் 'கல்கத்தா நிருபர்' எழுதுவார். இது 'புரட்டு' தான்; ஆனால் இந்தப் புரட்டுக்கு என்க்குப் பாதுகாப்பளித்தது ஒன்று, திரு.வி.க.வின் ஆதரவு; மற்றொன்று, ''பொய்மையும் வாய்மையிடத்தே, புரை தீர்ந்த, நன்மை பயக்கும் எனின்'' என்ற வள்ளுவரின் வாய்மொழி.''

தேசபக்தனின் முதல்பக்கத்தை, 'நிரப்பும் பொறுப்பு' சாமிநாத சர்மாவிடம் விடப்பட்டது. அக்காலத்தில் 'ஹோம் ரூல்' இயக்கச் செய்திகளை பரபரப்பாக வெளியிட வேண்டியிருந்தது. இதற்காக சாமிநாத சர்மாவும், கவர்ச்சியும் எழுச்சியும் கலந்த ஒரு புனைப் பெயரைச் சூட்டிக் கொண்டார்கள். ''சுயராஜ்ய போர் முனையிலிருந்து ஒரு போர் வீரன் எழுதுவது'' என்ற தலைப்பில் கீழ் ஹோம் ரூல் இயக்கச் செய்திகளை எழுதிவந்தார். அன்னிபெசண்ட் அம்மையாரும், லோகமான்ய பால கங்காதர திலகரும் இணைந்து நடத்திய தேசியவிடுதலை இயக்கப் போராட்டம் செல்வாக்கு பெற்றிருந்தது. எனவே, போர்க்களச் செய்திகளை போர் வீரன் வாயிலாகவே தந்ததால், வாசகர்களின் பத்திரிகை படிக்கும் ஆர்வம் பெருகியது. இத்துடன் தொல் புகழ் வாய்ந்த சங்க இலக்கியத்தின் புறநானூற்று வீரச் செய்திகளையும் 'பெட்டிச் செய்தி'களாக அமைத்துக் கொடுத்தார். பழந்தமிழ் இலக்கியச் செய்திகளை நவீன அரசியல் நோக்குடன் பொருத்திக் காட்டிய திறன் படிப்போரைக் கவர்ந்தது. மகாகவி சுப்பிரமணிய பாரதியார் பார்வையிலும், சாமிநாத சர்மாவின் இந்தச் செய்தி வெளியிடும் திறன் பட்டது. தனது நண்பரும் தேசபக்தனின் துணையாசிரியர்களில் ஒருவராகப் பணி புரிந்து கொண்டிருந்தவருமான பரலி சு. நெல்லையப்பரிடம் விவரமறிந்தார். சொற்களில் கிடைத்த ''போர்வீரன்'' சித்திரம், நேரில் பார்த்தபொழுது பாரதியாருக்குக் கிடைக்காததால், சாமிநாத சர்மாவின் மெலிந்த தோற்றத்தைக் கண்டு சிரிப்பு வெடிகளை உதிர்த்தாராம்.''

இதழியல் துறையில் முன் அநுபவம் இல்லாத சாமிநாத சர்மாவிற்கு, 'தேசபக்தன்' இதழில் சேர்ந்த மறுநாளே, தலையங்கம் தவிர பிற யாவற்றையும் எழுதி பத்திரிகையை வெளிக்கொண்டுவர வேண்டிய பெரும் பொறுப்பைச் சுமக்க வேண்டியதாயிற்று. ஆசிரியர் திரு.வி.க. தலையங்கத்தை மட்டும் எழுதிக் கொடுத்துவிட்டு

வெளியூர் செல்ல வேண்டியிருந்தது. துணைத் தலையங்கம், ஆசிரியர் குறிப்புகள் முதலானவற்றை எழுதியும், பிற செய்திகளை ஒழுங்கு படுத்தியும், தேசபக்தனை குறித்த காலத்தில் வெளிக்கொணர்ந்தார்; திரு. வி.க. வின் பாராட்டுதலையும் பெற்றார்

ஒரு நாளேட்டில் செய்திகளை முந்தித் தருவதில் முனைப்புக் காட்டவேண்டும் இதற்கு மொழி பெயர்க்கும் திறனும், வேகமாக எழுதும் பழக்கமும்,.சமயோசித ஆற்றலும் வேண்டும். இவையாவும் சாமிநாத சர்மாவிடம் இருந்ததால், துணையாசிரியர்களில் இவருக்கெனத் தனிச் சிறப்பும், ஊதிய உயர்வும் கிட்டியது.

தேசபக்தனின் 'அரிமா நோக்கு' என்னும் பகுதி பெரும்பாலும் துணையாசிரியர்களால் எழுதப்பெற்று வந்தது.இந்தப் பகுதி 'நியு இந்தியா'வின் 'ஆன் தி லைன்' (On the Line) என்னும் பகுதியின் மொழி பெயர்ப்பாக அமைத்துக்கொள்ள துணையாசிரியர்களில் ஒருவர் முற்படுவார். இதை சாமிநாத சர்மா விரும்பவில்லை. ''அன்றாடம் கிடைக்கும் தந்திச் செய்திகளை ஆதாரமாகக் கொண்டு அன்றாடம் எழுதப்பட வேண்டும்'' என சாமிநாத சர்மா அந்தத் துணையாசிரியருக்கு உணர்த்தி வழிப்படுத்தினார்.

தேசபக்தனில் சேரும் பொழுது சாமிநாத சர்மாவின் முதல் நூலான 'கௌரீ மணி'யின் நடையில் வடமொழிச் சொற்கள் மிகுந் திருப்பதை திரு.வி.க. சுட்டிக் காட்டினார். ஆனால் தேசபக்தனில் சேர்ந்த மூன்றாம் நாளே வடமொழி கலவாத தூய தமிழிலும் தனக்கு எழுத இயலும் என்பதை சாமிநர்த சர்மா நிறுவினார். திரு.வி.க. வின் பாராட்டையும் பெற்றார்.

தேசபக்தனில் 'ரிப்போர்ட்ட'ராகவும் பணியாற்றியுள்ளார் சில கூட்டங்களுக்குச் சென்று சாமிநாத சர்மாவே குறிப்பு எடுக்க வேண்டும், என திரு.வி.க. விரும்பியதால் 'ரிப்போர்ட்ட'ராகவும் சென்றார்.

திரு.வி.க. வின் தமிழ் நடையை தன்வயமாக்கிக் கொண்டவர் சாமிநாத சர்மா. திரு.வி.க. வெளியூர் சென்றுவிட்டால், 'தேசபக்தன்' தலையங்கம் சாமிநாத சர்மாவினால் எழுதப்பெறும். எவராலும் வித்தியாசம் காண முடியாது. இதைப் பற்றிய பல சுவையான செய்திகளை 'நான் கண்ட நால்வர்' என்னும் நூலில் எழுதியுள்ளார் சாமிநாத சர்மா.

திரு.வி.க. வின் உள்ளங்கவர்ந்த, நம்பிக்கைக்கு உரியவராக தேசபக்தனில் பணியாற்றினார், சாமிநாத சர்மா. இந்தக் காலத்தில் சாமிநாத சர்மாவின் நூல்களான ''ஏப்ரல் 1919 அல்லது பஞ்சாப் படுகொலை''. ''லோகமான்ய திலகர்'', ''ரமண மகரிஷிகள்'' என்பன வெளிவந்தன.

வ.வே.சு. ஐயரின் தேசபக்த'னில் :

வ.வே.சு ஐயர் 31 7.1920-இல் தேசபக்தனின் ஆசிரியரானார். 'தேசபக்தன்' நிருவாகத்தினரோடு கருத்து வேற்றுமை கொண்டு திரு.வி.க. விலகினார் ஆனால் அவர் பயிற்றுவித்த துணையாசிரியர்கள் தேசபக்தன் தொடர்ந்து சிறப்பாக வெளிவர வ.வே சு. ஐயருக்கு துணை நின்றனர் முன்புபோல் வ.வே.சு. ஐயர் காலத்திலும் சாமிநாத சர்மா முதன்மை துணையாசிரியராகத் திகழ்ந்தார்.

திரு வி.க. காலத்தில் எழுதியதைப் போலவே, வ.வே.சு, ஐயர் காலத்திலும், தலையங்கங்களை எழுதினார் சாமிநாத சர்மா. வ.வே.சு. ஐயர் தமிழ்நடையில் வடமொழிச் சொற்கள் விரவி வரும். சாமிநாத சர்மாவும் அதே நடையில் வ.வே.சு. ஐயர் இல்லாத பொழுது தலையங்கம் எழுதுவார்

இருவேறு நடைகளை ஆளும் திறன் படைத்தவராக விளங்கினார் சாமிநாத சர்மா. இதனால் அவருக்கென ஒரு தனி நடையை அமைத்துக் கொள்ளவில்லை என்று கருதக் கூடாது. தலையங்கப் பகுதிகளைத் தவிர பிறவற்றில் அவருடைய அசலான தெளிந்த, இனிய, குளிர்ந்த தமிழ் நடையைக் காணலாம்.

தலையங்கத்தில் தான் கையாண்ட நடையைப் பற்றி சாமிநாத சர்மா, பின்வருமாறு விளக்கியுள்ளார்.

''முதலியாருடைய நடையையோ, ஐயருடைய நடையையோ நகல் செய்ய வேண்டுமென்பது என் நோக்கமல்ல; தலையங்கம் ஆசிரியருடைய நடையில் அமைந்திருக்க வேண்டும் என்பதுதான் என் நோக்கம் யார் எழுதினாலென்ன? ஆசிரியருடைய கருத்துக்களைத் தானே அதில்-தலையங்கத்தில்-பிரதிபலிக்கச் செய்ய வேண்டும்; அப்படிப் பிரதிபலிக்கச் செய்கிறபோது அவருடைய நடையிலேயே அவை அமைய வேண்டுமல்லவா? நான் பின்பற்றிய இந்த முறையை முதலியாரைப் போல ஐயரும் பாராட்டினார்.''

சாமிநாத சர்மா தேசபக்தனில் பணியாற்றிய காரணத்திற்காக அதன் அரசியல் கொள்கையைப் பற்றி எழுதினார் என்பதில்லை. அவர் திலகர், பெசண்ட், காந்தியடிகள் கொள்கைகளை ஏற்றுக் கொண்ட ஒரு தேசியவாதியாக வாழ்ந்தவர். ஊதியம் பெறுவதற்காக மட்டும் எழுதவில்லை; கொள்கைப் பிடிப்பிற்காகவும் எழுதினார். பஞ்சாப் படுகொலையைப் பற்றிய தன்னுடைய நூலை தானே சொந்தமாக திரு.வி.க. வின் ஆதரவோடு வெளியிட்டார்.

தேசபக்தனில் நூல் மதிப்புரைகளையும் சிற்சில சமயங்களில் சாமிநாத சர்மா எழுதியுள்ளார். திரு.வி.க. ஆசிரியராக இருந்த 'தேசபக்த'னில் வ.வே.சு. ஐயரின் 'சந்திரகுப்தன்' என்னும் நூலிற்கு

சாமிநாத சர்மா நூல் மதிப்புரை எழுதினார். இது 1918 மே மாதம் 8-இல் வெளிவந்தது. இந்த மதிப்புரை, வ.வே.சு. ஐயரைக் கவர்ந்துள்ளது.

பத்திரிகை முதலாளிகள், பத்திரிகை ஆசிரியரின் எழுத்துச் சுதந்திரத்தில் தலையிடக் கூடாது என்னும் கொள்கையை பின்வரு மாறு சாமிநாத சர்மா வலியுறுத்தியுள்ளார்.

''ஒரு பத்திரிகையின் சொந்தக்காரர்கள், ஆசிரியர்குழாத்தின் பொறுப்பில் தலையிடக் கூடாதென்பது என் கருத்து, ஆசிரியர் களுடைய எழுதுகோல் நேர்மை வழியில் செல்ல வேண்டுமானால் அவர்களுக்கும் பரிபூரண சுதந்திரம் இருக்க வேண்டும் என்பது என் கொள்கை.''

சாமிநாத சர்மாவின் இந்தக் கொள்கை காரணமாக, தேச பக்தனில் இருந்து விலகினார். தொடர்ந்து வ.வே.சு. ஐயருக்கும், தேசபக்தன் நிருவாகத்தினரால் இடர் சூழ்ந்தது. அவர் இல்லாத நாளில் மற்றொருவர் எழுதிய 'ராஜாங்கத் துரோக'க் கட்டுரைக்காக வ.வே.சு ஐயர் அவர்களுக்கு 1921 செப்டம்பர் 19-இல் ஒன்பது மாதச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

'நவசக்தி'யில் சாமிநாத சர்மா :

22.10.1920-இல் வார இதழாக 'நவசக்தி'யைத் தொடங் கினார், திரு.வி.க. தேசபக்தனில் இருந்து விலகிய பிறகு 'நவசக்தி' யின் துணையாசிரியர் ஆனார், சாமிநாத சர்மா. ''தொடக்கத்தில் 'நவசக்தி'யில் துணைவராக அமைந்தவர் வெங்கடகிருஷ்ண முதலியார். பின்னே 'தேசபக்த'னின்றும் சாமிநாத சர்மா 'நவசக்தி' யை நண்ணினார்' என திரு.வி.க. குறிப்பிட்டுள்ளார்.

சாமிநாத சர்மாவின் நீண்டகால இதழியல் பணி 'நவசக்தி'யில் நிகழ்ந்தது.

தேசபக்தனில் பணியாற்றிய பொழுது இருந்த சூழல் வேறு; 'நவசக்தி'யில் பணியாற்றிய பொழுது இருந்த சூழல் வேறு, இதை திரு.வி.க. அவர்களே பின்வருமாறு ஒப்புநோக்கி மொழிந்துள்ளார்.

'' 'தேசபக்த'னில் பெரிதும் அழிவு வேலை நடந்தது. 'நவசக்தி' யில் பெரிதும் ஆக்கவேலை நடந்தது. ஆவேசமும் பரபரப்பும் 'தேசபக்த'னில் அலைந்தன; அன்பும் அமைதியும் 'நவசக்தி'யில் தவழ்ந்தன.''

'நவசக்தி' வாரப் பதிப்புடன், மும்முறை (20.10.1929) பதிப் பாகவும் வெளிவந்த காலத்தில் ரா. கிருஷ்ணமூர்த்தி (கல்கி) ஆசிரியர்

குழாமில் சேர்ந்தார். காந்தியடிகளின் ஒத்துழையாமைக் கொள்கையைப் பரப்புவதற்காக நவசக்தி வாரம் மும்முறையாகத் தொடர்ந்தது. எட்டுமாத காலம், 'நவசக்தி' வாரம் மும்முறையாக நடந்தது. பிறகு பழையபடி வாரப்பத்திரிகையாக மாறியது. ஏறக்குறைய நான்காண்டுகள் 'கல்கி' ரா. கிருஷ்ணமூர்த்தி பணியாற்றினார். 'நவசக்தி'யில் இருந்து விலகியதற்கு ரா. கிருஷ்ணமூர்த்தி கூறிய காரணம் பின்வருமாறு

''பெரும்பாலும் மொழி பெயர்ப்பு வேலைதான் நவசக்தியில் நான் செய்ய நேர்ந்தது. திரு.வி.க. வின் தமிழ் நடையை என்னால் கையாள முடியவில்லை என்னுடைய நடையில் நான் சொந்தமாக எழுத முயன்ற விஷயங்கள் 'நவசக்தி'க்குப் பொருத்தமாக அமையவில்லை. இதனால் என் மனம் அமைதி இழந்துவிட்டது.''

தேசபக்தனில் செய்ததைப் போலவே செய்திகள் தயாரிப்பது, தகுந்த தலைப்புகளுடன் வெளியிடுவது, அவ்வப்பொழுது தலையங்கங்கள் எழுதுவது முதலான இதழியல் பணிகளை 'நவசக்தி'யிலும் தொடர்ந்து செய்து வந்தார் சாமிநாத சர்மா. ஆக்க வழிப்பட்ட, இலக்கியப் படைப்புகளுக்கு போதிய வாய்ப்பு 'நவசக்தி'யில் பல புனைப் பெயர்களில் சாமிநாத சர்மாவின் கட்டுரைகளும் பிற படைப்புகளும் வெளிவந்தன.

'ஒரு நாடகாசிரியன்' என்ற புனைப் பெயரில் சாமிநாத சர்மாவின் புகழ்பெற்ற ''பாணபுரத்து வீரன்'' என்னும் நாடகத்தின் ஒரு பகுதி வெளிவந்தது.

'சரித்திரக்காரன்' என்னும் புனைப் பெயரில் சாமிநாத சர்மாவின் அசோகன் சாசனங்களைப் பற்றிய கட்டுரைகள் வெளிவந்தன.

1921, ஜூலை 22-ஆம் இதழில் வெளிவந்த ''யாவும் தாய் மொழியே'' என்னும் கட்டுரையில் ஆந்திர பிரதேசத்தின் ''இராஜமகேந்திரபுரத்து நகர பரிபாலன சபையார்'' அனைத்து நடவடிக்கைகளையும், கணக்கு விபரங்கள் உட்பட, தெலுங்கிலேயே எழுத வேண்டும் என்று தீர்மானித்ததைச் சுட்டிக்காட்டி அதேபோல் தமிழ் நாட்டு நகராட்சி மன்றங்களிலும் தமிழிலேயே நடைபெற வழிகாண வேண்டும் என எழுதினார்.

29.7.1921-ஆம் இதழில். 'இந்தியன்' என்ற புனை பெயரில் இந்தியாவின் அக்கால அரசியலைப் பற்றி எழுதினார். இதே இதழில் 'இடியேறு' என்னும் பகுதியில் 'பெண்மணிகள் வெளியே வரவேண்டும்' என்பதை ஆசிரியர் குறிப்பாக எழுதியுள்ளார்.

10.8.1921-ஆம் இதழில் 'மௌத்கல்யன்' என்னும் புனைப் பெயரில் (சாமிநாத சர்மாவின் கோத்ரம் மௌத்கல்யம்) ''இடறி விழுந்தான்'' என்னும் சிறுகதையை எழுதியிருக்கிறார்

ஆகஸ்ட் 19, 1921-இல் 'இடியேறு' பகுதியில் அமெரிக்காவில் கூடியிருக்கும் உலகப் பத்திரிகையாளர்கள் கூட்டத்தில் இந்தியாவின் ''அதிகார வருக்கத்தால் பத்திரிகைகள் நசுக்கப்படுவதைக் கேட்டால் அனைவரும் ஆச்சரியப்படுவார்'' என எழுதினார்.

'வெ.சா. என்னும் பெயரில் 26.8.1921-இல் ''தென்நாட்டுத் தாய்மார்களுக்கு ஒரு பகிரங்கக் கடிதம்'' என்ற தலைப்பில் எழுதினார். இதில் ''போருக்கு, தாய்மார்கள், பிள்ளைகளையும், நாயகிகள், நாயகன்களையும், சகோதரிகள், சகோர்தரர்களையும் அனுப்ப வேண்டும்'' எனக் குறிப்பிட்டுள்ளார். இந்தக் கட்டுரையில் மேலும் கூறப்பெற்றுள்ளதாவது :

''நமது பிறப்புக்கு காரணமாயிருந்த பாரத தேவியின் திருமுகம் மலர வேண்டுமானால், அவளுடைய உதிரம் குளிர வேண்டுமானால், அவள் நல்லாடையுடுத்து நறுமலர் சூடி உலகத்தி லுள்ள பிற சகோதரிகளுடன் இன்புற்று வாழ வேண்டுமானால் பெண் மக்கள் புத்துயிர் பெற்று, புதிய உணர்ச்சி கொண்டு எழுந்திருக்க வேண்டும். நாட்டின் முன்னேற்றத்திற்கு அஸ்திவாரக் கற்களாய் இருக்க வேண்டியவர்கள் ஆண் மக்களே என்று பெண் மக்கள் சும்மாயிருத்தல் கூடாது. ஆண் மக்களுக்கு நாட்டு விஷயத்தில் எவ்வளவு கடமை உண்டோ, அதற்கு அதிகமான கடமை பெண் மக்களுக்கும் உண்டு.''

இங்கு, சாமிநாத சர்மாவின் பிரசார நடைத்திறனைக் காண்கிறோம்.

நகைச்சுவைக் கட்டுரை எழுதவும் நாட்டங்கொண்டு 'வருணன்' என்னும் புனைப் பெயரில் 'சென்னை அலங்காரம்' என்னும் தலைப்பில் எழுதி வந்தார்

திரு.வி.க. வின் 'நவசக்தி', உயிர்ப்பலி தரும் மூட சமய சடங்கை எதிர்த்தும் எழுதி வந்தது. இதற்காக சாமிநாத சர்மா, கவிஞர் இரவீந்திரநாத் தாகூரின் ''உயிர்ப்பலி'' என்னும் (Sacrifice) நாடகத்தைத் தழுவி ''ஜீவபாலன்'' என்னும் நாடகத்தையும் 'நவசக்தி'யில் எழுதியிருக்கிறார்

இவ்வாறு அவர் இதழியல் துறையில் பன்முக இலக்கியப் பணிகளில் ஈடுபட 'நவசக்தி' வாய்ப்பு அளித்தது

'நவசக்தி' இதழ்கள் அனைத்தையும் தனிப்பெரும் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளும்பொழுது, அதில் சாமிநாத சர்மாவின் பங்கு பணியின் ஆழமும் அகலமும் மேலும் தெரியவரும்.

தேசபக்தன், நவசக்தியைத் தவிர, 'ஆந்திரகேசரி' டி. பிரகாசம் தமிழிலும், நடத்திய ஸவராஜ்யா' என்னும் நாளிதழிலும் ஓராண்டு காலம் சாமிநாத சர்மா பணியாற்றியுள்ளார். இவருடன் அக்காலம் புகழார்ந்த எழுத்தாளர்களான எம் எஸ். சுப்பிரமணிய ஐயரும், 'வ.ரா ' அவர்களும் ஆசிரியர் குழுவில் பணிபுரிந்தனர்.

சாமிநாத சர்மாவின் 'ஜோதி' :

பர்மாவில், ரங்கூனில் 'பாரத பந்தர்' என்னும் நூல் விற்பனைக் கடையை வைத்து வாழ்ந்து கொண்டிருந்த காலத்தில் ரங்கூனில் இருந்து 'தன வணிகன்' என்னும் இலக்கியத் தரம் மிக்க இதழ் வெளி வந்து கொண்டிருந்தது. ''பர்மாவின் ரங்கூனையடைந்த சில மாதங் களுக்குப் பிறகு 'தன வணிகன்' என்ற பத்திரிகையில் பணியாற்றும் வாய்ப்பு கிட்டியது'' என சாமிநாத சர்மா குறிப்பிட்டுள்ளார். தன வணிகன் ஆண்டுதோறும் வெளியிட்ட ''பொங்கல் மலர்'' சிறந்த இலக்கிய மலர்களாகும். இவற்றில் சாமிநாத சர்மா, புனைப்பெயரில் எழுதிய சில கட்டுரைகளின் விவரம் வருமாறு :

1 மைசூரின் முன்னேற்றம்-சரித்திரக்காரன், 1935 பொங்கல் மலர்

2. ரங்கூனில் நான் கண்ட காட்சி-தேவதேவன்

3 துன்பத்தில் இன்பம்-மௌத்கல்யன்-1936

4 பதினாயிரம் மாணாக்கர்கள் படித்த சர்வகலாசாலை-சரித்திரக்காரன் - 1937

5 ராஷ்ட்ரபதி (நேருஜி பற்றியக் கட்டுரை) - 1937.

ரங்கூன் வாழ்க்கையில் செட்டிநாட்டு நகரத்தார் சமூகத்தைச் சார்நத இலக்கிய அன்பர்கள் சிலரின் தூண்டுதலாலும், உதவியாலும் 'ஜோதி' என்னும் பெயரில் தோன்றிய மாத இதழின் நிருவாகப் பொறுப்பையும், ஆசிரியர் பொறுப்பையும் சாமிநாத சர்மா ஏற்றார்

நாளிதழ், வார இதழ், மாத இதழ்கள் ஆகியவற்றில் சாமிநாத சர்மாவிற்கு மாத இதழ் மீதே தனிப்பற்று மிகுந்திருந்தது தனது இந்தக் கருத்தை அவரே பிற்காலத்தில் ஒரு பேட்டியில் பின்வருமாறு கூறியிருக்கிறார்

''மக்களைச் சிந்திக்கச் செய்யவும், அவர்களுடைய பரம்பரை யான பண்பாட்டைப் பேணி வளர்த்துவரச் செய்யவும் வழிவழியாக

வந்து கொண்டிருக்கும் கலைகளுக்கு உத்வேகம் அளிக்கவும், தரமான இலக்கியங்களைப் படைப்பதற்கான ஊக்கத்தையும் ஊட்டத்தையும் கொடுக்கவும் புனிதமான நமது தாய்நாட்டின் புராதன காலத்திலிருந்து தற்காலம் வரையிலுள்ள சரித்திரத்தை நெறிபிறழாத முறையில் வெளிவரச் செய்யவும், மாதப் பத்திரிகைகளினால் சாத்தியம் என்பதுதான் என் கருத்து.''

1937 ஆகஸ்டில் அவர் தொடங்கிய 'ஜோதி' என்னும் மாத இதழ் முன் கூறப்பெற்ற கருத்தின் விளக்கமாக வெளிவந்தது.

'ஜோதி'யின் பெயர்க்காரணம், நோக்கு முதலானவைகளைப் பற்றி முதல் இதழில் ''நமது நியாய சபை'' என்னும் தலையங்கப் பகுதியில் பின்வருமாறு விளக்கப்பெற்றுள்ளது.

''பெய்ஸ்பூர் காங்கிரஸின்போது, அணையாத அமர ஜோதியை ஏற்றி வைத்தார் பண்டித ஜவஹர். 'நமது ராஷ்டிரபதியினால் ஏற்றி வைக்கப்பெற்ற இந்த ஜோதி எப்பொழுதும் அணையாது' என்று மகாத்மா ஆசீர்வாதம் செய்தார். அதையே நாமும் நமது 'ஜோதி'க்கும் பொருத்தமாக எடுத்துக் கொள்கிறோம். ஏனென்றால் நாம் சர்வானுகூலவாதிகள்.

ராஷ்டிரபதியின் ஆசீர்வாதமாகிற ரட்சாபந்தனத்துடன் நாம் வெளியே புறப்படுகிறோம். எனவே, இடர்ப்படோம், அவர் தம் ஆசிச் செய்தியில் நமக்கு வழிகாட்டியிருக்கிறார். அவ்வழியிலேயே செல்வோம். அப்படிச் செல்லும்போது ராபர்ட் இங்கர்ஸால் என்னும் அறிஞரோடு சேர்த்துக் கொண்டு, ''ஓ சுதந்திரமே! தொலை தூரத்திலேயே நீ மிதந்து கொண்டிருக்கப் போகிறாயா? ஓர் உற்சாகியினுடைய, கொடை வள்ளலினுடைய, கவிஞனுடைய கனவிலேயே எப்பொழுதும் வாழ்ந்து கொண்டிருக்கப் போகிறாயா? வா, இறங்கிவா, எங்களிடத்தில் வந்து வாசஞ்செய்'' என்று முழக்கம் செய்வோம் விஞ்ஞான ஆராய்ச்சியின் பயனாக, உலகம் தற்போது, இடத்திலும் காலத்திலும் சுருங்கிக் கொண்டு வருகிறது. இந்த நிலையில் தமிழர்களாகிய நாம் உலகத்தோடு ஒட்டி வாழாவிட்டால் வீழ வேண்டியதுதான். இந்த வீழ்ச்சி வாராமல் தடுப்பதுவே 'ஜோதி'யின் வேலையாகும்.''

சீன தேசத்திலிருந்து பெருதேசம் வரையிலுள்ள பல நாட்டுக் காவியங்களாக வற்றாத ஊற்றுக்களைத் தமிழர்களுக்கு அறிமுகப் படுத்த அருந்தச் செய்வோம். இதிகாச மண்டலத்திலே தோன்றிய சரித்திர நாயகர்களை யெல்லாம் நமது வாழ்வோடு பிணைத்துக் காட்டுவோம். குழந்தை பாதுகாப்பு முதல் உலக நிர்வாகம் வரையில் அனைத்தையும் அணிப்படுத்தி வைப்போம்.. பொதுவாக இலக்கியப்

பூஞ்சோலையிலேயாகட்டும், யுத்த களத்திலேயாகட்டும் தமிழன் தலைநிமிர்ந்து நடக்க வேண்டும், அது மட்டும் போதாது, பிறர்க்கு வழிகாட்ட வேண்டும். இதுவே நமது கலையாத கனவு; மாறாத லட்சியம்.

'ஜோதி'க்கு நிற, சமூக, சமயவேற்றுமை ஒன்றுமே கிடையாது. உலக சகோதரத்துவத்திலே அதற்குப் பூரண நம்பிக்கையுண்டு. ஆனால் தேசியக் கண் கொண்டுதான் இந்த உலக சகோதரத்து வத்தைப் பார்க்கும்.''

நேருஜியின் வாழ்த்து

மேலே தொடக்கத்தில் குறிப்பிடப் பெற்றுள்ள ''ராஷ்டிரபதி யின் ஆசீர்வாதம்'' என்பது 'ஜோதி' இதழ் தொடக்கத்தின்பொழுது, காங்கிரஸ் தலைவர் அளித்த வாழ்த்துச் செய்தி. 1936 மே மாதம் பதினைந்து நாட்கள் நேருஜி பர்மாவில் சுற்றுப்பயணம் செய்தார். அப்பொழுது சாமிநாத சர்மா வேண்டுகோளை ஏற்று மே 21, 1937 தேதியிட்டு நேருஜி, 'ஜோதி'க்கு வாழ்த்துச் செய்தியனுப்பினார். இதன் ஆங்கில மூலமும், தமிழாக்கமும் 'ஜோதி'யின் முதல் இதழில் வெளிவந்தன. இதன் தமிழாக்கம் வருமாறு.

''ஜோதி என்ற புதிய சித்ரசகிதமான மாதப்பத்திரிகை, பாமர ஜனங்களின் முன்னேற்றத்திற்காகவும், பூரண சுயராஜ்யத்திற்காகவும் உழைக்கும் என்று அறிகிறேன். ஆதலின் அதற்கு எனது நல்லாசி. இந்தியா-பர்மா ஒத்துழைப்புக்காகவும், இந்தியர்களுக்கும் பர்மியர் களுக்கும் இடையே சினேக மனப்பான்மை அதிகரிக்கவும் அது வேலை செய்யும் என்று நம்புகிறேன். தவிர இரண்டு நாடுகளையும் பாதிக்கிற மகத்தான பிரச்சினைகளையும், உலகப் பிரச்சினை களையும், அது வலியுறுத்தும் என்று எதிர்பார்க்கிறேன். ஏனென்றால் இவற்றை நாம் தெரிந்து கொண்டால்தான், நமது சொந்தப் பிரச்சினை களைப் பற்றியும் நாம் அறிந்து கொள்ளமுடியும்.''

உருவமும் உள்ளடக்கமும்

'ஜோதி'யின் அளவு 23 செ.மீ. நீளம்; 18 செ.மீ. அகலம்; பக்கங்கள் இதழ்களிடையே மாறுபட்டுள்ளன. முதல் இதழின் பக்கங்கள் 104, டிசம்பர் 1937-இல் 112, 1938 பிப்ரவரியில் 120, 1940-இல் யுத்த காலத்தில் ஏற்பட்ட பிரச்சினைகளால் பக்கங்களின் எண்ணிக்கை 60 ஆக குறைந்துவிட்டது.

இதழ் ஒவ்வொரு ஆங்கில மாதத்தின் முதல் வாரத்தில் வெளி வந்தது. ஆண்டுக் கையொப்பம், பர்மாவுக்கு ரூ. 4-0-0; இந்தியா வுக்கு ரூ.4-8-0; மலேயா மற்றும் பிற நாடுகளுக்கு ரூ. 6-0-0.

பர்மாவில் தனி இதழ் விலை 0-6-0; இந்தியா- பிறநாடுகளுக்கு 0-8-0. 'ஜோதி' இதழுக்கென்று தனி 'ஜோதி' அச்சகம் இருந்தது. 'ஜோதி'யின் அலுவலகம் 47, 31-வது தெரு, ரங்கூன் என்னும் முகவரியில் இருந்தது.

'சித்திர சகிதமான பத்திரிகை' என்னும் குறிப்பும், 'வாழ்வு, தாழ்வு, இன்பம், துன்பம், எல்லாம் தாய் நாட்டின் பொருட்டு' என்னும் இலட்சிய வாசகமும் பொறிக்கப்பட்டுள்ளன. 'ஜோதி' இதழ்ப் பெயருக்குக் கீழ் 'அகல் விளக்கு' சின்னம் வரையப் பட்டி ருந்தது. 'நியாய சபை' என்னும் தலையங்கம் தொடங்குவதற்கு முன்னிடத்தில் பாரத தேவியின் படம் அமைந்திருந்தது. இந்தப் படத்தில் பாரத தேவி உலகக் கோள் மீது ஒரு கையில் சூலாயுதத் தையும் மற்றொரு கையில் 'நமது நியாய சபை' என்னும் வாசகம் தாங்கிய மூவண்ணக் கொடியையும் ஏந்தி அமர்ந்திருப்பது வரையப் பட்டுள்ளது.

உள்ளடக்கத் தலைப்புகள், பக்கங்களின் பங்கீடுகளைப் பற்றி, முதல் இதழைக் கொண்டு, பின்வருமாறு அறிய முடிகிறது.

அரசியல், இலக்கியம், கலை, பொருளாதாரம் விஞ்ஞானம் எனப் பலவாறாக 'ஜோதி'யின் ஒளிக்கற்றைகள் விரிந்துள்ளதை மேலே பார்க்கிறோம்.

'நமது நியாய சபை' என்னும் பகுதி, 'தலையங்கம்' எனத் திகழ்ந்து செய்தி விமர்சனங்கள் என்று கூறும் அளவிற்கு பல பொருள்களுடன் நீண்டு அமைந்துள்ளது.

104 பக்கங்களில் 'ஜோதி' ஆசிரியர் எழுதிய பக்கங்களின் எண்ணிக்கை 48, இவருடைய புனை பெயர்களாவன; வறுமைப் புலவன், தேவகவி, சரித்திரக்காரன், குயில், வி. தேவாச்சாரி, குடியேறியவன், ஓர் அரசியல் மாணாக்கன்.

ஐரோப்பாவில் உள்ள முக்கிய அரசுகள் ஐந்தாறு ஆண்டு காலமாக நாடு பரப்பு முயற்சியில் ஈடுபட்டதை விவரிக்கும் 'ஸ்டேட்மெண்ட்' அரசியலறிவைப் பரப்புவதில் 'ஜோதி'க்கிருந்த ஆர்வத்தைப் புலப்படுத்தியது.

நவீனத் தமிழ் இலக்கிய வளர்ச்சியிலும், 'ஜோதி' கொண்டிருந்த ஆர்வம், 'சிறுகதை எழுதுதல்' என்னும் கட்டுரையிலும், பிரெஞ்சுக் கதாசிரியர் பால்சாக்கின் ஒரு சிறுகதையை தமிழில் 'தீராப்பகை'யென வெளியிட்டதிலும் (பால்சாக் படத்துடன்) புலனாகிறது.

''வாசகர்கள், எந்தவிஷயத்தைப் பற்றியேனும் தெரிந்து கொள்ள வேண்டுமானால், அல்லது சந்தேகங்கள் ஏதேனும் இருந்தால் இந்தப் பத்திகளின் மூலம் தெரியப்படுத்திக் கொள்ளலாம்'' என்னும் அறிவிப்பைக் கொண்டுள்ள ''நமது நிருபர்களுடன்'' என்னும் பகுதி, 'கேள்வி பதில்' பகுதியாக அமைந்துள்ளது. 'டொமினியன்' என்றால் என்ன? ஒரு கிராமவாசி கேள்வி கேட்பதாகவும், அதற்கு ஆசிரியர் அளித்துள்ள விளக்கமும் பாராட்டத்தக்கது. இந்தக் கேள்வி-பதில் பகுதியில் உள்ள பின்வரும் பகுதி சுவையூட்டுகின்றது.

''தமிழ் மொழி வளர்ச்சிக்காக ஈரிரண்டு ஆண்டுகளுக்கு முன்னே தமிழர் மகா நாடென்றும், தமிழன்பர் மகா நாடென்றும், இருவித மகாநாடுகள் சென்னையில் கூடிக் கலைந்தன. பல தீர்மானங்கள் நிறைவேறின. அவை என்னவாயிற்று? 'ஜோதியே' சிறிது சோதித்துப் பார்ப்பாயா? - தமிழன். ''இதற்கு விடையாகத் தரப்பட்டது. ''மகா நாடுகளைக் கூட்டியவர்களே, இன்றும் தீர்மானங்களைச் சோதித்துக் கொண்டிருக்கிறார்களோ என்னவோ? - ஆசிரியர்.''

'தமிழ்ப் பிரயோகங்கள் - ஒரு வேண்டுகோள்' என்னும் 'ஜோதி' ஆசிரியரின் கட்டுரையில் காலத்திற்கேற்ற வளர்ச்சியைத் தமிழ்மொழி பெறவேண்டும், என்னும் வேட்கை வெளிப்படுகின்றது. இதன் ஒரு பகுதி வருமாறு;

''அரசியல், பொருளாதாரம், விஞ்ஞானம் முதலிய முக்கிய துறைகளில் வழங்கப்பெறும் சொற்கள், தமிழிலே சரியாகக் கொண்டு வரப்படவில்லை. அப்படியே கொண்டு வரப்பட்டாலும், ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகப் பிரயோகம் செய்து வருகின்றனர். சில சமயங்களில் பல ஆங்கிலப் பதங்களும் ஒரே தமிழ் வார்த்தையைத்தான் உபயோகிக்க வேண்டியிருக்கிறது. உதாரணமாக, (Constitution, Act, law) என்ற ஆங்கில பதங்களனைத்திற்கும் 'சட்டம்' என்ற ஒரே சொல்லைத்தான் உபயோகிக்கிறோம். அப்படியே Dominion என்பதற்கும் Colony என்பதற்கும் 'குடியேற்ற நாடு' என்றுதான் சொல்கிறோம். இங்ஙனம் பல உதாரணங்களைக் காட்டலாம். இதனால் பொது ஜனங்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். இந்தச் சிரமத்தினின்று அவர்களை விடுவிப்பது அறிஞர்களுடைய முக்கிய கடமையாகின்றது.''

''சுமார் பதினேழு வருஷங்களுக்கு முன்னர், சேலத்தில் ஸ்ரீமான் ச. இராஜகோபாலாச்சாரியார் முதலிய பெரியோர்கள், சேர்ந்து, Tamil Scientific Terms Society' என்ற பெயருடன் ஒரு சங்கத்தை ஸ்தாபித்து ஒரு பத்திரிகையும் நடத்தினர். ஆனால் சில மாதங்கள் கழித்து இந்த முயற்சி நின்றுவிட்டது.'' (இந்த சங்கத்தைப் பற்றி 'தமிழில் சாஸ்த்ர பரிபாஷை' என்னும் துணைத்தலைப்பில் 1918 ஜனவரி 23 சுதேசமித்திரனில் எழுதியுள்ளார் பாரதியார்).

இவ்வாறு விவரமாக எழுதிய பிறகு, இறுதியில் பின்வருமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

''எனவே, இது விஷயத்தில் 'ஜோதி' தன்னாலான கைங்கரியத்தைச் செய்ய வேண்டுமென்று தீர்மானித்திருக்கிறது. அறிஞர் பலரும் தங்கள் அரிய யோசனைகளை 'ஜோதி' மூலமாகத் தெரிவிக்க வேண்டுகிறோம். ஆரம்பத்திலே நாமே, சிலர் ஆங்கில அரசியல் சொற்களைக் கொடுத்து அவற்றை அப்படியே தமிழிலும் தந்திருக்கிறோம். இவை போல் பல துறைச் சொற்களையும் அவற்றின் விளக்கங்களையும் அன்பர்கள் தெரிவிப்பார்களாயின், அவற்றை அப்படியே 'ஜோதி'யில் வெளியிடுவோம். கடைசியில் பெரும்பாலான அறிஞர்களுடைய கருத்துப்படி, ஒவ்வொரு சொற்றொடரை நிலை நிறுத்தி, வழக்கில் கொண்டு வரலாமல்லவா? இது விஷயத்தில் தமிழ்ப் பத்திரிகாசிரியர்களும் நூலாசிரியர்களும் எனக்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.''

அக்டோபர் 1937-இல் ''நமது நிருபர்களுடன்'' என்னும் பகுதியில் 'ஜோதி' ஆசிரியரின் வேண்டுகோள் பின்வருமாறு ஒலித்தது.

''மேனாடுகளில், அரசியல் சுதந்திரத்தை ஸ்தாபித்துக் கொள்வதற்கு முன்னாடி தலைவர்கள் பாஷைச் சீர்திருத்தந்தான் செய்திருக்கிறார்கள். துருக்கி நாட்டில் கமால் அதாதுருக் பாஷைச் சீர்திருத்தம் செய்திருப்பதுபோல் தமிழ் நாட்டிலும் ஒரு சர்வாதிகாரி தோன்றி-தமிழ்ப் பிரயோகங்கள் விஷயத்தில் ஒரு நிர்ணயம் ஏற்படுத்தினால் மிகவும் நல்லது.''

'அன்றாட உலகம்' என்னும் பகுதியில் மே, ஜூன், ஜூலை மாதங்களின் முக்கிய நிகழ்ச்சிகள் தேதிவாரியாக சுருக்கமாக வெளியிடப் பெற்றன. காங்கிரஸ் இயக்க செய்திகள், உலக அரசியல் நிகழ்ச்சிகள், மற்றும் பொதுச் செய்திகள் வெளியிடப்பட்டன. பல பத்திரிகைகள் படித்துத் தெரிந்து கொள்ளக்கூடிய எளிய செய்திச் சுருக்கங்கள் 'ஜோதி'யில் வாசகர்களுக்காக வெளியிடப்பட்டன.

'சித்திர சகிதமான பத்திரிகை' என்பதற்கேற்ப முப்பது படங்கள் வெளிவந்துள்ளன. இவற்றுள் இரண்டு அரசியல் தொடர் பான 'கார்ட்டூன்கள்' எனப்படும் 'கேலிச் சித்திரங்கள்'. விஞ்ஞானச் செய்திகளை விளக்குவதற்காகவும் படங்கள் வரையப்பட்டு வெளி யிடப்பெற்றுள்ளன.

'ஜோதி'யின் முதல் ஓராண்டுக் காலம்-ஒரு பார்வை :

1937-1938-களில் வெளிவந்த பல துறைகளைச் சார்ந்த கட்டுரைகளின் எண்ணிக்கைகள் பற்றிய விவரங்கள் வருமாறு :

அரசியல் கட்டுரைகள் 60 :

இவற்றுள் காங்கிரஸ் இயக்கத் தொடர்பான கட்டுரைகள் 6, இந்திய அரசியல் வரலாறு, அரசியல் பிரச்சினைகளைப் பற்றிய கட்டு ரைகள் 6, பொதுவான அரசியல் தத்துவங்கள் பற்றிய கட்டுரைகள் 8, யுத்தங்கள் பற்றிய கட்டுரைகள் 6, சீனா-ஜப்பான் தொடர்பான கட்டு ரைகள் 6, ஜெர்மன் தொடர்பான கட்டுரை 2, ஆஸ்திரிய- தொடர் பானது 2, இத்தாலி தொடர்பானது 1, எத்தியோப்பியா தொடர் பானது ஒன்று, கொரியா தொடர்பானது ஒன்று, பர்மா தொடர்பானது ஒன்று, பிரிட்டன் தொடர்பானது ஒன்று, செக்கோஸ்லோவேகியா தொடர்பானது 2, எஞ்சியவை பொதுவானது.

இலக்கியம்-கலை பற்றிய கட்டுரைகளின் எண்ணிக்கை 82 :

ஆன்மிகம், இலக்கியம், இசை, சினிமா, கல்வி, அறிவு நூல் கள், பழமொழிகள், தமிழ்ச் சான்றோர்கள் பற்றிய குறிப்புகள் இவற்றுள் அடங்கும். 'ஸ்ரீ ஈ.வே. ராமசாமி நாயக்கர்' என்னும் தலைப் பில் ரா. வேங்கடராமன் பி.ஏ., எழுதியுள்ள கட்டுரையில் பெரியாரின் தொண்டுகள் பாராட்டப்பட்டுள்ளன. இந்தக் கட்டுரையின் சில பகுதி கள் வருமாறு :

''ஸ்ரீ ராமசாமி நாயக்கர் குஸ்திக்கென்றே பிறந்த யுத்த வீரன், அஞ்சா நெஞ்சுடையவர். கல்லுக் கடவுளுக்கும், அபகீர்த்திக்கும், பொது ஜன வெறுப்புக்கும், சர்க்கார் கூட்டங்களுக்கும் பயப் படாதவர்.

''வைக்கம் சத்தியாக்கிரக வீரர் என்று சொன்னால் அது ஸ்ரீ நாயக்கரைத் தவிர வேறுயாரையும் குறிக்காது... இவரது சமூக சீர்திருத்த வேலையில் அரசியலைக் கொண்டு புகுத்தாமலிருந்தால், இவர் புகழ் சொல்லொணாதது.

''இவர் எந்தக் கட்சியில் இருந்தாலும் அந்தக் கட்சியின் தன்மைக்காக இவர் உழைத்த உழைப்பில் யாருமே சந்தேகித்தது கிடையாது.''

சரித்திரம் தொடர்பான கட்டுரைகள் 69 :

இவற்றுள் 'லெனினும் காந்தியும்' என்னும் கட்டுரை, கடிதங்கள் வாயிலாக வெளியிடப்பட்டுள்ளது. இதற்கு 'சரித்திரக்காரன்' என்னும் புனைப்பெயரில் சாமிநாத சர்மா தொடக்கத்தில் எழுதியுள்ள பின்வரும் குறிப்பு மிக முக்கியமானது.

''லெனினும் காந்தியும் ஒரு புதிய யுகத்தைச் சிருஷ்டித்தவர்கள் இரண்டு பேருடைய லட்சியமும் மனிதசமூகத்தின் விடுதலை தான். இந்த லட்சியத்திற்காக கையாளப்படுகிற முறைகளிலே சில வித்தியாசங்கள் இருக்கலாம். இந்த இரண்டு பேருடைய தத்துவங்களும் சரியான முறையில் இன்னும் தமிழில் விளக்கப்படுத்தப் பெறவில்லையென்று கருதுகிறோம். இந்தத் தொண்டைச் செய்ய வேண்டுமென்ற ஆவல் 'ஜோதி'க்கு உண்டு. அதற்கு சோபனமாக இங்கு லெனின் எழுதிய சில கடிதங்களையும் 'சரித்திரக்காரன்' மொழி பெயர்த்தபடி வெளியிட்டிருக்கிறோம். இந்தக் கடிதங்கள் ரெனே புலாப் மில்லர் எழுதிய ''லெனினும் காந்தியும்'' என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டவையென்று, 'சரித்திரக்காரன்' தெரிவிக்கிறார்.''

சிறுகதைகளின் எண்ணிக்கை 28 :

ஸ்ரீ.ஸ்ரீ ஆசார்யா, எம்.வி வெங்கட்ராமன், கு.ப. ராஜகோபாலன், புதுமைப்பித்தன் முதலானவர்களின் சிறுகதைகளும், 'வருணன்', 'சொ', 'சரஸா' என்னும் புனைப்பெயர்களில் சாமிநாத சர்மா எழுதிய சிறு கதைகளும், வெளிவந்தன. இவர்களுள் ஸ்ரீ.ஸ்ரீ. ஆசார்யாவைப் பற்றி சாமிநாத சர்மா அளித்துள்ள பின்வரும் குறிப்பு அரியது, பலர் அறியாதது.

''இவர் சிறந்த பிரெஞ்சுப் புலவர், பெரிய தியாகி, சீரிய புலவர்கள் தேசபக்தர்களாகவும், தியாகிகளாகவுந்தான் இருக்க முடியும் என்பதை நமக்கு நிதரிசனமாக எடுத்துக் காட்டுகிறது இவருடைய வாழ்க்கை. காலஞ்சென்ற வ.வெ.சு. ஐயர், பாரதியார் முதலிய பழைய கோஷ்டியைச் சேர்ந்தவர் இவர். ஆங்கிலம், தென்மொழி, வடமொழி வங்காளி முதலிய பல பாஷா விற்பன்னர். கவி தாகூரின் சிறுகதைகளை இவர் மூலம் தமிழர்கள் படித்து இன்புறுகிறார்கள்.''

பாடல்களின் எண்ணிக்கை 33 :

அமெரிக்க தேசிய கீதம், சீன தேசிய கீதம், பிரிட்டன் தேசிய கீதம், ஜப்பானிய தேசிய கீதம், முகம்மது இக்பாலின் பாடல்கள், வந்தே மாதரம், கீதை, கவியரசி சரோஜினி தேவியின் பாடல்கள் இவை யாவற்றையும் வெளியிட்டுள்ளார் சாமிநாத சர்மா மற்றும் பல பாடல்களும் இடம் பெற்றுள்ளன.

பொருளாதாரம் தொடர்பான கட்டுரைகள் 18 :

பணம் என்றால் என்ன? வரிப்பணம் எப்படி செலவழிகிறது? நாணயமாற்று விகிதம், பண்டிகைகள் பொருளாதாரம், சராசரி வருமானமும் சம்பள விகிதமும், இந்தியாவின் ஏற்றுமதி-இறக்குமதி வியாபாரம், கடன் ஒரு சனியன் முதலானவை பொருளாதாரக் கட்டுரைகளில் சில :

விஞ்ஞானம் (அறிவுத் . துறை) பற்றிய கட்டுரைகளின் எண்ணிக்கை 14 :

வாயு மண்டலம், வாயு மண்டலத்தின் உயரமென்ன? பூலோகத்தின் வயதென்ன? புகைகூடு மேலே போவதென்ன? சிறிய கல் மூழ்குவதேன்? பெரிய கப்பல் மிதப்பதேன்? ஆகாய விமானம் உயரப் பறப்பதேன்? ஒளி மின்சாரக் கருவியின் சேவைகள் யாவை? முதலானவை கருத்து விளக்கப் படங்களுடன் வெளியிடப்பட்டுள்ள வற்றில் முக்கியமானவை.

ஞானக் களஞ்சியம் என்னும் பகுதி உலகச் சிந்தனையாளர் களுடைய அரிய சிந்தனைக் கருவூலமாகத் திகழ்கின்றது. 52 புனைப் பெயர்களில் சாமிநாத சர்மா எழுதினார் என்பதை மிக விளக்கமாக அறியப் பயன்படுவது 'ஜோதி'யேயாகும். இவற்றுள் சிலவற்றை இங்கு குறிப்பிடலாம். வி.எம். நாகேஸ்வர சாஸ்திரி, வருணன், தேவதேவன், சரித்திரக்காரன், மௌத்கல்யன், வ. பார்த்தசாரதி, வெங்கைக்கிழான், ஓர் அரசியல் மாணாக்கன், ஓர் உபாசகன், ஸ்ரீவத்சன், துரோணன், ச. முனிசாமிபிள்ளை, பரணன், வியாசன், வறுமைப் புலவன், குடியேறியவன், தேவாச்சாரியார், கணக்காயன், ஒரு காங்கிரஸ்வாதி, சாமி, கு. ராஜாராம், வழிப்போக்கன், வெ.சா., புதுமாப்பிள்ளை, சரசா, ஓர் ஆசிரமவாசி.

'ஜோதி', இறந்த காலத்தோடு நிகழ்காலத்தையும் பிணைக்கும் சங்கிலி; நிகழ்காலத்திலிருந்து வருங்காலத்திற்கு நம்மை அழைத்துச் செல்லும் ஏணி'' என்று முதல் இதழில் தலையங்கத்தில் கூறப்பெற்று இலக்கணத்திற்கேற்ற இலக்கியமாக 'ஜோதி'யைச் சாமிநாத சர்மா வெளியிட்டு வந்தார். முற்கால இலக்கிய உணர்வுடையார், தற்கால இலக்கிய வளர்ச்சிக்கும் பாடுபட முடியும் என்பதை சாமிநாத சர்மா தனியொருவராக நின்று மாபெரும் சாதனை புரிந்துள்ளார்.

'ஜோதி'யில் அரசியல் சார்பு காங்கிரஸ் இயக்கமே ஆகும். காங்கிரஸ் மகாசபைக்குத் தலைமையேற்றவர்களின் வாழ்க்கை வரலாற்றை தொடர்ந்து வெளியிட்டு வந்தது. காங்கிரஸ் மாநாடுகள் தீர்மானங்களையும் அதன் பல்வேறு பணிகள், நடவடிக்கைகளையும் தொகுத்துத் தந்தது, 'ஜோதி'. ஆனாலும் முற்போக்கு இயக்கச்

சிந்தனைகளை இணைத்துச் செல்வதில் கண்ணுங் கருத்துமாய் இருந்திருக்கிறார், ஆசிரியர். ''ஏதோ ஒரு கட்சியை, அல்லது ஒரு தலைவரை தூபதீபங்காட்டி ஆராதித்து, இதன் மூலமாக நம்முடைய செல்வாக்கை வளர்த்துக் கொள்ள வேண்டுமென்ற விருப்பம், நமக்கு இல்லை'' என்று 'ஜோதி'யின் மூன்றாவது ஆண்டுத் தொடக்கத்தைப் பற்றி எழுதும் பொழுது சாமிநாத சர்மா குறிப்பிட்டார். 'கலை, மக்களுக்காகவே' என்னும் சீரிய நோக்கில் சாமிநாத சர்மா ஊன்றி நின்றார். அரசியலும் இலக்கியமும் ஒன்றுக்கொன்று ஆதாரமாய் விளங்க வேண்டுமென்னும் நோக்குடன் சாமிநாத சர்மா 'ஜோதி'யின் உள்ளடக்கத்தில் கருத்து செலுத்தியுள்ளார்.

நூல் மதிப்புரைகள் :

'துலாக்கோல்' என்னும் தலைப்பில் நூல் மதிப்புரைகள் 'ஜோதி'யில் மாதந்தோறும் தவறாமல் இருபக்கங்களுக்கு குறைவில்லாமல் வெளிவந்தன. தமிழகத்தின் தலைசிறந்த பதிப்பகங்கள் வெளியிட்ட நூல்கள் 'ஜோதி'யில் விமர்சிக்கப்பட்டன.

'புதுமைப்பித்தன் கதைகள்' (நவயுகப் பிரசுராலயம்) பற்றிய பின்வரும் விமர்சனம் வியப்பைத் தருகின்றது.

''புதுமைப் பித்தனின் கற்பனைகள் உயர்ந்த ரகத்தில் இல்லை. இதனால்தான் இவருடைய கதைகளுக்கு அமையும் பாத்திரங்களும், இவர்களுக்கேற்பட்ட சூழல்களும் உண்மையான ரஸாநுபவத்திற்கு முரணாயிருக்கின்றன. 'கவந்தனும் காமனும்', 'பொன்னகரம்' முதலிய கதைகள் நம்மால் சகிக்கவே முடியவில்லை. நவீன தமிழ் இலக்கியத்திற்கு, இந்த சிறுகதைத் தொகுதி சோபையைக் கொடுக்கும் என்று யாராவது கருதுவார்களானால், அவர்களைக் குறித்தும் தமிழ் இலக்கியத்தைக் குறித்தும் நாம் அநுதாபப்படுகிறோம்.'' ('ஜோதி' மே, 1940, பக் -84)

இந்த விமர்சனத்தை எழுதியவர் பெயர் குறிப்பிடப்பட வில்லை. புதுமைப்பித்தன் 'ஜோதி'யில் எழுதத் தொடங்கியபொழுது அவரைப் பற்றிய பின்வரும் குறிப்பு அவருடைய 'நியாயந்தான்' என்னும் சிறுகதையின் தொடக்கத்திற்கு முன்பு பின்வருமாறு தரப் பட்டுள்ளது.

''சிறுகதைகள் படித்து மன உற்சாகம் பெறுகிற தமிழன்பர் களுக்கு 'புதுமைப்பித்தன்' புதியவரல்லர். இவருடைய சிறுகதைகள் ஆழமானவை; கருத்து நிரம்பியவை. இவரை 'ஜோதி' வாசகர்கள் அடிக்கடி சந்திப்பார்கள் என்பதைச் சந்தோஷத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.''

'ஜோதி'யின் 1939 ஏப்ரல் வரையில் புதுமைப்பித்தனின் ஆறு சிறு கதைகள் வெளிவந்தன. பூச்சாண்டியின் மகள் (லூயி கெனப்பிரசின் மொழி பெயர்ப்பு). அபிநவ ஸ்நாப், நியாயந்தான், உபதேசம், புரட்சி மனப்பான்மை, விபரீத ஆசை, ஆகியன அந்த ஆறு சிறு கதைகள்.

'ஜோதி' வளர்த்த கடித இலக்கியம் :

கடித இலக்கியம் என்னும் துறையை வளர்ப்பதிலும் 'ஜோதி' யின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. சிறுகதை சொல்லும் உத்தியில் கடிதத்தைப் பயன்படுத்தியுள்ளார், சாமிநாத சர்மா. 'கனகாவின் கடிதங்கள்' என்னும் தலைப்பில் 7 சிறுகதைகளை 'ஜோதி'யின் 'சரசா' என்னும் புனைப் பெயரில் அவரே எழுதியுள்ளார்.

'காந்தி-போஸ் நிருபங்கள்' என்னும் தலைப்பில் ஜூன் 1939-ஆம் இதழில் 52 பக்கங்களில் வெளியிட்டார். இதை வெளியிட்டதோடு பின்வரும் குறிப்பையும் வழங்கியுள்ளார்

''1939-ஆம் வருஷம் மார்ச் மாதம் இரண்டாவது வாரத்தில் திரிபுரியில் காங்கிரஸ் நடைபெறுவதற்கு முன்னரும், பின்னரும் இந்திய தேசிய வாழ்க்கையில் பெரிய கொந்தளிப்பு ஏற்பட்டிருக் கிறது. இந்தக் கொந்தளிப்பின் மூலகாரணங்களையும் இதன் பரிணாமங்களையும் ஒருவாறு தெரிந்து கொள்வதற்கு காந்தி-போஸ் நிருபங்கள் பெரிதும் துணை செய்கின்றன. மற்றும் காங்கிரஸ் இதிகாசத்தில் இந்த நிருபங்கள் ஒரு மைல்கல் போன்றவை. எனவே, இவற்றின் முழு விவரங்களையும் இங்கு தருகிறோம்.

'தமையனின் கடிதம்' என்னும் தலைப்பில் கவிதை நடையில் அமைந்த கடிதங்களும், 'தேவிதாஸன்' என்பவரால் இயற்றப்பட்டு வந்துள்ளன. 'தமையனின் கடிதம்' - தொடர்ந்து வெளிவந்துள்ளது.

சாமிநாத சர்மாவே, 'வ. பார்த்தசாரதி' என்னும் பெயரில் 'மகனே!' என விளித்து பல பொருள்களில் எழுதிய கடிதங்களும் 'ஜோதி'யில் வெளிவந்துள்ளன.

'ஔரங்கசீப்பின் கடிதங்கள்', 'லியோடால்ஸ்டாயின் நிருபம்' முதலானவைகளும் வெளியிடப்பெற்றுள்ளன.

நீண்ட தலையங்கம் :

'ஜோதி'யின் தனிச் சிறப்புகளில் அதன் நீண்ட தலையங்கப் பகுதி குறிப்பிடத்தக்கது. சான்றாக, செப்டம்பர் 1940-இல் 'நமது நியாய சபை' என்னும் தலையங்கப் பகுதியில் வெளிவந்த 'தலைமையும் தகுதியும்' 18 பக்கங்களில் வெளிவந்துள்ளது.

பிரபஞ்சஜோதி பிரசுராலய உரிமையாளரும், சாமிநாத சர்மாவின் இலக்கியத் தோழர்களில் ஒருவருமான அரு. சொக்கலிங்க செட்டியார், 'ஜோதி'யில் நீண்ட தலையங்கத்தின் தனித்தன்மையை பின்வருமாறு சுட்டிக் காட்டியுள்ளார்.

''பொதுவாக ஒரு மாதப் பத்திரிகையின் தலையங்கங்கள் இவ்வளவு நீண்டதாக வெளிவருவது அனேகமாக வழக்கமில்லை. இது 'ஜோதி'யின் தனித்துவத்தைக் காட்டுவதோடு ஆசிரியரின் அலைபோல் எழும் எண்ண எழுச்சிகளும், பேனா ஓட்டமும்தான் நீண்ட தலையங்கங்களை எழுத இடங்கொடுத்தன.''

தலையங்க நடைக்கு ஒரு சான்று :

தலையங்கங்களை இலக்கிய நோக்குடன், உணர்ச்சி வேகத்தோடு எழுதுவதில் சாமிநாத சர்மா வல்லவர் என்பதற்கு பின்வரும் தலையங்கப் பகுதியொன்றே சான்றாகும்.

''நாம் எண்ணுகிற எண்ணம், செய்கிற வேலை ஒவ்வொன்றும் தன்மதிப்புடையதாயிருக்க வேண்டும். இந்தத் தன்மதிப்புணர்ச்சியை நமது ஜனங்களிடத்தில் தூண்டுவதே ஜோதியின் தொண்டு. வெறித்த பார்வை, தளர்நடை, தன்னம்பிக்கையில்லாப் பேச்சு, பல்லை இளித்தோ, தலையைச் சொறிந்தோ, வயிற்றைக் காட்டியோ எப்படியாவது காரியத்தைச் சாதித்துக் கொள்ள வேண்டுமென்ற மனப்பான்மை, உலகம் எந்தப் போக்கிலே போனாலென்னவென்று ஒதுங்கி வாழும் சுபாவம் முதலியனவெல்லாம் நமக்கு பிடிப்பதேயில்லை. சுழன்றடிக்கும் சூறாவளியிலே, கொந்தளிக்கும் கடலிலே, மின்னுகின்ற மேகத்திலே நாம் வாழ்க்கை இன்பத்தை அடைய விரும்புகிறோம். அப்பொழுதுதான் அந்த இன்பத்திற்குப் பெருமை; நாமும் அதனை அநுபவிக்கத் தகுதியுடையவர்களாகிறோம். சந்தோஷம் என்பது எங்கேயிருக்கிறது? போராட்டத்திலே என்றான் மார்க்ஸ். வாழ்க்கையே ஒரு போராட்டந்தானே, போராட்டமில்லாத வாழ்க்கை வாழ்க்கையே ஆகாது. அதனால்தான் நாம், தூர்ந்து கிடக்கிற ஒரு துறைமுகத்திலே கட்டிப்போட்ட கட்டுமரத்தின் துடுப்பாக இருப்பதைக் காட்டிலும், புதிய நாடுகளைக் கண்டுபிடிக்க வேண்டுமென்ற ஆவலினால் ஆழந் தெரியாத சமுத்திரத்தில் திசை தெரியாமல பனிமலையையும், புயல்காற்றையும் எதிர்த்துச் செல்லும் ஒரு கப்பலில் கொடிமரமாக இருக்க விரும்புகிறோம். அமைதியைக்காண வேண்டுமென்பதற்காக இருளடைந்த குகையை நாடி ஓடமாட்டோம். திறந்த மைதானத்தில் காய்கிற வெயிலில், பொழிகிற மழையில், ஜனசமூகத்தின் மத்தியில் அமைதியைக் காண விழைகிறோம்.''

'ஜோதி'யின் நான்காவது ஆண்டுத் தொடக்கத்தைக் குறித்து எழுதப்பெற்ற தலையங்கத்தின் ஒரு பகுதிதான், மேலே எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

தமிழ் இலக்கியச் சொற்றொடர்களைத் தலையங்கத்திற்குத் தலைப்பாக அமைப்பதிலும் சாமிநாத சர்மா ஆர்வம் காட்டினார். டிசம்பர் 1939-இல் எழுதப்பெற்றத் தலையங்கத்திற்கு ''கபாடம் திறமினோ'' என்னும் கலிங்கத்துப் பரணி இலக்கியச் சொற் றொடரைத் தலைப்பாக இட்டார்.

'ஜோதி' வழியே உருவான நூல்கள் :

இலக்கியம் உருவாகுவதற்கு ஒரு களமாகவும், தூண்டு தலாகவும் இதழியல் துறை பயன்படுவதை 'ஜோதி'யும் எடுத்துக் காட்டுகின்றது. 1940-இல் 'ஜோதி'யில் தமிழறிஞர் மார்க்கபந்து சர்மா அவர்களின் சிலப்பதிகாரக் கட்டுரைகள் தொடர்ந்து வெளி வந்தன. இந்தக் கட்டுரைகளே பிற்காலத்தில் வெளிவந்த மார்க்கபந்து சர்மாவின் 'சிலப்பதிகார ரசனை' என்னும் சிறந்த திறனாய்வு நூலிற்கு மூலாதாரமாகியது

'ஜோதி'யில் வெளிவந்த சில தலையங்கங்கள் நூல்களாக வெளிவந்துள்ளன.

'தேசபக்தி', 'பாஷை', 'தமிழ்நாடு' என்னும் தலையங்கங்கள் 'நாடும் மொழியும்' என்னும் நூலாக வேறு இரண்டு கட்டுரைகள் சேர்க்கப்பெற்று (1956) வெளிவந்துள்ளது.

1941-ஆம் ஆண்டு கடைசியிலும், 1942-ஆம் ஆண்டுத் தொடக்கத்திலும் தொடர்ந்து வெளிவந்த மூன்று தலையங்கங்களை (கலையும் இலக்கியமும், வாழ்க்கையும் அரசியலும், இன்றைய மனிதன்) கொண்ட நூல்தான் ''நமது பிற்போக்கு'' (1943) என்னும் நூலாகும்.

1956-இல் வெளிவந்த 'மகனே உனக்கு' என்னும் நூல் 1936 முதல் 1941 வரையில் சாமிநாத சர்மா, 'வ. பார்த்தசாரதி' என்னும் புனைப்பெயரில் இளைஞர்களுக்கு அறிவுரை வழங்குகின்ற முறையில் எழுதிய கடிதங்களின் தொகுப்பாகும்.

1956-இல் வெளிவந்த மற்றொரு நூலான ''சுதந்திரமும்-சீர்திருத்தமும்'' என்னும் நூலும் ''ஜோதி''யில் வெளிவந்த சில தலையங்கங்கள், கட்டுரைகளின் தொகுப்பாகும்.

''சுதந்திரத்தின் தேவைகள் யாவை'' என்னும் சீனக் குடியரசின் தந்தை ஸன்யாட்ஸென்னின் தமிழாக்கம் 'ஜோதி'யில் 1930-இல்

வெளிவந்தது. 1940-இல் சாமிநாத சர்மாவின் இந்த நூல் வெளி வந்தது.

'ஜோதி'யின் இறுதி இதழ் :

இரண்டாவது உலக மகாயுத்தத்தின் காரணமாக பர்மாவின் தலைநகர் ரங்கூன், ஜப்பானிய விமானங்களால் தாக்கப்பட்டது. இந்த குண்டு வீச்சுக்களின் பயங்கரச் சூழலிலும், 'ஜோதி' இதழிற்கு எழுது வதிலும், இதழை வெளிக் கொண்டு வருவதிலும் கர்மயோகியாகத் திகழ்ந்தார், சாமிநாத சர்மா ''எந்தவிதமான நெருக்கடி ஏற்பட்டாலும் நான் ரங்கூனிலேயோ, சுற்றுவட்டாரத்திலேயோ இருந்து கொண்டு, 'ஜோதி' பத்திரிகையைக் குறைந்த பல தினங்களாவது தொடர்ந்து வெளியிட்டு வரவேண்டுமென்று எண்ணிக் கொண்டிருந்தேன்'' என்று சாமிநாத சர்மா எழுதியிருக்கிறார்.

1942-ஆம் ஆண்டில் பிப்ரவரிமாத இதழை குறைந்த பக்கங் களுடன் அந்த மாதம் 19-ஆம் தேதியன்றே தயாரித்துவிட்டார். மறுநாள் 20-ஆம் தேதியன்று தபாலில் அனுப்பவேண்டியவர் களுக்கும் அனுப்ப ஏற்பாடு செய்ய முயன்றும், முடியவில்லை. காரணம், பயங்கர குண்டுவீச்சில் தபால் நிலையங்களும் செயலற்றுப் போயின. பல ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்று வந்த இரண்டு பிரபல ஆங்கில நாளேடுகளும் அன்றோடு நின்று விட்டன. 21-ந் தேதியன்று 'ஜோதி' அலுவலகம் சென்றார், சாமிநாத சர்மா. முக்கிய ஊழியர்கள் யாரும் வரவில்லை. அடுத்த நாளே ரங்கூனை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயச் சூழல் ஏற்பட்டது.

இதனால், 'ஜோதி' இதழ் நிற்க வேண்டியதாயிற்று. 1942-பிப்ரவரி மாத இதழ்தான், வரலாறு படைத்த 'ஜோதி'யின் கடைசி இதழாகும்.

'ஜோதி' இதழை நடத்துவதில் எவ்வளவோ அல்லல்களை ஏற்றார் சாமிநாத சர்மா. கடைசிக்காலத்தைப் பற்றி சாமிநாத சர்மா கூறியதாவது; 'அப்பொழுது அச்சகத்தில் பணமுடை அதிகம். ஆம், மிக அதிகம். அது என் சொந்த வாழ்க்கையை எவ்வளவு தூரம் பாதித்தது என்பதைப் பற்றி இங்கு சொல்வது என் புராணத்தைப் படிப்பதாகும். அது இங்குத் தேவையில்லை.''

''இலக்கியம், அரசியல், பொருளாதாரம், விஞ்ஞானம், இப் படிப்பட்ட விஷயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து வந்த இந்தப் பத்திரிகை, எத்தனையோ, கஷ்டங்களுக்கிடையில் நடந்து வந்தது'' என பிறிதொரு இடத்திலும் சாமிநாத சர்மா குறிப்பிட்டுள்ளார்.

சென்னையில் :

12.5.1942-இல் சென்னை வந்து சேர்ந்த பிறகு இதழியல் துறையில் அவர் ஆற்றல் முழுவதும் வெளிப்படுவதற்குரிய வகையில் அவர் பணி தொடர வாய்ப்பேற்படவில்லை.

1945 ஆகஸ்ட் முதல் 1946 வரையில் 'குமரி மலர்' என்னும் மாத இதழில் ஆசிரியராக இருந்தார். சாமிநாத சர்மாவின் மிகச் சிறந்த நண்பர்களில் ஒருவரான அமரர் ஏ.கே. செட்டியார் நடத்தி வந்த இதழ் 'குமரி மலர்'

இதற்குப் பிறகு, 1953-இல் சென்னை தமிழ் எழுத்தாளர் சங்க இதழான 'பாரதி'யில் ஓராண்டு காலம் ஆசிரியராக இருந்தார். இங்கும் சாமிநாத சர்மாவின் இதழியல் நோக்கத்திற்கேற்ற வாய்ப் பில்லை.

சென்னையில் 10.9.1960-இல் வெளிவந்த 'நவமணி' என்னும் அரசியல் நாளேட்டில் ஆசிரியர் பொறுப்பை ஏற்க சாமிநாத சர்மா கேட்டுக் கொள்ளப்பட்டார். ஆனால் அவர் மறுத்துவிட்டார்.''

இதழியல் துறையில் தன்னுடைய பணியை இத்துடன் முடித்துக் கொண்டார். அவர் நடத்திய 'ஜோதி' இதழின் தரம் பற்றி பல ஆண்டுகளுக்குப் பிறகும் பலர் பாராட்டி வருவதே அவருடைய இதழியல் பணியின் தனிச் சிறப்பம்சமாகும். 1971-இல் அளித்த ஒரு பேட்டியில் 'ஜோதி' இதழைப் பற்றி பின்வருமாறு கூறி மனநிறைவு கொண்டார்.

''நான் சொந்தமாக எந்தப் பத்திரிகையும் நடத்தவில்லை. ரங்கூனில் சுமார் ஐந்துவருஷ காலம் நடந்து வந்த 'ஜோதி' என்ற மாதப் பத்திரிகையின் பூரணப் பொறுப்பும் என்னுடையதாக இருந்தது. அதாவது, அதன் ஆசிரியராகவும் வெளியிடுவோராகவும் இருந்தேன். அதனால் தான் பெற்ற அனுபவம் மனக்கவலை, பணக் கஷ்டம். ஆனால் அதற்கு நல்ல பெயர் இருந்தது. அது எனக்கு ஆறுதலளித்து வந்தது. சுமார் 30 ஆண்டுகளுக்கு முன் நடைபெற்ற அந்தப் பத்திரிகையின் தரத்தைச் சிலாகித்து இப்பொழுதும் அனேகர் பேசுகிறார்கள் அதைக் கேட்டு என் மனம் குளிர்ச்சியடைகிறது.''

அவர் மனம் மட்டுமன்று, இதழியல் துறை வளர்ச்சிக்கு பாடுபடும் உள்ளங்கள் அனைத்துமே குளிர்ச்சியடைகின்றன

முடிவுரை :

'தேசபக்தன்' என்னும் நாளிதழ், 'நவசக்தி' என்னும் வார இதழ் 'ஜோதி' என்னும் மாத இதழ் ஆகியவற்றில் சாமிநாத சர்மா

பணிபுரிந்த நாள், வார, மாத இதழியல் துறைகளில் தன்னுடைய சுவடுகளைப் பதித்துள்ளார். ஓர் இதழாசிரியருக்கு இத்தகைய வித்தியாசமான அனுபவங்கள் வாய்ப்பது அரிது. இஃது சாமிநாத சர்மாவிற்கு வாய்த்தது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு பத்திரிகைத் தமிழின் தரத்தையும், உணர்த்தும் திறனையும், பயன் பாட்டுப் பாங்கினையும் சாமிநாத சர்மா உயர்வெய்தச் செய்தார். துணையாசிரியர் என்னும் பொறுப்பிற்கு மேலாகவும் பணியாற்றி யவர் சாமிநாத சர்மா. ''திரு.வி.க. வின் 'நவசக்தி'யில் அவர் பணி யாற்றிக் கொண்டிருந்தார். அவரே அதை நடத்திக் கொண்டிருந்தார் என்று கூடச் சொல்லலாம்'' என இதழியலில் பழுத்த அனுபவம் பெற்ற அமரர் சாண்டில்யன் கூறியதும் நினைவிற் கொள்ளத்தக்கது. இதழியல் துறையாளர்களுக்கு வழிகாட்டிகளில் ஒருவராகவும் திகழ் கின்றார். வணிக இதழ்களின் பெருக்கமும் கவர்ச்சியும், ஆதிக்கம் செலுத்தும் இக்காலச் சூழலில் சமுதாயப் பொறுப்புணர்வுடன் தொண்டாற்றிய இதழாசிரியர்கள் வாழ்வையும் பணியையும் நினைவு கூர்வது தமிழ் இதழியல் வளர்ச்சிக்கு ஓர் உந்து சக்தியாக அமையும்.

4. படைப்பிலக்கியத் துறை

சாமிநாத சர்மா இளம்வயதில் அமைத்த சென்னை செந்தமிழ்ச் சங்கத்தின் நோக்கங்களில் படைப்பிலக்கிய ஆக்கமும் ஒன்றாகும். 1914-இல் வெளிவந்த சாமிநாத சர்மாவின் ''கௌரீ மணி'' என்னும் நூலின் முன்னுரையில் செந்தமிழ்ச் சங்கத்தின் நோக்கங்கள் பின் வருமாறு குறப்பிடப்பட்டுள்ளன.

''சென்னைச் செந்தமிழ்ச் சங்கத்தின் அங்கத்தினரால் எழுதப் படும் நூல்களை மூன்று பிரிவாகப் பிரித்து, நாடகங்களையெல்லாம் இந்துவதனம் என்றும் மற்றைய நூல்களை ஞானவ்ருக்ஷம் என்றும் அழைக்க, மேற்படி சங்கத்தார் ஏற்பாடு செய்தனர்.''

''கௌரீமணி''

'கௌரீமணி', 'ஞானவ்ருக்ஷம்' சாகை ஒன்றாக' எழுதப்பட்ட தென்று சாமிநாத சர்மா குறிப்பிட்டிருந்தாலும், ''ஓர் இனிய தமிழ்க் கதை'' என்று அவராலேயே வகைப்படுத்தப்பட்டுள்ளது. ஒரு குறு நாவல் என்று கூறத்தக்க வகையிலே அமைந்துள்ள இந்த நூல் நாற்பத் தெட்டு பக்கங்களைக் கொண்டது. அவருடைய பத்தொன்பதாம் வயதில் எழுதப்பட்டது.

கதையின் கரு, திருவிளையாடல் புராணத்திற்குரியது. விருபாக்ஷர், சுபவிரதை என்னும் பெற்றோர்களுக்கு, சிவபெருமான் அருளால் கௌரீ என்னும் பெண் குழந்தை பிறந்து, சேஷாத்திரி என்னும் வைணவரைத் திருமணம் புரிந்து, திருமங்கை என்னும் மாமியார் கொடுமைகளுக்கு ஆளாகி, இறுதியில் சிவபெருமானால் ஆட்கொள்ளப்படுவதைக் கூறுவது, 'கௌரீமணி' என்னும் கதை.

புராணக் கதையேயானாலும், இருபதாம் நூற்றாண்டிற்குத் தேவைப்படும் புதுமையையும் புகுத்தியுள்ளார் என்று ஆங்கில மொழி அறிமுகவுரையில் கே. சீனிவாசராமஜீவி என்பவர் சுட்டிக் காட்டியுள்ளார். பெண் கல்வியின் அவசியத்தை வலியுறுத்தும் வகை யிலும் கதையை அமைத்துள்ளது புதுமையாகும்.

பெண் கல்வியை வலியுறுத்தும் வேகத்தில் கதாசிரியரே நேரடியாக வாசகர்களை விளித்து பின்வருமாறு பேசி விடுகின்றார்.

''வாசகர்களே' நல்ல காரியம் ஒன்று செய்தால் அதற்கு நாலாயிரம் விக்னங்கள் வரும் என்பதைப் போன்று, அரிய பெரிய நூல்களை வாசித்து அதிலிருக்கப்பட்ட சாராம்சங்களை எடுத்துச் சொன்னால் அது என்ன குற்றம்? நூல்களை வாசித்து அதிலிருக்கும் ஸாரத்தை அனுபவிக்கப் புருஷர்களுக்குத்தான் அதிகாரமுண்டா? பெண்களுக்கு அதிகாரமில்லையா? நாகரீகம் நன்றாய்ப் பரவிய இக் காலத்தில் கூட இன்னும் பெண்கள் படிக்கக் கூடாதென்று வாதாடு கின்ற கனவான்கள் இருக்கிறார்களென்றால் பூர்வ காலத்தில் சொல்ல வும் வேண்டுமா? பெண்கள் படிக்கக் கூடாதென்று வாதாடும் பெரிய மனிதர்களது முக்கிய கொள்கை என்னவென்றால், ''பெண்கள் படித்தால் வ்யபசாரத்வம் செய்கிறார்கள்'' என்ற ஓர் மூடக் கொள்கை யைக் கொண்டிருக்கிறனர்.'' நன்றாகப் படித்தறிந்த ஒரு வித்வான்தான் திருடுவான் போலும்....... ஆதலினால் ஸ்தீரிகள் அவசியம் படிக்க வேண்டும், என்பதை நாம் நன்றாய் வற்புறுத்துகின்றோம்.''

கௌரீயின் மாமியார் திருமங்கை, கொடுமையாக நடந்து கொள்வதற்கும் கல்வியறிவு இல்லாமையே என்னும் கருத்தை முன்புபோல் இடைமறித்து பின்வருமாறு கூறியுள்ளார்.

''சகோதர, சகோதரிகளே! இவ்வண்ணம் திருமங்கை தன் பர்த்தாவையும் குமாரனையும் கொடுமையாக நடத்துவதற்குக் காரணம் என்னவென்று யோசிக்கிறீர்கள், படிப்பில்லாமையே ''

''சாமிநாத சர்மாவின் இந்தக் கல்வி முயற்சியை அவரது தந்தையார் வெங்களத்தூர் கிராமத்து (சாமிநாத சர்மா பிறந்த கிராமம்) இளைஞர்களைக் கொண்டு நாடகமாக்கி நடிக்கச் செய்தார். நாடக நடிகர்கள் சாமிநாத சர்மாவின் தந்தையாரைப் பாராட்டி தங்க நகை ஒன்றை அன்பளிப்பாகத் தந்து கௌரவித்தனர்.

''தலை தீபாவளி'' :

சிறுகதைகள் படைப்பதிலும் சாமிநாத சர்மாவிற்கு ஆர்வம் இருந்துள்ளது. பல புனைப் பெயர்களில் எழுதிய ஒன்பது சிறுகதை களை தொகுத்து 1955-இல் பிரபஞ்ச ஜோதி பிரசுராலயம் வெளி யிட்டது. முதல் சிறுகதையான, 'தலைதீபாவளி' சிறுகதைகள் தொகுப்பு நூலின் பெயராயிற்று. பிற எட்டு சிறுகதைகள் பின்வருவன:

''மாரியாயி எங்கே'', ''பிழைக்கும் வழி'', ''வாழ்க்கைச் சக்கரம்'', ''நாகரிகக் கல்வி'', ''தடபுடல் கல்யாணம்'', ''கனவோ நினைவோ, ''கண்டதும் காதல்'', ''ஐயராமன் எங்கே''.

''தலைதீபாவளி''யில் கதர் இயக்கத்தின் தாக்கம் சித்தரிக்கப் பட்டுள்ளது. மாமனார் வீட்டிற்கு ''தலைதீபாவளி''க்கு செல்லும் மாப்பிள்ளை காங்கிரஸ் இயக்கத்திலும், அதன் வழி கதர் இயக்கத்திலும் மிக்க பற்று கொண்டவர். மாமனார், ஆங்கில அரசின் ஆதரவாளர். தலைதீபாவளிக்கு கதரைத் தவிர வேறு துணிகள் வாங்கித் தருவதாக மாப்பிள்ளைக்கு எழுதுகிறார். ''தேசம் பெரிதா, பென்ஷன் பெரிதா என்ற கேள்வி என் மாமனாருக்கு, தலைதீபாவளி பெரிதா, என் சுயமரியாதை பெரிதா என்ற கேள்வி எனக்கு'' என்று மாப்பிள்ளை கூறுவதாக அமைத்து, இளைஞர்களுக்கு தேசிய உணர்வின் தேவையை அந்தச் சிறுகதையில் எடுத்துரைத்துள்ளார்.

சமூகத்தில் செல்வம் படைத்தவர்கள், ஏழைகளுக்குச் செய்யும் கொடுமைகளை ''மாரியாயி எங்கே'' என்னும் சிறுகதையில் சித்தரித் துள்ளார். மாரியாயி என்ற ஏழைக்குடியானவன் மகளை இரண்டா வது திருமணம் செய்து கொள்ள சூழ்ச்சி செய்யும் செல்வந்தரின் கொடுமைகளைச் சித்தரிப்பது. இந்தச் சிறுகதை. 'பிழைக்கும் வழி'யில் பட்டதாரியொருவனின் வேலையில்லாத் திண்டாட்டத்தை எடுத்துரைத்து, இறுதியில் அவன் மரணத்தைத் தழுவுவதையும், அதற் கான சமூகக் காரணங்களையும், கல்வி முறையையும் விமர்சனம் செய்துள்ளார். குடும்ப வாழ்க்கை ஏற்படுத்தும் மனவேற்றுமைகளை விளக்கி, ஆணும்-பெண்ணும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு வாழும் நெறியினை விளக்க வந்த சிறுகதை, ''வாழ்க்கைச் சக்கரம்''. 'நாகரிகக் கல்வி' என்னும் சிறுகதையில் ஒரு ஜமீன்தார் மகன் சென்னை சென்று ஆங்கில நாகரிகம் என்பதின் போலி மயக்கத்தில் சீரழிந்து தமிழ்ப்பண்பாட்டை இழக்கும் ஒருவனின் வாழ்க்கை சித்தரிக்கப்பட்டுள்ளது.

''தடபுடல் கல்யாணம்'' என்னும் சிறுகதையில் வரும் கலெக்டரின் மனைவி அதிகாரச் செருக்கோடு, பணத் திமிர்பிடித்து ஏற்பாடு செய்யும் தடபுடல் கல்யாணத்தில் திருமாங்கல்யம் வாங்க மறந்து போய் அவமானப்படுவதை சாமிநாத சர்மா உணர்ச்சி பூர்வ மாக எழுதியுள்ளார் திருமணம் தொடர்பான மற்றொரு சிறு கதை, ''கனவோ? நினைவோ?'', திருமணமான அன்று கணவன் இறந்து போனதைக் கண்ட மணமகள், நிகழ்ந்த திருமணம் ''கனவோ? நனவோ?'' என்று புலம்புவதை இந்தக் கதை துன்பக்குரலில் பேசு கின்றது. ''கண்டதும் காதல்'' என்னும் கதையில் காதலர்கள் இருவர் சந்திப்பில் ஏற்படும் உணர்வுகளைச் சித்தரித்துள்ளார். மகளை இழந்து தவிக்கும் ஒரு தந்தையின் அவலக்குரலை 'ஜயராமன் எங்கே?' என்றும் கதையில் கேட்கின்றோம்.

இந்தக் கதைகள் அனைத்தும் ஆசிரியர் கூற்றுகளாகவே அமைக்கப்பட்டுள்ளன. சிறுகதைக்குரிய இலக்கணங்களை இந்தக் கதைகளில் தேடுவதைவிட நிகழ்ச்சிகளை உள்ளது உள்ளபடியே எடுத்துரைக்கும் ஆசிரியரின் பல வித உணர்ச்சி பேத நடைகளைத் தேடி அனுபவிக்கலாம்.

நாடக இலக்கியத் துறையில்

நாடக இலக்கியத் துறையில் சாமிநாத சர்மாவிற்கு இளமை யிலேயே ஊக்கம் மிகுந்திருந்தது. அவருடைய எழுத்துப் பணியின் தொடக்கம் 'ஹேமாங்கி' என்னும் ஆங்கில நாடகம் என்பதையும், அது கையெழுத்துப்படி என்ற நிலையிலேயே மறைந்துவிட்டது என்பதையும் முன்னமேயே கண்டோம்.

"லட்சுமிநாதன்"

அவருடைய முதல் தமிழ் நாடகம் "லட்சுமிநாதன்" என்பதாகும். இந்த நாடகத்தை அவர், சொந்த வெளியீடாகக் கொணர்ந்தார். சொந்த வாழ்க்கையில் நிகழ்ந்த அவலம் மண்டிய நிகழ்ச்சி அவரை உலுக்கிவிட்டது. இந்த உணர்ச்சிப் பெருக்கின் வடிகாலாகத் தோன்றியதுதான் 'லட்சுமிநாதன்'. அவருடைய அன்புத் தங்கை லட்சுமி 1915 ஏப்ரலில் காலமாகிவிட்டார். இந்த அவலம், மிக இளைஞரான சாமிநாத சர்மாவின் பொங்கி எழுந்த உணர்ச்சிக்கு கலை வடிவம் தந்தது.

'என் சகோதரி என்னிடத்தில் எவ்வளவு பாசம் வைத்திருந் தாள் என்பதைச் சொற்களால் சொல்லிக் கொட்டமுடியாது. சொல்லப் போனால் என் தாயாரின் பாசத்தைக் காட்டிலும் என் சகோதரியின் பாசம் மிஞ்சியதாயிருந்தது. அவள் கண்மூடி அரை நூற்றாண்டுக்கு மேலாகிவிட்டது. ஆனாலும் அவளைப் பற்றி இப்பொழுது நினைத் தாலும் (1971) என் அடிவயிற்றிலிருந்து இந்த துக்க அலை எழும்பி என் நெஞ்சத்தை தாக்குகிறது; என்னையறியாமல் என் கண்களி லிருந்து நீர் வருகிறது. ரத்தபாசம் எவ்வளவு வலுவுடையது! என் சகோதரி மறைந்த பிறகு அவள் நினைவாக 'லட்சுமி நாதன்' என்ற ஒரு நாடக நூலை எழுதி வெளியிட்டேன். என் சொந்த வெளி யீடுகளில் இந்த நாடகம் இரண்டாவது வெளியீடு. இவ்வாறு சாமிநாத சர்மா எழுதியுள்ளார்.

1915-இல் வெளிவந்த இந்தத் 'துன்பியல் நாடகம்' பற்றி சாமிநாத சர்மாவின் குறிப்பு மட்டும்தான் எஞ்சியுள்ளது. இந்தச் சிறு நாடக நூலின் ஒரு படி கூட கிடைக்கவில்லை; உள்ளடக்கம் பற்றியும் அறிய முடியவில்லை.

''லவகுசன்'' :

'விவேக போதினி' இதழில் 'லவகுசன்' நாடகம் தொடர்ந்து வெளிவந்தது. இது நூலாக வெளிவரவில்லை. இந்த நாடகம் பள்ளிக் கூடச் சிறுவர்களால் நடிக்கப்பெற்றதைப் பற்றியும் அதில் அவருடைய மனைவியின் பங்கேற்பைப் பற்றியும் சாமிநாத சர்மா குறிப் பிட்டுள்ளதாவது.

''1931-ஆம் ஆண்டில், அடையாறு பள்ளிக்கூடத்தில், நான் எழுதி, முழுதும் பெண்களே நடித்த 'லவகுசன்' என்ற நாடகத்தில் இசை ஆசிரியையாக இருந்ததோடு மட்டுமல்லாமல், நாடகத் துறையில் தனக்கேற்பட்டிருந்த அனுபவத்தையும் நன்கு பயன்படுத்தினாள்.''

''ஜீவபாலன்''

சாமிநாத சர்மாவின் நூல்வடிவம் பெறாத நாடகங்களுள் 'ஜீவபாலன்' என்னும் பிரசார நாடகமும் ஒன்றாகும். இதைப் பற்றி முன்பே குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நாடகத்தின் கையெழுத்துப்படி கூட கிடைக்கவில்லை இந்த நாடகம் நடிக்கப்பட்டது. இதைக் குறித்து சாமிநாத சர்மா எழுதியதாவது.

''திறந்த வெளி அரங்கு என்று இப்பொழுது பிரமாதமாகப் பேசுகிறார்களல்லவா? இப்படிப்பட்டதோர் அரங்கை 1924-ஆம் ஆண்டில், எனது மைத்துனரும், மாண்ட்டிஸோரி கல்வி முறையில் பெரிய நிபுணருமான ஸ்ரீ பா.க. கிருஷ்ணசாமி ஐயரும் நானும் சென்னை அடையாற்றில் அமைத்து, அதில் 'ஜீவபாலன்' என்ற ஒரு நாடகத்தை நடத்தினோம். வாயில்லாப் பிராணிகளைப் பலி கொடுப்ப தென்கிற பழக்கத்தை நிறுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன், பிரசாரத்திற்காகவென்றே இந்த நாடகம் என்னால் தயாரிக்கப்பட்டது. இதில் என் மைத்துனரும், நானும் முக்கிய நடிகர்களாகப் பங்கு கொண்டோம். இதில் என் மனைவி இசை ஆசிரியையாகப் பங்கு கொண்டாள்.''

இந்த நாடகத்தை ''தியோசாபிகல் சொஸைடி'' தலைவரான அன்னிபெசண்ட் அம்மையாரும், 'தியோசாபிகல் சொஸைடி'யின் பிரமுகரான ஜி.எஸ். அருண்டேல் அவர்களும் கண்டுகளித்தனர். இந்தப் பிரசார நாடகத்தை கிராமங்களில் நடத்த வேண்டும் என்றும் வற்புறுத்தினர்.''

1930-31-இல் சாமிநாத சர்மா அடையாறு தியோசாபிகல் சொஸைடியில் ஊழியம் புரிந்து கொண்டிருந்த காலத்தில் புத்தரைப் பற்றி ஒரு நாடகம் எழுதியதாகக் குறிப்பிட்டுள்ளார். இராமாயணம்,

சுந்தரகாண்டம் பகுதியை அசோகவனம் என்று தலைப்பிட்டு நாடகம் எழுதத் தொடங்கியதாகவும் கூறியுள்ளார்.

1932-இல் திடீரென்று பர்மாவிற்குச் சென்றதனால் முற்கூறிய முயற்சி தடைப்பட்டுவிட்டது.

"மனோதர்மம்" :

''இது ஸ்ரீமான் மாரிஸ் மெடர்லிங்க் என்னும் பேரறிஞர் எழுதிய நாடகத்தின் மொழிபெயர்ப்பு'' என்னும் குறிப்பை மட்டும் தந்துள்ளார். எந்த நாடகத்தின் மொழிபெயர்ப்பென்பது குறிப்பிடப் படவில்லை. மாரிஸ்மெடர்லிங்க் (1862) உலகப்புகழ் பெற்ற பெல்ஜியக் கவிஞர்; நாடகாசிரியர்; கட்டுரை இலக்கியகர்த்தா. இவருடைய இரு கவிதைத் தொகுப்புகள், 16 நாடகங்கள், 13 கட்டுரை இலக்கிய நூல்கள் வெளிவந்துள்ளன. 1911-இல் இலக்கியத்திற்கான 'நோபல்' பரிசு பெற்றவர்.

'மனோதர்மம்' மாரிஸ்மெடர்லிங்க்கின்' The death of Tintagiles' (1894) என்னும் நாடகத்தின் மொழி பெயர்ப்பாக இருக்கக்கூடும். ஆங்கிலத்தில் இருந்து 'வெ.சா' என்னும் பெயரில் தமிழாக்கம் செய்துள்ளார்.

நாடகப்பாத்திரங்களுக்கு உதியமான், சேரலாதன், பெருந்தேவன், மாரியம்மை, பிச்சன் என்று பெயரிட்டுள்ளதும் நோக்கத்தக்கது. நாடக நிகழ்விடம் ஒரு தோட்டமாகும். சாமிநாத சர்மாவின் 'ஜோதி' இதழ்கள் 1939 ஏப்ரல், மே மாதங்களில் 'மனோதர்மம்' வெளிவந்துள்ளது. மனோதத்துவ உணர்வுகளின் அற்புதமான வெளிப்பாடுகளும், பின்னல்களும் நாடகத்தின் படைப்பாற்றலுக்கு வெற்றி தந்துள்ளன.

ஒரு பெண்ணின் மரணச் செய்தி, அந்தப் பெண்ணின் குடும்பத்தாரிடம் பக்குவமாக எப்படி எடுத்துரைக்கப்படுகிறது என்பதுதான் நாடகத்தின் கரு. நுண்ணிய மனவுணர்வுகள் உரையாடல்களில் செறிந்து இனிது விளங்குகின்றன.

ஒரு வயோதிகர், அவருடைய நண்பர், வயோதிகரின் பேத்திகள், ஒரு குடியானவன் ஆகியோரே நாடகப் பாத்திரங்கள்.

''மனோதர்மம்'' என்னும் தலைப்பின் பொருட் செறிவை முழுமையாக நாடகம் வெளிப்படுத்துகின்றது. இந்த நாடகம் தனி நூலாக வெளிவந்தது; ஆனால் கிடைக்கவில்லை

"பீஷ்மன்"

'ஜோதி'யில் வெளிவந்த சாமிநாத சர்மாவின் மற்றொரு நாடகம் 'பீஷ்மன்' என்பதாகும். 1941 மார்ச், ஏப்ரல், மே மாத

'ஜோதி' இதழ்களில் இந்த நாடகம் தொடர்ச்சியாக வெளிவந்தது. ''அப்போது ஒரு ஹிந்தி நாடகத்தைப் படித்து வந்தேன். அதன் சாயல் இந்த நாடகத்தில் ஒருவாறு படிந்திருக்கும்'' என சாமிநாத சர்மா குறிப்பிட்டிருக்கிறார். பதினெட்டு நாடகப் பாத்திரங்களைக் கொண்டது பீஷ்மன், இதுவும் நூலாக வெளிவரவில்லை.

''உத்யோகம்'' :

சாமிநாத சர்மா அமைத்த சென்னை செந்தமிழ்ச் சங்கத்தின் நூல் வெளியிட்டுத் திட்டங்களில் இரண்டாவது நாடக நூலாக வெளி வந்தது, 'உத்யோகம்' என்னும் சிறிய நாடகநூல்.

'தென்னாட்டிற்குப் புதிய உணர்ச்சியை உண்டாக்கிய 'தேசபக்தன்' என்னும் சீரிய பத்திரிகையின் முதல் ஆண்டு அநுபந்தத் தில் இச் சிறிய நாடகம் முதன் முதலாக வெளியாயிற்று. அதனை இப்பொழுது எவ்வித மாற்றமும் செய்யாமல் அங்ஙனமே வெளி யிட்டிருக்கிறேன்.'' இவ்வாறு முன்னுரையில் மொழிந்துள்ளார், சாமிநாத சர்மா. இந்த நாடகத்தில் இரண்டு கருத்துகள் வலியுறுத்தப் படுகின்றன. ஒன்று, மேனாட்டு நாகரிகத்தால் விளையும் தீமை; மற்றொன்று நாட்டு நலனை மறந்து வயிற்றுப் பிழைப்பிற்காக 'உத்தியோகம்' பார்ப்பது.

தேசிய நோக்கில் முன்னர் நாடு திகழ்ந்த பெருமையை பாலாம்பாள் என்னும் பெண் பாத்திரம் நீண்டச் சொற்பொழிவில் விளக்குவதாக சாமிநாத சர்மா அமைத்துள்ளார். இதில் ஒரு பகுதி வருமாறு.

''கணவனுடைய உயிரைக் கொடுக்க வேண்டுமென்று கூற்றுவன் பின் இரந்து சென்ற காரிகையை பெற்றது இவ்விந்திய நாடு; அமர்க்களத்தில் சென்ற மகன் இறந்து பட்டானென்று கேள்வி யுண்டு புறத்திலோ, உரத்திலோ என் மகன் காயங்கொண்டான் என்றேங்கினலாய்க் களத்திடை சென்று மகன் உரத்தே புண்ணோடு விண்ணுலகடைந்தான் என்று கண்டு பெருமகிழ்ச்சி கொண்ட அன்னையைப் பெற்றது இப் பாரததேசம்; மனமுறிந்து சினங் கொண்டு, தன் மார்பினைக் கரத்தால் பிரித்தெறிந்து, ஒரு பெரும் புரத்தை எரித்த பத்தினிக் கடவுளைக் கொண்டதிந்நாடு.''

அபிமன்யு :

1934-இல் வெளிவந்தது ''அபிமன்யு'' ''இச்சிறு நாடகம் பாரதம் பதின்மூன்றாம் போர்க் கதையை ஒருவாறு தழுவி எழுதப்பெற்றது. பழமையில் புதுமை பொலிய வேண்டுமென்பது

எனது அவா. அதனை இச்சிறு நாடகத்தில் எவ்வளவு தூரம் புகுத்தியிருக்கிறேனென்பதைத் தமிழகத்தின் நன் மதிப்புக்கு விட்டு விடுகிறேன். நமது பண்டைய நூல்களில் பொதிந்து கிடக்கும் பல அரிய கதைகளுக்குப் புதிய ஆடை அணிவித்து, புத்துணர்ச்சி ஊட்டித் தமிழ் மக்களுக்குக் காட்சி தரவேண்டுமென்ற எளியோனது ஆசை நிறைவெய்துநாள் எந்நாளோ?''

பிரிட்டிஷ் ஏகாதிபத்ய எதிர்ப்புப் போரில் வீரவுணர்ச்சி மேவிட பண்டைய நூல்கள் பயன்படுத்தப் பெற்றன. இதே நெறியில் தோன்றியதுதான் 'அபிமன்யு'. இந்த உண்மையைப் பின்வரும் விளம்பர வாசகங்கள் உணர்த்துகின்றன.

''அபிமன்யு'' என்ற பேரைக் கேட்டமாத்திரத்தில் பாரதக் கதை எனத் தள்ளிவிடாதீர்கள்! சத்தியத்திற்காகப் போராடி, வீரமரண மெய்திய அபிமன்யுவின் வரலாறு உங்களை உணர்ச்சியுள்ள தியாகி களாக்கும், வீரமுள்ள மக்களாக்கும்.

மகாபாரதப் போரில் ''அரும் பணியாற்றுவான் வேண்டி'' இரு தமிழ் நாட்டு வீரர்கள் வந்ததாக ஒரு காட்சியில் அமைத்துள்ளார். இந்த இருவீரர்களிடம் 'தென்தேச'த்தைப் பற்றி இருவர் கேட்டறிய விரும்பியபொழுது, அந்த வீரர்கள் தமிழ்நாட்டின் பெருமையை பாரதியார் பாடல்கள் வாயிலாக விளக்கமளிப்பதாகவும் சாமிநாத சர்மா அமைத்துள்ளார்.

'செந்தமிழ் நாடெனும் போதினிலே!' என்று தொடங்கும் பாடலில் ''காவிரி தென்பெண்ணை பாலாறு'' எனத் தொடங்கி, ''செல்வம் எத்தனையுண்டு புவிமீதே அவை யாவும் படைத்த தமிழ்நாடு'' என்று முடியும் வரையில் உள்ள பாடல் வரிகளை எடுத்தாண்டுள்ளார், சாமிநாத சர்மா.

இவ்வாறே, ''மன்பதையில் இன்பத்திலே மன்னர் தம் மணி முடிகள் அணிபெறுவது எங்கள் நாடு, வாணிபத்தால் நானிலத்தை வாழ்விப்பது எங்கள் நாடு'' என்று கூறிவிட்டு அந்தத் தமிழ்நாட்டுப் போர்வீரர் ''ஆயுதம் செய்வோம், நல்ல காகிதம் செய்வோம்'' என்று தொடங்கி ''உலகத் தொழிலனைத்தும் உவந்து செய்வோம்'' என்று முடியும் பாரதியின் பாடல் வரிகளையும் இசைத்ததாக 'அபிமன்யு' வில் ஆண்டுள்ளார்.

''பாணபுரத்து வீரன்'' :

சிற்சில சிறு நாடக நூல்களை சாமிநாத சர்மா எழுதியிருந் தாலும், சிறந்த நாடக நூலாசிரியர் என்னும் புகழை அவருக்குப் பெற்றுத் தந்தது, ''பாணபுரத்து வீரன்'' என்னும் நாடகமேயாகும்.

'நவசக்தி'யில் 1921-ஆம் ஆண்டு ஜுன் மாதம் மூன்றாந்தேதி தொடங்கி நான்கு களங்கள் வரை முதலில் வெளிவந்து, மீண்டும் 1924-இல் தொடர்ந்து முற்றுப் பெற்றது பாணபுரத்து வீரன். சில மாறுதல்களுடன் நூலாக 1924- செப்டம்பரில் வெளிவந்தது. இதுவும் சென்னைச் செந்தமிழ்ச் சங்கத்தின் நூல் வெளியீட்டுத் திட்டத்தின் கீழ் வெளிவந்த ஆறாவது நூலாகும். 'நவசக்தி'யில் பாணபுரத்து வீரன் வெளிவந்துகொண்டிருந்த பொழுது அதைப் படித்துவந்த ஈ.வே. ராமசாமி நாயக்கர், 'பிரிட்டிஷ் ஆட்சியால் தடை செய்யப்படலாம்' என்று கூறினராம்.

'பாணபுரத்து வீரன்', ஒரு வழி நூலெனக் குறிப்பிட்டு சாமிநாத சர்மா எழுதியதாவது.

''சுமார் ஐந்தாண்டுகளுக்கு முன்னர் ஆங்கில மாதப் பத்திரிகை யொன்றை நான் படித்துக்கொண்டிருந்த காலத்து, ஸ்காத்லாந்து தேசத்திற்கு நல்வாழ்வளித்த ராபர்ட் ப்ரூஸ் என்பவரைப் பற்றி ஓர் அழகிய கட்டுரையைக் கண்டேன். இளமையில் இவனைப் பற்றிப் படித்திருந்தேனாயினும், இப்பத்திரிகையின் கண் பொலிந்த கட்டுரை என் மனதைக் கவர்ந்தது; கவர்ந்ததுமன்றி, தமிழில் அக்கதைப் போக்கைத் தழுவி மனத்தில் ஒரு நூல் எழுத வேண்டுமென்ற அவாவையும் எழுப்பியது; அதன் முடிவே இச்சிறிய நாடகம். நாடகாசிரியன், தோற்றத்திற்கும் நடிப்புக்கும் இயைந்தவாறு கதையை மாற்றிக் கொள்ளலாம் என்ற உரிமையை இந் நாடக விஷயத்தில் நன்கு அநுபவித்திருக்கிறேன். ஆதலின் இதனை வழி நூலாகக் கொள்க.''

இந்த அரிய நூலிற்கு ''இக்கால ஔவையார்'' எனத் தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்களால் பாராட்டப்பெற்ற பண்டிதை அசலாம்பிகை அம்மையார் திறனாய்வு வழிப்பட்ட முன்னுரையை எழுதியுள்ளார். விடுதலை இயக்கத்தில் தேசியப் பிரசாரம் செய்வதில் வல்லவராகவும், ''காந்தி புராணம்'' என்னும் மாகாப்பியத்தை படைத்தவராகவும் புகழ்கொண்ட பண்டிதை அசலாம்பிகை அம்மை யாரின் முன்னுரை, அக்காலத்தில் சாமிநாத சர்மாவிற்கு கிடைத்த ஒரு பெரும் பேறாகும். புலமைநயம் வாய்ந்த முன்னுரையில் ஒரு பகுதி வருமாறு.

''எந்நூலும் அதனையாக்கியோரின் இயற்கைக் குணத்தை நன்கு பிரதிபலிக்கச் செய்தல் வெளிப்படை. 'தாயைப் போலும் சேய், நூலைப் போலும் சேலை' என்னும் ஆன்ற அநுபவப் பழமொழிக் கேற்ப இந் நாடகமும் ஆசிரியரின் உண்மையான-ஊக்கமான-ஒளிக்க முடியாத தேசப்பற்றினை ஆரம்பத்திலேயே தெற்றெனப்

புலப்படுத்துகின்றது. சுயநலமாகிய கற்பனையும் பொய்ம்மையாகிய முட்களையும் புரட்டியுருட்டி அதிவேகமாக வீர்த்துக் கொண்டு செல்லும் சுதந்திரப் பேராறு பெருக்கெடுத்தோடி நாம் முன்னேறும் நல்வழியைத் தூய்மைப் படுத்திவரும் இந்நூலில், இத்தகைய தேசப்பற்றினை வளர்க்கவல்ல நூல்கள் இன்றியமையாதது என்பதை மறுப்பரெவர்?

''இதன் கண் புரேசன் மனைவி சுதர்மை, மகள் அனலை இருவர்களின் உணர்ச்சியை வெளியிட்டுள்ள செம்மொழிகள் பெண் மக்களின் ஒத்துழைப்பே தேசயூழியர்களது வெற்றிக்குக் காரண மென்பதும், அன்னாரது தூய்மையும் உறுதியுமே தேச நன்மைக்கு ஆதாரமென்பதும் நன்கு விவரிக்கப்பட்டுள்ளன.''

ஸ்காட்லாந்து தேசிய வீரன் ராபர்ட் புரூஸ் வரலாற்றின் பெயர்கள் தமிழ்ப் பெயர்களாக்கப் பெற்றன. புரூஸ் என்பது புரேஸனாகவும், வாலஸ் என்பது வாலீசனாகவும், பனோக்பர்ன் என்னும் ஊர் பாணபுரமாகவும், தமிழ்ப்படுத்தப் பெற்றன.

ஸ்காட்லாந்து விடுதலைப் போராட்டக் கதையேயாயினும், குறியீடுகள், உரையாடல்கள், காட்சி அமைப்புகள் யாவும் இந்திய தேசிய விடுதலை இயக்கத்தை உணர்த்துவதாக அமைந்தன.

அந்நிய ஏகாதிபத்திய சூழ்ச்சிகளையும், அதை ஒழிக்க மக்கள் செய்ய வேண்டியதென்ன என்பதைப் பற்றியும் குறிப்பாக எடுத்துக் காட்டியதால் பாணபுரத்து வீரன் பிரிட்டிஷ் ஆட்சியால் தடை செய்யப்பட்டதில் வியப்புமில்லை.

தடை செய்யப்பெற்ற இந்த நாடகத்தை படைத்த டி.கே.எஸ். சகோதரர்களின் 'பாலஷண்முகானந்தா சபையா'ரால் சிற்சில மாற்றங்கள் செய்யப்பெற்று 1931-இல் 'தேசபக்தி' என்னும் பெயரால், இதனை நாடகமாக மேடையேற்றியபிறகு சாமிநாத சர்மாவின் புகழ் பரவியது. 1931 முதல் 1948 வரையில் தொடர்ந்து இந்த நாடகத்தை நடத்தி வந்தனர்.

'தேசபக்தி'யில் புதிய காட்சிகள், புதிய உரையாடல்கள் புகுத்தப்பட்டன. பாரதியாரின் ''விடுதலை, விடுதலை, விடுதலை'', ''தொண்டு செய்யும் அடிமை, உனக்குச் சுதந்திர நினைவோடா,'' ''ஜெயபேரிகை கொட்டடா'' என்னும் பாடல்கள் சேர்க்கப்பட்டன.

1931 மார்ச் 23-இல் புரட்சி வீரர் படை அமைத்துப் போராடிய பகத்சிங்கும் அவருடைய புரட்சி இயக்க தோழர்களான ராஜகுருவும், சுகதேவும் தூக்கிலிடப்பட்டனர். இந்தச் செய்தி காட்டுத் தீ போலப் பரவி, பாமர மக்களையெல்லாம் கொதிப்படையச் செய்த காலம்,

அக்காலம். இந்தச் சூழலில் 'தேசபக்தி'யின் முதல் காட்சியில் தூக்கு மேடையேறும் வாலீசன் 'பகத்சிங்' போலவே ஒப்பனை செய்யப் பெற்றார். முதல் காட்சியிலேயே 'பகத்சிங்கிற்கு ஜே' என்னும் தேசப்பற்று ஆவேசம் பாய்ந்திட நாடகம் தொடங்கும். அக்காலச் சூழ்நிலை, 'முத்தமிழ்க் கலா வித்வரத்ன' கலைஞர் டி.கே. சண்முகம் பின்வருமாறு வருணித்துள்ளார்.

''தேசபக்தி நாடகம் இந்தியாவிற்கும், இங்கிலாந்திற்கும் போராட்டம் நடந்ததுபோல், பாணபுரத்துக்கும், ஈசானபுரத்துக்கும் நடைபெறும் போராட்டத்தை அடிப்படையாகக் கொண்டது. இந் நாடகத்தில் வெ. சாமிநாத சர்மா அவர்கள் மிகுந்த உணர்ச்சி மிக்க உரைநடையைக் கையாண்டிருந்தார். வீரவாலீசன் ராஜத்துவேஷப் பிரசாரம் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு கூண்டிலே நின்றான். அப்போது அவன் பேசும் வீர உரையை சாமிநாத சர்மா மிகுந்த உணர்ச்சியோடு எழுதியிருந்தார். அவ்வுரை இந்திய தேசிய வீரர் களின் இதயத்தை திறந்து காட்டுவதாக அமைந்திருந்தது. வாலீசனாக வேடம் பூண்ட திரு.எஸ்.வி. சகஸ்ரநாமம் இந்த வீர உரைகளை ஆவேசத்தோடு பேசி முழக்கம் செய்தபோது சபையோர் ''மகாத்மா காந்திக்கு ஜே'...''பகத்சிங்குக்கு ஜே'' என்றெல்லாம் எதிர் முழக்கம் செய்தது எனக்கு நன்றாக நினைவிருக்கிறது...1942 ஆகஸ்ட்டு போராட்டக் காலத்தில், 'தேசபக்தி' நாடகம் பல்லாயிரக்கணக்கான வீர கலைஞர்களை தியாகத் தீயில் குதிக்கச் செய்தது.''

இங்கு ஒரு செய்தியை நினைவுகூர வேண்டும். இந்த 'தேசபக்தி'க்கு முன்பு சதாவதானம் தெ.பொ. கிருஷ்ணசாமிப் பாவலர் அவர்கள் எழுதி, நடத்திவந்த 'தேசபக்தி' என்னும் நாடகமும் விடுதலை இயக்கப் போராட்ட உணர்வை மக்களிடையே பரவச் செய்தது.

கலைஞர் டி.கே. சண்முகம் குறிப்பிட்ட உணர்ச்சி மிக்க சாமிநாத சர்மாவின் தொடக்கக் காட்சியில் உள்ள வீரவுரையின் ஒரு பகுதி வருமாறு :

''ஏழைகளையும் தேசாபிமானிகளையும், பரநலத்துக்கு உழைப்பதே பிறவிப் பயனென எண்ணி ஒழுகுபவர்களையும் இவ் வுலகத்தினின்றும் ஓட்டிவிட கடவுள் உத்தரவு செய்யவில்லை... யான் என் தாய்நாட்டின் மீது அதிகப் பற்றுள்ளம் கொண்டிருந்தேன் என்பதுண்மை அப்பற்றுள்ளம் ஒரு குற்றமாயின், அக்குற்றத்தின் பயனாக ஏற்படும் தண்டனைகளுக்கு நான் உட்படுகிறேன். தேசாபி மானி என்று கூறி எனக்குத் தாங்கள் தண்டனை விதிப்பின், அதனைச்

சந்தோஷமாக ஏற்றுக் கொள்ள சித்தமாயிருக்கிறேன். என் நாட்டின் பொருட்டு என் உயிரைக் கொடுக்க ஒரு சிறிதும் பின்வாங்க மாட்டேன். தான் பிறந்த நாட்டின் மீது அபிமானம் கொள்ளாதிருப் பவன் ஒரு மாணவனோ? உடலெனும் வீட்டில் தேச பக்தியெனும் சுடர் விட்டெரியாவிட்டால் அவ்வுடல் இருள் மயமான இல்லத்திற்கு ஒப்பாகும்... நான் செய்த குற்றமெல்லாம் யான் கொண்டிருந்த தேசபக்தியேயாயின், அக்குற்றத்திற்காக நான் தண்டிக்கப்படு வேனாயின், அந்த தண்டனையிலிருந்தும் விடுதலையான பின் மறு படியும் அக்குற்றத்தையே நான் செய்வேன் என்பதை தாங்கள் உணர வேண்டும் ''

நாடகம் கலைஞர்களிடையேயும், மக்களிடையேயும் வரவேற்பு பெற்ற சாமிநாத சர்மாவின் 'பாணபுரத்து வீரன்', வ.வே.சு. ஐயரின் பார்வையில் பின் வருமாறு மதிப்பிடப்பெற்றது.

'ஒரு நாடகத்திற்கு என்னென்ன லட்சணங்கள் இருக்க வேண்டுமென்று நான் கருதுகின்றேனோ, அந்த லட்சணங்கள் தங்களுடைய நாடகத்தில் இல்லையாதலில் முகவுரை எழுதியனுப்ப அசக்தனாயிருக்கிறேன்.''

திறனாய்வாளர் அளவுகோல்கள் மாறுபட்டாலும், மக்கள் எழுச்சியால் 'பாணபுரத்து வீர'னுக்கு இருந்த வரவேற்பு வரலாறு கண்ட உண்மையாகும். மதுரகவி பாஸ்கரதாஸ் அவர்களைக் கொண்டு சில மாற்றங்கள் செய்து நடிக்கப் பெற்ற 'பாணபுரத்து வீரன்', அதே வடிவத்தில் நாடக நூலாக வெளிவர வேண்டுமென சாமிநாத சர்மா விரும்பினார்.

"உலகம் பலவிதம்"

தமிழ்நாடக இலக்கியத் துறையில் ஓரங்க நாடகங்கள் போதிய அளவு வெளிவராத காலத்தில் சாமிநாத சர்மா பல ஓரங்க நாடகங் களை எழுதியுள்ளார். இவை இரண்டாம் உலக மகாயுத்த கால கட்டத்தில் (1939-1945) எழுதப்பெற்றவை. இவற்றுள் நாடகங் களும், 1945-க்குப் பிறகு எழுதப்பட்ட இரு நாடகங்களும் சேர்க்கப் பெற்று 'உலகம் பலவிதம்' என்னும் நூல் 1957-இல் வெளிவந்தது.

உலகம் பலவிதம், நடுவிலே வந்த வாழ்வு, வேலை கிடைக்குமா?, ஆபத்திலே வேற்றுமை, பசிக்கொடுமை, சுகம் எங்கே?, போனகுடி வந்தது, வாடகைக்கு இடம், கடவுளும் வாழ்க் கையும், சொல்லும் செயலும், காந்தி தரிசனம், தேர்தலுக்கு முந்தி, காலேஜ் படிப்பு ஆகியன பதின்மூன்று ஓரங்க நாடகங்கள். இந்த

நாடகங்களில் சமூக வாழ்க்கையில் மாறுபட்ட உணர்ச்சி வேற்றுமைகளை, சுவையான நிகழ்ச்சிகளை, நாடக பாத்திரங்களுக்கு ஏற்ப உரையாடல்களை அமைத்துள்ளார் சாமிநாத சர்மா. இவற்றுள் 'தேர்தலுக்கு முந்தி', என்னும் நாடகம் இக்காலத்திற்கும் பொருத்தமாக அமைந்துள்ளது.

வங்காள மகாகவி பாபுதுவேஜேந்திரலால் ராய் அவர்களின் நாடகங்களை இந்தி மொழி பெயர்ப்பில் படித்து ஊக்கம் பெற்றவர் சாமிநாத சர்மா. துவேஜேந்திரலால் ராய் நாட்டுப் பற்றையும், சமூக ஒழுக்கத்தையும் வற்புறுத்தும் மரபுவாதியாக விளங்கியவர். இவருடைய 'ராட்டுன் வீரர் துர்க்காதாஸ்' தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இவரை தனது குருவாகக் குறிப்பிட்டு சாமிநாத சர்மா கூறியதாவது :

என்னைப் பொறுத்த மட்டில் என்னை அதிகமாகக் கவர்ந்தவை துவேஜேந்திரலால் ராய் நாடகங்கள்தான். நாடகத் துறை பொறுத்த மட்டில் அவர் என்னுடைய குருஸ்தானத்தில் வீற்றிருக்கிறார் என்று இங்கே பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அவருடைய நாடகங்கள் இந்திமொழி பெயர்ப்பில்தான் நான் படித்திருக்கிறேன்.''

குருவைப் பின்பற்றி உயர்தனிச் செம்மை நாடகங்களை (Classical dramas) சாமிநாத சர்மா படைக்க வாய்ப்பு பெருகவில்லை. ஆனால், அரசியல் இலக்கிய நூலாசிரியர் என்னும் கருத்தோட்டத்தின் அழுத்தத்தையும் மீறி ஒரு நாடகாசிரியராகவும் காட்சியளிக்கின்றார், சாமிநாத சர்மா.

5. கடித இலக்கியத் துறையில் சாமிநாத சர்மா

ஞானிகள், சான்றோர்கள், பேரறிஞர்கள்,, புகழ்பூத்த எழுத்தாளர்கள் ஆகியோர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் எழுதிய கடிதங்கள் உயர்தர இலக்கியங்களாகப் போற்றப்படுகின்றன. இலக்கிய வகைகளுள் கடித இலக்கியம் என்பது ஒரு பிரிவாகியுள்ளது. ஒருவரின் ஆளுமை அவருடைய கடிதங்களில் மிகுதியாக வெளிப்படுகின்றது. தேசபக்த மெய்ஞானியென கொண்டாடப்பெற்று வரும் சுவாமி விவேகானந்தரின் கடிதங்கள் உலகக் கடித இலக்கிய களஞ்சியத்தைச் சார்ந்தவையாகும். மகாகவி சுப்பிரமணிய பாரதியார், சுவாமி விவேகானந்தரின் ஆளுமை அவருடைய கடிதங்களில் மிகுதியாக விளங்குவதைப் பற்றி பின்வருமாறு சாற்றியுள்ளார்.

சுவாமி விவேகானந்தரின் கல்விப் பெருமையும், அறிவுத் தெளிவும், தெய்வீகமான அன்பும், அவருடைய தைரியமும், மேருவைப் போன்ற மனோபாவமும், அவருடைய சொற்பொழிவுகளிலும், நூல்களிலும் விளங்குவதைக் காட்டிலும் அவருடைய கடிதங்களில் மிக அதிகமாக தெளிவாக விளங்குகின்றன, என்று அழுத்தமாகக் கூறலாம்.''

'சுவாமி விவேகானந்தரின் கடிதங்கள்' என்னும் தலைப்பில் 'வீர முரசு' சுப்பிரமணிய சிவாவின் மொழிபெயர்ப்பு நூலொன்றும் வெளியாகியுள்ளது.

தமிழில் கடித இலக்கியம் வளர்வதற்கு எழுத்தாளர்கள் கருத்து செலுத்த வேண்டும் என நாகர்கோயிலில் 1958-இல் நடந்த ஆறாவது தமிழ் எழுத்தாளர் மாநாட்டின் தலைமையுரையில் சாமிநாத சர்மா பின்வருமாறு பேசியுள்ளார்.

''கடித இலக்கியத்தைப் பற்றிச் சொல்லவா வேண்டும்? அப்படி ஓர் இலக்கியம் இருக்கிறதா? என்று கூடச் சிலர் கேட்கக் கூடும் வ.வே.ஸு. ஐயர், 'பால பாரதி' பத்திரிகையில் எழுதிவந்த ராஜகோபாலன் கடிதங்களுக்குப் பிறகும், மறைமலையடிகளின் கோகிலாம்பாள் கடிதங்களுக்குப் பிறகும் இலக்கிய மதிப்பு வாய்ந்த கடிதங்கள் வெளிவரவேயில்லையென்று சொல்லலாம். ஒருவர்

உள்ளத்தைத் திறந்து காட்டுவதும், மற்றொருவர் உள்ளத்தைத் தொடுவதும் கடித மூலந்தான் சாத்தியம். பிறமொழிகளில், கடித இலக்கியம் வெகுவாக வளர்ந்திருக்கிறது. முகம் பார்த்து பேச முடியாத நிலையில், அகம் பார்த்து பேச, அகத்திலுள்ளதை அறிவிக்க, கடிதங்களையே கருவியாகக் கையாண்டிருக்கிறார்கள் அறிஞர் பலர். காந்தியடிகளும், டால்ஸ்டாயும் ஒருவரையொருவர் அறிந்து கொண்டது கடிதங்கள் மூலமாக அல்லவா? இதுபோல் இன்னும் பல உதாரணங்களைச் சொல்லலாம். ஆகவே, தமிழ் எழுத்தாளர்கள் கடித இலக்கியத்தின் மீது கவனஞ் செலுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன். முதலில், பிற மொழிகளில் வெளிவந்திருக்கும் முக்கியமான கடிதங்களைத் தெரிந்தெடுத்து, தமிழாக்கிக் கொடுக்கலாம்.''

இத்துறையில் அவர் எழுத்தாளர்களுக்கு வழிகாட்டியாகவும் இருந்திருக்கிறார். நூல் வடிவில் வெளிவந்த சாமிநாத சர்மாவின் கடித இலக்கியங்கள் வருமாறு :

''மகனே' உனக்கு'' (1956), ''அவள் பிரிவு'' (1957), ''பிளேட்டோவின் கடிதங்கள்'' (1976), ''வரலாறு கண்ட கடிதங்கள்'', (1979), 'குமரி மல'ரில் வெளிவந்த ''பாரத மாதாவின் கடிதங்கள்'' முதலியன நூல்வடிவு பெறவேண்டிய கடிதங்கள். இனி, ஒவ்வொன்றின் சிறப்புகளைச் சுருக்கமாக அறிவோம்.

மகனே உனக்கு

'ஜோதி' இதழில் 'வ. பார்த்தசாரதி' என்னும் புனைப்பெயரில் எழுதிய கடிதங்களின் தொகுப்பு, இந்நூல். 1956-இல் இந்நூலுக்கு எழுதிய 'மகனே உனக்கு' என்னும் முன்னுரையின் தொடக்க வரிகள், பின்வருமாறு :

''மகனே' உனக்கு வெகுநாட்களுக்கு முன்னர் இந்தக் கடிதங்களை எழுதினேன். இப்பொழுது அனைத்தையும் ஒன்று சேர்த்து ஒரு புத்தக வடிவாக்கி, உனக்கு அனுப்பியுள்ளேன். ஏற்றுக்கொள், அடிக்கடி எடுத்துப்படி, உனது நண்பர்களையும் படிக்கச் சொல். இந்தக் கடிதங்கள் உன்னை மனிதத் தன்மைக்கு அழைத்துச் செல்லும் படிகளாக அமையுமானால் அதைக் காட்டிலும் வேறு மகிழ்ச்சி எனக்கு இருக்க முடியாது.''

'வ. பார்த்தசாரதி' என்ற புனைப் பெயரில் இந்தக் கடிதங்களை எழுதி வந்தேன்'' என்று சாமிநாத சர்மா குறிப்பிட்டுள்ளதும் கவனத்திற்குரியது. நூலின் பின்வரும் பொருளடக்கம், நூல் நுவலும் செய்திகளைக் குறிப்பதாக உள்ளது. மகனே! என் கடமையைச் செய்; உறுதி கொள் மகனே; தன்னம்பிக்கை ஒரு சக்தி; ஓய்வு கொள்வதா?

சத்தியத்தைச் சொன்னால் நித்தியம் வாழலாம்; உன் மனசாட்சியை விற்றுவிடாதே; சொல்லாது செய்; முயற்சியைக் கைவிடாதே; ஊக்கமாக வேலை செய்; ஒழுக்கத்திற்கு உயர்வு கொடு; எண்ணினால் மட்டும் போதாது - செய்யவும் வேண்டும்; சோர்வு கொள்ளாதே; உனக்கு அச்சமா?; நல்ல காரியத்துக்கு நாலாயிரம் விக்கினம்; மகன்கள் யார்?; போர் வீரனாயிரு; இரக்கங்கொள்; தன் கையே தனக்குதவி; பெரிய மனிதனாக இரு; அன்பினால் வெற்றி கொள்; எல்லாரும் உன் சகோதரர்கள்; நில்-ஓடாதே; ஏன் அஞ்சுகிறாய்?'' கொடுக்கிறவனே வாழ்கிறவன்.

வாழ்வியல் தத்துவங்களை, வேண்டுமிடங்களில், வரலாற்றுச் செய்திகளின் பின்னணியோடு நேருக்கு நேர் பரிவோடு உணர்த்தும் நடையில் அமைந்துள்ளன, இந்தக் கடிதங்கள்.

அவள் பிரிவு

கடித இலக்கியத்தில் 'அவள் பிரிவு' தனித் தன்மை வாய்ந்தது. கருத்தொருமித்த பண்பட்ட ஓர் இலட்சிய குடும்ப வாழ்க்கையை அமைத்துக் கொண்ட கணவன்-மனைவியிடையே நிலவிய புனித மான உணர்வுகள், 'அவள் பிரிவி'ல் ஒலிக்கின்றன சாமிநாத சர்மா வின் பதிப்பாளரும், குடும்ப நண்பருமான அரு. சொக்கலிங்கம் செட்டியார் அவர்களுக்கு, தனது அன்பு மனைவியின் பிரிவாற்றா மையை கடிதங்கள் மூலம் வெளிப்படுத்தினார். 6.3.1956-இல் இருந்து 17.4.1956 வரையில் எழுதப்பெற்ற பத்து கடிதங்களின் தொகுப்பே 'அவள் பிரிவு' நாற்பத்திரண்டு ஆண்டுகால குடும்ப வாழ்க்கையில் தன்னுடைய மனை விளக்கு மங்களம் அம்மையார் எவ்வாறெல்லாம் குடும்பப் பணியிலும், இலக்கியப் பணியிலும் சுடரொளியாய்த் திகழ்ந்தார் என்பதை சாமிநாத சர்மா உணர்ச்சிப் பெருக்குடன் விளக்கியுள்ளார். 'அவள் பிரிவு' என்னும் தலைப்பும், ஒவ்வொரு கடிதத்தின் உள்ளுரைப் பொருளை வெளிப்படுத்தும் தலைப்புகளும் பதிப்பாளர் அரு. சொக்கலிங்கம் செட்டியாரால் தரப்பட்டுள்ளன.

''இக்கடிதங்கள் ஆரம்பத்தில் பிரசுரத்திற்காகவென்று எழுதப் பட்டவையல்ல. சர்மாஜி அவர்களின் சொந்த நினைவுகள் பற்றி அவர்கள் தாமே எழுதி புத்தக வடிவில் வெளிவருவது இதுவே முதல் தடவையாகும்'' என்று 'அரு.சொ.' குறிப்பிட்டுள்ளதும் நோக்கத் தக்கது.

''அழுது அழுது என் துக்கத்தைத் தணித்துக் கொள்வதற்குப் பதில், எழுதி எழுதி என் துக்கத்தைத் தணித்துக் கொள்கிறேன்'' என்று சாமிநாத சர்மா உளம்நொந்து உரைத்தார்.

வரலாற்று நூல்கள், அறிவியல் நூல்கள் முதலானவற்றை எழுதி எழுதிப் பழக்கப்பட்ட சாமிநாத சர்மா, மனைவியின் பிரிவைத் தாங்க முடியாமல் உணர்ச்சிச் சூழலில் சிக்குண்டு சிதறிய சொற்கள், இதோ'

''முதல் திங்கட்கிழமையன்று அந்தக் கரங்களை நான் பற்றிய பொழுது அவை எவ்வளவு உஷ்ணமாயிருந்தன. கடைசி திங்கட் கிழமை அதே கரங்களைத் தொட்டுப் பார்க்கிறேன். ஐயோ! எப்படிச் சில்லிட்டுப் போயிருந்தன? கொதித்து வந்த என் கண்ணீரினால் அவற்றை நனைத்துப் பார்த்தேன்; சூடு ஏறவே இல்லை, ஆனால் அந்தக் கணத்திலிருந்து என் உள்ளத்தில் சூடு ஏறத் தொடங்கி விட்டது.''

''இல்லது என்? இல்லவள் மாண்பானால்'' என்னும் குறள் நெறிக்கு ஒரு சொல்லோவியமாகப் பொலிகின்றது 'அவள் பிரிவு'.

''அவள் பிரிவு'' எந்த ஆன்மாவையும் நெக்குருகச் செய்ய வல்லது. துறவு நெறி நின்ற சுவாமி சிவானந்தர் 'அவள் பிரிவு' எழுப்பிய ஆன்ம அசைவை பின்வரும் சொற்களில் புலப் படுத்தினார்.

The inspiring work detailing the life of your devout Dharmapathni, ought to be studied by every modern Indian housewife is an ideal pattern worthy of everybody's emulation".

பிளேட்டோவின் கடிதங்கள் :

பிளேட்டோவின் அரசியல், கிரீஸ் வாழ்ந்த வரலாறு, சமுதாயச் சிற்பிகள் என்னும் நூல்களைப்படித்தவர்கள் சாமிநாத சர்மாவின் கிரேக்க இலக்கிய பண்பாடு பற்றிய அறிவாற்றலைப் போற்றுவர். அந்த அறிவாற்றலின் மற்றொரு வெளிப்பாடாகத் தோன்றியதுதான் ''பிளேட்டோவின் கடிதங்கள்''. முதற்பதிப்பு 1976-இல் வெளிவந்தது.

தமிழில் கடித இலக்கியத்தின் வளர்ச்சிக்குத் தானே படைத்த இரு நூல்களோடு, உலகக் கடித இலக்கியங்களின் மொழிபெயர்ப்பு களையும் வழங்க வேண்டும் எனும் சீரிய இலக்கிய நோக்குடன் 'பிளேட்டோவின் கடிதங்கள்' என்னும் அரிய நூலையும் அளித்துள்ளார், சாமிநாத சர்மா.

'பிளேட்டோவின் பெயரால் வெளிவந்துள்ள பதின்மூன்று கடிதங்களின் தொகுப்பே, 'பிளேட்டோவின் கடிதங்கள்''. இந்தத் தமிழாக்க நூலிலும் மற்ற ஆங்கிலப் பதிப்புகளிலும் வெளிவந்

திருக்கும் வரிசைப்படி, பதின்மூன்று கடிதங்களும் இடம் பெற்றிருக் கின்றன'' என்று நூலாசிரியர் கூறுகிறார்.

கி.மு. நான்காம் நூற்றாண்டில் எழுதப்பட்ட இந்தக் கடிதங்கள், காலத்தைக் கடந்து நிற்பன. அடிப்படையான மனித விழுமியங்கள் பிளேட்டோவின் கடிதங்களில் விதந்தோதப்பட்டுள்ளன.

சாமிநாத சர்மாவின் இயல்பான தமிழ் உணர்வு, பிளேட்டோ வின் கடிதங்களை, திருக்குறளோடு ஒப்பிட்டு இலக்கிய இன்பத்தை நுகரத் தூண்டுகிறது. ''இந்தக் கடிதங்களைச் சிறிது பொறுமையோடு படித்துவிட்டு, பிறகு, வாசகர்கள் திருக்குறளில் உள்ள மெய்யுணர்தல் குற்றங்கடிதல், பெரியாரைத் துணைகோடல், நட்பு, மன்னரைச் சேர்ந்தொழுகல், இன்னா செய்யாமை, சான்றாண்மை, இப்படி சில அதிகாரங்களைப் படித்து ஒப்பு நோக்க வேண்டுகிறேன்.''

வரலாறுகண்ட கடிதங்கள் :

அமரர் சாமிநாத சர்மாவின் முதலாண்டு நினைவு அஞ்சலியாக இந்நூல் 9.1.1979-இல் வெளிவந்தது. இலக்கிய ஏடுகளில் நிலை யான இடம் பெற்ற இருபது கடிதங்களை காலவரிசையில் தொகுத் தளித்துள்ளார், சாமிநாத சர்மா. இந்நூல் ஒரு மொழிபெயர்ப்பு நூலாகும். ''ஒவ்வொரு கடிதத்திற்கும் முடிவுரையாக கடிதம் பரி மாறிக் கொண்டவர்களைப் பற்றியும், ஏன்? எதற்காக, எந்தச் சூழ் நிலையில் கடிதம் எழுதப்பட்ட்தென்பதையும்'' சுருக்கமாகக் குறிப் பிட்டுள்ளார், சாமிநாத சர்மா கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் இருந்து கி.பி. 20-ஆம் நூற்றாண்டு வரையில் வரலாறு கண்ட கடிதங்களுள் 20 கடிதங்கள் தொகுக்கப் பெற்றுள்ளன. இந்நூலில் கிரேக்க ஞானி டையோஜைனீஸ், பாரசீக அரசன் மூன்றாம் டேரியஸ், கிரேக்க வரலாற்று அறிஞர் புளுடார்க், ரோம் நாட்டரசன் நீரோவின் தாயார், ரோம் நாட்டரசன் அரேலியன், கிறிஸ்தவஞானி செயின்ட் ஜெரோம், சீனயாத்திரிகர் ஹ்யூன்த்ஸாங், இத்தாலியக் கவிஞர் தாந்தே, வைணவ தத்துவ அறிஞர் வேதாந்த தேசிகன், கொலம்பஸ், மராட்டிய ஞானி துகாராம், ஜஹாங்கீர், ஷாஜஹான், அவுரங்கசீப், சிவாஜி, கரிபால்டி, ஸாமுவேல் ஜான்சன், ரஷ்ய எழுத்தாளர் செகான், ஏ. ஓ.ஹ்யூம், திலகர் ஆகியோரின் கடிதங்கள் இந்நூலில் வெளியிடப்பட்டுள்ளன.

''சிறகு படைத்தத் தூதுவர்களாக'' கடிதங்களைக் குறிப்பிட்டு, ''ஒருவர் எழுதும் கடிதத்தில்தான் அவருடைய ஆத்மாவை அசல் வடிவத்தில் காண முடியும்'' என்பதையும் சுட்டிக்காட்டிய சாமிநாத

சர்மாவின் இந்நூல் உலகக் கடித இலக்கியத்தையும் இந்தியக் கடித இலக்கியத்தையும் ஒருங்குசேரத் தந்துள்ளது.

பாரத மாதாவின் கடிதங்கள் :

''குமரிமல''ரில் வ. பார்த்தசாரதி என்னும் புனைப் பெயரில் சாமிநாத சர்மா ''பாரத மாதாவின் கடிதங்கள்'' என்னும் தலைப்பில் எழுதியுள்ளார். 12 கடிதங்கள் வெளிவந்துள்ளன. ஆனால், நூல் வடிவம் பெறவில்லை. தேச சேவை, உன்னை நீ அறி, தேசபக்தி, முயற்சியும் பயிற்சியும், ஸ்தாபனத்தின் அவசியம், பிரசாரம், பொதுக் கூட்டம், பிரசங்கம், கட்சிக்கட்டுப்பாடு, தலைவனுக்குரிய தன்மைகள், தனிவாழ்வும் பொதுவாழ்வும், பொது ஜனங்கள் என்னும் பன்னிரண்டு தலைப்புகளில் பாரத மாதாவின் கடிதங்கள் அமைந்துள்ளன இவை, இந்தியா விடுதலை பெறுவதற்கு முன் எழுதப் பெற்றவை.

இந்திய தேசிய விடுதலை இயக்கத்தில் ''பாரத மாதா வழிபாடு'' சக்திமிக்க பிரசார நெறியாகத் திகழ்ந்தது. 1897 பிப்ரவரியில் சென்னையில் 'எதிர்கால இந்தியா' என்னும் தலைப்பில் தேசியக் கண்ணோட்டத்தில் சுவாமி விவேகானந்தர் பின்வருமாறு பேசினார்.

''அடுத்த ஐம்பது ஆண்டுகளுக்கு இந்த மகத்தான தாய் நாட்டைப் பற்றியே நாம் நினைக்க வேண்டும். இக்காலத்தில் மற்றெல்லா தெய்வங்களும் நம் மனதை விட்டு அகலட்டும்.''

வீரத்துறவி விவேகானந்தர் ஊக்குவித்த இந்தியத் தெய்வ வழிபாடு 1906-இல் 'வந்தே மாதரம்' முழக்கத்தோடு - மாநிலத் தாயை வணங்குவோம் என்னும் முழக்கத்தோடு - பாரத மாதா வழிபாடாகப் பரவியது. தேச பக்தர்கள், பாரதமாதாவிடம் முறையிடுவதும், பாரத மாதா, தேசபக்தர்களிடம் பேசுவதும் போன்ற பிரச்சார முறைகள் வீறுபெற்றன.

பாரத மாதாவின் கடிதங்கள் எழுதப்பெற்றதற்கான காரணங்களை இறுதிக் கடிதத்தில் பின்வருமாறு கூறியுள்ளார், சாமிநாத சர்மா;

''மகனே' இதுதான் என்னுடைய கடைசி கடிதம், என்னுடைய நாற்பது கோடி மக்களும் பசியாற உண்டு உடம்பு மறைய ஆடையணிந்து, நிம்மதியான வாழ்க்கையை நடத்த வேண்டுமென்பதே என் விருப்பம். அந்த விருப்பத்தை நிறைவேற்றிட நீ ஒரு கருவியாயமைய வேண்டுமென்பதற்காகவே இந்தக் கடிதங்களை உனக்கு எழுதிக் கொண்டு வந்தேன். இந்தக் கடிதங்கள் உன்னுடைய தேசத்

தொண்டுக்கு வழிகாட்டியிருக்குமானால் அதுவே நான் அடைகிற திருப்தி.''

நாட்டுப் பணியாற்றுவதில் பிற நாடுகளுக்கும் இந்தியாவிற்கும் உள்ள வேற்றுமை பின்வருமாறு எடுத்துக் கூறப்பெற்றுள்ளதில் எளிமையும், கருத்தாழமும் துவங்குகின்றன.

''மற்ற நாடுகளிலே தேச சேவை செய்வதற்கும், இந்தியாவிலே தேச சேவை செய்வதற்கும் எவ்வளவோ வித்தியாசங்கள் உண்டு. மற்ற நாடுகளிலே, மனிதர்களுடைய தனிப்பட்ட வாழ்க்கையிலும், சமுதாய வாழ்க்கையிலும், பொருளாதாரச் சீர்கேட்டினாலோ அல்லது அரசியல் நடத்துவோரின் அஜாக்கிரதையினாலோ அல்லது அசிரத் தையினாலோ அவ்வப்பொழுது அநேக கறைகள் படுதல் கூடும். அவைகளைப் போக்குவதோடு தேச சேவையென்பது ஓரளவு முற்றுப்பெறுகிறது. அங்கே தேச சேவையென்பது பயிர் நடுவே முளைக்கும் களைகளைப் பிடுங்குவது போல, அழுக்குப் படிந்த உடலைக் குளிப்பாட்டுவதுபோல, செடிப் பூச்சிகள், அரிக்காம லிருக்கச் சாம்பல் தெளிப்பது போல.

ஆனால், நமது நாட்டிலோ தேச சேவையென்பது மகா கடின மான ஒரு சாதனை; எப்படிப்பட்டவருடைய மனத்தையும் ஒடித்து விடக்கூடிய ஒரு சம்மட்டி. ஏனெனில் இங்கே சுதந்திரமில்லை. ஒரு நல்லதைச் செய்ய வேண்டுமானால், அதற்கு முதற் படியாக எத்தனை யோ தீமைகளை அகற்ற வேண்டியிருக்கிறது; எத்தனையோ சங்கடங் களை எதிர்த்துப் போராட வேண்டியிருக்கிறது. இங்கே தேச சேவை யென்பது, தரிசாகக் கிடக்கிற நிலத்திலே சாகுபடி செய்யப் பிரயத் தனப்படுகிறமாதிரி. இங்கே கண் இழந்திருப்பவர்களுக்குக் கண்ணைக் கொடுக்க வேண்டும், பிறகு அந்தக் கண்களைக் கொண்டு அவர்களைப் பார்க்கச் செய்ய வேண்டும்.''

இந்திய தேசிய அரசியல் உணர்வில், ஆன்மிகத்தை இணைத்த போக்கு செல்வாக்கு பெற்றிருந்தது. 'ஸ்வராஜ்' என்னும் சொல் இந்திய ஆன்மீகத்தின் பழுத்த சிந்தனைக் களஞ்சியமாக உபநிடத்தில் கூறப்பெற்றுள்ளது. இந்த 'ஸ்வராஜ்' என்னும் சொல்லை அரசியல் நோக்கில் 'ஸ்வராஜ்' என்று ஆர்ய சமாஜத் தலைவர் சுவாமி தயானந்தர் முதன் முதலில் பயன்படுத்தினார். தனியொருவர் ஸ்வராஜின் கூட்டுத் தொகைதான் மக்களின் 'ஸ்வராஜ்' என்று குறிப்பிட்டு, காந்தியடிகளும் அரசியலை ஆன்மிகமயப்படுத்தினார். இந்த அடிப்படையின் மீது பெற்ற கருத்துதான் பின்வரும் கருத்து.

''ஆத்ம சுதந்திரம் பெற்றுவிட்டால் அரசியல் சுதந்திரம் எளிதிலே கிடைத்துவிடும். இந்த உண்மையை நான் எப்பொழுதும்

உனக்கு வற்புறுத்திக் கொண்டிருப்பேன். ஏனென்றால், நமது நாகரீகம் இந்த உண்மையை அடிப்படையாகக் கொண்டது.''

''தேச சேவை''யென்னும் முதல் பாரத மாதா கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கருத்தோடு, அரசியல் சீர்திருத்தம் காணப் போராடும் அதே சமயத்தில் சமூகச் சீர்திருத்தம் காணவும் போராட வேண்டும் என்று பின்வரும் சீரிய சிந்தனையும் வெளிப்பட்டுள்ளது.

''நம்மிடத்திலேயுள்ள ஜாதி சமய வித்தியாசங்களெல்லாம் அந்நிய ஆதிக்கத்தை இன்னும் ஆழமாக ஊன்றிக் கொள்ளும்படி செய்கின்றன. அந்நிய ஆதிக்கத்திற்கு இந்த வேற்றுமைகள் நல்ல தொரு மாதிரி இந்த வேற்றுமைகள் மீதுதான் அது தோன்றுகிறது; வளர்கிறது; வாழ்கிறது.''

'முயற்சியும் பயிற்சியும்' என்னும் கடித்ததில் இந்தியாவின் இன்னமும் பிரச்சினையாக உள்ள மொழிச் சிக்கல் பற்றியும் கருத்து கூறப்பட்டுள்ளது

''தாய்மொழி, ஹிந்தி, வடமொழி, ஆங்கிலம் ஆகியவற்றோடு முடிந்தால், இந்தியாவில் பேசப்படும் வேறு சில பாஷைகளிலும் நீ பயிற்சி பெறுதல் நல்லது.'' என சாமிநாத சர்மா கருதினார். நாட்டுப் பற்று சமூக சீர்திருத்தப்பற்று ஆகிய இரண்டோடு மொழிப்பற்றையும் வலியுறுத்தியுள்ளார் ''தாய்மொழியில் பயிற்சியில்லாதவன் தாய் நாட்டுக்குச் சேவை செய்ய முடியாது. மொழியின்றி நாடு இல்லை. மொழிப் பற்றில்லாதவன் நாட்டுப் பற்றில்லாதவன். எந்த நாட்டிலும் தேசத்தின் சுதந்திரத்திற்காக உழைத்த அறிஞர்கள், முதலில் பாஷையின் சுதந்திரத்திற்காகவே பாடுபட்டார்கள்.''

''பாரத நாட்டின் புராதனம் என்கிற ஆழமான சுரங்கத்தில் நீ தைரியமாக இறங்கிச் செல்வதற்கு, வடமொழி அறிவானது பிரகாசமான விளக்கு மாதிரி'', என்று ஒரு கோணத்தில் நின்று சாமிநாத சர்மா கருத்து தெரிவித்துள்ளார்

பிற கடிதங்களில் அரசியல் கட்சிகளில் பயிற்சி பெற உதவும் கருத்துக்களை விளக்கியுள்ளார்.

பொதுவாக, வளரவேண்டிய கடித இலக்கியத் துறைக்குரிய தன்னுடைய பங்களிப்பையும் சாமிநாத சர்மா அளித்துள்ளது பாராட்டுதலுக்குரியது :

6. மொழி பெயர்ப்புத் துறை

உலக இலக்கியங்களின் வளர்ச்சியிலே, மொழிகளிலே, வரலாற்று திருப்பங்களிலே மொழி பெயர்ப்புக் கலையின் சுவடுகள் காலந்தோறும் பதிவாகி வருகின்றது. கி.பி. 15ஆம் நூற்றாண்டில் இத்தாலியில் தோன்றி ஐரோப்பாவில் பரவிய ''மறுமலர்ச்சி இயக்கம்'', கிரேக்கத்தின் தத்துவ இலக்கியங்களின் மொழி பெயர்ப்பு களினால் நிகழ்ந்தது என்றும் வரலாறு விளக்கியுள்ளது. மார்ட்டின் லூதர் (1483-1546) கிரேக்க மொழியில் இருந்து பைபிளின் ''புதிய ஏற்பாட்டை'' ஜெர்மனியில் மொழிபெயர்த்ததும், இதைத் தொடர்ந்து பிற ஐரோப்பிய மொழிகளில் பைபிள், மொழி பெயர்க்கப் பெற்றதும் சமயசீர்திருத்த இயக்கத்தையும், அதன் வழியே தேசிய இயக்கங் களையும் ஊக்குவித்தன என்பனவும் வரலாற்றுச் செய்திகளாகும்

பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் இந்திய மொழி களில் புத்திலக்கியங்கள் தோன்றுவதற்கும் மொழி பெயர்ப்புக்கள் பேருதவி புரிந்துள்ளன 1877-இல் இந்தியாவில் இந்திய மொழி களில் வெளிவந்துள்ள நூல்களின் எண்ணிக்கை 4890; இவற்றுள் படைப்பிலக்கியங்கள் 4454; மொழி பெயர்ப்புகள் 436, இவ்வாறே 1852-இல் இந்தியமொழிகளில் வெளிவந்த 6198 நூல்களில் 720 மொழி பெயர்ப்புகளாகும். இந்தக் குறிப்புகள் மொழி பெயர்ப்பு துறையின் வளர்ச்சியைக் காட்டுகின்றது.

இந்த வளர்ச்சியின் நீண்ட வரலாற்றில் சாமிநாத சர்மாவின் பங்களிப்பும் அடங்கியுள்ளது.

மொழி பெயர்ப்புத் துறையில் சாமிநாத சர்மாவின் பங்களிப் பை அறிவதற்கு அவர் 1971-ல் 'நூலகம்' இதழிற்கு (அக்டோபர்) அளித்த பின்வரும் பேட்டியின் செய்தி ஒரு முன்னுரையாகத் திகழ்கிறது

கேள்வி · மொழிபெயர்ப்புத் துறையில் நீங்கள் அதிகம் ஈடுபட்டிருப்பதாகச் சொல்கிறார்களே, அது சரிதானா?

பதில் : ஓரளவுக்குச் சரிதான். நமது மொழியிலுள்ள சிறந்த நூல்களைப் பிறமொழியினர் அறியும்படி செய்ய வேண்டுமென்று நாம் நினைப்பது போல, பிறமொழி நூல்களைத் தமிழருக்கு அறி முகப்படுத்த வேண்டாமா? அந்தக் கேள்வி தான் என் மொழி பெயர்ப்பு நூல்களுக்கு அடிப்படைக்காரணம் 'பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களைத் தமிழில் கொண்டுவர வேண்டும்' என்ற பாரதியாரின் விருப்பம் என்னால் முடிந்தவரையில் நிறைவேற்றி வருவதில் எனக்குத் திருப்தி ஏற்பட்டிருக்கிறது.

தமிழில் வெளிவந்த சாமிநாத சர்மாவின் மொழி பெயர்ப்பு நூல்கள் அனைத்தும் ஆங்கிலத்தில் இருந்து மொழி பெயர்க்கப் பட்டுள்ளன. சிற்சில கட்டுரைகள் மட்டும் கன்னடத்தில் இருந்தும், இந்திமொழியில் இருந்தும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. தமிழில் இருந்து பிற மொழிகளில் மொழி பெயர்ப்பு எதையும் சாமிநாத சர்மா செய்ய வாய்ப்பு ஏற்படவில்லை.

சாமிநாத சர்மாவின் மொழிபெயர்ப்புத்திறனின் அளப்பரிய போராற்றலை 'பிளேட்டோவின் அரசியல்' என்னும் நூலில் காண் கிறோம். 'பிளேட்டோவின் அரசியல்' சாமிநாத சர்மாவின் மொழி பெயர்ப்பு நூல்களுள் சிகரமாகும். 'பிளேட்டோவின் அரசியலைப்' படித்தவர்கள், பிளேட்டோவும், சாக்ரடீசும் தமிழிலேயே உரையாடி யிருப்பார்களோ' என்று வியந்து சில வாசகர்கள் தம்மிடம் குறிப் பிட்டதாக சாமிநாத சர்மா இந்நூலாசிரியரிடம் கூறியுள்ளார்.

மொழிபெயர்ப்பிற்குரிய 'அடிப்படையான நெறிகள்', எவை என்பதைப் பற்றி, பிளேட்டோவின் அரசியல் முன்னுரையில் பின்வருமாறு எடுத்துரைத்திருக்கின்றார்.

''ஆங்கில மொழி பெயர்ப்பாசிரியர்களின் மத்தியில் உன்னத ஸ்தானம் வகிக்கும் பெஞ்சமின் ஜோவெட் என்ற அறிஞர், தனது மொழி பெயர்ப்பு நூலின் முகவுரையில், ஒரு மொழி பெயர்ப்பு என்னென்ன லட்சணங்களோடு கூடியிருக்க வேண்டுமென்பதைப் பற்றி விஸ்தரித்துக் கூறுகிறான் :

1. ஒரு மொழி பெயர்ப்பு, அறிஞர்களுக்கு மட்டுமல்ல, சாதாரண ஜனங்களுக்கும் புரியக் கூடியதாய் இருக்க வேண்டும்.
2. ஒரு பாஷையிலுள்ள வார்த்தையை மற்றொரு பாஷையில் அப்படியே கொண்டுவந்துவிட வேண்டுமென்பதையும், மூலநூலின் அமைப்பு வரிசைக்கிரமம் முதலியவைகளை

அப்படியே பின்பற்ற வேண்டுமென்பதையும் நோக்கமாகக் கொள்ளக் கூடாது.

3. மூல நூலாசிரியன் உபயோகித்திருக்கிற வார்த்தையைக் காட்டிலும், அவன் எந்த பாவத்துடன் அந்த வார்த்தையை உபயோகித்திருக்கிறான் என்பதையே முக்கியமாகக் கவனிக்க வேண்டும்.

4. மொழி பெயர்ப்பாசிரியன், மூல நூலாசிரியனுடைய பணி யாளனாக அவன் பக்கத்திலேயே இருந்து கொண்டிராமல் அவனுக்குப் பின்னால் ஏறி நின்று பார்க்கவேண்டும்.

5. மொழிபெயர்த்துக் கொண்டு செல்கிறபோது இது காறும் வந்த விஷயங்களென்ன, இனிவரப்போகும் விஷயங்க ளென்ன என்பதை நன்றாக தெரிந்து கொண்டிருக்க வேண்டும்

6. மொழிபெயர்ப்பாசிரியன், மூலநூல் முழுவதையும் மனதில் நன்றாக வாங்கிக் கொண்டு மொழிபெயர்க்க வேண்டு மென்பது தான் முக்கியமே தவிர,மூலநூலாசிரியன் கை யாண்டிருக்கிற வார்த்தைக் கிரமம் பதப் பிரயோகம் முதலிய வற்றை அப்படியே பின்பற்ற வேண்டுமென்பது அவசிய மில்லை.

7. மூலநூலின் ஆற்றொழுக்கான நடை, அந்த நடையிலே உள்ள எளிமை, இனிமை, கம்பீரம், அர்த்தபுஷ்டி முதலியன கூடிய மட்டில் மொழி பெயர்ப்பில் 'இருக்க வேண்டும்.

8: சுருக்கமாக, மொழிபெயர்ப்பு, மூலத்தைப் போல இருக்க வேண்டும்.

இந்த அடிப்படையான மொழிபெயர்ப்பு நெறிகளைப் பின் பற்றி பிளேட்டோவின் அரசியலை மொழிபெயர்த் துள்ளதாக சாமிநாத சர்மா கூறியுள்ளார்

''தமிழில் படிக்கின்றபோது கூடியவரை தொடர்பு விடாமலும், சுவை குன்றாமலும் இருக்க வேண்டும்.'' என்பதற்காக, மூலநூலில் உள்ள மேற்கோள்கள் அனைத்தையும், உதாரணங்கள் அனைத்தை யும் அப்படியே மொழிபெயர்ப்பில் தராமல் தேவையானவற்றை மட்டும் மொழிபெயர்ப்பில் தந்தால் போதுமானது என்பதும் சாமிநாத சர்மாவின் மொழிபெயர்ப்பு நெறிகளில் ஒன்றாகும்.

குறிப்பிட்ட ஒரு நூலில் இருந்து அல்லாமல் பல நூல்களைப் படித்து, மொழிபெயர்ப்பு செய்தது சாமிநாத சர்மாவின் சிறப்புகளில் ஒன்றாகும்.

பிளேட்டோவின் அரசியலுக்கு அடுத்தபடியாகச் சிறந்து விளங்கும் ''சமுதாய ஒப்பந்தம்'' என்றும் நூலில், ''தமிழில் மொழி பெயர்க்கிறபோது, நான்.. கருத்துக்களுக்குத்தான் முக்கியத்துவம் கொடுத்திருக்கிறேனே தவிர, எழுத்துக்குக்களுக்கல்ல'' என்னும் மொழி பெயர்ப்பு நெறியையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

மொழி பெயர்ப்பின் வெற்றிக்கு உதவுவது, மொழி மரபு பற்றிய தெளிவாகும். இந்த நெறியையும் ''சுதந்திரத்தின் தேவைகள் யாவை'' என்னும் தனது மொழி பெயர்ப்பு நூலில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

''ஒவ்வொரு மொழிக்கும் ஒவ்வொரு மரபு உண்டு. இதனைத் தெரிந்து கொள்வதும் ஒரு மொழி பெயர்ப்பாசிரியனுடைய முதற் கடமையாகும். இந்தக்கடமையை ஒருவாறு உணர்ந்து நிலையில் இருந்துகொண்டு, இந்தப் பிரசங்கங்களுக்குத் தமிழுடை அணிவித் திருக்கிறேன்''.

கிரேக்கம், சீன மொழிகளில் இருந்து மொழி பெயர்க்கும் பொழுது, பெயர்களை மொழி பெயர்க்குமிடங்களில் சற்று விழிப் பாய் இருக்க வேண்டும். இதில் சாமிநாத சர்மா தாம் பின்பற்றிய நெறியைக் குறித்து பின்வருமாறு எழுதியிருக்கிறார்.

''ஒரு விஷயம் இங்குக் கூற வேண்டியது அவசியமாயிருக் கிறது. அந்நிய நாட்டுப் பெயர்களை, வழக்கில் உள்ளபடி உபயோகித் தல் நலம். அதை விடுத்து அந்நிய பெயரைத் தமிழ்ப் பெயராக மாற்று தல் பொருந்தாது. உதாரணமாக 'அரிஸ்டாட்டில்' என்ற கிரீக் ஆசிரியனை 'அரிஸ்தோத்தலன் என்றும், 'பிளேட்டோ' என்பானை பிளாத்தன் என்றும் கூறுவது பொருத்தமேயன்று.''

மானிட ஜாதியின் சுதந்திரம், மனோதர்மம், மகாத்மா காந்தி, மனிதன் கடமை, சமுதாய ஒப்பந்தம், பிளேட்டோவின் அரசியல், ராஜதந்திர யுத்தகளப் பிரசங்கங்கள், சுதந்திரத்தின் தேவைகள் யாவை? பிளேட்டோவின் கடிதங்கள், வரலாறு கண்ட கடிதங்கள் என்னும் பத்து நூல்கள் சாமிநாத சர்மாவின் மொழி பெயர்ப்பு நூல்களாகும்.

1926-1927களில் மைசூரில் வாழ்ந்த காலத்தில் கன்னட மொழியில் இருந்து கட்டுரைகளை மொழி பெயர்த்தார் இவை 'விவேக போதினி' யில் வெளிவந்தன.

வங்கமொழி நாடகாசிரியர் துவிஜேந்திரலால் ராயின் இந்தி மொழியாக்க நாடகங்கள் சிலவற்றைத் தமிழாக்கம் செய்ததாக சாமிநாத சர்மா குறிப்பிட்டுள்ளார். ஆனால், இவை அச்சேறியதா என்பதை அறிய முடியவில்லை

'அரிஸ்டாட்டலின்' அறவியலை தமிழாக்கம் செய்யத் தொடங்கினார். ஆனால்; இது முற்றுப்பெறவில்லை.

மாஜினியின் மனிதன் கடமை, மானிட ஜாதியின் சுதந்திரம், மகாத்மா காந்தி ஆகிய நூல்களில் இருந்து சில மொழி பெயர்ப்பு களைப் பார்ப்போம்.

மாஜினியின் மனிதன் கடமை : (The Duties of Man)

"The Duties of Man' என்னும் ஜோசப் மாஜினியின் நூலின் தமிழாக்கம் தான் 'மாஜினியின் மனிதன் கடமை' "God" என்னும் தலைப்பில் உள்ள கட்டுரையின் தொடக்கப்பகுதியின் ஆங்கில மொழியாக்கமும், இதைத் தொடர்ந்து சாமிநாத சர்மாவின் தமிழாக்க மான 'கடவுள்' என்னும் கட்டுரைத் தொடக்கத்தின் பகுதியும் பின் வருமாறு தரப்பட்டுள்ளன

"The origin of your duties is in God.' The definition of your duties is found in His law. The progressive discovery and the application of His law is the task of Humanity.

God exists. I do not need nor do I wish to prove it to you, to try to do so would seem to be blasphemy, as to deny it would be seen foolishness. God exists, because we exist. God lives in our conscience, in the conscience of Humanity, in the Universe which surrounds us. Our conscience invokes Him in the most solemn moments of grief and of Joy; Humanity has been able to transform, to pollute, but never to suppress His holy name. The universe manifests Him in the order, the harmony, the intelligence of the motions and of its laws. There are no atheists among you, if there were, they would deserve not curses, but tears. He who can deny God on asterry right, or beside the graves to his dearest ones or the presence of matyrdom, is greatly unhappy or greatly wicked."

தமிழாக்கம்

''கடவுளித்திலிருந்துதான் உங்கள் கடமைகள் ஆரம்பமா கின்றன. ஆண்டவனுடைய சட்டத்தில் உங்களுடைய கடமைகள்

விவரிக்கப்பட்டிருக்கின்றன. அந்தச் சட்டத்தைப் படிப்படியாகக் கண்டுபிடித்து அதனை அனுஷ்டானத்திற்குக் கொண்டு வருவதுதான் மானிட ஜாதியின் வேலை.

கடவுள் உண்டு. அதை உங்களுக்கு ருஜூப்படுத்தத் தேவை யில்லை. ருஜூப்படுத்தவும் நான் விரும்பவில்லை அப்படி ருஜூப் படுத்தப் பார்ப்பது கடவுளை தூஷனை செய்வதாகும். அப்படியே கடவுளை மறுப்பது முட்டாள்தனமாகும். கடவுள் நமது இருதயத்தில், மானிட சமுதாயத்தின் இருதயத்தில், நம்மைச் சுற்றியுள்ள பிரபஞ்ச சிருஷ்டிகளில் இருக்கிறார். நமக்குத் துக்கம் ஏற்படுகிற போதும், சந்தோஷம் ஏற்படுகிறபோதும் நாம் அவரைப் பிரார்த்திக்கிறோம். கடவுளின் திருநாமத்தை மானிட ஜாதியானது மாற்றி வைத்திருக் கலாம்; அதனைக் களங்கப் படுத்தியிருக்கலாம்; ஆனால் இதுவரை அதனை அடக்கி ஒடுக்கி விடவில்லை. உலகம் ஒழுங்காக இயங்கிக் கொண்டு வருவதிலேயே ஆண்டவனின் பரம கருணை புலனா கின்றது. உங்களிலே நாஸ்திகர்கள் யாருமில்லை. அப்படி யாரேனும் இருந்தால் அவர்களைப் பார்த்துச் சாபமிடாதீர்கள்; ஆனால் கண்ணீர் விடுங்கள். நட்சத்திரங்கள் ஆகாயத்தில் பிரகாசித்துக் கொண்டிருக்கிற இரவு காலத்திலோ, நமக்கு அருமையானவர்கள் யாரேனும் இறந்து போயிருந்தால் அவர்களின் சவக்குழிக்குப் பக்கத்திலோ, மதப்பற்றுக் கொண்டு, அது காரணமாக வீர மரணமடைந்திருக்கின்றானோ அவன் முன்னிலையில் நின்று கொண்டு, எவரேனும் கடவுளில்லை யென்று மறுப்பானாகில் அவன் ஒன்று, அதிக துக்கமடைந்திருக் கிறவனா கவாவது இருக்க வேண்டும். அல்லது அதிகமான கொடுந்தன்மை யுடையவனாகவாவது இருக்கலாம்.''

கடவுள் கொள்கை, கடவுள் மறுப்பு கொள்கை பற்றி மாஜினி கூறியது மிக எளிமையான சொற்களில் தெளிவான நடையில் சாமிநாத சர்மாவின் தமிழாக்கம் மேலே அமைந்துள்ளதைக் காண்கிறோம்.

இங்கர்ஸால் நூலின் தமிழாக்கம்

ராபர்ட் கிரீன் இங்கர்ஸால் (1833-1899) அமெரிக்க நாட்டின் பேரறிஞன். ஆத்திகரான சாமிநாத சர்மா, நாத்திகரான இங்கர்ஸால் மணி மொழிகளை எடுத்தாள்வதில் ஆர்வம் காட்டியவர். 'இங்கர்ஸால் ஒரு நாத்திகன் என்று சிலர் சொல்கிறார்கள், இருக்கலாம் அதைப் பற்றி நமக்குக் கவலையில்லை. ஆனால், இவன் ஓர் அறிஞன் சுயமாகச் சிந்திக்கிற சக்தியுடையவன். அப்படி தான் சிந்தித்ததை தைரியமாக வெளியிலே சொல்லும் ஆற்றலுடையவன், என்பதில் யாருக்கும் எவ்வித அபிப்பிராய பேதமும் இருக்க

முடியாது.'' இவ்வாறு சாமிநாத சர்மா, இங்கர்ஸாலைப் புகழ்ந்துள்ளார்.

இங்கர்ஸாலின் சொற்பொழிவுத் திரட்டு நூலொன்றில் இருந்து "The liberty of man woman and child" என்பதை ''மானிட ஜாதியின் சுதந்திரம்'' என்னும் தலைப்பில் சாமிநாத சர்மா தமிழாக்கம் செய்தார். 'மனிதன்-பெண்-குழந்தையின் சுதந்திரம்' என்று சொற்களை வைத்து நூலின் தலைப்பைத் தராமல் 'மானிட ஜாதியின் சுதந்திரம்' என்னும் தலைப்பைத் தந்ததில்தான் சாமிநாத சர்மாவின் மொழிப் பெயர்ப்புத் திறன் அடங்கியுள்ளது. 'தொகுப்புப் பெயர் கொடுத்து வெளியிட்டிருக்கிறேன்' என்று அவர் கூறியுள்ளதையும் நோக்குக.

சொற்களுக்குப்பின் ஓடாமல், கருத்துக்களைச் சிக்கெனப் பிடித்து மொழி மரபையும் பின்பற்றி, அதன் ஆங்கில மூலத்தையும் தமிழாக்கத்தையும் பின்வருமாறு அறிவோம்.

ஆங்கில மூலம் :

"The laugh of a child will make the holiest day more sacred still, strike with hand of fire, O weird musician, thy harp strung with Apollo's golden hair, fill the vast cathedral aisles with symphonies sweet and dim, deft toucher of the organ keys, blow, bugler, blow, until thy silver notes do touch and kiss the moonlit waves, and charm the lovers wandering mid the vine-clad hills. But know, your sweetest strains are discords all compared with childhood's happy laugh the laugh that fills the eyes with light and every heart with joy. O rippling river of laughter, thou art the blessed boundary line between the beasts and men, and every wayward wave of thine doth drown some fretful friend of care. O Laughter, rose-lipped daughter of joy there are dimples enough in thy cheeks to catch and hold and glorify all the tear of grief".

தமிழாக்கம்

ஒரு குழந்தையினுடைய சிரிப்புத் தான், புனிதமான நாளை இன்னும் அதிகமாகப் புனிதப்படுத்தும். ''ஓ! பாடகனே! நீ எவ்வளவு இனிமையாக வேண்டுமானாலும் பாடலாம். குழல் ஊதுவோனே! சந்திர கிரணங்களையும் குளிர்விக்கும்படி நீ குழல் ஊதலாம். உன் இசை கேட்டு காதலர்கள் பரவசமடையலாம். ஆனால், பாடகனே! ஊதுகுழலோனே! உங்களுடைய இன்னிசைகளெல்லாம், குழந்தையின் சிரிப்புக்கு முன் அபஸ்வரமல்லவோ? அந்தச் சிரிப்புத்தான் கண்களில் ஒளியைக் கொடுக்கிறது; இதயத்தைச் சந்தோஷப்படுத்துகிறது.

ஓ! சிரிப்பாகிய நதியே! நீதான் மனிதனுக்கும் மிருகத்திற்கும் இடையேயுள்ள எல்லை. உன்னிடத்திலிருந்து உதிக்கின்ற ஒவ்வொர் அலையும், கவலையை ஒழிக்கும் சக்தியைப் பெற்றிருக்கின்றது. நீ கன்னத்தில் ஒளி கொடுத்துப் பிரகாசிக்கின்ற பொழுது அங்கே தண்ணீர் தங்கியிருந்தால் தானாகவே மறைந்துவிடுகிறது.''

மேலே இங்கர்ஸாவின் வருணனையில் கவிதை நடையின் களியாட்டத்தைக் காண்கிறோம். அடுத்துவந்த தமிழாக்கத்தில் கருத்தின் எளிமையையும், கருத்தையும் காண்கிறோம். எந்த வாசகர் களுக்காக மொழிபெயர்க்க வேண்டுமோ அவர்களைக் கருத்தில் கொண்டு மொழி பெயர்க்க வேண்டும் என்னும் மொழி பெயர்ப்பு நெறிக்கு ஏற்ப, இங்கு, மொழி பெயர்த்துள்ளார்.

''மகாத்மா காந்தி''

1939-இல் தத்துவ மேதை டாக்டர் எஸ்.இராதாகிருஷ்ணன் காந்தியடிகளைப் பற்றி அறுபத்து மூன்று உலக அறிஞர்கள் எழுதிய கட்டுரைகளைத் தொகுத்து, "Mahatma Gandhi' என்னும் நூலாக வெளியிட்டார். சாமிநாத சர்மா பர்மாவில் இருந்தபொழுது, இந்த நூலைத் தமிழில் மொழி பெயர்த்தார். ரங்கூன் புதுமலர்ச்சி நூற் பதிப்புக் கழகத்தார் 'மகாத்மா காந்தியை' 1941-இல் வெளியிட்டனர்.

'மகாத்மா காந்தி' நூலைப் பற்றி விரிவானதொரு விமர்சனம் ஜூன், 1941 - 'ஜோதி'யில் ஐந்தரை பக்கங்களில் வெளிவந்துள்ளது. 63 கட்டுரையாளர்களை பற்றி ஒரு புள்ளி விவரம் விமர்சனத்தில் பின்வருமாறு தரப்பெற்றுள்ளது. கட்டுரைகள் எழுதியிருக்கும் 63 அறிஞர்களில் 11 பேர் இந்தியர்கள்; 52 பேர் இந்தியரல்லாதார். இந்த 52 பேரில் 50 பேர் மேனாட்டார்; 2 பேர் கீழ்நாட்டார். கட்டுரை எழுதிய 63 பேரில் 51 பேர் கிறிஸ்தவர்கள்; 5 பேர் முஸ்லீம்கள்; ஒருவர் பார்சி, 2 பேர் பௌத்தர்கள், 7 பேர் ஹிந்துக்கள்.''

இந்த நூலை மொழிபெயர்க்கக் கிடைத்த வாய்ப்பை இதய எழுச்சியுடன் பின்வருமாறு, வருணனை செய்துள்ளார் சாமிநாத சர்மா''.

''இந்த சந்தர்ப்பம் எனது அறிவில் ஒரு முத்திரை; எனது ஆத்மாவின் அசைவு; எனது வளர்ச்சியில் ஒரு படி''

'எனது நன்றி' என்னும் முன்னுரையில் நூல் வலியுறுத்தும் கருத்தை பின்வருமாறு சுட்டிக் காட்டுகிறார்.

''காந்தி பழமையின் பிரதிநிதி; புதுமையின் சங்கநாதம், இயற்கையின் தொண்டர், செயற்கையின் எஜமானர். தாழ்ந்தவர்

களுக்குச் சுமை தாங்கி; வாழ்கிறவர்களுக்குக் கலங்கரை விளக்கம். இவரைக் கடவுளாக நாம் வழிபடுகிறோம். ஆனால் மனிதராக இவரை நாம் பின்பற்ற வேண்டுமென்று உலக அறிஞர்கள் இந்த நூல் மூலம் நமக்கு வலியுறுத்துகிறார்கள்.''

இந்த நூலில் பேரறிஞர் ஆனந்த குமாரசாமி அவர்கள் 'மகாத்மா' என்ற சொல்லின் பல்வேறு விளக்கங்களை உபநிடதம், பௌத்தமத சூத்திரங்கள், பகவத்கீதை, சீன ஞானி கன்பூசியஸ் மற்றும் சில கிறிஸ்துவ ஞானிகள், ஆகியோரின் கருத்துக்களைக் கொண்டு ஆழச் சிந்தித்துத் தந்துள்ளார். ஆனால் சாமிநாத சர்மா முதலில் குறிப்பிட்டதைப் போல் ''தமிழில் படிக்கிறபோது கூடியவரை தொடர்பு விடாமலும், சுவை குன்றாமலும் இருக்க'' மேற்கோள்கள், உதாரணங்களில் பெரும்பாலானவற்றை ஆனந்த குமாரசாமி கட்டுரையின் தமிழாக்கத்தில் வாசகர்களை கருத்தில் கொண்டு விட்டு விடுகின்றார்.

சான்றிற்கு ஒன்றைப் பார்ப்போம்.

ஆங்கில மூலம்.

"In Mahatma, Maha is simply "great', "eminent" and atman, like Greek pneuma primarily "spirit"" as distinguished from soul and body. But because the spirit is the real being of the man, as distinguished from the accidents of this being, its temporal manifestation as so-and-so characterized by particular qualities and properties, atman is reflexive usage acquires the secondary value "self" whatever physical (hylic), psychic or spiritual (pneumatic) self we may intend it is precisely at his point that the fundamental signifience of the traditional and so often repeated injunction, "know thyself", emerges, for we have "forgotton what we are" and taking pride in being "someone", are of those to whom the words of the song of songs, "If thou knowest not thyself, depart", can be applied. The answer to the question "who are thou?" is the password demanded at the Gate: it is only to those who can answer in accordance with the "That art thou" of the Upanisads that the welcome will be extended, "Come in, O myself" none who answers by a Personal or family name is admitted. The condition of deification is an eradication of all otherness."

தத்துவ மேற்கோள்கள் செறிந்த பகுதியால் தமிழ் வாசகர் களுக்கு மருட்சி ஏற்படாமல் இருக்க, அவற்றைத் தவிர்த்து சாமிநாத சர்மா செய்த மிகச் சுருங்கிய, எளிமையானத் தமிழாக்கம் வருமாறு :

'மகாத்மா' என்ற பதத்தில் 'மகா என்றால் பெரிய என்று அர்த்தம். 'ஆத்மா' வென்பது மனிதனிடத்திலேயுள்ள புருஷ சக்தியை அதாவது கடவுள் சக்தியைக் குறிப்பிடுகிறது. இதுதான் உண்மையான மனிதன். இந்த மனிதனை அறியவே நமது முன்னோர்கள் பாடுபட்டிருக்கிறார்கள். 'தத்துவமஸி' என்ற உபநிஷதவாக்கியம் இதனையே குறிப்பிடுகிறது.

சாமிநாத சர்மாவின் தமிழ் மொழி பெயர்ப்பு நடை தற்கால தமிழ் உரைநடையின் வளர்ச்சிக்கு உறுதுணையாய் நின்றது என்பது முடிவான உண்மையாகும்.

7. தற்கால உரைநடை துறை

சாமிநாத சர்மாவை நினைத்தாலே, அவர் நூல்களை படிப்போர் முன் முதலில் தோன்றுவது அவருடைய தமிழ் நடையே. அக்காலத்தில் அவருடைய நூல் விமர்சனம் ஒவ்வொன்றிலும் அவருடைய தமிழ் நடையின் சிறப்பு முக்கியமாகக் குறிப்பிடப் பெற்று வந்தது. அவருடைய தோற்றப் பொலிவில் காணப்பெறும் மென்மை, இனிமை, ஆரவாரமின்மை, எளிமை, சிந்தனை ஆழம் முதலானவை யாவும் அவருடைய தமிழ் நடையிலும் காணப்படு கின்றன ஆம்; அவரேதான் அவருடைய நடை; அவர் நடையே தான் அவர்; அவருடைய தெள்ளிய தமிழ் நடையே ஓர் இலக்கியம்.

தமிழ் உரைநடை வளர்ச்சியின் வரலாற்றை வாசகர்கள் அறிய வேண்டும் என்னும் வேட்கை கொண்டு தனது 'ஜோதி' இதழில் (ஆகஸ்ட், 1938) 'தமிழ் வசன நடையில் சில மாதிரிகள்' என்னும் தலைப்பில் 'நக்கீரர் நடை' முதல் 'நவீன நடை' வரையில் பல எடுத்துக் காட்டுக்களைத் தொகுத்தளித்துள்ளார். ஒவ்வொரு எடுத்துக் காட்டுடன் தன்னுடைய கருத்தையும், நகைச்-சுவையுடன் சுருக்க மாகச் சேர்த்துள்ளார். தமிழ் உரைநடை வரலாற்றைப் பற்றிய சாமி நாத சர்மாவின் கருத்தை, பின்வருமாறு அறிய முடிகின்றது.

நக்கீரர் நடை : இது சங்க காலத்து உரைநடைக்கு ஒரு மாதிரி. இந்த நடையைப் பார்த்துதான், சிலர் ஓ! தமிழ் மிகவும் கஷ்டமான பாஷை' என்று சொல்கிறார்கள் போலிருக்கிறது.

மணிப்ரவாள நடை : முன்னெச்சரிக்கை - இதனைப் படித்து விட்டு பல் உடைஞ்சு போச்சே என்று சொன்னால் அதற்கு நாம் பொறுப்பில்லை. வேண்டுமானால் முதலில் பற்களை 'இன்ஷ்யூர்' செய்துவிட்டுப் பிறகு இதனைப் படியுங்கள்.

புராண நடை : 'அதோ வாரும் பிள்ளாய்! காற்புள்ளி முற்றுப் புள்ளி ஆகிய ஒன்றுமே இல்லாத இந்த வாக்கியங்களை இன்னும் படிக்கவில்லையானால் நீங்கள் முழுப் புள்ளியாவதுதான் எப்பொழுது?

உரைநடை : முற்காலப் புலவர் சிலர் செய்யுட்களுக்கு உரை எழுதி வைத்துப் போயுள்ளதற்கு ஓர் உதாரணம். இதற்கு வேறு உரை வேண்டுமா உங்களுக்கு?

பாதிரியார் நடை : ரோமை ராச்சியம் செழிப்பான நிலைமையிலிருந்த காலத்தில் பிரித்தானியர் எப்படியிருந்தார்கள் பார்த்தீர்களா?

பண்டித நடை : அங்க சேஷ்டைகளில்லாமல் இந்த வாக்கியங்களைப் படித்து விடுங்கள் பார்ப்போம்.

தனித் தமிழ் நடை : தமிழ் இனியமொழி என்பதற்கு இதனினும் வேறு சான்று வேண்டுங்கொல்?

நவீன நடை : இதனைப் படிக்கிறபோது அழகான ஒரு சிறு பெண் தாவித் தாவித் குதிக்கிறமாதிரி இல்லையா?

தற்காலத் தமிழ் உரைநடை வரலாற்றில் தனித் தமிழ் இயக்கத்தின் போர்க்குரல் மொழித் தூய்மைக்கு அரண் வகுத்தது. ஆனால், பொது மக்கட் தொடர்புச் சாதனங்களின் செல்வாக்கும், பயன்பாட்டு நெறிகளும் தனித் தமிழ் இயக்கம் வலியுறுத்தும் நடையை ஆள்வதில் கருத்து வேற்றுமைகள் தோன்றக் காரணங்களாயின. இத்தகைய கருத்து வேற்றுமைக் குரலை பின்வருமாறு சாமிநாத சர்மாவிடமும் கேட்கிறோம்.

''தமிழர்களாகிய நாம், கொழுமுனையற்ற கலப்பையாகிவிட்ட தனித் தமிழைக் கொண்டு, புராதனப் பெருமை என்று மணற்காட்டை எத்துணை நாட்கள் உழுது கொண்டிருப்பது? இதிலிருந்து நாம் என்ன சாகுபடி செய்ய முடியும்? எனவே, தமிழ் மொழியானது, தனது தனித்துவத்தைவிட்டுக் கொடாமல், பிறமொழிகளுடன் உறவாட வேண்டும்.

''தமிழ் மொழி நடையைப் பற்றி தங்கள் கருத்தென்ன'' என்னும் ஒரு கேள்வி சாமிநாத சர்மாவிடம் கேட்கப்பட்டது. அதற்கு அவர் அளித்த பதில் வருமாறு :

''எளிய நடை என்ற பெயரால் கொச்சை நடையில் எழுதுவது தமிழ் மொழிக்கு கௌரவம் கொடுப்பதாகாது. பத்திரிகைகளுக்கு எழுதுவது வேறு, புத்தகங்களுக்கு எழுதுவது வேறு. எந்த ஒரு நூலும் அமர வாழ்வு பெற வேண்டுமானால், இலக்கண வரம்புக்குட்பட்ட எளிய நடையில் அமைய வேண்டும் என்பதை எழுத்தாளர்கள் கவனத்தில் வைத்துக் கொள்வது நல்லது. இது விஷயத்தில் பாரதியார், மகாமகோபாத்தியாயா சாமிநாதய்யர் போன்றோர் வழி காட்டியிருக்கிறார்கள்''

சாமிநாத சர்மாவின் தமிழ்நடையில் முதன் முதலில் மாற்றங் காணத் தூண்டியவர் தமிழ்த் தென்றல் திரு.வி க. சாமிநாத சர்மாவே இந்தக் குறிப்பை 'நான் கண்ட நால்வர்' என்னும் தன்னுடைய நூலில் எழுதியுள்ளார்.

முதல் நூலான 'கௌரீ மணி' யில் வடமொழிச் சொற்களைச் சற்று கூடுதலாகவே பெய்துள்ளார், சாமிநாத சர்மா. சமஸ்கிருத மொழியறிவை புலப்படுத்துவதை தனிப்பெருமைக்குரியது என்று அவர் கருதிய காலம், அக்காலம் ஆனால், இந்த முதல் நூலில் கூட மொழித் தூய்மைக்குரிய கூறுகளைக் கொண்ட நல்ல நடையையும் ஆங்காங்கே ஆண்டுள்ளார். இதற்கு ஒரு சான்று, பின்வரும் பகுதி.

''மண் கொதிப்ப அறல் கொதிப்ப வளி கொதிப்ப எண்ணுவார் எண்கொதிப்ப என்பதாகச் சூர்யபகவான் தன் உக்ரத்தோடு கூடி ஆகாயத்தின் மத்தியில் வந்தான்''

சிற்சில இடங்களில் செயற்கையாகச் சம்ஸ்கிருதச் சொற்கள் ஆண்டுள்ளார், சாமிநாத சர்மா இவற்றுள் 'அசகஜம்' என்பதொன் றாகும். எதிர்மறை பொருளைச் சம்ஸ்கிருதத்தில் 'அ' கர எழுத்து சொல்லின் முன் வழங்கப்படுவதுண்டு. இதையொட்டி சாமிநாத சர்மா 'சகஜம்' என்பதற்கு எதிரிடையானப் பொருளைக் குறிக்க 'அசகஜம்' என்று வழங்கியுள்ளார். ஆனால், இந்த 'அசகஜம்' சமஸ்கிருத வழக்கில் இல்லை ''பாரத மாதாவின் கடிதங்கள்'' ஒன்றில் பின்வரும் பகுதியில், அசகஜம், வந்துள்ளது.

''பெற்ற தாயினிடத்திலே, பிறந்த நாட்டினிடத்திலே பற்றுக் கொண்டிருப்பது, பக்தி பூண்டொழுகுவது சகஜமே தவிர, அப்படியில்லாமலிருப்பதுதான் அசகஜம்''

''பாணபுரத்து வீர''னில் தன்னுரையாக, நன்றியுரையாக அமைய வேண்டிய பகுதியில், சாமிநாத சர்மா ''நாந்தி'' என்ற சமஸ் கிருதச் சொல்லில் தலைப்பு தந்துள்ளது, படிப்போரை வியப்படையச் செய்யும்.

''நாந்தி என்பது சமஸ்கிருத நாடக மரபிற்குரிய ஒரு சொல், ''சபையோரை மகிழ்விக்க உதவும் பாட்டு'' என்பது ''நாந்தி என்று பொருள் பெறும்.'' நந்தன்தி கால்யாணி கவீந்த்ர வர்தா'' என்பது 'நாந்தி' ஆகும்.

இது நாடகங்களில் முதலில் பாடப்படும் பாடலாகும். இதில் தெய்வ வணக்கமும் நாடகத்தின் போக்கைக் குறிப்பிடும் குறிப்பும்

இருக்கும். இதைப் பொதுவாக சூத்ரதாரன் பாடுவான் அல்லது திரைமறைவில் சூத்ரதாரன் இருந்து இந்தப் பாடல் பாடிமுடித்தவுடன் அரங்கில் தோன்றுவான். இதைத் தொடர்ந்து சூத்ரதாரன் தனது மனைவியுடனோ அல்லது மற்றொரு நடிகனுடனோ உரையாடுவான். அது நாடகத்தில் முன்னுரை போல் அமையும்.

சாமிநாத சர்மாவின் தமிழ் நடை வாசகர்களைக் கவர்ந்து அறிவூட்டுவதில் முன்னணியில் உள்ளது. வாசகர்களோடு தன்னை இணைத்துக் கொண்டு வேண்டுமானால் தன்னையே ஒரு வாசகனாக்கிக் கொண்டு, தனது நடையாக அமைத்துக்கொண்டார், சாமிநாத சர்மா. இது மட்டுமல்லாமல் தன்னுடைய வரலாற்று நாயகர் களையும் வாசகர்களுடன் நேரடியாகப் • பேச வைத்துவிடுவார். ''ரூஸ்ஸோ' என்னும் நூலில் சாமிநாத சர்மாவின் முற்கூறிய நடைப்பாங்கை அறிகிறோம். இதோ ஒரு சான்று.

''என்னுடைய துன்பங்களில் முதல் துன்பம், நான் பிறந்தது தான் என்று மனம் புழுங்கி எழுதுகிறான் ரூஸ்ஸோ'' நூலின் தொடக்க வரிகள் இவை; ரூஸ்ஸோ வாசகர்களிடம் நேரடியாகப் பேசுகிறார்.

நூலின் தொடக்கத்திலேயே எடுத்துக் கொண்ட பொருளின் தன்மைகளை விளக்கமுற வரைவதிலும் சாமிநாத சர்மா வல்லவர் பிளேட்டோவின் அரசியலில் முன்னுரைப் பகுதியில் ஸாக்ரட்டீஸைப் பற்றிய அவருடைய பின்வரும் வருணனை, நூலினுள் செய்திகளை அறிய வழி வகுக்கின்றது.

''ஸாக்ரட்டீஸ் எதைப் பற்றியும் ஒன்றும் எழுதி வைத்துவிட்டுப் போகவில்லை. ஆனால், அவன் ஒரு 'சிந்தனைப் பட்டரை', அதிலிருந்து மனித வாழ்க்கைக்குத் தேவையான சகல விஷயங்களும் உற்பத்தியாயின. அவன், மேடைப் பிரசங்கியன்று; ஆனால், அவன் பேச்சைக் கேட்க எப்பொழுதும் ஜனங்கள் கூடுவார்கள். இவன் தனக்கொன்றும் தெரியாதென்று சொல்லிக் கொண்டான்; ஆனால் இரண்டாயிரத்தைந்நூறு வருஷங்களுக்குப் பிறகு இப்பொழுது கூட அவனுடைய ஞானக்குரல் நமக்கு ஸ்பஷ்டமாகக் கேட்கிறது. அவன் அரசியல்வாதியல்ல; ஆனால் பண்பட்டதோர் திட்டத்தை அவன் வகுத்துக் கொடுத்திருக்கிறான். கட்சி கட்டிக்கொண்டு வாதாடுவது அவன் சுபாவமல்ல. அழியா ஆத்மாக்களையுடைய மனிதர்கள், ஏன் நீதி ஸ்தலங்கள் வழக்காடி வழக்காடி காலத்தை வீணாக்குகிறார்கள் என்பது அவனுக்கும் புரியாத விஷயமாகவே இருந்தது; ஆனால் அவனுடைய வாழ்க்கையின் பெரும்பகுதி, தர்க்கம் செய்து தர்க்கம்

செய்தே உண்மை காணும் முயற்சியில் ஈடுபட்டிருந்தது. அவனே தனது வாழ்நாளின் கடைசி பாகத்தில் நீதி ஸ்தலத்திற்குச் சென்று தன் கட்சியை எடுத்துச் சொல்ல வேண்டியதாயிற்று''.

வரலாற்று நாயகர்களை படர்க்கை ஒருமையில் அழைப்பதற்கு வ.வே.சு.ஐயரைப் பின்பற்றியதாகக் குறிப்பிட்டுள்ளார், சாமிநாத சர்மா. ''இந்த நூலின் முஸோலினியை, படர்க்கை ஒருமையிலேயே அழைத்திருக்கிறேன். இப்படி அழைப்பதே கம்பீரமாகவும் சரித்திர நாயகனுக்குப் பெருமையைத் தருவதாகவும் இருக்கிறதென்பது எனது கருத்து. காலஞ் சென்ற வ.வே.சு. ஐயர் அவர்களே இதில் எனக்கு வழிகாட்டி''. கருத்துத் தெளிவிற்கும் நடையோட்டத்திற்கும் ஒருசான் றாகப் பின்வரும் பகுதியை எடுத்துக் கொள்ளலாம்.

''மார்க்ஸ் வெளிப்பார்வைக்குக் கருணையற்றவன் போல் காணப்பட்டான். ஆனால், அவன் வகுத்த சமதர்ம தத்துவம், மானிட சமுதாயத்தின் மீது அவனுக்கிருந்த அபார கருணையை அஸ்திவார மாகக் கொண்டது; அவன் வெறும் அறிவினால் மட்டும் சமுதாய சேவை செய்ய முன் வரவில்லை; அவன், தன் அறிவை உணர்ச்சி யோடு மிதக்கவிடாமல் உழைப்போடு ஒன்றுபடுத்தினான்....அவன் பேச்சு சொல்லடுக்கல்ல; எண்ணத்தின் ஒசை. அதில் அழகு இராது; ஆழமிருக்கும். அது யாருக்கும் உற்சாகத்தை உண்டு பண்ணாது; ஆனால் யாருடைய சிந்தனையையும் துண்டிவிடும். இங்ஙனமே அவனுடைய எழுத்துக்களும் வாக்கியக் கோவையல்ல; பொருள் செறிந்த சுரங்கம்''.

''மகனே! உனக்கு'' என்னும் நூலில், ''புனை பெயருக் கேற்றாற்போல் ஆசிரியர், தமது நடையைச் சிறிது மாற்றிக் கொண்டி ருக்கிறாரென்பது, இந்நூலைப் படித்தவர்களுக்கு ஒருவாறு புலனாகும்'' என்று பதிப்பாளர் அரு.சொக்கலிங்கம் சுட்டிக் காட்டி யுள்ளார். அங்கு அவர் குறிப்பிடும் பனை பெயர் 'வ. பார்த்தசாரதி' என்பதாகும். ஆனால் இந்நூலின் நடை புனை பெயரால் மாற்றம் பெறவில்லை; கடித வடிவமாக எழுதப்பெற்றதால் நடை மாறி யுள்ளது. சில எடுத்துக்காட்டுக்களைப் பார்ப்போம்.

1. ''உனக்குச் சில வார்த்தைகள் சொல்லப் போகிறேன். கொஞ்சம் கவனமாகக் கேள், நான் சொல்வது உனக்குப் பிடித்தமில்லாதிருக்கலாம்; அல்லது உன்னால் அனுஷ் டானத்திற்குக் கொண்டுவர முடியாதிருக்கலாம். ஆனால் உன் சந்ததியார்களுக்காவது இவை பயன்படுமல்லவா?

2. ''மகனே! பார்த்தாயா? ஸ்பெயினைப் பணக்கார தேசமாக்கி, உலகத்திலே மற்ற வல்லரசுகளின் எதிரே அதற்கு மகத்தான ஒரு கௌரவ ஸ்தானத்தை ஏற்படுத்திக் கொடுத்தவனுடைய கதியைப் பார்த்தாயா'' ஆனால் அவனுடைய புகழ் இன்னும் பிரகாசிக்கிறதல்லவா?''

காலந்தோறும் சாமிநாத சர்மாவின் தமிழ் நடை எவ்வாறு அமைந்தது என்பதை தனியாக ஆய்வோமாயின் அவருடைய நடைச் சிறப்பை மேலும் அறியலாம்.

சாமிநாத சர்மாவின் தமிழ்நடையை முதன் முறையாக தமிழ் உரைநடை வரலாற்றில் ஆய்வு செய்தவர், அறிஞர் மு. அருணாசலம் அவர்களாவார். 1945-இல் வெளிவந்த அவருடைய 'இன்றைய தமிழ் வசன நடை'யில் உள்ள சாமிநாத சர்மாவின் தமிழ் நடையைப் பற்றிய மதிப்புரை வருமாறு.

''இவ்வாசிரியருடைய நடையில் சிறப்பாயுள்ள அம்சம், இவர் சுற்றி வளைத்துப் பேசாமல், எடுத்த எடுப்பில் நேராக விஷயத்துக்குள் போய்விடுகிறார். போனபிறகும், அங்கேயே நின்று விடுவதில்லை. மேலே மேலே போகிறார். பொதுவாய் அரசியல் நூல்களில் இந்தவிதமாக விஷயத்தைத் தொடர்ந்து சொல்வது கொஞ்சம் கடினமான காரியம். இதை இவர் எளிதாகச் சாதித்து விடுகிறார். நடை எளிய நடை; சாதாரணப் பேச்சு நடைதான். ஆனால் அதை இவ்வாசிரியன் கொஞ்சம் அழகுபடுத்தியிருக்கிறார். இதன் பயனாய் நடையில் ஒரு கவர்ச்சியிருக்கிறது. கவர்ச்சி காரணமாக, எந்தச் சிக்கலான விஷயத்தை அவர் சொன்னாலும், நாம் சிறிதும் சோர்வின்றி அவர் சொல்வதைத் தொடர்ந்து படிக்க முடிகிறது''.

''திரு.வி.கல்யாணசுந்தர முதலியாரின் தொடர்பு காரணமாகச் சர்மா அவர்களுக்கு நடையில் ஒருவகை எழுச்சியும் அழகும் அமைந்துவிட்டன. எழுச்சியினால் படிப்போர்க்கு ஊக்கம் பிறக்கிறது; அழகினால் சுவை தோன்றுகிறது''.

''பொதுவாய் வேறெங்கும், தமிழ் நடையில் அழகு என்று சொல்லும்போது, உயிரற்ற நடைக்கே மற்றவர்கள் அலங்காரம் செய்யக் காண்கிறோம் இது வெறும் பிரேதலங்காரமாய் முடிகிறதென்பதைச் சொல்ல வேண்டியதில்லை. அபூர்வமாய்ச் சிலருடைய நடை, பொம்மைக்குச் செய்யும் அலங்காரம் போல இருக்கும். ஆனால் சர்மாவின் நடையிலுள்ள அழகு, உயிருள்ள குழந்தைக்குச்

செய்யும் அலங்காரத்தையொத்தது. குழந்தையே கவர்ச்சியுடையது; அலங்காரமும் சேர்ந்தால் இன்னும் விசேஷம். இவர் எழுதும் 'பாணி'யை எழுத்தாளர்கள் கற்றுக் கொண்டால், அவர்களுக்கும் எவ்வளவோ நன்மையுண்டு''

முடிவுரை

உலக நாடுகள் வரலாறு, உலக அரசியல் தலைவர்கள் வரலாறு, உலக அரசியல் தத்துவங்கள் முதலானவற்றை தமிழில் வழங்கும் பொழுது, அவற்றை விரும்பிக் கற்க வாசகர் கூட்டம் ஒன்று சாமி நாதசர்மாவின் தமிழ்நடை காரணமாகவும் உருவாகியது.

தமிழ்நடை அமைப்பில் தமிழ்மொழி மரபும், இலக்கணக் கட்டுக்கோப்பும் பொதுவாக மீறப்படாமல் பார்த்துக் கொள்வதில் சாமிநாத சர்மா கருத்து செலுத்தியுள்ளார்.

மிக நீண்ட தொடர்களை தவிர்த்தல், படிப்போரை தம் பக்கம் ஈர்க்கும் விளிகள், அலங்கார அடுக்குச் சொற்களைப் பயன்படுத் தாதது, பேசுவது போல எழுதுவது போன்ற பண்புகள் இவர் நடைக்குரியன.

8. பின்னுரை

இதுவரை குறிப்பிடப்படாத சாமிநாத சர்மாவின் சில நூல்களைப் பற்றியக் குறிப்புகளைக் கூறுகின்றது, இந்தப் பின்னுரை.

விஞ்ஞானிகள் வரலாறு : விஞ்ஞானிகள் சிலரின் வரலாற்றை சிறு நூல்களாக எழுதியுள்ளார், சாமிநாத சர்மா. அவையாவன, ஐஸக் நியூடன், பிரபுல்ல சந்திரரே, ஜகதீஸ் சந்திரபோஸ், சார்லஸ் டார்வின், தாமஸ் எடிஸன் இத்தகைய நூல் வருகையை எழுதியதற்கான காரணத்தைப்பற்றி சாமிநாத சர்மா எழுதியாதவது.

''இந்நூல் வரிசையில் விஞ்ஞான சாஸ்திரிகள், வான சாஸ்திரிகள், தத்துவ சாஸ்திரிகள் முதலிய பலதுறை அறிஞர்களின் ஆராய்ச்சி விளக்கத்தைக் காணமுடியாது. அந்த நோக்கத்தோடு இந்த வரிசை நூல்கள் எழுதப்படவில்லை. அவர்கள் எங்கே பிறந்தார்கள், எந்தச் சூழ்நிலையில் வளர்ந்தார்கள், வறுமை, நோய், ஏளனம், எதிர்ப்பு முதலியவற்றையெல்லாம் எப்படிச் சமாளித்தார்கள், அவர்களுடைய அன்றாட வாழ்க்கை எவ்வாறு நடைபெற்றது, மிக மிகச் சாதாரண நிலைமையிலிருந்து, எங்ஙனம் தங்களுடைய சலியாத முயற்சியினாலும், இடைவிடாத உழைப்பினாலும் படிப்படியாக முன்னுக்கு வந்தார்கள் என்பன போன்ற விவரங்களே சுருக்கம் சுருக்கமாகத் தரப்பட்டிருக்கின்றன. இந்த சொல் வரிசையைப் படிக்கிற அன்பர்கள், சிறப்பாக இளைஞர்கள், அவர்களைப் போல் முயன்று, உழைத்து, மேலுக்கு வரவேண்டுமென்பதே என் பிராத்தனை''

ஆன்மிக ஞானிகள் வரலாறு :

ஸ்ரீ ரமண மகரிஷிகள் (1932), ஸ்ரீ இராமகிருஷ்ணர் ஒரு தீர்க்கதரிசி (1947) என்னும் இரு ஆன்மீக ஞானிகள் வாழ்க்கை வரலாறுகளையும், மிகச் சுருக்கமாக எழுதியுள்ளார், சாமிநாத சர்மா. இரண்டாவது நூலில் பின் வரும் தமது வரலாற்றுப் பார்வையை விளக்கியுள்ளார்.

''இந்தியா மீது எத்தனையோ படையெடுப்புகள் வந்து மோதி யிருக்கின்றன. வேறெந்த நாடாயிருந்தாலும் இவைகளைத் தாக்கு பிடிக்க முடியாமல் வீழ்ந்து பட்டிருக்கும், ஆனால் இந்தியா வீழவே இல்லை; வாழ்ந்து கொண்டிருக்கிறது; இன்னும் பல கோடி நூறாயிரம் ஆண்டுகள் வாழ்ந்து கொண்டிருக்கும், வாழ்ந்து கொண்டிருப்ப தோடு மட்டுமல்லாமல் உலகத்திற்கு வழிகாட்டிக் கொண்டிருக்கும். இந்தியாவிலே நூற்றாண்டுகள் கணக்காக அவதரித்துக் கொண்டு வந்திருக்கிற உத்தம புருஷர்களென்றோ, தீர்க்க தரிசிகளென்றோ எப்படி வேண்டுமானாலும் அழைக்கலாம். இந்தியா சாசுவதமாக வாழ்ந்து கொண்டிருப்பதற்கும், உலகத்திற்கு நிரந்தரமாக வழிகாட்டிக் கொண்டிருப்பதற்குமான அஸ்திவாரத்தை அமைத்துவிட்டுப் போயிருக்கிறார்கள். இந்த அஸ்திவாரத்தான் ஆன்மீக அஸ்திவாரம். இந்த அஸ்திவாரத்தின் மீதுதான் இந்தியாவின் அரசியல் வாழ்வு, சமுதாய வாழ்வு, பொருளாதார வாழ்வு ஆகிய யாவும் நிர்மாணம் செய்யப்பட்டிருக்கின்றன. அழியாத ஒன்றை அஸ்திவாரமாகக் கொண்டிருப்பதால்தான் இந்தியா அழியாமல் இருந்து வருகிறது; இனியும் இருந்து வருமென்று சொல்லமுடிகிறது.''

வாழ்வியல் நூல்கள் :

வாழ்வியல் நூலின் தேவையைக் கருதி, சாமிநாத சர்மா ''இக்கரையும், அக்கரையும்'' (1947) என்னும் நூலையும் எழுதி யுள்ளார். இதில் இக்கரையும், அக்கரையும், உழைப்பு பிழைப்பும், படிப்பும் பண்பாடும், அறிவும், அன்பும், வெற்றியும் வாழ்க்கையும், பணமும் மனமும், இளமையும் முதுமையும், நன்மையும் தீமையும், சான்றோரும் சிற்றினமும், இன்பமும் துன்பமும், வீடும் நாடும், காலமும் கடவுளும் என்னும் கட்டுரைகள் உள்ளன.

வாழ்வியல் நோக்கில் எழுதப்பட்ட மற்றொரு நூல், ''எப்படி வாழ வேண்டும்?'' என்பதாகும் கவிஞன், ஓவியன், நடிகன், ஆசிரியன், வைத்தியர், வியாபாரி, உத்தியோகஸ்தன், விவசாயி ஆகியோர், 'எப்படி வாழ வேண்டும்' என்பதை உணர்த்துவதே, இந்த நூல். இந்நூலின் 'வாசகர்களுக்கு' என்றும் முன்னுரையில் சுதந்திர இந்தியாவின் ஒழுங்கும், ஒழுக்கமும் நிலைபெறப் பாடுபட வேண்டும் என்னும் கருத்தை பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

''இந்நூலில் இடம் பெற்றிருக்கும் எண்மரும், ஒரு சமுதாயத்தின் நல்லியக்கத்துக்கு இன்றியமையாதவர்களென்பது என் கருத்து .. இந்நூலில் ஒவ்வொருவரைப் பற்றியும் பிரஸ்தாபிக்கிற போதும், ஒழுங்கையும் ஒழுக்கத்தையும், வற்புறுத்தி வந்திருக் கிறேன்... இழந்துவிட்ட சுதந்திரத்தை மீண்டும் பெற்றிருக்கிற ஒரு

ஜாதி, இந்த இரண்டு பண்புகளையும் வெகு ஜாக்கிரதையுடன் போற்றிக் காப்பாற்றி வரவேண்டும். சுதந்திர இந்தியாவே! இதை நன்றாக நினைவில் வைத்துக் கொள்.''

நகைச் சுவை நூல்

சாமிநாத சர்மாவின் நகைச்சுவையுணர்வு ஆரவாரமற்றது; அமைதியும், மென்மையும், நயமும் கலந்தது; அவருடைய உரை யாடல்களில் ஊடுருவி நிற்கும் நகைச் சுவையுணர்வு கட்டுரை இலக்கியத்திலும் இழைந்துள்ளது. வாழ்வியலில் நகைச் சுவை யுணர்வு மிக மிக இன்றியமையாதது. அவருடைய நகைச் சுவைக் கட்டுரைகளின் தொகுப்பு, 'நகைத்தல் நல்லது' (1960) என்னும் நூலாக வெளிவந்தது' எப்பொழுது சிரிக்கலாம், எப்பொழுது சிரிக்கக் கூடாது; சிரிப்பில் எத்தனை வகையுண்டு போன்ற கருத்துக்களை விளக்குவது இந்நூல்.

காந்தியடிகள் பற்றி :

காந்தியடிகள் பற்றி சாமிநாத சர்மாவின் பல கட்டுரைகளில் வாசகர்கள் பரவலாக அறிய வாய்ப்பிருந்தாலும்; அவரைப்பற்றி தமிழில் ஒன்றும், ஆங்கிலத்தில் ஒன்றுமாக இரு சிறு நூல்களை தனியாக எழுதியுள்ளார்.

'ஜோதி' இதழில் மகாத்மா காந்தியைப் பற்றி பல முறை தலையங்கங்கள் எழுதியுள்ளார், சாமிநாத சர்மா. இந்தத் தலையங் கங்கள் தொகுக்கப்பெற்று ''காந்தியார்'' என்னும் தலைப்பில் தனி நூலாக வெளியிடப்பட்டுள்ளது. மகாகவிபாரதியார் முதல் தமிழ்த் தென்றல் திரு வி.க. வரையில் சாமிநாத சர்மாவிற்கு முன் காந்தி யடிகள் பற்றி பல அரிய விமர்சன நூல்கள் வெளிவந்துள்ளன. சாமிநாத சர்மாவும் ''காந்தி - யார்? என்னும் வினாவிற்கு விடை யளிப்பவர் போல் பின்வரும் விமர்சனத்தை வரைந்துள்ளார்.

''மகாபுருஷராகவும், வீரராகவும், மனிதராகவும் முக்கோணத் திலிருந்து நமக்குக் காட்சியளிக்கிற காந்தியடிகள் இன்று எழுபத்து மூன்றாவது வயதையடைந்திருக்கிறார் அவருடைய வயது முதுமை யாகிக் கொண்டுபோகிறது; ஆனால் அவருடைய வாழ்வு இளமை யாகிக் கொண்டு வருகிறது. வயதாக ஆக வாழ்க்கையைச் சுருக்கிக் கொள்ள வேண்டுமென்று சொல்வார்கள் ஆனால், அவருடைய வாழ்க்கை, வயதாக வளர்ந்து கொண்டு போகிறது. அவர் ஒரு ஞானி போலிருக்கிறார். ஆனால் உலகமெல்லாம் அவருக்கு குடும்பமா யிருக்கிறது. அவர், பொன்னும் பொருளும் வேண்டுமென்று பிச்சை

கேட்கிறார், ஏன்? இந்தியாவிலுள்ள கோடிக் கணக்கான ஏழை மக்கள் கையேந்திப் பிச்சை கேட்காமலிருக்கும் பொருட்டு. அவர் அடிக்கடி உபவாசம் இருக்கிறார். ஏன்? லட்சக்கணக்கானவர்களுடைய நிரந்தர உபவாசத்தைத் தடுப்பதற்காக. அவர் ஒற்றை ஆடை அணிந்துக் கொண்டிருக்கிறார். ஏன்? மற்றவர்க்ளுக்கு முழு ஆடை வழங்கு வதற்காக. அவர் ஊன்று கோலுடன் நடக்கிறார். ஏன்? மற்றவர்களுக் குத் தாம் ஓர் ஊன்று கோலாயிருக்க வேண்டுமென்ற ஆவலினால். அவர் கோடிக்கணக்கான மக்களால் வணங்கப்படுகிறார். ஆனால் அவர் சத்தியமாகிற ஒரே பொருளைத்தான் வணங்குகிறார். அவரு டைய லட்சியத்திலே அதாவது, பாரத ஜாதியின் மகோன்னத வாழ்விலே நமது பார்வையைத் திருப்பி, அந்த நல்வாழ்வுக்காக நமது வாழ்வை அர்ப்பணம் செய்வதன் மூலம் அவரை வணங்கு வோமாக''.

"Essentials of Gandhism" என்னும் ஒரே ஒரு சிறு நூலை ஆங்கிலத்தில் எழுதியிருக்கிறார் சாமிநாத சர்மா. 41 பக்கங்கள் கொண்ட இந்த நூல் 1943-இல் காந்தி பக்தரான 'சக்தி' வை. கோவிந்தன் அவர்களின் சக்தி காரியாலயத்தாரால் வெளியிடப் பட்டது.

''காந்தியடிகளும் கிராம வாழ்க்கையும்'', 'நாடும் மொழியும்', 'சுதந்திரமும் சீர்திருத்தமும்' 'பெண்மையிலேதான் வாழ்வு', 'நமது பிற்போக்கு' 'மனிதன் யார்' ஆகிய நூல்களும் சாமிநாத சர்மாவின் கட்டுரை இலக்கிய நூல்வரிசைக்குரியன.

''நான் கண்ட நால்வர்''

திரு.வி.க. (1883-1953), வ.வே.சு.ஐயர் (1881-1925) சுப்பிரமணிய சிவா (1884-1925), சுப்பிரமணிய பாரதியார் (1882-1921) ஆகியோருடன் சாமிநாத சர்மா ''இணைந்து பழகி அவர்கள் வாழ்க்கையிலுள்ள குணசித்திரங்களை'' விவரித்து எழுதப் பட்ட இந்த நூல் 1957-இல் வெளி வந்தது. நூலின் தலைப்பில் 'நால்வர்' என்றிருந்தாலும் ஐவருடைய வாழ்க்கை வரலாற்றுக் கூறு க்ளும் இடம் பெற்றுள்ளன ஆனால் ''அவசியத்தை முன்னிட்டு'' சாமி நாத சர்மா தன்னைப்பற்றிக் கூற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டி ருந்தாலும், ''நால்வர் வாழ்க்கையைப் பற்றித்தான் குறிப்பாகச் சொல்ல நினைக்கிறாரென்பதை நாம் மனத்தில் கொள்ளவேண்டும் ''

இந்த நால்வர் பற்றிய ஆய்வுக்கு பல அரிய செய்திகளைத் தந்துள்ளார், சாமிநாத சர்மா. திரு.வி.க., வ.வே.சு.ஐயர், சிவா, பாரதியார் ஆகியோரின் சமகாலத்தவரான கப்பலோட்டிய தமிழர்

வ.உ.சிதம்பரம் பிள்ளை (1872-1936) யைப் பற்றி எழுத இயலாமற் போனதற்கு வருந்தி சாமநாத சர்மா எழுதியுள்ளது:

''வ.உ.சி. அவர்கள் தேசபக்தன் பத்திரிகாலயத்திற்கு அடிக்கடி வந்து போவார். அப்பொழுதெல்லாம் அவரைப் பார்த்திருக்கிறேன்; அவருடன் பேசியுமிருக்கிறேன். ஆனால் பழகியதில்லை. அந்த வாய்ப்பு எனக்குக் கிட்டவில்லை. அந்த விஷயத்தில் நான் ஒரு துர்பாக்கியசாலி. ஒரு சில தடவை அவருடன் பேசியிருக்கிறேன் என்பதைக் கொண்டு அவரைப்பற்றி எழுதிவிடலாமா? அந்தத் துணிச்சல் எனக்கு ஏற்படவில்லை''.

தாம் கண்ட நால்வர் வாழ்க்கையிலும் வாசகர்கள் தெளிந்து தேர்ந்துக் கொள்ள வேண்டிய ''வழிகாட்டு நெறிகளை'' - ''சில பொதுவானத் தன்மைகளை'' - சாமிநாத சர்மா பின்வருமாறு வரிசைப்படுத்தி கூறியுள்ளார்.

1. நால்வரும் சிறந்த புலவர்கள். உண்மையான புலவன் நாட்டுப் பற்றில்லாதவனாயிருக்க முடியாதென்று கருத் துடையவர்கள். இதனால்தான் அரசியலிலே தீவிரமாக ஈடுபட்டார்கள். அரசியலிலே ஈடுபடாதிருந்தால் கூட அறிஞர்கள் என்ற முறையில் பேரும், புகழுமெய்தியிருப் பார்கள்

2. நால்வரும், பண்பாடு இன்னதென்பதை உணர்ந்து அந்தப் பண்பாடாகவே வாழ்ந்தார்கள்

3. நால்வரும், தாங்கள் இந்திய நாகரீகத்தின் பிரதிநிதிகள் என்பதை அசந்தும் மறவாமல் வாழ்க்கையை நடத்தியவர் கள். இவர்களுடைய அன்றாட வாழ்க்கை 'எளிய வாழ்க்கை' உயர்ந்த நோக்கம்' என்ற வாசகத்திற்கு இலக்கணம் வகுத்தாற்போல் அமைந்திருக்கிறது.

4. நால்வரும், கடவுட் பக்தர்கள், கடவுட் பித்தர்கள் கூட. நால்வரிடத்திலும் சமய ஞானம் பூரணமாகப் பொலிவுற்றி ருந்தது. இதனால் சமரஸ நோக்குடையவர்களா யிருந்தார்கள்.

5. நால்வரும், ஜாதி, வகுப்பு, இன, மொழி வேற்றுமைகளைக் கடந்தவர்கள்.

6. நால்வரும் அகத் துறவு பூண்டவர்கள்

7. நால்வரும், பழமையையும், புதுமையையும் இணைத்து வைக்கும் பாலமாயமைந்திருந்தார்கள்

8. நால்வரும், பேசுவதைப்போலவே எழுதுவதிலும் எழுது வதைப் போலவே பேசுவதிலும் ஒரே மாதிரியான ஆற்றல் படைத்தவர்கள்.

9. நால்வரும், சீலமே பெரிதுமுடையாராய் வாழ்ந்தவர்கள்.

10. நால்வரும், 'தாய் நாட்டின் விடுதலை நாடி, தங்களுக்கேற் பட்ட எல்லா இன்னல்களையும் புன்சிரிப்போடு ஏற்று அனுபவித்தார்கள்.

மேற்காணும் ஒப்புமைக் கருத்துகள் வழிகாட்டு நெறிகளாகவும் கொள்ளத் தக்கன. அவருடைய நூல்கள் ஒவ்வொன்றிலும் வாசகர் களுக்கு வழிகாட்டும் நெறிகளை சாமிநாத சர்மா எடுத்துரைத் துள்ளார்.

அவர் இலக்கியப் படைப்பாளர் என்பது எவ்வளவு உண்மையோ, அவ்வளவு உண்மை அவர் வாழ்க்கையே ஓர் இலக்கியம் என்பதும் ஆகும்.

நூற்பட்டியல்

தமிழ்

அசலாம்பிகை காந்தி புராணம் - 1947, பதிப்பாசிரியர் டி.இ.வரசதாச்சாரி, சென்னை

அருணாசலம். மு. இன்றைய தமிழ் வசன நடை - 1945, 'தினமணி வெளியீடு' சென்னை.

கிருஷ்ணசாமி சர்மா மகாத்மா காந்தியும் ஆன்ம சக்தியும் சாந்தி நிலையமும் - 1922; காங்கிரஸ் விளம்பர சபை, சௌகார் பேட்டை, சென்னை.

கிருஷ்ணசாமி சர்மா இராஜரீக சாஸ்திரம் (அரசியல் நூல்) - 1923, ஞான போதினி பிரசுராலயம், சௌகார்பேட்டை, சென்னை.

கலியாண சுந்தரனார். திரு.வி. திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புகள், ஆறாம் பதிப்பு-1969, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

சண்முகம் ஔவை தி.க. நாடக கலை - 1987; ஔவைப் பதிப்பகம், சென்னை - 14.

சுப்பிரமணிய ஐயர் .ஜி. சுய அரசாட்சி வினா-விடை 1883; 'உபயோகமான அறிவைப் பரவச்செய்யும் சபையின் வெளியீடு. திருவல்லிக்கேணி, சென்னை

சுப்பிரமணிய பாரதியார் சி. பாரதி நூல்கள் (கட்டுரை கள்) பாரதி பிரசுராலயம், சென்னை.

தூரன். பெ. பாரதி தமிழ், இரண்டாம் பதிப்பு - 1963. இன்ப நிலையம், மயிலாப்பூர், சென்னை - 4.

மணி. பெ.சு. இந்திய தேசியத்தின் தோற்றமும் வளர்ச்சியும், இரண்டாம் பதிப்பு - 1978, பூங்கொடி பதிப்பகம், மயிலாப்பூர், சென்னை - 4.

மணி. பெ.சு. காங்கிரஸ் வினா-விடை மூலமும் ஆய்வும்-1979. பூங்கொடி பதிப்பகம், மயிலாப்பபூர், சென்னை-4.

மணி. பெ.சு. வ.வே.சு.ஐயர் கட்டுரைகள் (தொகுப்பு) - 1981, தியாகி எஸ்.என்.சோமயாஜுலு வெளியீடு, திருநெல்வேலி.

மணி. பெ.சு. கார்ல் மார்க்சின் இலக்கிய இதயம் (கட்டுரைகள் தொகுப்பு) - 1986; பூங்கொடி பதிப்பகம், மயிலாப்பூர், சென்னை - 4.

மணி. பெ.சு. அறிஞர் வெ. சாமிநாத சர்மாவின தமிழ்ப்பணி - 1990, நியூ செஞ்சரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை - 98.

(மற்றும் இந்நூலினுள் குறிப்பிடப்பெற்ற சாமிநாத சர்மாவின் நூல்கள்)

ஆங்கிலம்

Ingersol colonel R.B.	Lectures and essays (A Selection) 1952
Mazzini Josep	The duties of man, Tagore and Co., Madras.
Natarajan J.	History of Indian Journalism - 1955, Publications Division, Govt. of India. New Delhi.
Radhakrishnan Dr. S.	Mahatma Gandhi, Essays and reflection on his life and work-1941; Allen and Unwin Ltd., London.
Sundaraligam R.	Politics and Nationalist Awakening in South India (1852-1892)-1974;. The University of Arizona Press, Arizona, U.S.A.
Theodore Baskaran S.	The Message Bearers - 1961; cre-A Publications, Royapettah, Madras - 14.
Venkatarangaiah M.	The Freedom struggle in Andhra Pradesh - 1965; Govt. of Andhra.
Vincent A. Smith	Macaulay essay on clive - 1920: Oxford University Press, London.
Dictionary	Websters' Biographical Dictionary - First Edition, G.F.C. merriam Co., Publishers, Mass. U.S.A.
Tamil Nadu Archives	The Asylum Press Almanac and Compendium of Intelligence - 1884.

Madras Native Newspaper Report

G.O.No.11-12 (public) dated 11-12-1917

கையெழுத்துப்படிகள்

நாட்குறிப்புகள் - வெ.சாமிநாத சர்மா சுயசரிதை (நிறைவு பெறாதது) - வெ. சாமிநாத சர்மா எனது எழுத்துப்பணி - வெ.சாமிநாத சர்மா.

இதழ்கள் (தமிழ்)

நவசக்தி	வாரஇதழ்	ஆசிரியர், திரு.வி.க. சென்னை
தேசபக்தன்	நாளிதழ்	ஆசிரியர், திரு.வி.க. சென்னை
திராவிடன்	நாளிதழ்	சவுத் இந்தியன் பீபிள்ஸ் அசோசியேஷன் (லிமிடெட்) சென்னை
ஜோதி	மாதஇதழ்	ஆசிரியர், வெ.சாமிநாத சர்மா இரங்கூன் (பர்மா)
சக்தி	மாத இதழ்	ஆசிரியர், வை. கோவிந்தன், சென்னை
குமரி மலர்	மாத இதழ்	ஆசிரியர், ஏ.கே.செட்டியார், சென்னை.
நூலகம்	மாத இதழ்	வாசகர் வட்டம் வெளியீடு, சென்னை - 17.
தீபம்	மாத இதழ்	ஆசிரியர், நா. பார்த்தசாரதி, சென்னை
குமுதம்	வார இதழ்	ஆசிரியர், எஸ்.ஏ.பி. அண்ணாமலை, சென்னை
தினமணி	நாளிதழ்	ஆசிரியர், ஏ.என்.சிவராமன், சென்னை.
பாரதி	நாளிதழ்	தமிழ் எழுத்தாளர் சங்க வெளியீடு, ஆசிரியர், வெ.சாமிநாத சர்மா, சென்னை

இதழ்கள் (ஆங்கிலம்)

Main Stream	Weekly	Editor, Nikil Chakravarthi, New Delhi.
Journal of the Madras University	Humanities, June-July 1970 Madras.	

அமரர். வெ. சாமிநாத சர்மாவின் நூல்கள்

கதைகள்

1. கௌரீ மணி (பௌராணிக கதை)
2. தலை தீபாவளி (சிறுகதைகள் தொகுப்பு)

நாடகங்கள்

3. லட்சுமிநாதன்
4. உத்தியோகம்
5. பாணபுரத்து வீரன்
6. அபிமன்யு
7. உலகம் பலவிதம் (ஓரங்க நாடகங்களின் தொகுப்பு)

மணிமொழிகள்

8. சுதந்திர முழக்கம்
9. மாஜினியின் மணிமொழிகள்
10. இந்தியாவின் தேவை

அரசியல்

11. ஏப்ரல் 1919 அல்லது பஞ்சாப் படுகொலை
12. பிரிக்கப்பட்ட பர்மா
13. பெடரல் இந்தியா
14. சமஸ்தான இந்தியா
15. உலகக் கண்ணாடி
16. ஸ்பெய்ன் குழப்பம்
17. செக்கோஸ்லோவேகியா
18. பாலஸ்தீனம்
19. அரசியல் வரலாறு
20. ஆசியாவும் உலக சமாதானமும்
21. ஐக்கிய தேசஸ்தாபனம்
22. அரசாங்கத்தின் பிறப்பு
23. பிரஜைகளின் உரிமைகளும், கடமைகளும்
24. அரசியல் கட்சிகள்
25. நமது தேசியக் கொடி

26. பார்லிமெண்ட்
27. புராதன இந்தியாவின் அரசியல்

வரலாறுகள்

28. நமது ஆர்யாவர்த்தம்
29. ருஷ்யாவின் வரலாறு
30. சீனாவின் வரலாறு
31. கிரீஸ் வாழ்ந்த வரலாறு
32. புதிய சீனா

கட்டுரை இலக்கியம்

33. காந்தி யார்?
34. நமது பிற்போக்கு
35. எப்படி வாழ வேண்டும்?
36. மனிதன் யார்?
37. பெண்மையிலேதான் வாழ்வு
38. இக்கரையும் அக்கரையும்
39. காந்தியடிகளும் கிராம வாழ்க்கையும்
40. நகைத்தல் நல்லது
41. நாடும் மொழியும்
42. சுதந்திரமும் சீர்திருத்தமும்

வாழ்க்கை வரலாறுகள்

43. லோகமான்ய திலகர்
44. ரமண மகரிஷி
45. பண்டிட் மோதிலால் நேரு
46. முஸோலினி
47. அபிசீனிய சக்கரவர்த்தி
48. ஹிட்லர்
49. காந்தியும் - ஜவஹரும்
50. காந்தியும் விவேகானந்தரும்
51. சார்லஸ் டார்வின்

52. ஸர். ஐஸக் நியூட்டன்
53. ஸர். ஜகதீச் சந்திரபோஸ்
54. தாமஸ் எடிசன்
55 சர். பிரபுல்ல சந்திரரே
56. ஸர். சி.வி. ராமன்
57. கமால் அத்தாதுர்க்
58. ரூஸ்ஸோ
59. கார்ல் மார்க்ஸ்
60. ராமகிருஷ்ணர் ஒரு தீர்க்கதரிசி
61. மாஜினி
62. ஸன்யாட்ஸென்
63. நான் கண்ட நால்வர்
64. சமுதாயச் சிற்பிகள்

கடிதங்கள்

65. மகனே உனக்காக
66. அவள் பிரிவு
67. வரலாறு கண்ட கடிதங்கள்

பயண இலக்கியம்

68. எனது பர்மா வழிநடைப் பயணம்

மொழி பெயர்ப்புகள்

69. மானிட ஜாதியின் சுதந்திரம்
70. மனோ தர்மம்
71. மகாத்மாகாந்தி
72. மாஜினியின் மனிதன் கடமை
73. சமுதாய ஒப்பந்தம்
74. பிளேட்டோவின் அரசியல்
75. ராஜதந்திர யுத்தங்களப் பிரசங்கங்கள்
76. சுதந்திரத்தின் தேவைகள் யாவை?
77. பிளேட்டோவின் கடிதங்கள்

ஆங்கில நூல்

78. Essentials of Gandhism.

தமிழில் அரசியல் இலக்கிய முன்னோடியான அமரர் **வெ. சாமிநாத சர்மா** 80 நூல்களை எழுதியுள்ளார். தேசிய, சர்வதேசிய தலைவர்கள், அரசியல் தத்துவங்கள் பற்றிய இவருடைய நூல்கள் தமிழ் மட்டுமே அறிந்தவர்களுக்கு பொய்யா கை விளக்காக அமைந்தது. பிளேட்டோ, ரூஸ்ஸோ, கார்ல் மார்க்ஸ், மாஜினி, ஸன்யாட்ஸென், திலகர், காந்தியடிகள், திரு.வி.க.; வ.வே.சு. ஐயர், சுப்பிரமணிய சிவா, பாரதியார் முதலானோரைப்பற்றி இவர் வழங்கியுள்ள வரலாற்றுச் செய்திகள், சிறந்த ஆவணங்களாகும். வாழ்க்கையைப் போலவே எழுத்திலும், ஒழுக்கத்தையும், பண்பையும் கடைப்பிடித்தவர். தேசியவாதியாகவும், காந்தியவாதியாகவும் இறுதி வரை வாழ்ந்து வழிகாட்டிய எழுத்தாளர் செம்மல், தேசபக்தன், நவசக்தி, ஜோதி மற்றும் சில இதழ்கள் வாயிலாக புகழ்பூத்த பத்திரிகையாளராகத் திகழ்ந்தவர்.

இந்நூலாசிரியர் **பெ.சு. மணி,** அமரர் வெ. சாமிநாத சர்மாவின் பாராட்டுதலைப் பெற்றவர். ''அன்பர் மணி அவர்கள் இலக்கியப் பணி என்ற பெயரால் தங்கள் பொழுதையோ மற்றவர்கள் பொழுதையோ போக்குவதற்காக நூல்கள் எழுதாமல், அறிவுக்கும் சிந்தனைக்கும் ஊட்டந்தரக்கூடிய நூல்களையே படைக்க வேண்டுமென்பதில் தீவிரவாதியாகத் திகழ்வது எனக்கும் பெரிதும் உவகையூட்டுகிறது'' என்று சாமிநாத சர்மா பாராட்டியுள்ளார். பெ.சு. மணி எழுதிய 33 நூல்களுள் இரு நூல்கள் தமிழ்நாடு அரசின் இரு முதல் பரிசுகளையும், ஒரு நூல் இரண்டாவது பரிசையும் பெற்றுள்ளன. பாரதி தொடர்பாக பத்து நூல்கள் எழுதி பாரதி ஆய்வாளர்களுள் ஒருவராகத் திகழ்கின்றார். சென்னை, கோயமுத்தூர், புதுச்சேரி, மதுரை, கல்கத்தா பல்கலைக் கழகங்களிலும், உலகத்தமிழ் மாநாடு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், இந்திய நூலாசிரியர் கழகம் முதலான அமைப்புகளிலும் அறக்கட்டளைச் சொற்பொழிவுகள், ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்துள்ளார்.

Ve. Swaminatha Sharma (Tamil) Rs. 25/-
ISBN - 81-260-580-7